143

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
தொலைநிலைக் கல்வி
www.mkudde.org



எம்.ஏ.
வரலாறு

இரண்டாமாண்டு

தாள் – 7

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு

(1776 - 1945 வரை)

1940

143

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

முதுகலை – வரலாறு
இரண்டாமாண்டு

வ ர லா று

பகுதி – I (a)

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு (1776 – 1945)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

printed at VIJAAY OFFSET PRINTER, MDU.-16. ✆ 4353474 Yr. 2008-2009 Copies 2000

வரலாற்றுத்துறை

முன்னுரை

அன்புள்ள மாணவர்களே,

முதுகலை இரண்டாமாண்டு வரலாற்றுப் பட்டப்படிப்பில் புதிய பாடதிட்டப்படி நீங்கள் நான்கு பாடங்களைக் கற்றுத் தேர்ச்சிபெறல் வேண்டும். இவற்றுள் ஒன்று அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறாகும். இதனைச் சுருக்கமாக அமெரிக்க வரலாறு என்று பொதுவாக அழைப்பர். நமது பாட எல்லை 1776-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரையாகும். அதாவது சுதந்திரப் போராட்டம் முதல் இரண்டாவது உலகப் போர் வரையாகும். உலக நாடுகளிலேயே மக்களாட்சியை மேற்கொண்டுள்ள நாடுகளில் மிகப் பழமையானது அமெரிக்க ஐக்கியநாடாகும். மக்களாட்சி துவக்கப் பெற்றதன் இருநூற்றாண்டு விழா 1976-இல் கொண்டாடப்பட்டதை நாம் அறிவோம். அதேபோல் எழுதப்பெற்ற அரசியல் அமைப்பைக் கொண்டுள்ள நாடுகளில் மிகப் பழமையான நாடாகவும் அமெரிக்கா திகழ்கிறது.

இந்தியா போன்ற கீழைநாடுகட்குப் புதிய கடல் வழித்தடங்களைக் கண்டுபிடிப்பதில் முனைந்த கொலம்பஸ் 1492-இல் முதன் முதலாக புதிய உலகினைக் கண்டுபிடித்தார். ஆனால் அவர் பெயரால் அக்கண்டம் அழைக்கப்படவில்லை. ஆனால் அவர் தாம் கண்டுபிடித்தது புதியதொரு கண்டம் என அவர் அறியவே இல்லை. அமெரிக்கா வெஸ்புகி என்பார்தான் கொலம்பஸ் கண்டு பிடித்தது இந்தியா அல்ல, புதியதொரு கண்டம் என நிருபித்தார். எனவே அவர் பெயரால் அக்கண்டம் அழைக்கப்பட்டது. வடஅமெரிக்காவில் நிலையான குடியேற்றங்களை நிறுவுவதில் ஆங்கிலேயர் மாபெரும் வெற்றி கண்டனர். டியூடர்கள் ஆட்சிக்காலத்தில் இதற்கான அடித்தளம் இடப்பட்டது. ஸ்டுவேர்ட்டுகள் ஆட்சியின்போது தான் பன்னிரண்டு குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. பதின்மூன்றாவது குடியேற்றம் ஹனோவேரியர் காலத்தில் உருவாயிற்று.

குடியேற்றம்	நிறுவிய ஆண்டு	நிறுவியோர்
வர்ஜீனியா	1607	இலண்டன் நிறுவனம்
பிளைமவுத் மசாசூசெட்ஸ்	1628	பியூரிட்டானியர்
மேரிலண்டு	1634	பால்டிமோர் பெருமகன்
ரோடு ஐலண்டு	1636	ரோஜர் வில்லியம்ஸ்
கனெக்டிக்கட்	1636	தாமஸ் ஹூக்கர்
டெலவர்	1638	ஸ்வீடிஷ் மக்கள் - பின் டச்சுக்காரராலும் பிரிட்டிஷாராலும் கைப்பற்றப்பட்டது.

நியூ ஹேம்ப்ஷயர்	1623	ஜார்ஜஸ், மேசன்
வட, தென் கரோலினா	1663	எட்டுப் பெருமக்கள்
நியூயார்க்	1614	டச்சுக்காரரிடமிருந்து பிரிட்டிஷாரால் 1664இல் கைப்பற்றப் பட்டது. பெர்க்லி, கார்ட்டரட்
பென்சில்வேனியா	1681	வில்லியம் பென்
ஜார்ஜியா	1733	ஜேம்ஸ் ஆக்ளிதார்ப்

(வடகரோலினா, தென் கரோலினா எனப் பிரித்து கணக்கிட்டால் பதின்மூன்று குடியேற்றங்களாகும்.

இப்பதின்மூன்று குடியேற்றங்களும் இணைந்து தாய்நாட்டுடன் போரிட்டு உரிமைபெற்றதிலிருந்து நமது பாடம் துவங்குகிறது. பின்னர் படிப்படியாக அமெரிக்க மக்கள் தங்கள் நாட்டினைப் பொலிவுறச் செய்து இன்றைக்கு உலக வல்லரசுகளில் முன்னிலை நாடு என்கிற பெருமையைப் பெற்ற வரலாற்றைப் படித்துப் பயன்பெறுவோமாக. மேலும் பல மேற்கோள் நூல்களைப் படித்தால் அறிவாற்றல் மிகும். கடின உழைப்புக்கு ஈடு இணை உண்டோ?

வாழ்த்துக்கள்

வரலாற்றுத்துறை பேராசிரியர்கள்
தொலைநிலைக்கல்வி இயக்ககம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

M.A. History

Second Year

Branch I (a) Syllabus

Paper VII - History of the United States of America, A.D. 1776 - 1945

The American War of Independence - The Confederation Period 1781-1789 - Making of the Constitution - George Washington - Domestic and Foreign Policies - Rise of Political Parties - John Adams - The Presidency of Thomas Jefferson - The War of 1812 - The Monroe Doctrine - Andrew Jackson - Rise of Nationalism - Westward Expansion - Sectionalism and Slavery - Civil War - Role of Abraham Lincoln - Reconstruction - Rise of Big Business - Problems of Big Business - Rise to World Power I (overseas expansion) - Rise to World Power II (the Spanish American War 1898) - Rise to World Power III (the U.S. and the Far East) - Rise to World Power IV (Caribbean and Mexican Policy) - Square Deal - Theodore Roosevelt - Administration, Internal Administration of Woodrow Wilson - Woodrow Wilson and the First World War - The Depression - The New Deal - Franklin D. Roosevelt and the Second World War - U.S.A., land of immigrants - American Negroe in the 20th century.

Books for Reference

Baily	—	Diplomatic History of the United States
Beard, C.A.	—	A Diplomatic History of the United States
Blake, N.M.	—	Short History of American Life
Blake, N.M. and Barck, O.T.	—	The United States in its World Relations
Baldwin, D.L.	—	Survey of U.S. History
Canfield, L.H. and Wilder, H.B.	—	The Making of Modern America
Faulkner, H.U. and Kepner, T.	—	America, its history and people
Hicks, J.D.	—	Readings in American History
Morrisson, S.E. Commager, H.S. and Leuchtenbarg, W.B.	—	The growth of American Republic, 2 Vols.
Ossley, F.L.	—	A Short History of American People
Chitwood and Nixon, O.P. Parkes, H.B.	—	A History of the United States of America
Rajayyan, K	—	A History of the United States
Williams, M	—	A New History of the United States
Whitaker, A.P.	—	The United States and South America

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு (1776–1945)

பாடத் தலைப்புகள்

1. அமெரிக்க உரிமைப் போர்.
2. நேசக் கூட்டாட்சி (1781-89).
3. அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கம்.
4. ஜார்ஜ் வாஷிங்டன் — உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்.
5. அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் கட்சிகளின் தோற்றம்.
6. ஜான் ஆடம்ஸ்.
7. தாமஸ் ஜெபர்சனின் ஆட்சி.
8. 1812ஆம் ஆண்டுப் போர்.
9. மன்ரோ கோட்பாடு.
10. ஆண்ட்ரூ ஜாக்ஸன் (1829-37)
11. தேசிய உணர்வின் துவக்கம்.
12. மேற்கு நோக்கி விரிவடைதல் (முதல் கட்டம்).
13. மேற்கு நோக்கி விரிவடைதல் (இரண்டாம் கட்டம்).
14. வகுப்புணர்ச்சியும், அடிமை முறையும்.
15. உள்நாட்டுப் போர் — ஆப்ரகாம் லிங்கனின் பங்கு.
16. புனரமைப்பு.
17. பெரும் வாணிக வளர்ச்சி.
18. பெரும் வாணிக வளர்ச்சியின் சிக்கல்கள்.
19. அமெரிக்கா உலக வல்லரசாதல் (முதல் பகுதி — கடல் கடந்த விரிவாக்கம்).
20. அமெரிக்கா உலக வல்லரசாதல் (இரண்டாம் பகுதி — ஸ்பானிய அமெரிக்கப் போர், 1898).

21. அமெரிக்கா உலக வல்லரசாதல் (மூன்றாம் பகுதி — அமெரிக்காவும் தூர கிழக்கு நாடுகளும்).

22. அமெரிக்கா உலக வல்லரசாதல் (நான்காம் பகுதி — கரிபியன் மற்றும் மெக்ஸிக்கோ பகுதிகளில் ஏற்படுத்திய கொள்கை முறைகள்).

23. தியோடர் ரூஸ்வெல்ட்டும், நேர்மையான ஒப்பந்தமும்.

24. உட்ரோ வில்சனின் உள்நாட்டு ஆட்சி.

25. அமெரிக்க ஐக்கிய நாடும், முதல் உலகப்போரும்.

26. பெருமந்தம்.

27. புதிய சீரமைப்புத் திட்டம்.

28. பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டும் இரண்டாம் உலகப்போரும்.

29. அமெரிக்கா — ஒரு குடியேற்ற நாடு.

30. 20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க நீக்ரோ குடிமகனின் நிலை.

முதுகலை (வரலாறு)
இரண்டாமாண்டு

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு (1776 – 1945)

பாடம் – 1 அமெரிக்க உரிமைப் போர்

தாய்நாடான பிரிட்டனுக்கும், அதன் பதின்மூன்று குடியேற்றங்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஒரு சில குடும்பங்களில் பெற்றோருக்கும் பிள்ளைகட்கும் இடையே ஏற்படும் மோதலைப் போன்றதாகும். பெற்றோர் எண்ணுவதைவிட குழந்தைகள் கூடுதல் வேகத்துடனே வளருகின்றனர். மேலும் பல உரிமைகளை விரும்புவர். ஆரம்பத்தில் குழந்தைகளை விருப்பப்படி விட்டுவிட்டுப் பின்னர் திடீரென கட்டுப்பாடுகளைத் திணித்தால் குழந்தைகட்குக் கோபமும், குழப்பமும் ஏற்படும். இத்தகைய ஒரு நிலையே அமெரிக்கக் குடியேற்றங்களிடையே ஏற்பட்டதெனலாம். தாங்கள் வலிமையுடனும், செல்வச் செழிப்புடனும் வளர்ந்துவிட்ட நிலையில் தாய்நாட்டின் தலையீட்டைக் குடியேற்றங்கள் விரும்பவில்லை. ஆனால் மாறாக பிரிட்டன் மேலும் மேலும் தலையிடத் துவங்கிற்று. இக்கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் தான் அமெரிக்க உரிமைப் போர் மூண்டது.

அமெரிக்க உரிமைப் போருக்கான காரணங்கள்

(1) பிரெஞ்சு ஆதிக்கம் ஒடுக்கப்படல்

ஏழாண்டுப் போர் (1756-63) முடிவுற்றதும், பிரிட்டனுக்கு வட அமெரிக்காவில் பல புதிய சிக்கல்கள் எழலாயின. பிரெஞ்சு ஆதிக்கம் முறியடிக்கப்பட்டதன் விளைவாக அதுகாறும் பிரெஞ்சு குடியேற்றமாகவிருந்த கனடா பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்டது. எனவே பதின்மூன்று குடியேற்றங்கட்கு வடக்கேயிருந்த பிரெஞ்சு நாட்டவரைப் பற்றிய அச்சம் மறைந்தது. தெற்கே ஸ்பானியர்களின் வலிமையும் குன்றிற்று. இந்நிலையில் குடியேற்றங்கள் தங்கள் பாதுகாப்பிற்காகத் தாய்நாட்டின் உதவியை நாட வேண்டாத நிலை உருவாயிற்று. ஏழாண்டுப் போரின் போது தாய் நாடோடு இணைந்து பதின்மூன்று குடியேற்றங்களும் போரிட்டன. இதனால் இவர்களிடையே ஒற்றுமை நோக்கு உருவாக வாய்ப்பு ஏற்பட்டது. இக்குடியேற்றங்களை ஏன் ஒன்றாக இணைக்கக் கூடாதென ஒரு வினா எழுந்தது. இப்போரில் குடியேற்றப் படையினர் நல்ல பயிற்சியினையும் பெற்றனர். இப்பயிற்சியே பின்னர் உரிமைப் போருக்குத் தன்னம்பிக்கையைத் தந்தது எனலாம்.

2) 1763–ஆம் ஆண்டுப் பேரறிக்கை

பிரிட்டனிலிருந்த ஆட்சியாளர்கள் கனடாவை ஆட்சி புரிவதற்காக சில கொள்கைகளை வகுத்து, இவற்றைப் பேரறிக்கையாக வெளியிட்டனர். கனடாவிற்கும் புதியதொரு அரசாட்சி அமைப்பு தரப்பட்டது. ஆனால் அதில் மக்களாட்சிப் பண்புகள் காணப்படவில்லை. பிரிட்டிஷ் பேரரசர் சார்பில் ஓர் ஆளுநரும், அவருக்குதவி புரிய ஆய்வுக்குழு ஒன்றுமே அனுப்பப்பட்டது. சட்டமன்றம் என்ற ஓர் அமைப்பு தரப்படவில்லை. இவ்வாட்சி முறையை பிரிட்டன் விரைவில் பதின்மூன்று குடியேற்றங்கட்கும் கொணருமோ என்ற அச்சம் எழலாயிற்று.

அட்லாண்டிக் கடற்கரையோரப் பகுதியிலிருந்த பதின்மூன்று குடியேற்றங்களும் மேற்கு நோக்கி விரிவடைய முற்பட்ட நேரத்தில், மேற்குப் பகுதிகட்கு மக்கள் குடிபெயரக் கூடாதென்றும், அந்நிலப்பகுதி செவ்விந்தியர்களின் வேட்டையாடுவதற்கென்றும் பேரறிக்கையில் கூறப்பட்டது. இத்தடையினையும் குடியேற்றங்கள் வெறுத்தன. மேற்கு நோக்கி அலெகனி மலைகட்கு (Alleghany Mountains) அப்பால் குடியேறும் உரிமை பெற்றிடவே ஏழாண்டுப் போரில் ஈடுபட்டன. மேலும் குடியேற்ற வணிகர்கள் செவ்விந்தியர்களோடு வாணிபம் செய்வதிலும் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. இலண்டனிலிருந்து பிரிட்டிஷ் அரசின் உரிமை பெற்ற வணிகர்கள் மட்டுமே செவ்விந்தியர்களோடு தொடர்பு கொள்ளலாம் என வரையறுக்கப்பட்டது. நாணயமற்ற குடியேற்ற வணிகர்கள் செவ்விந்தியர்களை மோசடி செய்தமையால் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆனால் குடியேற்றங்கள் இதனை வெறுத்தன; சினமுற்றன.

3) நாவாய்ச் சட்டங்கள் (Navigation Acts)

ஏழாண்டுப் போரினால் ஏற்பட்ட அரசுக் கடன் தொகையான 130 மில்லியன் பவுனைச் சரிக்கட்ட பிரிட்டிஷ் அரசு புதிய வரிமுறைகளைக் கண்டுபிடித்தது. மேலும் வட அமெரிக்காவில் நிலையான படைகளையும் பிரிட்டன் பராமரிக்க வேண்டியிருந்தது. இதற்கான செலவுக்கும் வருவாய் பெற வழிவகுக்க வேண்டியிருந்தது.

மேலும் பிரிட்டன் குடியேற்றங்களை நிறுவிய நாளிலிருந்து அவற்றின் பொருளியல் வளத்தை சுரண்டும் (mercantile theory or mercantilism) பொருளாதாரக் கோட்பாட்டை மும்முரமாகப் பின்பற்றி வந்தது. குடியேற்ற நாடுகளின் வாணிபத்தின் மூலமாகப் பணம் சேர்ப்பதே பிரிட்டிஷ் வணிகர்களின் குறிக்கோளாக அமைந்தது. இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியைப் பெருக்கி தங்கமும், வெள்ளியுமாக செல்வம் ஈட்டுவதே அவர்கள் நாட்டம், தாய்நாட்டின் பொருளாதார நலனுக்காகவே குடியேற்றங்கள் பாடுபடவேண்டும். இந்நோக்கில் குடியேற்ற வாணிபத்தைக் கட்டுப்படுத்த பிரிட்டிஷ் பாராளுமன்றம் அவ்வப்போது சட்டங்களை இயற்றிற்று. அப்படிப்பட்ட சட்டங்களில் தலையாயது நாவாய்ச் சட்டங்களாகும். இவை பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன. இவற்றின்படி சர்க்கரை, புகையிலை, பருத்தி, கம்பளம், அவுரி (indigo) போன்ற குறிப்பிட்ட சில பொருட்களைக் குடியேற்றங்கள் தாய் நாட்டுக்கு மட்டுமே தாய்நாட்டுக்குச் சொந்தமான கப்பல்களில் ஏற்றியனுப்ப வேண்டும். இதனால் பிரிட்டிஷ் கப்பல்கட்கு தனியுரிமை கிட்டியது. ஆனால் நாவாய்ச் சட்டங்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் நாளாவட்டத்தில் கண்டிப்புடன் செயல்படுத்தாமல் விட்டுவிட்டனர். இதனால் கையூட்டு, கள்ளக்கடத்தல், வரிஏய்ப்பு ஆகியவை மூலம் குடியேற்றங்கள் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டை மீறிவந்தன. 1763-இல் பிரிட்டிஷ் பேரமைச்சராகவிருந்த கிரென்வில், நாவாய்ச்சட்டங்களை கண்டிப்புடன் செயல்படுத்த முயன்றார்.

4) சர்க்கரைச் சட்டம்

அமெரிக்கக் குடியேற்றங்கள் தங்கள் பாதுகாப்புச் செலவுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் போதுமான வரிகளைச் செலுத்த வேண்டுமென பிரிட்டிஷ் அமைச்சரவை கருதிற்று. குடியேற்றங்கள் இறக்குமதி செய்த வெல்லப்பாகின் மீதும்,

சர்க்கரை மீதும் வரி விதித்த சட்டமொன்று ஏற்கனவே இருந்தது. ஆனால் இதனை அரசு அதிகாரிகள் தீவிரமாக செயல்படுத்தவில்லை. கிரென்வில் அமைச்சரவை 1764இல் புதிய சர்க்கரைச் சட்டமொன்றை இயற்றி கண்டிப்புடன் வரிதிரட்ட உத்தரவிட்டது. குடியேற்ற வணிகர்களுக்கு மிகுந்த தொல்லையை இச்சட்டம் தந்தது. அதிலுங் குறிப்பாக வரிப்பணத்தைப் பொன்னாக அல்லது வெள்ளியாகச் செலுத்த வேண்டப்பட்டது. இவ்விரண்டு உலோகங்களும் குடியேற்றங்களில் கிடைத்தற்கரியனவாயிருந்தன. வணிகர்கள் இதனையெதிர்த்துக் கண்டனம் தெரிவித்தனர். ஆனால் பிரிட்டிஷ் அரசோ இதற்கு செவிசாய்க்கவில்லை. எனவே குடியேற்றங்கள் பிரிட்டிஷ் பொருட்களை இறக்குமதி செய்வதைக் குறைக்க முற்பட்டன. இத்தகைய வணிகக் கட்டுப்பாடுகளைத் தட்டிக் கழிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கப் பல ரகசிய கழகங்கள் அமைக்கப் படலாயின.

5) முத்திரைச் சட்டம்

குடியேற்றங்களின் செலவுகளைச் சரிக்கட்ட பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1765இல் நேர்முக வரியான முத்திரைச் சட்டத்தை இயற்றிற்று. இதன்படி அரசு முத்திரை வில்லைகள் அன்றாட செய்தித்தாட்கள் மீதும், நீதிமன்றப் பத்திரங்கள் மீதும், விளையாட்டு சீட்டுக்கட்டுகள் மீதும் ஒட்டப்படவேண்டுமெனப்பட்டது. இதனால் வரும் முத்திரை வரிப்பணம் குடியேற்றங்களின் எல்லைகளைப் பாதுகாக்க செலவிட திட்ட மிடப்பட்டது. செய்தித்தாள் வெளியிடுவோரும், சட்ட அறிஞர்களும் முத்திரைச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததோடு, இதுபோன்ற சட்டங்களை விதிக்க பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு உரிமையில்லை என்றும் மக்கள்முன் வாதிடலாயினர். குடியேற்றங்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. எனவே பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 'பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியும் இல்லை' (No taxation without representation) என்ற முழக்கம் குடியேற்றங்களில் ஒலிக்கலாயிற்று. ஒன்பது குடியேற்றங்களின் பிரதிநிதிகள் நியூயார்க்கில் கூடி முத்திரைச் சட்ட பேரவை ஒன்றைக் கூட்டி கண்டனக் குரல்களையெழுப்பினர். முத்திரை விற்போரை கிளர்ச்சியாளர்கள் பதவி விலகச் செய்தனர். முத்திரைகளின்றி செய்தித்தாட்கள் வெளிவந்தன; நீதிமன்றப் பத்திரங்கள் பதிவாயின. கடும் எதிர்ப்பினைக் கண்ணுற்ற பாராளுமன்றம் முத்திரைச் சட்டத்தை ரத்து செய்தது. ஆனால் அதே சமயத்தில் குடியேற்றங்களில் வரி திரட்ட அரசருக்கும், பாராளுமன்றத்துக்கும் உரிமை உண்டு என்பதைக் கூறும் அறிவிப்புச் சட்டமொன்றை பாராளுமன்றம் இயற்றிற்று. இதனைக் குடியேற்றங்கள் வெறுத்தன.

6) டவுன்ஷெண்டு சட்டங்கள்

புதிய நிதியமைச்சராக 1767இல் பதவியேற்ற பிரிட்டிஷ் நிதியமைச்சர் சார்லஸ் டவுன்ஷெண்டு குடியேற்றங்களைக் கட்டுப்படுத்த மேலும் பல வரிவிதிப்புச் சட்டங்களை இயற்றினார். வர்ணங்கள், காகிதம், கண்ணாடி, தேயிலை ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றைத் திரட்ட சுங்க அதிகாரிகள் குழுவொன்று பாஸ்டன் நகரில் செயல்படத் துவங்கிற்று. கள்ளக் கடத்தலைத் தடுக்க அதிகாரிகள் முனைந்து செயல்படலாயினர். குற்ற விசாரணை மன்றங்களும் அமைக்கப்பட்டன. ஆனால் டவுன்ஷெண்டு சட்டங்களைக் கண்டித்து எதிர்ப்புகளும், கிளர்ச்சிகளும் குடியேற்றங்களில் எழுந்தன. பிரிட்டிஷ் சரக்குகளை இனி வாங்குவதில்லை என்ற

ஒப்பந்தத்தில் பல வணிகர்கள் கையெழுத்திட்டு, கட்டுக்கோப்புடன் செயல்பட்டனர். இதனால் பிரிட்டனின் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டதைக் கண்ட டவுன்ஷெண்டு, தேயிலை தவிர பிற பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் நீக்கப்பட்டன. குடியேற்றங்கள் தங்கட்கு மேலுமொரு வெற்றி கிட்டியதைக் கண்டு மகிழ்ந்தன. இருப்பினும் தாய் நாட்டுடனான உறவில் கசப்பு ஏற்பட்டதை மறக்கமுடியவில்லை.

7) பாஸ்டன் கூட்டுக்கொலை

சுங்கவரிகளைத் திரட்டும் பணியில் பாதுகாப்புக்காக பாஸ்டன் நகருக்குப் படைகள் அனுப்பப்பட்டிருந்தன. இப்படைவீரர்களோடு அவ்வட்டார மக்கள் 1730 மார்ச்சுத் திங்களில் மோதினர். படைவீரர்கள் தற்காப்புக்காக சுட்டனர். இதில் ஐவர் கொல்லப்பட்டனர். அறுவர் காயமுற்றனர். பாஸ்டன் நகரே கொதித்தெழுந்தது. இதையொட்டி நடந்த நீதி விசாரணையில் பிரிட்டிஷ் தளபதி மீதோ, வீரர்கள் மீதோ தவறு ஏதுமில்லையென்றும், மக்கட்கூட்டமே காரணமென்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் மக்கள் மேலும் மனக்கசப்படைந்தனர். மேன்மேலும் உரிமைகள் பெற விழைந்த அமெரிக்கர்கள் குடியேற்றங்களை ஒன்றாக இணைக்க முற்பட்டனர். இதற்கான கடிதத் தொடர்புகளைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. கடிதங்கள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் பிரிட்டனுக்கெதிரான பரப்புரை இயக்கம் தீவிரமாயிற்று. புதிய இங்கிலாந்துப் பகுதிகளில் மறைவடக்கக் கழகங்கள் செயற்பட்டன. 1773ஆம் ஆண்டளவில் தாய் நாட்டுக்கும் அமெரிக்கக் குடியேற்றங்கட்கும் இடையேயான உறவில் பல நிகழ்ச்சிகள் மனத்தாங்கலை ஏற்படுத்தியிருந்தன. இருதரப்பாருக்குமிடையே இனியும் நட்புறவு நீடிக்குமா என்பது ஐயப்பாடாகவே இருந்தது.

8) தேயிலைச் சட்டமும் தேநீர் விருந்தும்

பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1773இல் தேயிலைச் சட்டமொன்றை இயற்றிற்று. இது கிழக்கிந்திய நிறுவனத்தின் தேயிலை வாணிபத்தை செம்மைப்படுத்தவே இயற்றப்பட்டது. இதுகாறும் கிழக்கிந்திய நிறுவன வணிகர்கள் தேயிலையை இங்கிலாந்தில் வணிகர்கட்கு மொத்தமாக விற்றனர். இதனை அமெரிக்க வணிகர் மொத்தமாக வாங்கிச் சென்று குடியேற்றங்களில் விற்று இலாபம் பெற்று வந்தனர். இப்புதிய சட்டப்படிகிழக்கிந்திய நிறுவனத்தார் நேரடியாக அமெரிக்காவில் கிளைகளை நிறுவி தேயிலையை நேரடியாக சில்லறை விற்பனை செய்ய முற்பட்டது. இவ்வேற்பாட்டால் இடையீட்டாளரது இலாபம் நீங்கிற்று. கிழக்கிந்திய நிறுவனம் குறைந்த விலையில் தேயிலையை விற்க முடிந்தது. அமெரிக்க மக்களுக்கும் இதனால் நன்மையே. ஆனால் அமெரிக்க வணிகர்கள் கிழக்கிந்திய நிறுவனத்தின் தனியுரிமையை விரும்பவில்லை. இத்தேயிலைச் சட்டம் அமெரிக்கரது உரிமைகளைப் பறிக்கிறது என கூக்குரலெழுப்பப்பட்டது.

பிலடெல்பியாவில் உரிமை வேட்கை மிகுந்தோர் பேரவை ஒன்றைக் கூட்டினர். கிழக்கிந்திய நிறுவனத்தின் முகவர்களைப் பதவி விலகச் சொன்னார்கள். அவர்களும் பதவி விலகினர். அமெரிக்க துறைமுகங்கட்கு வந்த தேயிலைப் பெட்டிகளை இறக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. பாஸ்டன் துறைமுகத்துக்கு வந்த ஒரு கப்பலில் தேயிலைப் பெட்டிகள் வந்திருந்தன. இவற்றை இறக்காமல் அந்நகர மக்கள் தடுத்து

நிறுத்தினர். கப்பல் தளபதி செய்வதறியாது திகைத்திருந்தார். ஒரு நாள் இரவு (16 டிசம்பர் 1773) பாஸ்டன் குடிமக்கள் சிலர் செவ்விந்தியர்களைப் போல் வேடந்தரித்து, அக்கப்பலில் ஏறி பெட்டிகளை உடைத்துத் திறந்து தேயிலையைக் கடலில் எறிந்தனர். இதனை நகைச்சுவையாக பாஸ்டன் தேநீர் விருந்தென்பர்.

9) பொறுக்க முடியாத சட்டங்கள்

பாஸ்டன் துறைமுக நிகழ்ச்சிகளை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கேட்டறிந்ததும் மிகுந்த சினமுற்றனர். தாய்நாடு குடியேற்ற நாடுகள் உறவில் ஒரு திருப்புமுனை வந்துற்றதெனலாம். பாஸ்டன் நகர் இருந்த மாசசூசெட்ஸ் குடியேற்றத்துக்கு ஒரு பாடங் கற்பிக்க பிரிட்டிஷ் பாராளுமன்றம் உறுதி கொண்டது. 1774இல் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. இவற்றை அமெரிக்கர் "பொறுக்க முடியாத சட்டங்கள்" என்றனர். முதலாவதாக பாஸ்டன் துறைமுகத்தை மூடும் சட்டம் இயற்றப்பட்டது. அங்கிருந்த சுங்கச்சாவடி மாற்றப்பட்டது. எனவே கப்பல் போக்குவரத்து நின்றது. மற்றொரு சட்டம் மாசசூசெட்ஸ் குடியேற்ற சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குரிமையை அக்குடியேற்ற மக்களிடமிருந்து பறித்தது. குடியேற்றங்களில் பணியாற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகள் மீதான வழக்குகள் இங்கிலாந்தில் விசாரிக்கப்படலாமென மற்றொரு சட்டம் கூறிற்று. இவற்றுக்கும் மேலாக அக்குடியேற்றத்தின் ஆளுநர் நீக்கப்பட்டு, ஓர் இராணுவ தளபதி ஆளுநராக நியமிக்கப்பெற்றார்.

பாஸ்டன் துறைமுகம் மூடப்பட்ட செயல் குடியேற்ற மக்களிடையே மிகுந்த ஆத்திரத்தை மூட்டிற்று. வட அமெரிக்காவில் அஃது இரண்டாவது பெரிய துறைமுக மாகும். கப்பல் தளங்கள், கிடங்குகள் எல்லாம் கேட்பாரற்றுக் கிடந்தன. இங்கிருந்த வணிகர்கள் பெருந்துயருற்றனர். ஒரு நகரத்தின் பொருளாதார வாழ்க்கையையே பாராளுமன்றம் சிதைக்கமுடியுமென்றால் அமெரிக்கர் உரிமை எங்கே என்ற அச்ச உணர்வு எழுந்தது.

பிலடெல்பியா பேரவை

முன்பு முத்திரைச் சட்டத்தையெதிர்த்து பேரவை ஒன்று கூட்டப்பட்டதுபோல் இப்பொழுது "பொறுக்கமுடியாத சட்டங்களை" எதிர்த்து பிலடெல்பியாவில் 1774 செப்டம்பரில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. இதற்கு பன்னிரண்டு குடியேற்றங்களிலிருந்து 56 பிரதிநிதிகள் வந்தனர். இதுவே அனைத்துக் குடியேற்றங்களின் (ஜார்ஜியா நீங்கலாக) முதல் பேரவையாகும். தத்தம் குறைகளையும், பிரிட்டனின் போக்கையும் இப்பிரதிநிதிகள் கூடிப் பேசினர். மிகவும் இணக்கமான முறையில் கவனத்தோடு பிரிட்டிஷ் அரசுக்கு எச்சரிக்கையொன்று விடுக்கப்பட்டது. குடியேற்றங்கள் மீது வரிவிதிக்க பிரிட்டனுக்கு உரிமையில்லை என்றும், குடியேற்ற மக்கள் கிழமைக்கு இருமுறையாவது இராணுவப் பயிற்சி பெற கூடவேண்டுமென்றும், பிரிட்டிஷ் சரக்குகளை வாங்காது புறக்கணிக்க வேண்டுமென்றும், அமெரிக்கப் பொருட்களை பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்ட எந்த நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடாதென்றும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. முத்திரை சட்டத்தை முன்னர் பிரிட்டன் ரத்து செய்தது போல் "பொறுக்கமுடியாத சட்டங்களையும்" பிரிட்டன் ரத்து செய்யுமென எதிர்பார்த்தனர். மறு ஆண்டு மீண்டும் கூடுவதென முடிவு செய்து கலைந்தனர்.

போர் நிகழ்ச்சிகள்

பிரிட்டன் போருக்கான ஆயத்தங்களைச் செய்ய முற்பட்டது. ஆங்கிலத் தளபதி கேஜ் (Gage) என்பவர் பாஸ்டன் நகருக்கருகாமையிலிருந்த கன்கார்டு (Concord) பட்டணத்திலுள்ள குடியேற்றங்களின் போர்த்தளவாட கிடங்கினைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பினார். அமெரிக்கர் பிரிட்டிஷ் வீரர்களை லெக்சிங்டனில் (Lexington) தடுத்து நிறுத்த முயற்சித்தனர். அம்மோதலில் எட்டு அமெரிக்கர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இச்செய்தி எல்லா மாநிலங்கட்கும் பரவிற்று. ஆங்கிலேயர் வெற்றிகரமாக ஆயுதக்கிடங்கினைக் கைப்பற்றினார்கள்.

பங்கர் குன்றுப் போர்

அனைத்துக் குடியேற்றங்களின் இரண்டாவது பேரவை மீண்டும் பிலடெல்பியாவில் 1775 மே திங்கள் கூட்டப்பட்டது. அமெரிக்கப் படை அணி ஒன்றை வகுத்து அதன் தளபதியாக ஜார்ஜ் வாஷிங்டன் என்பாரை பேரவை நியமித்தது. வர்ஜீனியாவைச் சேர்ந்த குடியானவர் ஒருவரின் மகனாவார் இவர். இளமையில் மனையளவை பயின்றார். செல்வம் மிகுந்த விதவை ஒருத்தியை மணம்புரிந்தார். செல்வந்தரிடையே காணப்பட்ட இறுமாப்பும் கண்டிப்பும் இவரிடமிருந்தது. சிறந்த போர்ப் பயிற்சி பெற்றிருந்த வாஷிங்டன் பிரெஞ்சுக் குடியேற்றங்களுடனான போரிலும், செவ்விந்தியர்களுடனான போரிலும் பங்கேற்று சிறந்த அனுபவம் பெற்றிருந்தார். தாய் நாட்டுடன் மூண்ட இப்போரின் போது தனக்கு ஊதியம் தேவையில்லையென்றும், தனக்கான செலவுகளை மட்டும் ஏற்றால் போதுமென்றும் கூறினார். அமெரிக்கர் பாஸ்டனைக் கைப்பற்றத் திட்டமிட்டு முற்றுகையிட்டனர். பங்கர் குன்றில் ஆங்கிலப்படை கேஜின் தலைமையில் போரிட ஆரம்பித்தது. ஆங்கிலேயர் பெருமளவில் வீரர்களை இழந்து வெற்றி பெற்றும் பயனேது மில்லாது போயிற்று. இந்நிலையில் கேஜ் நீக்கப்பட்டு ஹோவ் (Howe) பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைமை தாங்கினார். வாஷிங்டன் போதிய அளவு போர்க்கலன்கள் இல்லாமையால் பின் வாங்கினார். பின்னர் எதிர்பார்த்த உதவி வந்ததும் போரிட ஆயத்தமானார். ஆனால் ஹோவ் பாஸ்டனை விட்டு விலகினார்.

உரிமை அறிவிப்பு

உரிமைப்போர் ஆரம்பித்தபோது அமெரிக்க குடியேற்றங்களிடையே ஒரு நடுவண் அரசு இல்லை. குடியேற்றங்களின் இரண்டாவது பேரவை கூடியபோது அதற்கு உண்மையான அதிகாரமோ, போர் நடத்தைக்கான சீரிய திட்டங்களோ இல்லை. குடியேற்றங்களின் மக்கட்தொகை 25 இலட்சமாகும். இவற்றின் படையில் 90,000 வீரர்களே இருந்தனர். இவர்கள் அனைவரும் தாமாகப் போரிட முன்வந்தவர்கள். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் கடுமையாகப் போரிடும் ஆற்றல் இவர்கட்கு இருந்தது. போரின் துவக்கத்தில் பிரிட்டனிலிருந்து முழுமையாக விடுபடவேண்டுமென பெரும்பாலானோர் எண்ணவில்லை. ஆனால் மூன்றாம் ஜார்ஜ் அமெரிக்கருக்கெதிராகப் போரிட 20,000 ஜெர்மானிய கூலிப்படைகளை அமர்த்தியமை அமெரிக்கரை சினங் கொள்ளச் செய்தது. மன்னரின் பிடிவாதப் போக்கு வெறுப்பையூட்டிற்று. எனவே ஒற்றுமையுணர்வைப் பெற்ற குடியேற்றங்கள் தனித்து உரிமையோடு இயங்க உரிமை

யுண்டு எனப் பேரவை தீர்மானம் ஒன்றை இயற்றியது. இதனைக் குடியேற்றங்களின் பிரதிநிதிகள் ஒருமனதாக ஜூலை 4ஆம் நாள் (1776) ஏற்றனர். அந்நாளைத்தான் இன்று வரை அமெரிக்கர்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகின்றனர். அரசு எப்படிச் செயல்படவேண்டுமென்ற கோட்பாட்டினைச் சுதந்திர அறிவிப்பு விளக்கியது. மக்களுக்கு இயற்கையான உரிமைகள் சிலவுண்டு. உயிர்வாழவும், தன்னுரிமையோடு இயங்கவும், மக்களுக்கு உரிமையுண்டு என்றும், இதனை எந்த அரசாவது புறக்கணித்தால் மக்கள் அரசுக்கெதிராக புரட்சி செய்து புதிய அரசை அமைப்பது நியாயமானது என்றும் அரசரிடத்துத் தங்களிடமிருந்த குறைபாடுகள் இன்னவென்றும் உரிமை அறிவிப்பில் கூறப்பட்டது.

பிரிட்டனுடனான மோதலை இவ்வுரிமை அறிவிப்புதெளிவாக்கிற்று. பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்டிருப்பதே பாதுகாப்பென வணிக செல்வந்தர்கள் சிலரும், ஆங்கிலிக்க திருச்சபையைச் சேர்ந்த சிலரும், பழமைவாதிகளும் விரும்பினர். டோரிகளும், அரச கட்சியாளர்களும் வெளிப்படையாக பிரிட்டிஷ் அரசின் பக்கம் சேர்ந்தனர். இவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கட்தொகையில் மூன்றிலொரு பங்காகும். குடியேற்றங்களின் சுதந்திரவாதிகள் இவர்களை ஒடுக்க முற்பட்டனர்.

போரின் திருப்புமுனை சாரடோகா

ஆங்கிலத் தளகர்த்தர் ஹோவ் வாஷிங்டனை புரூக்லின் (Brooklin) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆனால் ஹோவ் மேற்கொண்டு முன்னேறவொட்டாதபடி வாஷிங்டன் டிரென்டன் (Trenton), பிரின்ஸ்டன் (Princeton) ஆகிய இடங்களில் வெற்றிபெற்று தடுத்து நிறுத்தினார். அடுத்து 'புதிய இங்கிலாந்து' குடியேற்றங்களைக் கைப்பற்ற எண்ணி பிரிட்டிஷார் திட்டமிட்டு படையெடுத்தனர். ஆனால் அவர்களை இறுதியில் அமெரிக்கப் படைத்தளபதி கேட்ஜ் (Gates) என்பவர் சாரடோகா என்னுமிடத்தில் 1777 அக்டோபர் திங்கள் முறியடித்தார்.

சாரடோகா வெற்றியானது அமெரிக்க உரிமைப் போரில் ஒரு புதிய திருப்பத்தைத் தந்தது. அதுகாறும் வாளாயிருந்த ஸ்பெயினும், பிரான்ஸும் அமெரிக்கருக்கு உதவி செய்ய முன்வந்தன. குறிப்பிடத்தக்க இந்த முடிவு பிரிட்டிஷ் பேரரசுக்குப் பேரிடராய் அமைந்தது. ரஷ்யா, பிரஷ்யா, ஹாலந்து, டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகள் 'படையேந்திய நடுநிலைக் கூட்டுறவு' (Armed Neutrality) என்ற ஓர் ஒப்பந்தத்தைத் தம்முள் ஏற்படுத்திக் கொண்டு, தங்களது கப்பல்கள் அமெரிக்காவுக்கு உதவியாகத் தளவாடங்களைத் தாங்கிச் செல்கின்றனவா என்பதைச் சோதிக்கப் பிரிட்டனுக்கு உரிமையில்லை என்று அறிவித்தனர். இதனால் வெகுண்ட ஆங்கிலேயர் ஹாலந்து மீது படையெடுத்தனர். ஸ்பெயின் ஜிப்ரால்டரை முற்றுகையிட்டது. பிரெஞ்சுக்காரர் மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கினர். இந்தியாவில் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக ஹைதர் அலிக்கு உதவி செய்தனர்.

யார்க்டவுனில் அமெரிக்கருக்கு இறுதி வெற்றி

ஜார்ஜ் வாஷிங்டன் பிரிட்டிஷ் படைகளை முற்றிலும் முறியடிக்க நியூயார்க் அருகே பல திங்கள் காத்திருந்தார். ஆனால், பிரிட்டிஷ் படைகள் கார்ன்வாலிஸ் தலைமையில்

தெற்கு நோக்கிச் சென்று யார்க்டவுன் தீபகற்பத்தை முற்றுகையிட்டிருந்தது. அமெரிக்கருக்கு உதவ முன் வந்த பிரெஞ்சு கடறபடை யார்க்டவுனுக்கு சென்று கார்ன்வாலிஸ் கடல் வழியே தப்பிச்செல்லாவண்ணம் வழி மறித்து நின்றது. அச்சமயம் வாஷிங்டன் பெரும்படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு தெற்கே வந்தார். அவருடன் பிரெஞ்சு தரைப் படையொன்றும் இணைந்தது. இக்கூட்டணி யார்க்டவுனைத் தாக்கிற்று. மூன்றுகிழமை கட்கு தாக்குப்பிடித்த கார்ன்வாலிஸ் இறுதியில் 7000 படை வீரர்களுடன் சரண டைந்தார்.

பாரிஸ் உடன்படிக்கை (1783)

பிரிட்டிஷாரின் தோல்வி தென்பகுதியினைக் கைப்பற்றும் திட்டத்துக்கு முற்றுப் புள்ளியை வைத்தது. பிற பகுதிகளிலிருந்தும் தோல்விச் செய்திகளே வந்தன. ஸ்பானியர் கள் புளோரிடாவிலிருந்து பிரிட்டிஷ் வீரர்களை வெளியேற்றினர். ஜிப்ரால்டரும் ஸ்பானியர் தாக்குதலுக்குட்பட்டது. மேற்கிந்தியத் தீவுகளில் பிரிட்டனுக்குச் சொந்தமான ஜமய்க்காவும், பா படாசும் பிரெஞ்சுப் படைகளால் தாக்கப்பட்டன. இந்நிலையில் பிரிட்டிஷ் பேரரசினை அழிவுப் பாதையிலிருந்து காப்பாற்ற அமெரிக்கரோடு அமைதி உடன்பாடு காண்பதே அறிவுசால் செயலாயிற்று. குடியேற்றங்களின் பிரதிநிதிகளும், தாய்நாட்டின் பிரதிநிதிகளும் பிரான்சின் தலைநகரான பாரிசில் கூடிப்பேசி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையை உருவாக்கின. (1) அமெரிக்காின் உரிமையை பிரிட்டன் ஒப்புக் கொண்டதோடு வடஅமெரிக்காவின் மேலைப் பகுதிகளில் அவர்தம் உரிமையினையும் ஏற்றது. (2) எல்லைப் பகுதிகளிலிருந்து விரைந்த படைகளை விலக்கிக் கொள்ளவும் பிரிட்டன் ஒப்புக்கொண்டது. (3) மிசிசிபி நதியில் கப்பல்களைச் செலுத்த பிரிட்டிஷாருக்கும், அமெரிக்கருக்கும் சம உரிமை தரப்பட்டது. ஆனால் ஸ்பெயின் இதற்கான தனது இசைவைத் தரவில்லை. இதனால் பின்னர் ஒரு மோதல் ஏற்பட்டது. (4) வடக்கே நியூபவுண்டுலாந்துப் பகுதியில் மீன் பிடிப்பு உரிமையை அமெரிக்கர் பெற்றனர். (5) குடியேற்றங்களில் இருதரப்பாருக்கும் பாக்கியிருந்த கடன்தொகைகளைத் திரட்ட சட்டபூர்வமாக உரிமை தரப்பட்டது. (6) பிரிட்டனை ஆதரித்த டோரிகளுக்கு ஏற்பட்டிருந்த சொத்து இழப்புகளை ஈடுசெய்ய குடியேற்றங்களின் பேரவை வாக்களித்தது.

அமெரிக்கக் குடியேற்றங்கள் தாய்நாட்டின் பிடியிலிருந்து விடுபட்டு தங்கள் எதிர்காலத்தை உருவாக்கும் உரிமையினை இப்புரட்சியின் விளைவாகப் பெற்றனர். அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தவும், பொருளாதார முன்னேற்றங் காணவும், மேற்கு நோக்கி குடிபெயரவும் புதிய நாடு திட்டமிட்டு செயல்பட வேண்டியிருந்தது. பிரிட்டன் பல சிக்கல்களைத் தீர்க்காமல் விட்டுச் சென்றிருந்தது. அழிவு நோக்கில் சென்ற புரட்சியின் போக்கு முடிவுற்றது. இனி ஆக்கப்பணியில் ஈடுபட்டு, எதிர்நோக்கியிருந்த சிக்கல்களைத் தீர்ப்பதில் அமெரிக்கர் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.

பயிற்சி வினா

பிரிட்டனின் குடியேற்றக் கொள்கையே இறுதியில் அமெரிக்கக் குடியேற்றங்களை இழக்கக் காரணமாயிற்று என்பதனை விளக்குக.

பாடம் – 2 நேசக் கூட்டாட்சி (1781–89)

தாய் நாட்டின் பிடியிலிருந்து குடியேற்றங்கள் விடுதலை பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாடாகத் தோன்றியுள்ள தங்கள் அரசாட்சியில் இனி பிரிட்டனின் தலையீடு இருக்காது. பிரிட்டிஷ் வணிகச் சட்டங்களை அமெரிக்க வணிகர்கள் கவனியாது விடலாம். வேளாண் பெருமக்கள் தங்கள் விருப்பப்படி விளைபொருட்களை விற்கலாம். தொழிலாளர்கள் தங்களிடமுள்ள பணத்தை சிறு முதலீடாக இட்டு தொழிற்சாலைகளைத் துவக்கலாம். பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்து உரிமை பெற்ற அமெரிக்க மக்கள் மகிழ்ச்சியுற்றனர். ஆனால் விரைவில் தங்களுடைய புதிய நாட்டினை எதிர் நோக்கியிருந்த பிரச்சினைகளை அவர்கள் உணர்ந்தனர். முதலில் அவர்கள் அரசியல் அமைப்பு ஒன்றினை வகுக்க வேண்டியிருந்தது.

போருக்குப் பின் வழக்கமாக நிலவுவது போல் வாணிபம் மந்த நிலையில் இருந்தது. போரினால் ஏற்பட்ட அழிவுகளைச் சீர்படுத்த வேண்டியிருந்தது. பிரிட்டனை ஆதரித்தோரும், டோரிகளில் பலரும் கனடாவிற்கு ஓடிவிட்டனர். இதனால் பல வட்டாரங்களில் தலைவர்கள் இல்லாது மக்கள் தவித்தனர். பல இடங்களில் கொடுத்த கடன் தொகையினைப் பெற முடியாமல் மக்கள் இடர்ப்பட்டனர். சில இடங்களில் சட்ட ஒழுங்கு விதிகள் புறக்கணிக்கப்பட்டமையால் ஒழுங்கின்மை மிகுந்தது. புதிய நாட்டினை எதிர் நோக்கியிருந்த பேரிடர்களைக் களைந்திட போதுமான வலிமைமிக்க அரசு இல்லை. அமெரிக்கரின் அண்டை நாடுகளுடனான உறவிலும் பல சிக்கல்கள் நிலவின. கனடா தொடர்ந்து பிரிட்டனுக்குரிய குடியேற்றமாகவிருந்தது. கியூபெக் பகுதியிலிருந்த பிரெஞ்சு இனத்தவர் அமெரிக்கரைக் கண்டு அஞ்சினர். புளோரிடாவும், லூசியானாப் பகுதியும் ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்தன. இப்பகுதிகளிலிருந்து புதிய அமெரிக்கக் குடியரசுக்கு தொடர்ந்து தொல்லைகள் வரலாயின. மேலைப் பகுதியில் அமைதியின்மை தொடர்ந்தது.

நேசக்கூட்டாட்சியின் அமைப்பு விதிகள்

உரிமைப் போர் நடந்து கொண்டிருந்த ஆண்டுகளில் குடியேற்றங்களின் இரண்டாவது பேரவையே தேசிய அரசாக விளங்கிற்று. இப்படித்தான் செயல்பட வேண்டுமென எழுதப்பட்ட அரசியலமைப்பு ஏதுமில்லை. இருப்பினும், போர்க்காலத்தே விரைந்து செயலாற்ற பேரவை சில விதிமுறைகளை வரைய முற்பட்டது. ஜான் டிக்கின்சன் என்பாரது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஒன்றரை யாண்டு காலம் விவாதித்து பதின்மூன்று அமைப்பு விதிகளை வகுத்தது. 1777-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பேரவையானது இவ்விதிமுறைகளை மாநிலங்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பித்தது. இவைகள் இசைவு தெரிவிக்க நான்கு ஆண்டுகளாயின. போர்கூட முடியுந்தருவாயில் இருந்தது. சட்டபூர்வமாகப் பேரவை செயல்பட இவ்விதி முறைகள் பயன்பட்டன. இவை முழுமையாக மன நிறைவைத் தராவிட்டாலும் சோதனையான எட்டு ஆண்டு காலத்துக்கு மாநிலங்களைக் கட்டிக் காத்தது. 1789-இல் முறையான அரசியலமைப்பு தீட்டப்பட்டு செயலுக்கு வரும் வரையில் தேசிய அரசுக்கான தாற்காலிக அடித்தளமாக இவ்விதிமுறைகள் அமைந்தன. அது நேசக் கூட்டாட்சி எனப்பட்டது.

நேசக்கூட்டாட்சியின் விதிமுறைகளை உருவாக்கும் போது தேசிய நடுவண் அரசுக்கு எவ்வளவு உரிமைகள் தரப்பட வேண்டும், மாநிலங்கட்கு எவ்வளவு தரப்படவேண்டுமென முடிவு செய்வது கடினமான செயலாக இருந்தது. காரணம் மாநிலங்கள் தத்தம் அதிகாரங்களை நிலைநாட்டுவதில் இறுமாப்புக் கொண்டன. அவை ஒன்றுக்கொன்று பொறாமைப்பட்டதோடு, வலிமை மிகுந்த மைய அரசு அமைவதையும் விரும்பவில்லை. தேசியப் பாராளுமன்றம் (காங்கிரஸ்) ஒன்று அமைவதை வரவேற்ற போதிலும், அதற்கு வாணிபத்தைக் கட்டுப்படுத்தவோ, வரிகளை விதிக்கவோ உரிமை தரப்படவில்லை. பிரிட்டன் வரிகளை விதித்து தலையிட்டது போல் புதிய அரசும் தலையிடுவதை வெறுத்தனர். அப்படி சட்டமேதும் இயற்றப்பட வேண்டுமென்றால் அதற்கு ஒன்பது மாநிலங்களாவது ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். இதன்படி சட்டங்களை இயற்றவோ, விதிமுறைகளை மாற்றியமைப்பதோ கடினமான செயலாக இருந்தது. சட்டங்களைச் செயலாக்க ஆட்சித்துறையோ, அல்லது குடியரசுத் தலைவரோ இல்லை எனினும் போரினைத் தொடர்ந்து நடத்தவும், பிறநாடுகளோடு தொடர்பு கொள்ளவும் நேசக்கூட்டாட்சியின் நடுவண் அரசுக்கு உரிமை தரப்பட்டிருந்தது.

குடியேற்ற விரிவாக்க திட்டங்கள்

பிரிட்டிஷ் குடியேற்றங்கள் அனைத்தும் கடலோரப் பகுதியில் நிறுவப்பட்டன. அப்பலேச்சியன் மலைத்தொடருக்கு மேற்கேயிருந்த பகுதி மேல் பிரிட்டன் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டவில்லை. புதிய குடியேற்றங்களை நிறுவ ஏராளமான நிலப்பகுதி கிடந்தது. முதலாவதாக 1784-இல் நில ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இதனை இயற்றியவர் ஜெபர்சன் ஆவார். இதன்படி மேலைப் பகுதியிலிருந்த நிலங்கள் அனைத்தும் மாநிலங்களாகப் பிரிக்கப்படும். போதிய அளவு மக்கட் தொகைப் பெருக்கம் ஏற்பட்டதும் மாநில நிலை வழங்கப்படும். நிலம் இலவசமாக வழங்கப்பெறும் என்பது இந்த ஆணையின் சிறப்பாகும். ஆனால், இது செயலுக்கே வரவில்லை. காரணம் குடியேற்றங்களின் பேரவை வன்மையாக எதிர்த்தது. மிசிசிபி பள்ளத்தாக்கில் நிறுவப்படவிருக்கும் குடியேற்றங்களின் பிரதிநிதிகள் தங்களுடைய செல்வாக்கினை எங்கே பறித்துவிடுவார்களோவென பழைய குடியேற்றங்கள் அஞ்சின. நீண்டசதுர வடிவமைப்பில் மாநிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்படும் என்பதை மேலைப் பகுதியினர் விரும்பவில்லை. இயற்கை எல்லைகளையே விரும்பினர். இத்தகைய எதிர்ப்புகளால் ஜெபர்சன் தீட்டிய ஆணை செயலுக்கு வரவில்லை.

ஓகியோ நதிப்பள்ளத்தாக்கில் குடியேறும் மக்களின் எண்ணிக்கை கூடுதலாகவே குடியேற்றங்களின் பேரவை 1785-இல் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. இதன்படி வடமேற்கு நிலப்பகுதியானது அளக்கப்பட்டு, 36 சதுர மைல் அளவுள்ள நகர்ப்புறங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு சதுரமைலிலும் 640 ஏக்கர் நிலமிருக்கும். முப்பத்தாறு பிரிவுகளில் ஒன்று (16-வது பிரிவு) ஒரு பள்ளி நிறுவ ஒதுக்கப்படல் வேண்டும். இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தால் குடியேற்ற மக்களுக்கு பெரும்பேறாக இருந்திருக்கும். சில ஆதாயக்காரர்கள் பேரவையில் தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி ஒரு ஏக்கர் நிலம் ஒரு டாலருக்கு விற்கப்படவேண்டுமென விதிகளை மாற்றியமைத்தனர். குறைந்தது 640 ஏக்கர் நிலப்பரப்பை 640 டாலருக்கு வாங்கலாமென நிருணயிக்கப்பட்டது. எளிய மக்களால் இப்பெருந்தொகை தந்து நிலத்தை வாங்க முடியாத நிலையில் தனியார் நில நிறுவனங்கள் இவற்றை வாங்கி சில்லரை முறையில் விற்றன.

மூன்றாவதும், மிகமுக்கியமானதுமான வடமேற்கு நிலப்பகுதி பற்றிய ஆணை 1787-இல் பிறப்பிக்கப்பட்டது. அமெரிக்க வரலாற்றிலேயே இது ஒரு முக்கியமான சட்டமாகும். புதிய குடியேற்ற நிலப்பகுதிகள் ஒரு மாநில நிலையைப் பெற மூன்று படி நிலைகளைக் கடக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டது. முதல் நிலையில் மக்கட் தொகைக் குறைவாக உள்ளவரை மைய அரசே அதிகாரிகளை நியமிக்கும். இவ்வதிகாரிகள் தேவையான சட்டங்களை இயற்றுவர். இரண்டாம் நிலையில் 5,000 ஆண்கள் கொண்டதாக ஒரு நிலப்பரப்பு வளர்ந்து விட்டால், அப்பகுதியினர் ஒரு சட்டமன்றத்தைத் தேர்ந் தெடுக்கலாம். ஆனால் அப்பகுதிக்கான ஆளுநரையும் பிற அதிகாரிகளையும் மைய அரசே நியமிக்கும். பாராளுமன்றத்துக்கு இப்புதிய மாநிலத்தின் சார்பாக ஒரு பிரதிநிதியை யனுப்பலாம். ஆனால் அவருக்கு வாக்குரிமை இராது. மூன்றாவது நிலையில் புதிய நிலப்பகுதியின் மக்கட் தொகை 60,000 ஆக எட்டியதும் பதின்மூன்று மாநிலங்களை யொத்த மாநில நிலை அப்பகுதிக்கு அளிக்கப்பெறும்.

மிசிசிபி ஆற்றுக்கு கிழக்கேயும், ஓகியோ நதிக்கு வடக்கேயும் ஐந்து ஏரிகளுக்குத் தெற்கேயும், பென்சில்வேனியாவுக்கு மேற்கேயும் உள்ள வடமேற்கு நிலப்பகுதிக்கு இவ்வாணை பிறப்பிக்கப்பட்டது. இப்பகுதியில் குறைந்தது மூன்று அல்லது அதிக அளவு ஐந்து மாநிலங்கள் உருவாகலாமென வரையறுக்கப்பட்டது : இறுதியில் ஐந்து மாநிலங்கள் அமைக்கப்பட்டன. அவை : ஓகியோ, இந்தியானா, இலினாய், மிச்சிகன், விஸ்கான்சின். இவ்விதிமுறைகளே பின்னர் பெற்ற நிலப்பகுதிகளிலும் செயலாக்கப்பட்டன. புதிய நிலப்பகுதிகளை சீராகத் திட்டமிட்டு உருவாக்கியமை அமெரிக்க வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். தாய்நாடுகள் வழக்கமாகத் தத்தம் குடியேற்றங்களை அடிமை நாடுகளாகவே கருதி நடத்தி வந்தனர். இதனாலேயே அமெரிக்க உரிமைப் போர் மூண்டது. பிரிட்டன் ஆட்சிபுரிந்தபோது தங்கள் நிலை எப்படியிருந்ததென்பதை பதின்மூன்று மாநிலங்களும் உணர்ந்திருந்தன. எனவே, புதிய குடியேற்றங்களைப் பழைய மாநிலங்கள் அத்தகைய அடிமை நிலையில் வைத்திருக்க மாட்டா.

புதிய மாநிலங்களில் பள்ளிகளைத் திறக்கவும், கல்வியறிவைப் புகட்டவும் முதலிடம் தரப்பட்டது. பழைய ஆங்கில நீதி முறைகளும், ஆளுரிமைக் காப்புச் சட்டமும், சான்றாளர் கொண்ட நீதி விசாரணை முறையும் கடைப்பிடிக்கப்பட்டன. சமய உரிமை வழங்கப்பட்டது. அடிமை முறை தடை செய்யப்பட்டது.

ஓகியோ நதிப் பள்ளத்தாக்கில் புதிய குடியேற்றங்களை நிறுவிய பெருமை தனியாரால் நடத்தப்பட்ட ஓகியோ நிறுவனத்தைச் (Ohio Associates) சாரும். மசாசூசெட்ஸ் மாநில வீரரான ரூபஸ்புட்னம் (Rufus Putnam) இந்த நிறுவனத்தைத் துவக்கினார். இவர் இளமையில் கணிதம் நில அளவை ஆகியவை பயின்று சிறந்த பொறியாளராகத் திகழ்ந்தார். பாஸ்டன் நகரில் கோட்டை கொத்தளங்களைக் கட்டும் பணியை வாஷிங்டன் இவரிடம் ஒப்படைத்தார். உறுதிவாய்ந்த கோட்டைகளைக் கட்டியமையால் ஆங்கிலேயர் பாஸ்டன் பகுதியைக் கைப்பற்றும் எண்ணத்தையே விட்டனர். உரிமைப் போருக்குப் பின் ரூபஸ்புட்னம் மேற்குப் பகுதிகள் மீது கவனம், செலுத்தினார். அப்பகுதிகளில் ஏற்கனவே அளவை செய்திருந்தமையால் அவற்றின்

செல்வச் செழிப்பினை நன்கறிவார். இதைப் பற்றி பிறருக்கும் எடுத்தியம்பினார். வடமேற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் புது முயற்சியாளார்கள் சிலருடன் பிட்ஸ்பர்கிலிருந்து ஓகியோ நதியில் படகுகளில் புட்னம் புறப்பட்டார். தென்கிழக்கு ஓகியோப் பகுதியில் ஏற்கனவேயிருந்த பிரெஞ்சு மக்களின் நட்பைப்பெற்று மேரியத்தா என்ற நகரை நிறுவினர். பிரெஞ்சு அரசு மேரி அந்துவானேயின் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது. சின்சினாட்டி, கிளீவ்லண்டு போன்ற நகரங்களும் எழுந்தன. இவ்வாறு தனியார் முயற்சியால் புதிய நிலப்பகுதிகளில் புதிய குடியேற்றங்கள் எழுந்தன.

நேசக் கூட்டாட்சியில் நிதி நெருக்கடி

நேசக்கூட்டாட்சியின் அரசுக்கான செலவுகளைச் சரிக்கட்ட போதிய வருமான மில்லாததால் ஆண்டுக்காண்டு இடர்ப்பாடுகள் மிகுந்தன. இப்புதிய அரசுக்குப் பெருந் தொகையாக போர்க்கடன் ஒரு புறம் இருந்தது. இக்கடனையடைக்க வரி திரட்டவோ, சுங்கம் விதிக்கவோ கூட்டாட்சிக்கு உரிமையில்லை. குடியேற்றங்களின் போர் வீரர்கள் தங்களுக்கு வாக்களித்தபடி ஊதிய பாக்கியைக் கேட்டனர். அரசுக்குக் கடன் கொடுத்தோர் வட்டியாவது கேட்டனர். நாளுக்குநாள் காகிதப் பணத்தின் மதிப்போ குறையலாயிற்று.

உரிமைப் போருக்குப்பின் அமெரிக்கரின் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பிரிட்டன் அமெரிக்க வணிகர்களுக்கு எதிராக வணிகச் சட்டங்களைச் செயலாக்கினர். இதனால் மேற்கிந்தியத் தீவுகளோடு வாணிபம் தடைப்பட்டது. கப்பல்கட்டும் தொழிலாளருக்கும் வேலை இல்லாமல் போயிற்று. வேளாண்மைத் தொழிலாளர்களும், காட்டுமரம் வெட்டுவோரும் வேலையிழந்தனர். புதிய இங்கிலாந்தின் மீனவரும் சந்தைகளை இழந்தனர்.

ஒரு சில மாநிலங்கள் பிரிட்டனைத் தண்டிக்கலாம் என்ற எண்ணத்தோடு வணிகக் கட்டுப்பாடுகளைக் கொணர்ந்தன. நியூஹேம்ஷீயர், மசாசூசெட்ஸ், ரோடுஜலண்டு ஆகிய மாநிலங்கள் தங்கள் துறைமுகங்களிலிருந்து அமெரிக்கப் பொருட்கள் பிரிட்டிஷ் கப்பல்களில் செல்லக்கூடாதென உத்தரவிட்டன. இதனால் நிலைமை மேலும் மோசமாயிற்று. ஏனெனில் அமெரிக்க ஏற்றுமதி வீழ்ந்தது. பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது இரட்டைமடங்கு சுங்கவரிகளை நியூயார்க் மாநிலமும், மேரிலண்டு மாநிலமும் விதித்தன. இதனால் பொருட்களின் இறக்குமதி குறைந்தது. மேலும், பொருட்களின் விலையும் அதிகரித்தது. இவ்வாறாக பிரிட்டனைத் தண்டிக்க நினைத்த அமெரிக்கர் தங்களையே தண்டித்துக் கொண்டனர்.

வெளிநாட்டு வாணிபத்தால் பொன்னும், வெள்ளியும் அமெரிக்காவுக்குக் கிடைத்தது. இவ்வாணிபம் நின்றவுடன் இவ்வுலோகங்கள் அரிதாயின. வட்டிக்கடைக்காரர்கள் கடன்களைத் திரட்ட முற்பட்டபோது கடன்பட்டோர் கையை விரித்தனர். கடன் மற்றும் சொத்துரிமைச் சட்டங்களை முறையாக செயற்படுத்த முற்பட்டபோது வழக்கறிஞர்களும், ஷெரீப்களும் (நாட்டாண்மைக்காரர்களும்), நீதிபதிகளும் மக்களின் வெறுப்புக்குள் ளாயினர்.

மாநிலங்களின் அரசுகளும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தன. காகிதப் பணத்தை அச்சிட்டு புழக்கத்தில் விட்டால் சரியாகி விடுமென பலரும் வாதிட்டனர். ஏழு மாநிலங்கள் இவ்வழியைப் பின்பற்றின. ஆனால் விரைவில் காகிதப் பணத்தாளுக்கு மதிப்பே இல்லாமற் போய்விட்டது. மக்களும் வாங்க மறுத்தனர், ஏனெனில் பணத்தாளுக்கு ஈடான பொன்னும் வெள்ளியும் இருப்பில் அரசிடம் இல்லை என்பதே. இப்பணத்தாள்களை வாங்க மறுத்தோர் மீது ரோடு ஐலண்டு மாநிலம் தண்டம் விதித்தது. எனவே ரோடு ஐலண்டு மக்கட்கு அண்டை மாநிலத்தவர்கள் உணவுப் பண்டங்களைக்கூட விற்க மறுத்தனர்.

டேனியல் ஷேஸ் கலகம் – 1787

மசாசூசெட்ஸில் குடியானவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளைப்பற்றிக் கூடிப்பேசினார்கள். அரசுக்கான செலவு அதிகமாகவிருப்பதைக் கண்டித்தனர். இறுதியில் இது ஒரு கலகமாக வெடித்தது. இதனை ஷேஸ் கலகமென்பர். இதன் தலைவர் டேனியல் ஷோஸ் என்பவராவார். ஷேஸ் உரிமைப் போரின்போது அமெரிக்கப் படையில் வீரராகப் பணியாற்றியவர். லெக்சிங்டன், பங்கர் குன்றுப்போர், சரடோகா ஆகிய களங்களில் சண்டையிட்டவர். பிரெஞ்சுத் தளபதி லபயத் (Lafayethe), ஷேசுக்கு அவரது திறமையைப் பாராட்டி ஒரு வாளைப் பரிசாகத் தந்திருந்தார். ஆனால் போருக்குப் பின் செலவுக்கு பண நெருக்கடி வந்துற்றபோது ஷேஸ் இந்தப் பரிசை விற்கநேரிட்டது. நாட்டில் பொருளாதார நெருக்கடியில் மக்கள் அல்லலுறுவதைக் கண்ட ஷேஸ் படைக்கலன் ஏந்த முடிவு செய்தார். 1787-ஆம் ஆண்டு சனவரி திங்களில் 1200 பேர் கொண்ட ஒரு படையைத் திரட்டினார். ஸ்பிரிங்பீல்டு நகரில் உள்ள அரசு ஆயுதக்கிடங்கினைக் கைப்பற்ற ஷேஸ் முயற்சித்தார். ஆனால் மசாசூசெட்ஸ் மாநில ஆளுநர் படை களையனுப்பி ஷேஸின் கலகத்தை ஒடுக்கினார். அவர்தம் படையினர் தப்பியோடினர். ஷேசும் வெர்மாண்ட் காடுகளில் ஓடி ஒளிந்தார்.

ஷேஸ் கலகத்தில் அதிக அளவிலான கைகலப்பு இல்லாதபோதும் இதன் விளைவுகள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. சொத்துரிமையாளர்கள் பீதியுற்றனர். உரிமைப்போர் போல் மீண்டும் போர் வருமோவென அஞ்சினர். கலகக்காரர்கள் சட்ட ஒழுங்கினை மீறி சொத்துக்களையும், அரசினையும் கைப்பற்றக் கூடுமென கருதப்பட்டது. நேசக் கூட்டாட்சியின் விதி முறைகள் பயனற்றவையாகக் காணப்பட்டன. அமைதி ஒழுங்கை நிலைநாட்ட வலிமை பொருந்திய அரசே நாட்டுக்குத் தேவையென உணரப்பட்டது.

ஷேஸ் கலகத்தைக் கண்டு அமெரிக்க மக்கள் பொதுவாகக் கவலையடையவில்லை. அவரவர் தொடர்ந்து தத்தம் தொழிலில் ஈடுபட்டனர். வணிகத்தில் மந்த நிலையும், பணப்புழக்கத்தில் முடக்க நிலையும் ஏற்பட்ட போதிலும் புதிய உழைப்பு முறைகள் மூலம் ஊதியம் பெற முயற்சித்தனர். சிறிது இடர்ப்பாடுகள் ஏற்பட்டமைக்காக மனமுடைந்து வாளாயிருக்கவில்லை. பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளுடன் வாணிபம்

தடைப்பட்டதும் பிற புதிய சந்தைகட்குச் செல்லலாயினர். ஐரோப்பாவில் வடபகுதி நாடுகளோடும், மத்தியதரைக்கடல் நாடுகளோடும், சீனாவோடும் அமெரிக்கர் தொடர்பு கொள்ளலாயினர். மேற்கிந்தியத் தீவுகளோடு பிரிட்டிஷ் சட்ட திட்டங்களை மீறி கள்ள வாணிபமும் நடைபெற்றது. இந்நிலையில் புதிய நாடாக மலர்ந்த அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு விரைவில் செல்வச் செழிப்பு ஏற்படலாயிற்று.

நேசக்கூட்டாட்சியின் போது வெளியுறவு

பாரிஸ் உடன்படிக்கையின்படி (1783) பிரிட்டன். அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிறப்பை ஏற்றது. தனது பழைய குடியேற்றங்கள் இவை என்ற நன்மதிப்பை பிரிட்டன் காட்டவில்லை. அமெரிக்காவில் ஒரு தூதுவரகத்தை நிறுவ பிரிட்டன் மறுத்தது. சில ஆண்டுகள் கழித்தே 1791-இல் ஒரு தூதுவர் அனுப்பப்பட்டார். அமெரிக்க உரிமைப் போருக்குப் பின் பிரிட்டன் தொடர்ந்து வடமேற்குப் பகுதிகளில் தனது இராணுவ நிலையங்களை வைத்திருந்தது. உரிமைப் போரின்போது பிரிட்டனை ஆதரித்தவர்கள் பெற்றிருந்த கடன் தொகைகளை அமெரிக்கர் பாரிஸ் உடன்பாட்டில் ஒப்புக்கொண்டபடி திருப்பித்தரவில்லையென பிரிட்டன் அமெரிக்காவைக் குற்றஞ்சாட்டிற்று.

தென் மேற்கு நிலப்பகுதியினை ஸ்பானியர்கள் (உரிமைப் போருக்கு, முன்பிருந்தே) கட்டுப்படுத்தி வந்தனர். ஆனால் அமெரிக்கர் அவ்வப்போது மேற்கு நோக்கி சென்று புதிய குடியேற்றங்களை அமைத்தனர். கென்டகி பகுதியிலும், பின்னர் தென்னசி மாநிலமாக உருவெடுத்த பகுதியிலும் அமெரிக்கர் குடியேறி டிரான்சில்வேனியா என ஒரு மாநிலத்தை ஏற்படுத்த முயன்றனர். ஆனால், இப்பகுதிகள் தனக்குரியவையென வர்ஜீனியா சொந்தங் கொண்டாடிற்று. பல்லாயிரக்கணக்கான குடியானவர்கள் இப்பகுதியில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

குடியானவர்கள் தங்களுடைய விளைபொருட்களை சந்தைகளுக்கு அனுப்ப மேலைப்பகுதியில் மிசிசிபி ஆற்றை நல்லதொரு தடமாகப் பயன்படுத்தி வந்தனர். இரயில்பாதைகள் அமைப்பதற்கு முன் அப்பலேசியன் மலைத்தொடரினைக் கடப்பது சற்று கடினமான செயலாகும். ஓகியோ, மிசிசிபி ஆறுகளின் வழியாக மெக்சிகோ வளைகுடா சென்று, அங்கிருந்து அட்லாண்டிக் கடற்கரைப் பகுதிக்கு செல்வது வழக்கம். இத்தடம் சற்று சுற்றுவழியாக இருப்பினும், பாதுகாப்புடையதாகவும் மலிவான செலவுடையதாகவும் இருந்தது. குடியானவர்கள் விளைபொருட்களைக் கட்டுமரங்கள், படகுகள், மூலம் நியூ - ஆர்லியன்சுக்கு அனுப்புவர். அங்கு அவர்களுடைய முகவர்கள் அவற்றைக் கடல்வழி செல்லும் பெரிய கப்பல்களில் ஏற்றிவிடுவர். நியூஆர்லியன்சில் கப்பல்களில் சரக்குகளை ஏற்ற காலதாமதம் ஏற்படின் சரக்குகளைக் கிடங்குகளில் காத்திடும் உரிமை மேலைப்பகுதி வணிகர்கட்கு தேவைப்பட்டது. மிசிசிபி ஆற்றின் கழிமுகத்தையும், லூசியானாப் பகுதியையும் ஸ்பெயின் கட்டுப்படுத்தி வந்தது. 1784-இல் ஸ்பெயின் அமெரிக்கரின் போக்குவரத்துக்கும் சரக்குகளை வைத்திருக்கும் உரிமைக்கும் தடைவிதித்தது.

தென்மேற்குப் பகுதி தன் குடியேற்றத்திற்குரிய நிலமென ஸ்பெயின் வலியுறுத்திற்று. ஜியார்ஜியா மாநிலத்தின் மேற்கு எல்லையிலிருந்து மிசிசிபி ஆறுவரை இடைப்பட்ட நிலப்பகுதி தனக்குச் சொந்தமென்றும் கூறிற்று. இப்பகுதியில் வாழ்ந்த செவ்விந்திய பூர்வீகக் குடிகளையும் ஸ்பெயின் கட்டுப்படுத்த முற்பட்டது. இவர்களை அமெரிக்கருக் கெதிராகவும் தூண்டிவிட ஸ்பெயின் தயங்கவில்லை. இச்சிக்கல்களைத் தீர்க்க அமெரிக்கர் சார்பாக ஜான்ஜே முயற்சித்தார். தென்மேற்குப் பகுதியில் மிசிசிபி நதிவரை அமெரிக்கக் குடியேற்றங்களின் எல்லைகளை வரைவதில் வெற்றி கண்டார். புளோரிடாவுக்கு மேற்கேயும் உரிமைகள் பெற்றார். ஆனால் மிசிசிபி நதிவழியே அமெரிக்கர் படகுகளைச் செலுத்த ஸ்பானியர் உரிமைதர மறுத்தனர். இது அமெரிக்கருக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. இவ்வுரிமையைப் பெறும் வரை அவர்களுக்கு மன நிறைவு ஏற்படவில்லையென்றே சொல்லலாம்.

ஜேம்ஸ் வில்கின்சன், ஜேம்ஸ் ராபர்ட்சன், ஜான்சீவர் போன்ற ஊகவணிகர்கள் (speculators) ஸ்பானியர்களுடன் கள்ளத்தொடர்பு கொண்டு சில சலுகைகளைப் பெற்றிட முயன்றனர். தென்னாசி மாநிலத்தை ஸ்பெயினுடன் இணைக்கவும் திட்டமி டப்பட்டது. அமெரிக்க அரசு இம்முயற்சியைக் கண்டித்தது. ஸ்பானிய அரசும் இத்திட்டத்தை நிராகரித்தது. ஆனால், நியூஆர்லியன்ஸ் வழியாக எடுத்துச்செல்லப்படும் அமெரிக்கப் பொருட்கள் மீது 15 விழுக்காடு சுங்கவரி விதிக்கப்பட்டது. இதனால் அமெரிக்க வணிகருக்கு தொல்லையேற்பட்டது.

அமெரிக்கருக்கு உலகின் பிறபகுதிகளிலும் இடர்ப்பாடுகள் பல இருந்து வந்தன. பிரிட்டனின் அரவணைப்பையும் பாதுகாப்பையும் இழந்த அமெரிக்க வணிகர்களை, அவர்தம் கப்பல்களை மத்தியதரைக்கடலில் வட ஆப்பிரிக்க கடற்கொள்ளைக்காரர்கள் தாக்கிவந்தனர். புதிய இளம் நாடாக இருந்த நிலையில் அமெரிக்கக் கப்பற்படை போதிய வலிமையற்றதாக இருந்தது. ஆனால் 1815-ஆம் ஆண்டளவில் இப்பகுதி கடற்கொள்ளைக்காரர்களை அமெரிக்கா அடியோடு அடக்கி ஒடுக்குகிறது.

நேசக்கூட்டாட்சியின் பேரவையும் மாநிலங்களும்

புதிய நாடாகப் பிறந்த அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஏற்பட்ட நெருக்கடிகளை மக்கள் அனுபவிப்பதோடு மறக்கவுமில்லை. கூட்டாட்சியின் பேரவை வலுவற்று செயலாற்ற முடியாமல் முடங்கிக் கிடப்பதையும் கண்டனர். நிதிநிலை சாதகமாக மாறிய பின்னரும் இடர்ப்பாடுகள் நீடித்தன. நடுவண் அரசு மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் நலிவுற்றிருந்தது. மாநிலங்கள் தத்தமக்குத் தேவையான வரிகளை விதித்து நிதிதிரட்டின. ஆனால் பேரவைக்கு அவ்வுரிமையில்லை. எனவே உரிமைப் போர்க் காலத்தே இருந்த அரசுக்கடன் தொகை திருப்பியளிக்கப்படாமல், வளர்ந்து கொண்டே சென்றது. நேசக்கூட்டாட்சியின் விதிமுறைகளை மாற்றச் சொல்லி பேரவை மாநிலங்களை வேண்டிற்று. மாநிலங்களோ மறுத்துவிட்டன.

மாநிலங்களுக்கிடையே எல்லைத் தகராறுகளும், சுங்கவரி விதிப்புகளும், நிலஉரிமைபற்றிய விதிகளும் மனக்கசப்பினை வளர்த்தன. வெர்மான்ட் பகுதிமேல் நியூயார்க்கும் நியூஹம்ஷையரும் உரிமை கொண்டாடின. அதற்குள் வெர்மாண்ட் பகுதியில் குடியேறியமக்கள் தங்கட்கு தனி மாநில நிலை வழங்கவேண்டுமென நேசக்கூட்டாட்சிப் பேரவையிடம் முறையிட்டனர். நியூயார்க் மாநில அரசு, நியூயார்க் துறைமுகம் வழியாக இறக்குமதி செய்யப்பட்டு பிற மாநிலங்கட்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் மீது சுங்கம் விதித்ததை நியூஜெர்சி, கனெக்டிக்கட் மாநிலங்கள் எதிர்த்தன. செசபீக் வளைகுடாவைப் பயன்படுத்துவதில் வர்ஜீனியா, மேரிலண்டு, பென்சில்வேனியா மாநிலங்கட்கிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன.

உரிமைப் புரட்சிக்குப் பின் குழவிப் பருவத்தில் இருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு சோதனை மேல் சோதனைகள் வந்தன. இவற்றால் இப்புதிய குடியரசு அரும்பாடுபட்டு பெற்ற உரிமையை இழக்க நேரிடுமென யாரும் நினைக்கவில்லை. உரிமைப்போர் ஆறு ஆண்டுகள் நடந்தமையால் மக்கள் அல்லலுற்றிருந்தனர். வாழ்க்கை நிலை கடினமானதாகவே இருந்தது. சிக்கல்கள் மலையென மிகுந்திருந்தபோதிலும் தீர்க்க முடியாதவையாக தோன்றவில்லை. பிரிட்டனுடனும், ஸ்பெயினுடனும் எல்லையில் ஏற்பட்ட சிக்கல்கள், வணிக இழப்புகள், ஷேஸ் கலகம், மாநிலங்கட்கிடையேயான மனத் தாங்கல்கள் எல்லாம் ஒன்றைத் தெளிவாக்கின. அது என்னவென்றால் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டு உறவிலும் சரி அமெரிக்க ஐக்கிய நாட்டின் மதிப்பை உயர்த்த வேண்டுமென்றால் வலிமை வாய்ந்த நடுவண் அரசு கட்டாயம் தேவை என்ற கருத்தேயாகும். இத்தகைய அரசு அமைக்கப்பட்ட முறையை அடுத்து காண்போம்.

பயிற்சி வினா

நேசக்கூட்டாட்சியின் விதிமுறைகளைத் தொகுத்து உரைக்கவும். புதிய அரசின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இவை எவ்வளவு துணை நின்றன?

பாடம் – 3 அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கம்

வலிமை மிக்க மைய அரசு தேவை

நேசக்கூட்டாட்சி ஒரு அரைகுறை கூட்டாட்சியாக இருந்தது. அதன் அமைப்பு விதிகளில் இருந்த குறைபாடுகளை அனைவரும் உணர்ந்தனர். செம்மையான அரசிய லமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமென பலரும் கருதினர். வரிவிதிப்பு முறையிலும், வணிகக் கட்டுப்பாட்டு முறையிலும் காணப்பட்ட செயலற்ற தன்மை நன்கு வெளிப்பட்டது. இந்நிலையைத் திருத்தி அமைக்கவும், நாட்டின் பொதுநலனுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் அதிகாரம் மிகுந்த ஆட்சித்துறை கட்டாயம் தேவை என்று உணரப்பட்டது. இது நடுவண் அரசாகத்தான் இருக்க முடியும். இதுபற்றி நேசக்கூட்டாட்சி யின் போது பலரும் கலந்து பேசினர். ஆனால் விரைந்து முயற்சிகளை மேற்கொள்ள வில்லை. நிதானமாகவே சிந்தித்தனர். இதற்கு மக்களின் ஆதரவைப் படிப்படியாக உருவாக்கும் திசையில் செயற்பட்டனர். நாட்டில் சட்ட ஒழுங்கை நிலை பெறச் செய்ய வலிமை மிக்க மைய அரசால்தான் முடியும் என்ற கருத்தை வலியுறுத்திய பழமை வாதிகளான ஜேம்ஸ் மாடிசன், அலெக்சாண்டர் ஹாமில்டன், ராபர்ட் மாரிஸ் போன்றோர் தீவிரவாதிகளான சாமுவேல் ஆடம்ஸ், பேட்ரிக் ஹென்றி, ரிச்சர்டு ஹென்றி லீ ஆகியோரை தேர்தல்களில் வென்றனர். மைய அரசின் தேவைக்காக வாதாடி யவர்களைக் கூட்டாட்சி வாதிகள் (Federalists) என்றழைத்தனர். இக்கோட்பாட்டை எதிர்த்தோர் (Anti Federalists) கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் எனப்பட்டனர்.

அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழு

கூட்டாட்சியை வலுப்படுத்த தலைவர்கள் ஒன்று கூடிப் பேச வேண்டுமென பலரும் எண்ணினர். நேசக் கூட்டாட்சியின் விதியமைப்புகள் திருத்தி எழுதப்பட வேண்டு மென்றும் கருதினர். உரிமை பெற்ற பின் மாநிலங்கட்கிடையே சிறு சிறு எல்லைத் தகராறுகளும், ஆற்று நீரைப் போக்குவரத்துக்கு பயன்படுத்துவது பற்றிய தகராறுகளும் இருந்து வந்தன. பொடோமாக் ஆற்று நீரை படகுப் போக்குவரத்துக்கு பயன்படுத்துவது குறித்து வர்ஜீனியா, மேரிலாண்டு மாநிலங்கட்கிடையேயிருந்த மனத்தாங்கலைத் தீர்த்து வைக்கும் பொருட்டு வாஷிங்டன் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். சிக்கலைத் தீர்க்க முடியவில்லை. பிற மாநிலங்களின் கருத்தையும் அறியவேண்டியதாயிற்று. இதற்காக 1786-இல் அன்னாபாலிஸ் (Annopolis) நகரில் கூட்டமொன்று கூட்டப்பட்டது. எல்லா மாநிலங்கட்கும் அழைப்பு அனுப்பப்பட்டபோதிலும் ஐந்து மாநிலங்கள் மட்டுமே அழைப்பை ஏற்றன. இது ஓரளவு ஏமாற்றத்தையே தந்தது. இருப்பினும், அலெக்சாண்டர் ஹாமில்டனின் முயற்சியால் மற்றொரு சிறப்புக் குழுவைக் கூட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நேசக் கூட்டாட்சியின் விதிமுறைகளைத் திருத்தியமைக்க பிரதிநிதிகளையனுப்புமாறு எல்லா மாநிலங்கட்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ரோடு ஐலண்டு தவிர பிற பன்னிரு மாநிலங்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் 1787 மே திங்கள் பிலடெல்பியாவில் கூடி புதிய கூட்டாட்சி அரசியலமைப்பைத் தீட்ட முற்பட்டனர்.

பிலடெல்பியா சிறப்பு மாநாட்டுக்கு ஐம்பத்தைந்து பெயராட்கள் வந்திருந்தனர். பல மாநிலங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளை அனுப்பியிருந்த போதிலும் ஒரு மாநிலத்துக்கு ஒரு வாக்குதான் விவாதங்களின்போது தரப்பட்டது. பெரும்பாலோர் வழக்கறிஞர்களாயிருந்தனர். ஏழுபேர் மாநில ஆளுநர்களாயிருந்தவர்கள். இருபத்தெட்டு பேர் நேசக் கூட்டாட்சியின் பேரவையில் உறுப்பினர்களாயிருந்தவர்கள். பலர் மாநில சட்டமன்ற உறுப்பினர்களாயிருந்தவர்கள். இம் மாநாட்டுக்கு வந்தவர் அனைவர்க்கும் கல்வியறிவு, முதிர்ந்த அனுபவம், பொது அறிவு ஆகியவை அமையப்பெற்றிருந்தது. அமெரிக்காவில் அன்றைக்கு எழுதப் படிக்கத் தெரியாதோர் மிகுந்திருந்தபோது, மாநாட்டுப் பிரதிநிதிகளில் பாதிக்கும் மேலானோர் பட்டதாரிகளாயிருந்தனர். அவர்களை நோக்கியிருந்த சிக்கல்களையும், அவற்றுக்கான பரிகாரங்களையும் அவர்கள் நன்கறிவர். போராற்றல், வாய்மை, புகழ் இவை ஒருங்கே பெற்றிருந்த ஜார்ஜ் வாஷிங்டன் அரசியல மைப்பாண்மைச் சிறப்புக் குழுவின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வாஷிங்டன் தலைவராக உள்ளார் என்றதுமே மக்களிடத்து இச்சிறப்புக்குழுவின் மீது நம்பிக்கை பெருகிற்று. உறுப்பினர்கள் உரியதை ஒழுங்காகச் செய்வர் என்றும் நம்பினர். மூதறிஞரான பெஞ்சமின் பிராங்க்ளினும் வந்திருந்தார். அவருக்கு வயது எண்பதான போதிலும் பேச்சிலும், துடிப்பிலும் இளைஞராகவே இருந்தார். பல சிக்கல் கட்கு வழிகாட்டினார். கோபமுற்ற பிரதிநிதிகளை அமைதிப்படுத்துவதிலும், முக்கியமான கருத்துக்களை விட்டுவிட்டு பிறவற்றின் மீது வீணாகப் பேசாமல் இருப்பதை உணர்த்துவதிலும் பிராங்க்ளின் கருத்தாயிருந்தார். நியூயார்க்கைச் சார்ந்த அலெக்சாண்டர் ஹாமில்டன் முப்பத்திரண்டு வயது இளைஞராயிருந்தார். உரிமைப் போரின்போது வாஷிங்டனிடம் செயலாளராகப் பணியாற்றியவர். அவரது வருகை வாஷிங்டனுக்கு மனநிறைவைத் தந்தது. ஆனால் எல்லாக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. வேறு பல அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். அவரது உயர் குடியாட்சிக் கருத்துக்களை பலரும் விரும்பவில்லை. பின்னர் புதிய அரசியலமைப்பை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளச் செய்வதில் ஹாமில்டன் பெரும்பங்கேற்றார்.

வர்ஜீனியாவைச் சார்ந்த ஜேம்ஸ் மாடிசன் பிலடெல்பியா மாநாட்டில் அருந் தொண்டாற்றினார். எனவே அவரை "அரசியலமைப்பின் தந்தை" என வரலாற் றாசிரியர்கள் அழைப்பதுண்டு. ஹாமில்டனை விட ஓரிரு ஆண்டுகள் மூத்தவர். நிலச்சுவான்தாரின் மகனாய்ப் பிறந்த இவர் தனியாசிரியர்களிடம் கல்வி கற்று, பின்பு பிரின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றிருந்தார். வர்ஜீனியாவைச் சார்ந்த பிற தலைவர்களான தாமஸ் ஜெபர்சன், பேட்ரிக் ஹென்றி ஆகியோரின் சிறந்த நண்பராகவும் மேடிசன் விளங்கினார். தனது மாநில சட்டமன்றத்துக்கான விதித் தொகுப்பை இயற்றியவர். இந்த அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழுவுக்கு ஏற்பாடு செய்தவரும் இவரே. பிலடெல்பியாவுக்கு வரும் முன் எட்மண்ட்ரேண்டால்புடன் (Edmund Randolph) சேர்ந்து புதிய அரசியலமைப்புக்கான திட்டமொன்றின் சுருக்கத்தை வரைந்திருந்தார். இது வர்ஜீனியா திட்டமெனப்பட்டது. இதனடிப்படையிலேதான் வாதங்கள் துவக்கப்பட்டன.

சிறப்புக் குழுவின் கூட்ட நடவடிக்கைகள் மற்ற பொருளாகவே நடந்தன. ஆனால் ஒவ்வொரு நாளும் இரவில் அன்றாட நிகழ்ச்சிகளையும், விவாதங்களையும் மாடிசன் விரிவாக எழுதித் தொகுத்து வைத்தார். பல ஆண்டுகள் கழித்து இக்குறிப்புகள் அச்சிடப்பட்டன. சிறப்புமிக்க மூலச் சான்றாக இது கருதப்படுகிறது. கூட்ட நிகழ்ச்சிகள் மறைபொருளாக நடந்தமையால் நன்மையே கிட்டியது எனலாம். ஏனெனில் சிறப்புக் குழுவின் விவாதங்களை உடனடியாக அவ்வப்போது வெளியிட்டிருந்தால் கருத்து வேறுபாடுகள் மிகுந்து பிளவுகளை ஏற்படுத்தியிருக்கக்கூடும். பிரதிநிதிகள் பலர் உறுதியாகக் கொண்டிருந்த நடுநிலைமையைக் குலைத்திருக்கும்; கட்சிக்காரர்களும் தத்தம் பெயராட்களை அவ்வப்போது முடுக்கிக் கொண்டே இருந்திருப்பர்.

தீவிரவாதிகள் பலர் இச்சிறப்புக் குழுவில் இல்லை. தீக்கனல் பறக்கப் பேசும் புரட்சியாளர்கள் நேசக் கூட்டாட்சியின் விதிமுறைகள் மாற்றப்படக்கூடாது என்றே விரும்பினர். பேட்ரிக் ஹென்றி, சாமுவேல் ஆடம்ஸ், ஜான் ஹான்காக் (John Hancock) ஆகியோர் மசாசூசெட்ஸிலிருந்து வரவில்லை. அமெரிக்கத் தூதுவர்களாக ஜான் ஆடம்ஸ் இங்கிலாந்துக்கும், தாமஸ் ஜெபர்சன் பிரான்சுக்கும் சென்றிருந்தனர். ஒரு கால் ஜெபர்சன் பிலடெல்பியாவுக்கு வந்திருந்தால் அமெரிக்க அரசியலமைப்பின் தன்மையே மாறுபட்டிருக்கக்கூடும்.

பெரும்பாலும் பழமை விரும்பிகளாகவே பிலடெல்பியாவுக்கு வந்திருந்தோர் இருந்தமையால் ஷேஸ் கலகம் போன்றவற்றைக் கண்டு அஞ்சி வருங்காலத்தில் அமைதிக்காகப் பெருங்கவலை கொண்டிருந்தனர். மக்கட் கூட்டத்துக்கு மிகுந்த அதிகாரங்களைத் தர விரும்பவில்லை. இதனால் குழப்ப நிலையே நீடிக்குமென நினைத்தனர். பொதுமக்களுக்கு எத்தகைய அதிகாரமும் தரக்கூடாதென சிலர் உறுதியாக எண்ணினர். சட்டப்பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகூட மக்களுக்குத் தரப்படக் கூடாதென கனெக்டிக்கட்டைச் சார்ந்த ரோஜர் ஷெர்மன் வாதாடினார். மசாசூசெட்ஸைச் சார்ந்த எல்பிரிட்ஜ் ஜெர்ரி சற்று மிகையாகவே கூறினார். : "இப்போது கூட்டாட்சியிலுள்ள குறைகட்கெல்லாம் காரணம் அளவுக்கு மிஞ்சிய மக்களாட்சி உரிமைகள் தரப்பட்டதே" என்றார். பொதுவாக பிலடெல்பியா மாநாட்டுக்கு வந்தவர்கள் மக்களுக்கு மிகுதியான உரிமைகள் அளிக்கக்கூடாதென்ற கருத்தையே வரவேற்றனர்.

அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழுவின் கூட்டம் 1787ஆம் ஆண்டு மே 25-ஆம் நாள் துவங்கி செப்டம்பர் 17-ஆம் நாள் வரை நடைபெற்றது. நேசக்கூட்டாட்சியின் விதிமுறைகளை மாற்றியமைக்கவே பிலடெல்பியாவில் பெயராட்கள் கூடினர். ஆனால் வாஷிங்டன், மாடிசன், ஹாமில்டன் ஆகியோர் உட்பட பலரும் விதிமுறைகளை விட்டொழித்து புதியதொரு அரசியலமைப்பை வரைந்திடவே விரும்பினர். அவர்கள் விருப்பம் நிறைவேறிற்று. ஒரு புதிய கூட்டாட்சி அமைப்பை உருவாக்க முனைந்தனர். நாட்டை ஆள முழு அதிகாரங்கள் கொண்ட அரசு தேவை என்பதை உணர்ந்தனர். வலிமை மிக்க அரசுக்கு நிதிதேவை என்பதால் சட்டமாமன்றத்துக்கு வரி விதிக்கும் உரிமை தர திட்டமிடப்பட்டது. அதேபோல் மாநிலங்கட்கிடையே வணிகத்தகராறுகள் மிகுந்திருந்தமையால் வணிகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையும் சட்டமாமன்றத்துக்கு தரப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குடியேற்றங்களாய் இருந்தபோது தாங்கள் பெற்றிருந்த அனுபவங்களை சிறப்புக்குழு உறுப்பினர்கள் ஆக்கமுறையில் பயன்படுத்தினர். நல்லதொரு கூட்டாட்சி முறையை வகுக்கப் பாடுபட்டனர். கூட்டாட்சி முறையில் மாநில அரசுகளும், மைய அரசும் ஆட்சியை இரு கூறுகளாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சில பணிகளை மாநில அரசுகளும் சிலவற்றை மைய அரசும் ஏற்கவேண்டும். எடுத்துக்காட்டாக சாலைகள் அமைத்தல் மாநிலத்தின் பணியாகும்; வெளிநாட்டுறவை வளர்த்தல் மைய அரசின் பொறுப்பாகும். வலிமை பொருந்திய ஆட்சித்துறை புதிய அரசியலமைப்பில் இருக்க வேண்டுமென உறுப்பினர்கள் விரும்பினர். ஆனால் முடியாட்சியை விரும்பவில்லை. சட்டங்களைச் செயற்படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே தேவையென எண்ணினர். நாடு முழுவதற்கும் சட்டமியற்ற தேசிய சட்டமாமன்றம் வேண்டுமெனப் பட்டது. மக்களின் உடைமைகளையும், உரிமைகளையும் காக்கவும், மாநிலங்கட்கிடையே எழும் சிக்கல்களைத் தீர்க்கவும் தேசிய நீதிமன்றங்கள் கட்டாயம் தேவையென்பதும் உணரப்பட்டது.

தனிநிலை அதிகாரக் கோட்பாடு

சட்டமாமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய மூன்று அங்கங்களும் சம உரிமைகளோடு, ஒன்றையொன்று விஞ்சாவண்ணம் நன்முறையில் அமைக்கப்பட வேண்டுமென பிலடெல்பியா மாநாட்டுக்கு வந்திருந்தோர் விரும்பினர். அரசியல் விற்பன்னர்களான லாக் (Locke), மான்டெஸ்க்கியூ (Montesquieu) போன்றோர் தனிநிலை அதிகாரக் கோட்பாட்டின் (separation of powers) மாண்பினை விளக்கியிருந்தனர். அமெரிக்கரை இக்கோட்பாடு மிகவும் கவர்ந்திருந்தது. ஏனெனில், மூன்றில் ஒரு அங்கம் கூடுதலாகச் செல்வாக்கு பெற்றுவிட்டால் அதனால் மக்களாட்சிக்கு ஊனமேற்படக் கூடுமென அஞ்சப்பட்டது. எனவே, ஒவ்வொரு அங்கத்தையும் தடைகளோடும் கட்டுப்பாடுகளோடும் (checks and balances) அமைத்திட அமெரிக்கர் விரும்பினர். நாட்டின் அரசு பெரும்பான்மையோரது நலனை மட்டும் பேணும் ஆட்சியாக மாறிவிடக் கூடாது என்றும், அதே நேரத்தில் சிறுபான்மையரது உரிமைகள் காக்கப்படவேண்டு மென்றும், அரசைக் கட்டுப்படுத்த மக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்றும் விழைந்தனர்.

சட்டமாமன்றம் (காங்கிரஸ்) அமைக்கப்படல்

சட்டமாமன்றத்தில் பெயராண்மை முறை எப்படியிருக்க வேண்டுமென்பது குறித்து சிறப்புக்குழு உறுப்பினர்களிடையே கடுமையான கருத்து வேறுபாடு எழுந்தது. வர்ஜீனியா மாநிலத்திலிருந்து வந்திருந்த பெயராட்களான ஜேம்ஸ் மாடிசனும், எட்மண்ட் ரேண்டால்பும் திட்டமொன்றை வகுத்திருந்தனர். இதற்கு வர்ஜீனியா திட்டம் என்று பெயர். கூட்டாட்சி அரசின் சட்டமாமன்றத்தில் இரண்டு அவைகள் இருக்க வேண்டு மென்றும், கீழவையின் உறுப்பினர் எண்ணிக்கை மாநிலங்களின் மக்கட்தொகையி னடிப்படையில் நிருணயிக்கப்பட வேண்டுமென்றும், மேலவை உறுப்பினர்களை கீழவையினர் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், ஆட்சித்துறை, நீதித்துறை அலுவலர்களை சட்டமாமன்றத்தினர் நியமிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது. வர்ஜீனியா திட்டத்தைப் பெரும்பாலும் வர்ஜீனியா, மசாசூசெட்ஸ், பென்சில்வேனியா போன்ற பெரிய மாநிலங்களே ஆதரித்தன.

வர்ஜீனியா திட்டத்தை நியூ ஜெர்சி போன்ற சிறிய மாநிலங்கள் எதிர்த்தன. மாற்றாக ஒரு திட்டத்தைத் தீட்டின. இதற்கு நியூஜெர்சி திட்டம் என்று பெயர். இதன்படி ஒரே ஒரு அவை இருக்கவேண்டுமெனப்பட்டது. இதில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரே ஒரு வாக்குரிமைதான் தரப்பட வேண்டும்; ஆட்சித்துறை அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; ஆட்சித்துறை, நீதித்துறை அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் எனப்பட்டது. பரப்பளவிலும், மக்கட்தொகையிலும் சிறியனவாக இருந்த நியூஜெர்சி போன்ற மாநிலங்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தந்தன.

வர்ஜீனியா திட்டத்தையும், நியூஜெர்சி திட்டத்தையும் இணைக்கும் முறையில் கனெக்டிக்கட்டைச் சார்ந்த ரோஜர் ஷெர்மன் என்பாரும் அவரது நண்பர்களும் புதியதொரு திட்டத்தை உருவாக்கினர். இதற்குக் கனெக்டிக்கட் சமரச இணக்கம் என்று பெயர். இதன்படி சட்டமாமன்றத்தில் இரண்டு அவைகள் இருக்க வேண்டும். கீழவையான பிரதிநிதிகள் மன்றத்தில் மக்கட்தொகை அடிப்படையில் மாநிலங்களிலிருந்து உறுப்பினர்கள் இடம் பெறுவர். மேல்வையான செனட் மன்றத்தில் எல்லா மாநிலங்கட்கும் சம உரிமை அளிக்கும் வகையில் இரண்டிரண்டு உறுப்பினர் இடம்பெறுவர். நிதி வருவாய் சம்பந்தப்பட்ட சட்டங்களெல்லாம் கீழவையில் தான் கொண்டு வரப்பட வேண்டும். இந்த சமரச இணக்கம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படியே இன்றும் சட்டமாமன்றம் அமைந்துள்ளது.

வரிகள், காப்பு வரிகள், சுங்க வரிகள், தீர்வைகள் ஆகியவற்றை வரையறுக்கவும், உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தைக் கட்டுப்படுத்தவும், நாணயங்கள் அச்சிடவும், நிறுத்தல், முகத்தல் அளவைகளை நெறிப்படுத்தவும், அயல்நாட்டவருக்கு குடியுரிமை வழங்கவும், நீதிமன்றங்கள் அமைக்கவும், அஞ்சல் பணியைச் செய்யவும், காப்புரிமைப் பட்டயச் சட்டங்கள் இயற்றவும், போர் தொடுக்கவும், இவ்வதிகாரங்களைச் செயற்படுத்தத் துணையாகச் சட்டங்களை இயற்றவும் சட்டமாமன்றத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

ஆட்சித்துறையின் அமைப்பு

நேசக்கூட்டாட்சியின் விதிமுறைகளில் இருந்த ஒரு பெருங்குறைபாடு முறையான ஆட்சித்துறை அமைக்கப்படாததேயாகும். அதற்கான தலைவரும் இல்லை. எனவே விதிமுறைகளைச் செயலாக்கவோ அல்லது சட்ட ஒழுங்கை நிலைநாட்டவோ முடியாமற் போயிற்று. இந்நிலையை மாற்றியமைக்க பிலடெல்பியாவுக்கு வந்திருந்தோர் உறுதிபூண்டனர். சட்டமாமன்றம் இயற்றும் சட்டங்களை செயற்படுத்துவது குடியரசுத் தலைவருக்கு தரப்பட்ட தலையாய பணியாகும். தரைப்படைக்கும், கப்பற்படைக்கும் இவரே தலைவராவார். எனவே கலகங்கள் ஏதும் மூண்டால் அவற்றையடக்க படைவீரர்களைப் பயன்படுத்தலாம். சட்டமாமன்றம் இயற்றும் சட்டங்களைத் தள்ளுபடி செய்ய குடியரசுத் தலைவருக்கு உரிமை தரப்பட்டது. ஆனால் அப்படி தள்ளுபடி செய்யப்பட்ட சட்டங்கள் மீண்டும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு இயற்றப்பட்டு, சட்டமாக்கப்படலாம். வெளியுறவையும் குடியரசுத் தலைவரே பொறுப்பேற்று நடத்துவார்.

குடியரசுத் தலைவர் உரிமையோடு செயல்பட அவருடைய பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாக நிருணயிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மீது அரசுத்துரோகக் குற்றம் சாட்டப்படலாம். தலைவர் சட்டங்களை மீறினால் பிரதிநிதிகள் மன்றம் குற்றச்சாட்டு அறிக்கையைத் தயாரிக்கும். செனட் மன்றம் விசாரணை மன்றமாக இயங்கும். தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைவராகப் பொறுப்பேற்று குற்றச்சாட்டை விசாரிப்பார். செனட் அவை உறுப்பினர்கள் மூன்றில் இரண்டு பங்கினர் குற்றச் சாட்டை உறுதிப்படுத்தி வாக்களித்தால் குடியரசுத் தலைவர் பதவியினின்று நீக்கப்படுவார். இதுகாறும் யாரும் இவ்வகையில் நீக்கப்பட்டதில்லை. தலைவர் ஆண்ட்ரூ ஜான்சன் என்பார் மீது குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டது; ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. அண்மையில் தலைவர் நிக்சன் மீது சட்டமாமன்றம் அரசுத் துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்த நினைத்தது. அதற்குள்ளாக அவர் பதவி விலகினார்.

குடியரசுத் தலைவரை எப்படி தேர்ந்தெடுப்பது என்பது பற்றி கருத்து வேறுபாடு எழுந்தது. அவர் ஆயுள் முழுமைக்கும் பதவியிலமர்த்தப்படவேண்டும் என்றும், சட்டங்களைத் தள்ளுபடி செய்யும் உரிமை தரப்படவேண்டும் என்றும் பழமைவாதிகள் வாதிட்டனர். முற்போக்குவாதிகளோ தலைவர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றனர். ஆனால் அந்நாளில் நேரடித்தேர்தல் நடத்துவது கடினமான பணியாக இருந்தமையால் அவ்விருப்பம் நிராகரிக்கப்பட்டது. சட்டமாமன்றத்தின் உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தால் தலைவர் அவர்கட்குக் கட்டுப்பட்ட வராகிவிடுவார். இது தனிநிலை அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டுக்கும் முரணாக அமையும். எனவே தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்தல் குழு (Electoral College) அமைக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் எத்தனைபேரை சட்டமாமன்றத்தின் இரண்டு மன்றங்கட்கும் அனுப்ப உரிமைபெற்றிருந்ததோ அதே எண்ணிக்கை உறுப்பினர்களை இத்தேர்தல் குழுவுக்கு அனுப்ப உரிமை தரப்பட்டது. இதனால் மாநிலங்கட்கு குடியரசுத் தலைவர் தேர்தலைக் கட்டுப்படுத்த வாய்ப்பு தரப்பட்டது. இப்பொழுதும் இம்முறை தொடர்ந்து வருகிறது; அத்தோடு நேரடித் தேர்தலும் நடைபெறுகிறது.

நீதித்துறை

பிலடெல்பியா மாநாட்டுக்கு வந்திருந்தோர் ஒரு தலைமை நீதிமன்றம் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தை ஒரு முகமாக ஏற்றுக்கொண்டனர். தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் செனட்டின் ஒப்புதலோடு நியமிப்பார். அவர்கள் வாழ்நாள் வரை பதவியிலிருக்கலாம். இவர்களைப் பதவி நீக்கம் செய்யமுடியாது. ஆனால் தவறிழைக்கும் நீதிபதிகள் மீது அரசுத் துரோகக் குற்றம் சுமத்தப்படலாம். சட்ட மாமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களும், குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளும் அரசியலமைப்புக்கு ஏற்புடையதாக இருக்கின்றனவா என்பதனை முடிவு செய்ய உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்கு நீதிமறு ஆய்வு (Judicial Review) என்று பெயர். மாநிலங்களில் கூட்டாட்சி நீதிமன்றங்களை நிறுவவும் வகை செய்யப்பட்டது. கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்யவும் தலைமை நீதிமன்றம் பொறுப்பேற்றது.

வரையறுக்கப்படாத அதிகாரங்கள்

புதிய அரசியலமைப்பு தீட்டப்பட்டபோது மாநிலங்களின் அதிகாரங்கள் சில பறிக்கப்பட்டன. கடன் பத்திரங்களையோ, காகிதப் பணத்தையோ, காசுகளையோ வெளியிட மாநிலங்கட்கு உரிமை இல்லையெனப்பட்டது. ஏனென்றால் புரட்சியின் போது இவை மதிப்பிழந்து பயனற்றவையாயின. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதும், கப்பல் போக்குவரத்து மீதும் வரிகள் விதிக்கலாகாது என்றும் சொல்லப்பட்டது. வெளிநாடுகளோடு மாநிலங்கள் உடன்படிக்கைகள் ஏதும் கையெழுத்திடக்கூடாது என்றும் சொல்லப்பட்டது. நேசக்கூட்டாட்சியின் போதிருந்த வலிமையற்ற மைய அரசின் தன்மையை மாற்றும் வகையில் மாநிலங்கள் மீது இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால் அதே நேரத்தில் மாநிலங்களும் ஆற்றலுடன் வளருவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டன. புதிதாக எழுதப்பட்ட அரசியலமைப்பில் வரையறுக்காமல் விடப்பட்ட அதிகாரங்களெல்லாம் மாநிலங்கட்கே தரப்பட்டன. ஏனென்றால் மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களை அவைதான் தீர்த்து வைக்க வேண்டும். தேர்தல்கள் நடத்தும் முறை, வாக்காளர் தகுதியை வரையறுக்கும் பொறுப்பு முதலியன மாநிலங்கட்கே தரப்பட்டன. மற்றும் கல்விச் சாலைகள் அமைத்தல், நீதிமன்றங்கள், காவல்துறை, ஊராட்சி, பாலங்கள், சாலைகள் ஆகியவற்றை நிருமாணிக்கும் பொறுப்பும் மாநிலங்களிடமே விடப்பட்டது.

தடைகளும் கட்டுப்பாடுகளும் (Checks and Balances)

புதிய அரசியலமைப்பில் கூட்டாட்சி அரசு வலிமை வாய்ந்ததாக நிறுவப்பட்ட போதிலும், அதன் அதிகாரங்கள் அதன் மூன்று அங்கங்களிடையே பரவிக் கிடந்தன. சட்டமாமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய முப்பிரிவுகளும் தனித்தியங்கும் ஆற்றல் பெற்றிருந்த போதிலும், ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் அவை பெற்றிருந்தன. சட்டமாமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்ட வரைவுகளெல்லாம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமாகும். இவற்றைத் தள்ளுபடி செய்ய குடியரசுத் தலைவர் உரிமை பெற்றிருந்தார். ஆட்சித் துறையில் குடியரசுத் தலைவர் செய்யும் நியமனங்களை செனட் அவை ஏற்றுக் கொள்ளவேண்டும். குடியரசுத் தலைவர் மீது அரசுத் துரோகக் குற்றம் சுமத்த சட்டமாமன்றத்துக்கு உரிமை தரப்பட்டது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தலைவர் பதவியினின்று நீக்கப்படுவார். கூட்டாட்சி தலைமை நீதிமன்றம் எல்லா வழக்குகளையும் விசாரித்து நீதி வழங்குவதோடு சட்ட மாமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களை அரசியலமைப்புக்கு உடன்பாடானவையா அல்லது புறம்பானவையா என நீதி மறு ஆய்வு செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தது. நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். எனினும் சட்டமாமன்றம் அவர்கள் மீது குற்றம் சாட்டி விசாரித்துப் பதவியினின்று நீக்கலாம். இவ்வாறு கூட்டாட்சி அரசின் ஒவ்வோர் அங்கமும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு தீட்டப்பட்டது.

அரசியலமைப்பை மாநிலங்கள் ஏற்றல் (Ratification)

புதிய அரசியலமைப்பை உருவாக்கியதும் அதனை மாநிலங்கள் ஏற்று, தத்தம் இசைவைத் தரவேண்டும். இதற்கு இடர்ப்பாடுகளும் எதிர்ப்புக்களும் எழக்கூடுமென

சிறப்புக் குழுவினர் அறிவர். பல மாநிலங்களிலிருந்த சட்டமன்றங்கள் அரசியலமைப்பைக் குறை கூறி எதிர்த்தன. இந்நிலையில் ஒப்புதல் தெரிவிக்கும் பணியை மாநில சட்டமன்றங்கட்குவிட்டால் தோல்வியே கிட்டுமென உணரப்பட்டது. இதைத் தவிர்க்கும் பொருட்டு மாநிலங்களில் அரசியலமைப்பு ஏற்புப் பணிக்கென வாதிட்டு முடிவு செய்ய சிறப்புக் குழுக்கள் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது. எல்லா மாநிலங்களும் ஒரு மனதாக ஏற்கக் கூடுமென எண்ணமுடியவில்லை. எனவே பதின்மூன்றில் ஒன்பது மாநிலங்கள் ஏற்றால் போதுமெனப்பட்டது.

பிலடெல்பியா மாநாட்டில் அரசியலமைப்பு மறைவடக்கமாகவே தீட்டப்பட்டது. எனவே அது நேசக்கூட்டாட்சியின் பேரவைக்கு நேரே அனுப்பப்பட்டது. அதன் படியைப் பேரவை மாநிலங்கட்கு அனுப்பிற்று. மாநில அரசியல்வாதிகள் முதன்முதலாக நேரிடையாக புதிய அரசியலமைப்பைக் கண்டு வாசித்து, வாதிட முற்பட்டனர். சுவையான சொற்போர்களும், கருத்து மோதல்களும் ஏற்பட்டன. கூட்டாட்சிவாதிகள், கூட்டாட்சி எதிர்ப்பாளர்களென இருதரப்பினர் உருவாயினர். நிலச்சுவான்தார்கள், சட்ட அறிஞர்கள், வங்கிகள் நடத்துவோர், வணிகர் ஆகியோர் கூட்டாட்சிவாதிகளாக விளங்கினர். இவர்கள் பெரும்பாலும் சொத்துடைமை கொண்டவர்களாயிருந்தனர். நாட்டில் ஒழுங்கின்மையால் புரட்சி மூளக்கூடுமோவென அஞ்சினர். எனவே, வலிமை பொருந்திய மைய அரசுக்கான புதிய அரசியலமைப்பை இவர்கள் வரவேற்றனர்.

கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் பெரும்பாலும் சிறு குடியானவர்களாகவே இருந்தனர். உரிமைப் போரின் போதும், பின்னரும் மிகவும் தொல்லைக்குட்பட்டிருந்தனர். அவர்களின் கடன் சுமையும் மிகுந்திருந்தது. வலிமை பொருந்திய அரசை வகுக்கும் வகையில் அரசியலமைப்பு வரையப்பட்டிருந்ததை இவர்கள் வரவேற்கவில்லை. ஒரு பக்கம் மாநில அரசுகளும், மற்றொரு பக்கம் மைய அரசும் வரிகளை விதிக்குமென அஞ்சினர். மசாசூசெட்டில் டேனியல் ஷேஸ் கலகத்தை ஆதரித்தோரெல்லாம் கூட்டாட்சி எதிர்ப்பாளராக இருந்தனர். உரிமைப் போரில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் பலரும் இந்த அணியில் இருந்தனர். தன்னுரிமையில் பெரிதும் நாட்டங்கொண்ட இவர்கள் நல்லதொரு அரசைக்கூட விரும்பவில்லை போலும். குடியேற்றங்களாயிருந்த போது எந்த அளவு மைய அரசை எதிர்த்தார்களோ அதே அளவுக்கு உரிமைபெற்ற பின்பும் எதிர்த்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின் தன்மைபோல வரவிருக்கும் மைய அரசாட்சியின் தன்மையும் அமையக் கூடுமென அஞ்சினர்.

கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் அரசியலமைப்பில் பல குற்றங்குறைகளைக் கண்டனர். உரிமைப் பட்டியல் ஒன்று இல்லாததால் வல்லாட்சியில் தனியுரிமைகள் பறிக்கப்படுமோ வென அஞ்சினர். குடியரசுத் தலைவருக்கு பெருமளவில் அதிகாரம் தந்திருப்பதையும் கண்டித்தனர். கூட்டாட்சியின் தலைநகர் வல்லாட்சியின் கோட்டையாகிவிடும் என்றும் கருதினர். மக்களை அடிமை நிலைக்கு தள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பாகத் திகழ்கிறது என்றும் குறை கூறினர். அரசியலமைப்பின் சொற்கள் தெளிவாக இல்லையென்றனர் சிலர். இதனால் மக்களிடையே மயக்கமேற்படலாமென்றும், ஏமாற்ற வாய்ப்புண்டென்றும் எண்ணினர்.

இந்த ஐயங்களுக்கும், வினாக்களுக்கும் கூட்டாட்சிவாதிகள் மறுமொழி பகர்ந்தனர். அரசியலமைப்பின் முழுமையான நற்பண்புகளைச் சுட்டிக் காட்டினர். வெளிநாடு களோடு நல்லுறவு கொள்ளவும், எல்லோரும் வளமுடன் வாழவும் சீரான அரசு அமையவும், உடைமைகட்குப் பாதுகாப்புப் பெறவும் இவர்கள் உறுதியளித்தனர். இவற்றை யெல்லாம் விளக்கும் வகையில் அலெக்சாண்டர் ஹாமில்டன், ஜான்ஜே, ஜேம்ஸ்மாடிசன் ஆகிய மூவரும் பல கட்டுரைகளை வரைந்தனர். இவை தொகுக்கப்பெற்று கூட்டாட்சி (The Federalist) என்ற தலைப்பில் பின்னர் வெளியிடப்பட்டன. இவை இன்று அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட பாங்கினைத் தெளிவுறுத்தும் வகையில் இருக்கின்றன.

சொற்போர்களும், கருத்து மோதல்களும் ஏற்பட்ட அதேநேரத்தில் வாக்காளர்கள் மாநில சிறப்புக் குழுக்களுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இரு தரப்பினரும் சிறப்புக் குழுவில் இடம் பெற போட்டியிட்டனர். கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தனர். ஆனாலும் கூட்டாட்சிவாதிகள் அனுபவத்தோடு, தலைமையேற்கும் ஆற்றலை மிகுதியாகப் பெற்றிருந்தமையால் இவர்களே வென்றனர். 1787-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள்ளாக டெலவர், பென்சில்வேனியா, நியூஜெர்சி ஆகிய மாநிலங்கள் புதிய அரசியலமைப்பை ஏற்றன. மசாசூசெட்ஸ், வர்ஜீனியா, நியூயார்க், நியூ ஹாம்ஷீயர் ஆகிய மாநிலங்களில், தோல்வி ஏற்படும் நிலை இருந்தது. ஆனால் கூட்டாட்சி வாதிகள் திறமையாக எடுத்துக் கூறி வெற்றிபெற்றனர். 1788 ஜூன் திங்களுக்குள்ளாக தென் கரோலினா, மேரிலாண்டு ஆகிய மாநிலங்கள் ஏற்றன. ஜூன் திங்கள் 21-ஆம் நாள் ஒன்பதாவது மாநிலமாக நியூ ஹாம்ஷையர் ஏற்றதும் புதிய அரசியல் அமைப்பு செயலுக்கு வந்தது. 1789-இல் வட கரோலினாவும், 1790இல் ரோடு ஐலண்டும் புதிய அரசியலமைப்பை இறுதியாக ஏற்றன.

பயிற்சி வினா

"அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியலமைப்பு பல சமரச உடன்பாடுகளின் சாரமே (a bundle of compromises)" விளக்குக.

பாடம் – 4

ஜார்ஜ் வாஷிங்டனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்

வாஷிங்டன் பதவியேற்றல்

புதிய அரசியலமைப்பை எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டவுடன் நேசக் கூட்டாட்சியின் பேரவை முதல் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க முனைந்தது. அப்பதவிக்கு ஜார்ஜ் வாஷிங்டனையே மக்கள் விரும்பினர். அவர்மீது மக்களுக்கு நம்பிக்கையிருந்தது. இடர்ப்பாடுகள் மிகுந்த நேரத்திலெல்லாம் தனது ஆற்றலாலும், துணிவாலும் வெற்றிபெறத் தவறியதில்லை. பலதிறப்பட்ட மக்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் இவருக்கிருந்தது. வாஷிங்டன் அரசியலிலிருந்து விலகி ஓய்வுபெறவே விரும்பினார். ஆனால் நாட்டுக்கு அவர் பணி தேவைப்பட்டது. எனவே தேர்வுக்குழு அவரை ஒரு மனதாக தேர்ந்தெடுத்தது. ஜான் ஆடம்ஸ் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்காலிகத் தலைநகரான நியூயார்க் நகரில் கூட்டாட்சி மண்டபத்தில் 1789ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் நாள் முதல் குடியரசுத் தலைவராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

அமெரிக்க உரிமைப்போரின் போது படைத்தலைவராகப் பொறுப்பேற்று வெற்றிவாகை சூடிய வாஷிங்டனுக்கு அரசியலில் அதிக அனுபவம் இல்லை. அவரது பேச்சிலும், எழுத்திலும் கவர்ச்சி இருந்ததில்லை. எனினும் மக்கள் அவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தனர். அவர் சொல்லுக்குக்கட்டுப்பட்டனர். குழவிப் பருவத்தில் இருந்த தங்கள் நாட்டினை ஒருமுகப்படுத்தி கட்டுக்கோப்புடன் ஆளும் ஒப்பற்ற மாபெருந் தலைவராக வாஷிங்டனைக் கருதினர். அவரது நேர்மையான, பரந்த, தெளிந்த நுண்ணறிவில் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வாஷிங்டனும் தன்னுடைய மாபெரும் பொறுப்பினை உடனே உணர்ந்தார்; நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்பது தமது தலையாய கடமையெனக் கருதினார். கட்சி மனப்பான்மையினின்று விலகி நாட்டின் நலன் ஒன்றையே கருத்திற்கொண்டு செயலாற்ற முனைந்தார்.

அரசுத் துறைகளை அமைத்தல்

அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றியிருந் தமையால் புதிய அரசியலமைப்பின் நுணுக்கங்களை ஜார்ஜ் வாஷிங்டன் நன்கு அறிந்தார். புதியதொரு அரசு அமைக்க இந்த அனுபவம் பயன்மிக்கதாய் அமைந்தது. தலைநகரான நியூயார்க்கில் கூட்டாட்சி அரசு செயற்படத் துவங்கிற்று. அரசின் உடனடிச் செலவு கட்காக சட்டமாமன்றம் சுங்கவரிகள் சிலவற்றை விதித்து உதவிற்று. ஆட்சித்துறைகளை உருவாக்குவதிலும், தகுதியான அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் வாஷிங்டன் ஈடுபட்டார். குணநிலன்மிக்கோரை பல பதவிகட்கும் தெரிவுசெய்தார். அவர்களிடமி ருந்து தரம்மிக்கதோர் ஆட்சியை அவர் எதிர்பார்த்தார். அக்காலத்தில் (18-ஆம் நூற்றாண்டில்) பொதுவாக அரசு ஊழியர்களிடையே நாணயம் என்பது மிக அரிதாக

இருந்தது. பிற ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அமெரிக்க அரசின் தரம் உயர்ந்ததாகவே இருந்தது. புதிய அரசியலமைப்பின்மீது பற்றுறுதி கொண்டவர்கட்கே பதவிகள் தரப்பட்டன. இதனால் வாஷிங்டன் மீது சிலர் குறை கூறினர். புதிய அரசாட்சித் துறைகள் நன்கு செயற்பட அப்படிப்பட்டவர்களை மட்டும் நியமித்ததில் தவறொன்று மில்லை என்றே சொல்லலாம்.

அரசியலமைப்பில் அமைச்சரவை ஒன்று இயங்க வெளிப்படையாக வகை செய்யப்படவில்லை. எனினும் ஒவ்வொரு துறைக்கும் செயலாளர்களை நியமித்து, இச்செயலாளர்கள் கொண்ட அமைச்சரவை போன்றதோர் அமைப்பை வாஷிங்டன் வகுத்துக் கொண்டார். கருவூலச் செயலாளராக அலெக்சாண்டர் ஹாமில்டன் என்பவரையும் வெளிநாட்டுறவுச் செயலாளராகத் தாமஸ் ஜெபர்சனையும் சட்டத்துறைச் செயலாளராக எட்மண்ட் ராண்டால்ப் என்பவரையும் நியமித்தார். இவர்களைக் கலந்தாலோசித்த பின்பே அரசின் முடிவுகளை வாஷிங்டன் எடுத்தார். இங்ஙனம் துவக்கத்திலிருந்தே அமைச்சரவை முறை அரசின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கலாயிற்று.

நீதித்துறைச் சட்டம்

தலைமை நீதிமன்றம் ஒன்றை மட்டும் நிறுவ புதிய அரசியலமைப்பு வழிவகுத்திருந்தது. நீதித்துறை எவ்வாறு அமைக்கப்படவேண்டும், எப்படி இயங்க வேண்டும் என்பன குறித்து அரசியலமைப்பில் திட்டவட்டமாக ஒன்றும் சொல்லப்பட வில்லை. இக்குறையைப் போக்க சட்டமாமன்றம் 1789-இல் நீதித்துறை சட்டமொன்றை இயற்றியது. அதன்படி தலைமை நீதிமன்றத்தில் ஆறு நீதிபதிகள் இருப்பர். மற்றும் பதின்மூன்று மாவட்ட நீதிமன்றங்களும், மூன்று சுற்றுலா நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. நியூயார்க்கைச் சார்ந்த ஜான் ஜே (John Jay) என்பவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப் பட்டார். தலைமை நீதிபதியும், பிற நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர். அந்நியமனங்களை செனட் அவை உறுதிப்படுத்த வேண்டும். அரசியலமைப்பின் உட்பிரிவுகளைச் செயலாக்கும்போது எழக்கூடிய சிக்கல்கள் பற்றிய வழக்குகளை மாநில நீதிமன்றங்களிலிருந்து தலைமை நீதிமன்றத்துக்கு முறையீடு செய்ய வழி வகுக்கப்பட்டது. அதே போல் மாநில சட்டமன்றங்களும், நாட்டின் சட்டமாமன்றமும் இயற்றும் சட்டங்களை மறு ஆய்வு செய்யவும் தலைமை நீதிமன்றத்துக்கு உரிமை தரப்பட்டது. இதற்கு நீதி மறு ஆய்வு (Judicial Review) என்று பெயர். தலைமை நீதிமன்றத்தின் முக்கியமான பணியாகக் கருதப்படுகிறது. இந்நீதி மறு ஆய்வு குறித்து ஏற்கனவே ஹாமில்டன் 'பெடரலிஸ்டு' கட்டுரைகளில் விரித்து எழுதியிருந்தார். நாளடைவில் இந்நீதி மறு ஆய்வுமுறை கூட்டாட்சி அரசின் ஓர் அங்கமாக விளங்கலாயிற்று.

உரிமைகள் பட்டியல் சேர்க்கப்படல் – 1791

அரசியலமைப்பு தீட்டப்பட்டபோது மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இதனைப் பல மாநிலங்கள் குறையாகக் கருதின. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஏன் இவைபற்றி குறிப்பிடவில்லையென்றால்,

இவற்றை மாநிலங்கள் காக்கும் என கருதியிருப்பர். ஏற்கனவே மாநில அரசியலமைப்புகள் பலவற்றில் உரிமைகள் பட்டியல் இடம்பெற்றிருந்தது. ஆனால் புதிய அரசியலமைப்பில் உரிமைகள் பட்டியல் சேர்க்கப்பட்டால் தான் அதனை ஏற்போம் என பல மாநிலங்கள் கூறலாயின. மக்களின் மனப்பாங்கை உணர்ந்த ஹாமில்டனும், பிற தலைவர்களும் உரிமைகள் பட்டியல் ஒன்றைக் கட்டாயம் பின்னர் சேர்த்திட வாக்குறுதி தந்தனர். அதன்பேரில் மாநிலங்கள் அரசியலமைப்பை ஏற்றன. புதிய அரசியலமைப்பு செயலுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆனதும், 1791இல் உரிமைகள் பட்டியல் பத்து திருத்தங்களாக சட்டமாமன்றத்தால் கொண்டு வரப்பட்டு இணைக்கப்பட்டது. இது அரசியலமைப்பின் இன்றியமையாத ஒரு பகுதியாக விளங்குகிறது. நியாயமற்ற முறையில் குடிமக்களை அரசு அச்சுறுத்தாவண்ணம் காக்கப்பட்டனர். பேச்சுரிமை, கருத்து வெளியீட்டுரிமை சமய உரிமை ஆகியவை உறுதியாக்கப்பட்டன.

ஹாமில்டனின் நிதி சீர்திருத்தங்கள்

கருவூலச் செயலாளராகப் பணியேற்றதும் நாட்டின் நிதிநிலையைச் சீர்திருத்துவதில் அலெக்டாண்டர் ஹாமில்டன் ஈடுபட்டார். முதலாவதாக அமெரிக்க அரசு வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உரிமைப்போரின்போது வாங்கியிருந்த கடன் தொகை அப்படியே தொடர்ந்தமை ஹாமில்டனின் கவனத்தைக் கவர்ந்தது. கூட்டாட்சிப் பேரவை பிரான்சிடமிருந்தும், ஹாலந்திடமிருந்தும் ஏராளமாகக் கடன் பெற்றிருந்தது. இவற்றுக்கான வட்டித்தொகையும் கூடிக்கொண்டே சென்றது. 1790ஆம் ஆண்டளவில் இருநாடுகளின் கடன், வட்டித் தொகை பன்னிரண்டு மில்லியன் டாலராக வளர்ந்திருந்தது. இவை முழுமையாக திருப்பித்தரப்பட வேண்டுமென சட்டமாமன்ற உறுப்பினர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்டனர். எனினும் உள்நாட்டு மக்கள் அரசுக்கு அளித்திருந்த கடன்தொகையைத் திருப்பித் தருவதில் கருத்துவேறுபாடுகள் எழுந்தன.

உள்நாட்டுக்கடன் இருவகைப்படும். ஒன்று கூட்டாட்சிப் பேரவையால் வாங்கப்பட்ட தேசிய கடன் (National Debt); மற்றொன்று மாநில அரசுகளால் வாங்கப்பட்ட மாநிலக் கடன் (State Debts). 1789இல் தேசிய கடன் 56,000,000 (56 மில்லியன்) டாலராக உயர்ந்திருந்தது. சட்டமாமன்ற உறுப்பினர்களிடையே இதனைத் திருப்பித் தருவதுபற்றி கருத்து வேறுபாடு எழுந்தது. ஒரு சிலர் இக்கடன்களை திருப்பித் தராமல் ரத்து செய்துவிடவேண்டுமென்றனர். ஒரு சிலர் முழு தொகை தரக்கூடாது; சற்று குறைந்த தொகையை மட்டும் தந்தால் போதுமென்றனர். ஆனால் ஹாமில்டன் முழு கடன் தொகையைத் திருப்பித்தர வேண்டுமென்றார். அப்பொழுதுதான் கடன் கொடுத்தவர்கட்கு அரசின்மீது நம்பிக்கை ஏற்படுவதோடு, அவர்கள் கொடுத்த கடனைத் திருப்பிப்பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் நிலையான அரசு இருப்பதையும் வரவேற்பர் என்றார். அரசு பழைய கடன் பத்திரங்களையெல்லாம் திரும்பப் பெற்றுப் பொது நிதிக்கணக்கினைத் துவக்கி, வட்டி வீதத்தைக்குறிப்பிட்டு புதிய கடன் பத்திரங்களை

வழங்க வேண்டுமென்றும், இதனால் புதிய அரசின் பெருமை மக்களிடையே உயருமென்றும் ஹாமில்டன் கூறினார். இத்திட்டம் ஒரு சில மாற்றங்களோடு சட்டமாமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்து மாநில அரசுகள் பெற்றிருந்த கடன்களைத் திருப்பித் தருவதற்கான திட்டமொன்றை ஹாமில்டன் வகுத்தார். மாநிலங்களின் கடன்தொகை 25,000,000 (25 மில்லியன்) டாலராகப் பெருகியிருந்தது. இவற்றைத் திருப்பித்தர மாநில அரசுகள் முயற்சியேதும் செய்யவில்லை. இதனால் கடன் கொடுத்தோர் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். எல்லா மாநிலங்களின் கடன்களையும் கூட்டாட்சி அரசு மேற்கொண்டு திருப்பித்தரவேண்டுமென்றார். இச்செய்கையால் கடன் தந்தவர்கள் கூட்டாட்சி அரசின் மீது நம்பிக்கையும், மதிப்பும் கொள்வர் என்றும், சட்டமாமன்றத்தின் முடிவுகளை ஆதரிப்பர் என்றும், கூட்டாட்சி அரசு வலுப்பெறும் என்றும் ஹாமில்டன் சுட்டிக் காட்டினார். கடன் தொகையைத் திரும்பிப் பெறுவோர் புதிய தொழில்களில் முதலீடு செய்வர் என்றும் எதிர்பார்த்தார்.

ஹாமில்டனின் முதலீடு திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. குறிப்பாக தென்மாநில உறுப்பினர்கள் எதிர்த்தனர். ஏனெனில், வடமாநிலங்களின் கடன் தொகைதான் அதிகமாயிருந்தது. இவ்வேற்பாட்டால் வடமாநிலத்தவரே பயன்பெறுவர் என கருதப்பட்டது. அவர்கள் நன்மைக்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டதோ எனப் பலர் ஐயுற்றனர். இத்திட்டத்தை எதிர்த்த ஜெபர்சன், மாடிசன் ஆகியோர் இறுதியில் ஹாமில்டனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். மாநிலக்கடன்களைக் கூட்டாட்சி அரசு ஏற்பது என்ற திட்டத்திற்கு தென்மாநில உறுப்பினர்கள் ஆதரவு தந்தால், கூட்டாட்சி அரசின் தலைநகர் வடபகுதியிலிருந்த நியூயார்க்கிலிருந்து தென்பகுதிக்கு மாற்றப்படும் என்பதே அவ்வொப்பந்தமாகும். அதன்படியே கூட்டாட்சி அரசின் தலைநகர் நியூயார்க்கிலிருந்து 1790இல் பிலடெல்பியாவிற்கும், பிறகு அங்கிருந்து 1800இல் புதிதாக நிருமாணிக்கப்பட்ட நகரான வாஷிங்டனுக்கும் மாற்றப்பட்டது.

தேசிய பாங்கு நிறுவப்படல்

கூட்டாட்சி அரசின் நிதி சிக்கல்களைத் தீர்க்க ஒரு பாங்கு கட்டாயம் தேவையென ஹாமில்டன் வலியுறுத்தினார். நிலையான பாங்கு ஒன்றால் வெளியிடப்படும் தாள் பணம், பொன், வெள்ளி நாணயங்கட்கு மாற்றாக அமையுமென்றார். அத்தோடு அரசு மேற்கொள்ளவிருந்த கடன்கள் சம்பந்தப்பட்ட கடன் பத்திரங்களை வழங்கலாம், நிதிக்கணக்கினை காக்கவும், வட்டித் தொகையினை அவ்வப்போது மக்களுக்கு அளிக்கவும் ஒரு பாங்கு நிறுவனம் தேவையென ஹாமில்டன் வாதிட்டார். இங்கிலாந்து பாங்கின் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பாங்கு அமைய வேண்டுமென விரும்பினார். பத்து மில்லியன் டாலர் முதலீடு இருக்கவேண்டுமென்றும், அதில் ஐந்தில் ஒரு பங்கினைக் கூட்டாட்சி அரசு அளிக்குமென்றும், எஞ்சிய நான்கு பங்குகளைத் தனியார் அளிக்க வேண்டுமென்றும் திட்டமிட்டார்.

ஹாமில்டனின் பாங்குத் திட்டத்திற்கும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஜெபர்சன் வன்மையாக எதிர்த்தார். வணிகர்கட்கும், பெருஞ்செல்வந்தர்கட்கும் சாதகமாகவே இது நிறுவப்படுகிறதென கருதினர். பாங்கு ஒன்றை அமைக்க அரசியலமைப்பில் ஒன்றும் திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. அரசியலமைப்பில் சொல்லப்பட்ட பணிகளைமட்டுமே கூட்டாட்சி அரசு மேற்கொள்ள வேண்டுமென்றார் ஜெபர்சன். ஆனால் இவ்வெதிர்ப்புகளுக்கு ஹாமில்டன் பக்குவமாக பதிலளித்தார். பாங்கு ஒன்று நிறுவப்படவேண்டுமென வெளிப்படையாகக் கூட்டாட்சி அரசுக்கு அரசியலமைப்பில் உரிமை தரப்படவில்லை; எனினும் அரசுப் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தவும், கடன் திரட்டவும், வரிகள் விதிக்கவும் உரிமை தரப்பட்டுள்ளது; எனவே இச்செயல்களைக் கவனிக்க உள்ளடக்கிய அதிகாரத்தின்படி (theory of implied powers) பாங்கினை நிறுவ உரிமை உண்டு என பதிலளித்தார். அரசியலமைப்பின் பொருள் விளக்கத்தைப் பெருநோக்கில் காணவேண்டுமே ஒழிய, குறுகிய வரம்பு மீறாத நோக்கில் காணக்கூடாது என்றும் வாஷிங்டன் கருதினார். இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டு பாங்கு 1791இல் துவக்கப்பட்டு இருபது ஆண்டுகள் இயங்க பட்டயமொன்று அளிக்கப்பட்டது.

தீர்வை வரியும் சாராயக் கலகமும்

தேசியக்கடன், மாநிலக்கடன் ஆகியவற்றையெல்லாம் திருப்பியடைக்க கருவூலத்துக்கு வரிப்பணம் தேவைப்பட்டது. ஹாமில்டனின் வேண்டுகோட்கிணங்க சட்டமாமன்றம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாராயத்தின் மீது தீர்வை விதித்தது (மார்ச்சு 1791). மேரிலண்டு, வர்ஜீனியா, வடகரோலினா ஆகிய மாநிலங்களின் மலைப்பகுதியில் வாழ்ந்த குடியானவர்கள் இத்தீர்வையை எதிர்த்தனர். அவர்கள் விளைவித்த தானியங்களை வண்டிகளிலோ அல்லது படகுகளிலோ ஏற்றிச்செல்வதற்கான கட்டணம் விளைபொருளின் விலையைவிட மிகுதியாக இருந்தமையால், தானியத்திலிருந்து சாராயம் வடித்து ஊதியம்பெற்று வாழ்ந்தனர். கூட்டாட்சி அரசின் வரிதிரட்டும் அதிகாரிகள் இடர்ப்பாடுகட்கிடையே வரிதிரட்டினர். 1794இல் பென்சில்வேனியா குடியானவர்கள் வரிகட்ட மறுத்து கலகத்திலிறங்கினர்.

கலகத்தை ஒடுக்குவதற்காகவும், அரசு திட்டத்தை செயலாக்க முடியும் என்பதை உணர்த்தவும் ஹாமில்டன் படைவீரர்களை அனுப்பச்சொல்லி வாஷிங்டனை கேட்டுக்கொண்டார். அவரும் இசைந்து, நான்கு மாநிலங்களிலிருந்து 15,000 வீரர்களைக் கலகம் நடைபெற்ற இடத்துக்கு அனுப்பி வைத்தார். உடனே கலகக்காரர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இச்செயல் புதிய அரசின் உறுதிப்பாட்டை நன்குணர்த்தி, நற்பெயரை பெற்றுத்தந்தது.

அமெரிக்க ஆலைத் தொழில் இளங்குழவியாக இருந்தது. அதன் செய்பொருட்களை இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் போட்டியிலிருந்து காப்பாற்ற காப்புவரிகள் விதிக்க வேண்டுமென்றார். ஹாமில்டன், சட்டமாமன்றமும் இசைந்து 1789இல் காப்பு வரிச்சட்டத்தை இயற்றிற்று. அமெரிக்காவில் செய்பொருள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு

காப்பு வரித்தொகை கூட்டப்படவேண்டுமென ஹாமில்டன் வேண்டினார். இதனால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உள்நாட்டில் செய்யப்படும் பொருட்களின் விலையைவிடக் கூடுதலாக இருக்கும், நுகர்வோர் அதிக விலை தரவேண்டியிருக்கும். இருப்பினும் அமெரிக்காவில் உற்பத்தித்திறன் பெருகவும், வணிகம் பெருகவும் வாய்ப்புக்கள் இருக்கும் என்றெல்லாம் ஹாமில்டன் வாதிட்டார். ஹாமில்டனின் கூடுதலான காப்புவரித் திட்டத்தை ஜெபர்சன் போன்றோர் எதிர்த்தனர். இறக்குமதி பொருட்கள் மீது கூடுதல் வரிவிதிப்பதால் குடியானவர்கட்கு இரண்டு வகையில் இழப்பு ஏற்படுமென்றனர். ஒன்று செய்பொருட்களின் விலை மிகும். மற்றொன்று அமெரிக்காவின் காப்பு வரிகள் உயர்த்தப்பட்டால் பிறநாடுகள் பழிவாங்கும் நோக்கில் அமெரிக்க தானியங்கள் மீது தத்தம் நாட்டில் வரிகளைக் கூட்டுவர். அதனால் குடியானவரது ஏற்றுமதி பாதிக்கப்படும். எனவே ஜெபர்சனும், அவரது கோட்பாட்டினரும் காப்புவரிகளற்ற, தடையிலா வாணிபத்தை வேண்டினர். ஆனால் ஹாமில்டனது கொள்கைக்கே வெற்றி கிட்டியது. அமெரிக்காவின் செய்பொருள் உற்பத்தி பெருகி வளமேற்பட்டது. எனினும் காப்புவரிகள் மீதான வாதம் தொடர்ந்து இருந்து வந்தது.

வெளிநாட்டுக் கொள்கை

பிரெஞ்சுப் புரட்சி

ஜார்ஜ் வாஷிங்டன் வெளிநாட்டுறவில் அமைதியைக் காணவே பெரிதும் விழைந்தார். ஆனால் அவர் பதவியேற்ற சில நாட்களில் பிரெஞ்சுப் புரட்சி துவங்கிற்று. அமெரிக்க மக்கள் பிரஞ்சுப் புரட்சியின் மீது மிகுந்த ஆர்வங் கொண்டிருந்தனர். தாங்கள் உரிமைக்காக பிரிட்டனுடன் போரிட்டது போல் பிரெஞ்சு மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கருதினர். அமெரிக்க உரிமைப் போரின் போது பிரெஞ்சுக்காரர் உதவியளித்திருந்தனர். எனவே பிரெஞ்சு மக்களுக்கு அமெரிக்கர் உதவவேண்டுமென்றே எண்ணினர்.

தாமஸ் ஜெபர்சன் அமெரிக்க தூதுவராக பிரெஞ்சுப் புரட்சி மூண்ட போது பாரிசில் இருந்தார். அவர் தாயகம் திரும்பி புரட்சியாளர்கட்கு ஆதரவுதர விரும்பினார். ஆனால் 1793இல் பதினாறாம் லூயி சிரச்சேதம் செய்யப்பட்டதையடுத்து கொடுரச் செயல்களில் புரட்சியாளர் இயங்கியதை கண்டு ஹாமில்டன் கவலையுற்றார். அரசுபூர்வமாக அமெரிக்கா என்ன செய்யவேண்டுமென்ற வினா எழுந்தது. புதிய புரட்சி அரசை அமெரிக்கா அங்கீகரிப்பதா, மற்றும் அந்நாட்டுத் தூதுவரை ஏற்பதா போன்ற வினாக்கள் எழுந்தன. இவற்றிற்கு ஜெபர்சன் திட்டவட்டமாகப் பதிலளித்தார். இதனடிப்படையிலேயே அடுத்த நூற்றாண்டுகட்கு அமெரிக்க வெளிநாட்டுறவு வகுக்கப்பட்டது.

வெளிநாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டு, அந்நாட்டு மக்களின் மன உறுதியோடு புதியதொரு அரசு அமைக்கப்பட்டால் அதனை அமெரிக்க அரசு அங்கீகரிக்க வேண்டுமென்ற கொள்கையை ஜெபர்சன் வகுத்தார். புதிய அரசு நல்லதா, கெட்டதா, கொடுமையானதா என்றெல்லாம் பாகுபடுத்தக்கூடாது. நாட்டுமக்களின் நலங்கருதி

கட்டுக்கோப்புடன் புதிய அரசு செயற்பட்டால் அமெரிக்கா அதனையேற்க வேண்டும். இதனால் தான் அமெரிக்கா பிரெஞ்சுக் குடியரசை அங்கீகரித்தது. இதையொட்டி இரண்டு சிக்கல்கள் எழுந்தன. 1793இல் பிரான்சு பிரிட்டன் மீது போர் தொடுத்தது. இப்போரில் அமெரிக்கா பிரெஞ்சுப் பக்கம் சேர்வதா அல்லது நடுநிலமை வகிப்பதா என்ற சிக்கலும், முன்பு 1778இல் அமெரிக்கா பிரான்சுடன் செய்து கொண்ட உடன்பாடு நீடிக்குமா அல்லது அரசு மாறி விட்டதால் அது முற்றுப்பெற்றதா என்ற சிக்கலும் எழுந்தன. வாஷிங்டனும் அவரது உயர் அலுவலர்களும் நடுநிலை வகிக்கவே விரும்பினர். புதிய நாடான அமெரிக்கா மற்றொரு போரிலிறங்க சக்தியற்றதாய் இருந்தது. எனவே குடியரசுத் தலைவர் நடுநிலை அறிவிப்பை வெளியிட்டார். அமெரிக்கா பிரெஞ்சுப் போர்களில் ஈடுபடாது என்றும், அமெரிக்க மக்கள் போரில் ஈடுபட்டுள்ள எந்த நாட்டு இராணுவத்திலும் சேரக்கூடாதென்றும் அறிவித்தார். நடுநிலைக் கொள்கை அல்லது தனித்திருத்தல் கொள்கையின் துவக்கமாக இவ்வறிவிப்பு கருதப்படுகிறது.

அமெரிக்காவில் பிரெஞ்சுத் தூதுவரின் தகாத செயல்கள்

ஜெபர்சனும், அவரது நண்பர்களும் பிரான்சுக்கு ஆதரவு தரவேண்டுமென வாதிட்டு வந்த நேரத்தில் பிரான்சின் தூதுவராக எட்மண்டு சார்லஸ் ஜெனட் (Edmond Charles Genet) என்பவர் வந்தார். இவர் துவக்கத்திலிருந்தே தவறான செயல்களில் ஈடுபட்டார். வந்ததும் நேராக தலைநகருக்குச் சென்று குடியரசுத்தலைவரை சந்திக்காமல் தென் கரோலினாவுக்கு சென்றார். அங்கு பல கிழமைகள் தங்கி பிரெஞ்சுப் படைக்கு அமெரிக்கரை வீரர்களாக தேர்ந்தெடுத்தனுப்பினார். பிரெஞ்சுப் புரட்சிக்கு சாதகமாகக் கடிதங்களையும், கட்டுரைகளையும் அச்சிடும்படி செய்தித்தாட்களை வேண்டிக் கொண்டார். அமெரிக்க வணிகக் கப்பல்கள் சிலவற்றை ஆயுதமேந்தியனுப்பி பிரிட்டிஷ் கப்பல்களைத் தாக்கச் சொன்னார். அவ்வண்ணமே சில சென்று பிரிட்டிஷ் கப்பல்களை கைப்பற்றி வந்தன. இவையெல்லாம் அத்துமீறிய செயல்களாகும். இதனால் பிரிட்டனுடனான உறவு பாதிக்கப்படும். ஆனால் ஜெனட் இவற்றை உணரவில்லை.

ஜெனட் வேண்டுமென்றே காலந்தாழ்த்தி தலைநகருக்கு சென்றார். வாஷிங்டன் முழு மனதோடு வரவேற்கவில்லை. ஜெனட் சினமுற்றார். குடியரசுத் தலைவருக்கெதிராக மக்களைத் தூண்டிவிடலானார். ஆனால் ஜெபர்சன் உட்பட யாரும் ஜெனட்டுக்கு ஆதரவு காட்டவில்லை. பிரெஞ்சுப் போர்க்கப்பலொன்று பிரிட்டிஷ் கப்பலொன்றைப் பிடித்து அமெரிக்கத்துறைமுகம் ஒன்றுக்குக் கொணர்ந்தது. இது சட்டத்துக்கு முரணான செயலாகும். பிரிட்டிஷ் கப்பலை விடுவிக்கச் சொல்லி ஜெனட்டுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் ஜெனட்டு மறுத்துவிட்டதோடல்லாமல் அக்கப்பலை பிரெஞ்சுப் படைக் கப்பலாகப் பயன்படுத்தலானார். இதனைக் கண்ட வாஷிங்டன் ஜெனட்டை திருப்பி யழைக்குமாறு பிரான்சு நாட்டுக்கு செய்தி விடுத்தார். நாடு திரும்பினால் தனக்கு சிரச் சேதத் தண்டனைதான் அளிக்கப்பெறுமென்று அஞ்சி ஜெனட் பதவி விலகி அமெரிக்கா விலேயே சாதாரண குடிமகனாகத் தங்கிவிட்டார். ஜெனட்டின் நடவடிக்கைகளால் அமெரிக்கருக்கு பிரான்சு நாட்டின் மீதிருந்த பரிவு முற்றிலும் அகன்றதென சொல்லலாம்.

பிரிட்டனுடன் உடன்பாடு

பிரெஞ்சுப் புரட்சி துவங்கிய நாளிலிருந்து பிரிட்டனுடனான உறவு சிறப்புற அமையவில்லை என்றே சொல்லலாம். வடமேற்குப் பகுதியில் இன்னும் சில காவல் நிலையங்களில் பிரிட்டன் தொடர்ந்து படைவீரர்களை நிறுத்தி வைத்திருந்தது. உரிமைப் போரின் போது அமெரிக்கக் குடிமக்களது சொத்துக்களைக் கவர்ந்து சென்ற பிரிட்டிஷ் வீரர்கள் இன்னும் திருப்பித்தரவில்லை. பிரிட்டிஷ் அரசும் அதற்கான இழப்பீட்டையும் தரவில்லை. பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளோடு அமெரிக்கா வாணிபம் செய்ய பிரிட்டன் இசைவுதர மறுத்து வந்தது. மேலும் பிரிட்டன் சில அமெரிக்க வணிகக் கப்பல்களையும் கைப்பற்றியிருந்தது. இந்நிலையில் பிரிட்டன் மீது போர் தொடுக்க வேண்டுமென சில தீவிரவாதிகள் குரலெழுப்பினர்.

வாஷிங்டன் உட்பட பல தலைவர்கள் பிரிட்டனுடன் போர் தொடுப்பதை விரும்பவில்லை. பிரிட்டனிலிருந்து ஏராளமான பொருட்களை அமெரிக்கர் இறக்குமதி செய்தனர். அரசுக்கு 90 விழுக்காடு சுங்கவரி பிரிட்டிஷ் இறக்குமதியிலிருந்து கிட்டியது. இந்நிலையில் பிரிட்டனோடு போரிலிறங்கினால் அமெரிக்காவுக்கு பெருமிழப்பே என்பதை பலர் உணர்ந்தனர். எனவே பிரிட்டனுடன் நட்புமுறையில் பேசி சிக்கல் களுக்குத் தீர்வுகாண (John Jay) ஜான்ஜே என்பாரை வாஷிங்டன் அனுப்பிவைத்தார். ஜேவும் நன்முறையில் பேசி 1794இல் ஓர் உடன்பாட்டில் கையெழுத்திட்டார். இதன்படி பிரிட்டன் வடமேற்குப் பகுதியிலிருந்து வெளியேற ஒப்புக் கொண்டது. இழப்பீடுகளைப் பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கவும் ஒப்புக் கொண்டது. ஆனால் வணிக உரிமைகள் பற்றியோ நடுநிலைமைக் கொள்கை பற்றியோ ஏதும் சொல்லப்படவில்லை. எனவே அமெரிக்க மக்கள் அவ்வளவாக இவ்வுடன்பாட்டை வரவேற்கவில்லை. எனினும் போர் ஒன்றைத் தவிர்க்கும் வகையில் உடன்பாடு உருவானதை அமெரிக்க அரசு வரவேற்றது.

ஸ்பெயினுடன் உடன்பாடு

பிரிட்டனுடன் அமெரிக்கா உடன்பாடு செய்து கொண்டதைக் கண்ட ஸ்பெயின் அமெரிக்காவில் தன்னுடைய உடைமைகட்கு ஆபத்து வருமோ என அஞ்சிற்று. அச்சமயம் லூசியானாப் பகுதி ஸ்பெயினுக்கு சொந்தமானதாக இருந்தது. அமெரிக்கர் இந்நிலப் பகுதியைக் கைபற்றக் கூடுமென நினைத்தனர். எனவே அமெரிக்காவோடு நட்புக் கொள்ள ஸ்பெயின் விழைந்தது. ஸ்பெயினிலிருந்த அமெரிக்கத் தூதுவர் தாமஸ் பின்க்னி (Tomas Pinckney) ஸ்பெயினுடன் சான் லொரென்சோ உடன்படிக்கையில் (Treaty of San Lorenzo) கையெழுத்திட்டார். இதன்படி மிசிசிபி ஆற்றில் அமெரிக்கர் சரக்குப் படகுகளை ஓட்டிச் செல்லவும், நியூஆர்லியன்ஸ் துறைமுகத்தில் கிடங்குகள் வைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றனர். இவை மேற்குப்பகுதி வாழ் குடியானவர்கட்கு மிகுந்த நன்மைகளைத் தந்தன. ஸ்பானிய புளோரிடாவின் வடஎல்லை 31 டிகிரி அட்சரேகை எனவும் வரையறுக்கப்பட்டது.

வாஷிங்டன் ஓய்வுபெறல்

இரண்டு பதவிக் காலம் குடியரசுத் தலைவராகப் பணியாற்றிவிட்டு, 1797இல் ஜார்ஜ் வாஷிங்டன் ஓய்வுபெற்றார். அவருடைய பதவிக்காலத்தில் நல்ல பல ஆக்க பணிகளை ஆற்றியிருந்தார். அவரும் கூட்டாட்சிவாதியினரும் பெருமிதங் கொள்ளக்கூடிய முறையில் அவை அமைந்திருந்தன. புதிய அரசு உருவாக்கப்பட்டது. ஆட்சித் துறைகள் செவ்வையாக அமைக்கப் பெற்றன. நீதிமன்றங்கள் முறையாக செயல்படலாயின. நாட்டுக்கடனைச் சீராகத் திருப்பித்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சாராயக் கலகம் எளிதில் அடக்கியொடுக்கப்பட்டது. வடமேற்குப் பகுதியில் இந்தியப் பழங்குடியினர் விரட்டியடிக்கப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டது. பிரிட்டனும் வடமேற்கு கோட்டைகளிலிருந்து வெளியேறிற்று. மிசிசிபி ஆற்றில் அமெரிக்கர் சென்று வர ஸ்பெயின் உரிமையளித்தது. எல்லா நோக்கிலும் புதிய அரசு மாபெரும் வெற்றிகளைப் பெற்றதாக, சாதனைகளை நிகழ்த்தியதாகத் திகழ்ந்தது. இதற்கு அடிப்படை காரணமாக விளங்கியவர் ஜார்ஜ் வாஷிங்டன் என்றால் மிகையாகாது.

தனது பிரிவுவிடைச் சொற்பொழிவில் ஜார்ஜ் வாஷிங்டன் மக்களுக்கும் வருங்கால அரசியல்வாதிகட்கும் சிறந்த அறிவுரைகளை வழங்கினார். பிரிவினைப் போக்கிலிருந்து மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றார். வெளிநாட்டுறவில் அமெரிக்கா அன்று நிலவிய ஐரோப்பியச் சிக்கல்களில் தலையிடாது தனித்து நிற்பதே நல்லது என்றார்; எனினும் தற்காலிக உடன்பாடுகளைச் செய்து கொள்வதில் தவறேதுமில்லை என்றும் கூறினார். அன்னாரது அறிவுரைகள் அமெரிக்கருக்கு வருங்காலத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது எனலாம். ஜார்ஜ் வாஷிங்டனின் தலையாய தொண்டினை என்றென்றும் அமெரிக்க மக்கள் நினைவு கொள்ளும் வகையில் தாங்கள் நிருமாணித்த புதிய தலைநகருக்கு வாஷிங்டன் என்றே பெயரிட்டனர்.

பயிற்சி வினாக்கள்

1) வாஷிங்டனின் உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் ஹாமில்டன் ஆற்றிய பங்கினைக் குறிப்பிடுக.

2) வாஷிங்டன் வெளிநாட்டுறவில் வகுத்த கொள்கைகளை விவரிக்க.

பாடம் – 5

அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் கட்சிகளின் தோற்றம்

அமெரிக்க ஐக்கிய நாடு தோன்றியபோதும், அமெரிக்காவின் புதிய அரசியலமைப்பு தீட்டப்பட்ட போதும் நாட்டில் கட்சிகள் அடிப்படையில் அரசாட்சி நடைபெற்றால் நலம் பயக்காது என பலரும் விரும்பினர். ஆனால் உரிமை பெற்றவுடனேயே அமெரிக்க அரசியல் வானில் கட்சிகள் ஒளிவீசத் தொடங்கின. சில ஆண்டுகளில் கட்சிகள் அடிப்படையிலான ஆட்சிமுறையே சிறந்த மக்களாட்சி முறையாக மலரலாயிற்று. நேசக் கூட்டாட்சி காலத்தில் புதிய அரசியலமைப்பு தீட்டுவதற்காக பிலடெல்பியாவில் சிறப்பு மாநாடு கூட்டப்பட்டது. அதில் விதிமுறைகளை வகுக்கும்போதே சில கோட்பாடுகட்கு சிலர் ஆதரவு தெரிவித்தும், ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தும் வாதிட்டனர். பின்னர் இப்புதிய அரசியலமைப்பு தீட்டப்பட்டதும் அதனை மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதிலும் கூட்டாட்சிவாதிகள் (Federalists) என்றும் மாறுபட்ட கருத்துடையோர் கூட்டாட்சி எதிர்ப்பாளர் (Anti-Federalists) எனறும் அழைக்கப்படலாயினர். நாளாவட்டத்தில் கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் தங்களைக் குடியரசுக்கட்சியினர் (Republicans) என்றழைத்துக் கொண்டனர். துவக்கத்தில் குடியரசுக்கட்சி என்றழைக்கப்பட்ட கட்சி தனது பெயரை மக்களாட்சி கட்சி (Democratic Party) என ஆன்ட்ரு ஜாக்சன் பதவிக் காலத்தில் (1829-37) மாற்றியமைத்துக்கொண்டது. இன்றுள்ள குடியரசுக் கட்சி 1854இல் தோற்றுவிக்கப்பட்டது.

இருதரப்பு உறுப்பினர்கள்

கூட்டாட்சிவாதிகள்

அலெக்சாண்டர் ஹாமில்டனும், அவரது ஆதரவாளர்களுமே துவக்கத்தில் இக்கட்சியின் முதுகெலும்பாய்த் திகழ்ந்தனர். இவர்தம் கொள்கையின்படி அறிவுசால் சான்றோர்களும், செல்வர்களும், மேட்டுக்குடியினரும் மட்டுமே அரசாட்சியை நடத்தமுடியும். மைய அரசு வலிமை வாய்ந்ததாக இருக்கவேண்டுமென்றும் விரும்பினர். இவர்களது கட்சியில் பெரும்பாலும் வடபகுதி மாநில நகரங்களிலும் கடலோரப் பகுதிகளிலும் வாழ்பவர்களும், குறிப்பாக வணிகர்களும், உற்பத்தியாளர்களும், பாங்கு உரிமையாளர்களும், தொழிலதிபர்களும் இருந்தனர்.

ஹாமில்டனது கொள்கைகட்கும், திட்டங்களுக்கும் தென்பகுதி மாநிலங்களிலிருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பிற்று. இவர்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்கள். இவர்தம் தலைவராக ஜார்ஜ் வாஷிங்டன் அமைச்சரவையில் வெளிநாட்டுறவுத்துறை செயலாளராக இருந்த தாமஸ் ஜெபர்சன் விளங்கினார். பண்ணையாளர்கட்கும், கடன்கொடுமையால் இடர்ப்பாடுற்ற குடியானவர்கட்கும் சார்புரிமைப் பேச்சாளராக ஜெபர்சன் திகழ்ந்தார். ஹாமில்டனது திட்டங்கள் வடபகுதி மாநிலத்தவர்க்கே சாதகமாய் அமைந்திருப்பதைக் கண்ட தென் மாநிலங்கள் அவற்றை வன்மையாகக் கண்டித்தன. குடியரசுக் கட்சியில் பெரும்பாலும் குடியானவர்களும், கைவினைஞர்களும், சிறுவணிகர்களும் இடம் பெற்றிருந்தனர். மத்தியதர மக்களின் பரிவும் இக்கட்சிக்குக் கிட்டியது.

கட்சிகளின் கோட்பாடுகள்

கூட்டாட்சி கட்சியினர்

உயர்குடிப்பிறப்பாளரும், செல்வந்தரும் மட்டுமே அரசாட்சியில் ஈடுபடவேண்டு மென்ற நோக்குடையவர்கள். நாட்டுக் கடனை ஏற்பது, திருப்பியடைப்பது, பாங்கினைத் துவக்குவது, காப்புவரிகள் விதிப்பது மேம்பாடு அடையச் செய்யுமென கூட்டாட்சி வாதிகள் திடமாக நம்பினர். அரசியல் அமைப்பில் இத்திட்டங்களை மேற்கொள்ள விதிமுறைகள் இல்லாவிட்டாலும் தேவைக்கேற்ப விளக்கம் காண்பதே சரியென வாதிட்டனர். வெளிநாட்டுறவில் பிரிட்டனுடன் நட்புகொள்வதையே விரும்பினர்.

குடியரசுக் கட்சியினர்

இவர்கள் ஹாமில்டனின் திட்டங்களை எதிர்த்தனர். அமெரிக்க உரிமைப்போரின் நோக்கங்களை நிறைவேற்றும்படி கூட்டாட்சியரசு அமைய வேண்டுமென விரும்பினர். அரசு பொது மக்களின் கையில் இருக்கவேண்டுமென்றும், எளிய மக்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும் கருதினர். ஹாமில்டனது கொள்கைகளும், திட்டங்களும் அமெரிக்கக் குடியரசையே முடங்கச் செய்யுமென ஜெபர்சன் குற்றஞ்சாட்டினார். ஹாமில்டனால் விளக்கம் தரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளடங்கிய அதிகாரக் கோட்பாட்டினை ஜெபர்சன் பெரிதும் கண்டித்தார். அரசியலமைப்பில் திட்டவட்டமாக சொல்லப்பட்ட வண்ணமே அரசு செயற்பட வேண்டுமென்றார். இல்லையென்றால் மக்களது உரிமைகளும் மாநிலங்களின் அதிகாரங்களும் பறிபோகுமென ஜெபர்சன் அஞ்சினார். கூட்டாட்சியரசு வெளிநாட்டுறவு, பாதுகாப்பு போன்றவற்றைக் கண்காணிப்ப தோடு பிற உள்நாட்டுக் காரியங்களை மாநிலங்களிடம் ஒப்படைத்து விட வேண்டு மென்றும் விரும்பினர். வெளிநாட்டுறவில் பிரான்சோடு நட்புறவு கொள்வதையே குடியரசுக் கட்சியினர் விழைந்தனர்.

கட்சிகளின் அமைப்புமுறை

1791ஆம் ஆண்டளவில் இருகட்சிகளும் வடிவம் பெறலாயின. சட்டமாமன்ற உறுப்பினர்களும், மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களைக் கூட்டாட்சிவாதிகள் கட்சியோடு அல்லது குடியரசுக் கட்சியோடு இணைத்துப் பேச முற்பட்டனர். ஊர்கள் தோறும் கட்சிக் குழுக்கள் தோன்றி கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்தின. ஒவ்வொரு கட்சியும் தனக்கென தனித்தனி செய்தித்தாட்களை வெளியிட முற்பட்டன. அவற்றில் ஒன்றையொன்று கருத்துக் கணைகளால் தாக்கிக்கொண்டன. கூட்டாட்சிவாதியினர் 'அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செய்தித்தாள்' (United States Gazette) என்ற தலைப்பில் ஒரு தாளினை வெளியிட்டனர். இதில் ஹாமில்டனும் அவரது நண்பர்களும் கட்டுரைகள் வெளியிட்டனர். குடியரசுக் கட்சியினர் 'தேசியத் செய்தித்தாள்' (National Gazette) என்ற தலைப்பில் ஒரு செய்தித்தாளை பிலடெல்பியாவிலிருந்து வெளியிட்டனர். ஜேம்ஸ் மாடிசனும் அவரது நண்பர்களும் பல தொடர் கட்டுரைகளை வரைந்து, கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் என்ற பெயரை உருவாக்கினர். இக்கட்சிகள் ஒன்றையொன்று ஐயக்கண்கொண்டு நோக்கின.

வாஷிங்டனின் கட்சி சாராக்கொள்கை

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் நடைபெற்றபோதே கூட்டாட்சிவாதிகளின் கை ஓங்கியிருந்தது. திட்டவட்டமான கொள்கைகளையும் சிறப்புற வகுத்திருந்தமையால் அவர்தம் செல்வாக்கும் மிகுந்திருந்தது. நற்பயனாக நல்ல பல தலைவர்களையும் பெற்றிருந்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக முதல் குடியரசுத் தலைவராக விளங்கிய வாஷிங்டனின் முழு ஆதரவு இவர்கட்கிருந்தது. வாஷிங்டன் எக்கட்சியிலும் சேரவில்லை. கட்சிப் பூசல்களினின்று விலகியே நின்றார். ஹாமில்டனின் கொள்கைகளை ஏன் அவர் ஆதரித்தார் என்றால், அவை கூட்டாட்சிவாதிகளது கொள்கை என்பதற்காகவல்ல; அவற்றால் நாட்டுக்கு நலன் பல கிட்டும் என்பதனாலேயாம். கூட்டாட்சிவாதிகள் மட்டும் அரசினைக் கட்டுப்படுத்தக்கூடாது என்ற நோக்குடனேயே கூட்டாட்சி எதிர்ப்பாளர் சிலரையும் அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். ஆனால் நாளாக ஆக கட்சிப் பூசல்கள் மலிந்தன. வாஷிங்டன் மனவேதனையுற்றார். இதனால் நாட்டில் பிளவு மனப்பான்மை வளரக்கூடாது என்பதற்காகவே அவர் இரண்டாவது பதவிக்காலத்தையும் ஏற்று ஒற்றுமையை நிலை நாட்டினார். ஆனாலும் குடியரசுக் கட்சியை சார்ந்த ஜெபர்சன், தாம் அடிக்கடி அமைச்சரவைக் கூட்டங்களில் கூட்டாட்சிவாதிகளால் சிறுபான்மையாக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டதையொட்டி பதவி விலகினார். இறுதியில் வாஷிங்டனின் விருப்பத்திற்கு மாறாக ஒரு கட்சிச் சார்புடைய அமைச்சரவையே விளங்கிற்று.

1796–ஆம் ஆண்டு தேர்தல்

வாஷிங்டன் இரண்டு பதவிக்காலத்திற்குப் பின் ஓய்வுபெற முடிவு செய்ததும் இருகட்சிகளும் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தத்தம் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வாக்குகளைப் பெறுவதிலும் ஈடுபட்டன. கூட்டாட்சி வாதிகள் சார்பில் ஜான்ஆடம்சும், குடியரசுக் கட்சியினர் சார்பில் தாமஸ் ஜெபர்சனும் போட்டியிட்டனர். ஏற்கனவே இருந்த பதின்மூன்று மாநிலங்களோடு புதியதாக வெர்மாண்ட் (Vermont), கென்டக்கி (Kentucky), தென்னசி (Tennesse) ஆகிய மூன்று மாநிலங்கள் சேர்ந்தன. எனவே பதினாறு மாநிலங்களின் சட்டமன்றங்கள் சேர்ந்து தேர்தல் குழுவை அமைத்தன. வாக்கெடுப்பில் ஜான் ஆடம்சுக்கு 71 வாக்குகளும், ஜெபர்சனுக்கு 68 வாக்குகளும் கிடைத்தன. ஜான் ஆடம்ஸ் குடியரசுத் தலைவரானார். இவ்வாக்கெடுப்பிலிருந்து கட்சி அடிப்படையில் தேர்தல் எவ்வளவு தீவிரமாக நடைபெற்றதென அறியலாம்.

பயிற்சி வினா

அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் கட்சிகள் தோன்றியமையை விளக்குக.

பாடம் – 6 ஜான் ஆடம்ஸ் (John Adams)

ஜான் ஆடம்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இரண்டாவது ஜனாதிபதியாக 1797 முதல் 1801 வரை பணியாற்றினார். இவர் பதவி ஏற்ற காலத்தில் அமெரிக்காவில் இருவித அரசியல் கட்சிகள் இருந்தன. அவை கூட்டாட்சிவாதிகள் கட்சி (Federalist Party) மற்றும் குடியரசுக் கட்சி (Republican Party)யுமாகும். ஜான் ஆடம்ஸ் கூட்டாட்சிவாதிகள் கட்சியின் கொள்கை முறைகளில் அதிகப் பற்றுறுதி கொண்ட காரணத்தால் அக்கட்சியை மட்டும் ஆதரித்தார். குடியரசுக் கட்சியினரை பல நடவடிக்கைகள் மூலம் ஒடுக்கினார். இது அவரது குறுகிய மனப்பான்மையை வெளிப்படுத்தியது. ஜான் ஆடம்ஸ் திறமையும், நேர்மையும், உயர்ந்த நோக்கங்களும் கொண்டவர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவர் பதவியை ஏற்பதற்கு முன் அவர் ஐரோப்பாவில் பல ஆண்டுகள் அமெரிக்காவின் அரசியல் தூதுவராக (Diplomat)ப் பணியாற்றியவராவார். ஜார்ஜ் வாஷிங்டன் குடியரசுத் தலைவராக இருந்த போது ஜான் ஆடம்ஸ் துணைத் தலைவராகப் பணிபுரிந்தார். அவர் அமெரிக்கக் குடியரசின் தலைவராக இருந்த பொழுது அவருக்கும், ஹாமில்டனுக்கும் இடையே கருத்து வேறுபாடு அடிக்கடி காணப்பட்டது. இதனால் கூட்டாட்சி வாதிகள் கட்சியிலேயே பிளவு ஏற்பட்டது. எனினும், பெரும்பாலான மக்கள் ஆடம்ஸையே விரும்பலாயினர். வாஷிங்டனால் நியமிக்கப்பட்ட உயர் அலுவலர்களை ஆடம்ஸ் அப்படியே தொடர்ந்து பதவியிலிருக்கச் செய்தார். பல துறைத்தலைவர்கள் ஹாமில்டனையே ஆதரித்தனர். தென் மாநிலத்தவருக்கு ஆடம்ஸ் நியூ இங்கிலாந்தைச் (New England) சேர்ந்தவரென்பதனால் அவர்மீது வெறுப்பு ஏற்பட்டது. கட்சி உணர்ச்சி, மிகக்கசப்பான நிலையை அடைந்தது. மற்றும் வெளிநாட்டுக் கொள்கை முறைகளிலும் பல சிக்கல்கள் தோன்றின.

பிரான்சுடன் உறவுநிலை (x, y, z நிகழ்ச்சி) வாஷிங்டன் பதவிக்காலத்தில் இங்கிலாந்தோடும், ஸ்பெயினோடும் அமெரிக்க ஐக்கிய நாடு உடன்பாடு செய்து கொண்டதைப் பிரான்சு பொறாமையோடு நோக்கியது. பிரெஞ்சுப் புரட்சிப் போர்களின் போது, வாஷிங்டன் நடுநிலைமைக் கொள்கையை அறிவித்தார். இதுமுதல் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும், பிரான்சுக்குமிடையேயிருந்த, உறவுநிலை சீர் குலையலாயிற்று. ஆடம்ஸ் அனுப்பிய வெளிநாட்டு அமைச்சரை பிரான்சு ஏற்றுக்கொள்ளாமல் அவ மதித்தது. இதனைக் கண்ட அமெரிக்கர் பலர் பிரான்சின் மீது போர் தொடுக்குமாறு ஆடம்ஸை வேண்டினர். ஆனால், ஆடம்ஸ் போரைத் தவிர்க்க விரும்பினார். தமது நாட்டிற்கும் பிரான்சுக்குமிடையே ஒருவித சுமுகமான உறவை ஏற்படுத்துவதையே தமது தலையாயக் கொள்கையாகக் கொண்டு சார்லஸ் பின்க்கினி (Charles Pinckney), ஜான் மார்ஷல் (John Marshall), எல்பிரிட்ஜ் ஜெர்ரி (Elbridge Gerry) ஆகிய மூவரடங்கிய குழுவொன்றை ஆடம்ஸ் சமரசப்பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காகப் பிரான்சிற்கு அனுப்பி வைத்தார். அங்கு அரசியல் சூழ்நிலையில் குழப்பம் நிலவியதால் நல் எண்ணத்தூதுவர்கள் மூவரும் அவமதிக்கப்பட்டனர். பிரான்சின் வெளிநாட்டுறவுச் செயலாளரான (Foreign Secretary) டாலிரான்ட் (Talleyrand) மூவர் குழுவைக் காணவும் மறுத்தார். அந்நாளில் பிரெஞ்சு அரசியலில் ஊழல்கள் மலிந்திருந்தன. சிலநாட்கள் கழித்து பெயர் சொல்லிக் கொள்ளாத மூன்று பிரெஞ்சு நாட்டு உயர் அலுவலர்கள்

அமெரிக்க குழுவினரைச் சந்தித்து, பிரெஞ்சு செயலாளருக்கு இரண்டரை லட்சம் டாலர் கையூட்டும், பிரெஞ்சு நாட்டுக்கு கடனுதவி அளிக்க உறுதியும் கொடுத்தால் டாலிரானைச் சந்திக்க முடியும் என்று கூறினர். இச்செய்தியைக் குழுவினர் குடியரசுத் தலைவருக்கு தெரிவித்தனர். தங்களைச் சந்தித்து பேசிய அரசு ஊழியர்களை X, Y, Z என்று அமெரிக்க நாட்டுக் குழுவினர் குறிப்பிட்டிருந்தனர். இச்செய்தியைத் தெரியவந்த அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்தனர். அமெரிக்க அரசு தனது தூதுவரடங்கிய குழுவை உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவிட்டது.

பிரான்சுடன் உடன்படிக்கை (1800)

பிரான்சு மீது போர் தொடுப்பதற்காகப் படைகள் திரட்டப்பட்டன. கப்பற்படை வலுப்படுத்தப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பிரான்சிற்குச் சொந்தமான லூசியானா (Louisiana) நிலப்பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு அனுப்பப்பட்ட படைக்கு ஹாமில்டன் தலைவராக நியமிக்கப்பட்டார். சில கடல் சண்டைகள் நடக்கலாயின. பெரும்போர் நடந்தே தீரும் என்று ஒரு சமயம் தோன்றியது. நற்பயனாக பிரெஞ்சு அரசு தங்களுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைச் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள ஆவல் தெரிவித்தது. ஆடம்ஸும் அதற்கிசைந்து ஓர் அமைச்சரைப் பாரிஸுக்கு அனுப்பினார். அச்சமயம் பிரெஞ்சு அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டு நெப்போலியன் ஆட்சிப் பொறுப்பிலிருந்தார். நெப்போலியன் அமெரிக்க அமைச்சரை அன்போடு வரவழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியாக, இரு நாடுகளுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன் விளைவாக 1778இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது. பிரான்சால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க கப்பல் களுக்கான இழப்பீட்டைக் கேட்பதில்லையென்று அமெரிக்கா ஒத்துக் கொண்டது. இவ்வமைதி ஒப்பந்தம், பின்னர் அமெரிக்கா பிரான்சிடமிருந்து லூசியானாவை விலைக்கு வாங்க வழி செய்தது. குடியரசுக் கட்சியினர் இவ்வொப்பந்தத்திற்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவர்கள் பிரான்சையும், பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடுகளையும் தீவிரமாக ஆதரித்தனர். குடியரசுக்கட்சியினருக்கு இழுக்கை உண்டு பண்ணவேண்டு மென்ற அடிப்படை நோக்கத்தோடு கூட்டாட்சிவாதிகள் கட்சியைச் சார்ந்த ஆடம்ஸ், பிரான்சு மீது போர் தொடுத்தார். ஆனால் பெரும்போர் தவிர்க்கப்பட்டது. பிரெஞ்சுக் கப்பல்கள் பல கைப்பற்றப்பட்டன. போருக்கான ஆயுதங்களைச் செய்தமையால் அரசுக்கு நிதி நிலைமையில் இக்கட்டான நிலையேற்பட்டது. கூட்டாட்சி வாதிகள் ஆட்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. அதே சமயம் உள்நாட்டு நிகழ்ச்சிகளில் ஆடம்ஸ் குறுகிய மனத்தோடு மக்களின் உணர்ச்சிகளை மதிக்காது நடந்து கொண்டமையால் மக்களின் வெறுப்பைப் பெற்றார்.

அயலவர் சட்டமும் (Alien Act), அரசுத் துரோகச் சட்டமும் (Sedition Act)

கி.பி. 1798-இல் அமெரிக்க காங்கிரஸ் அயலவர் சட்டத்தையும் அரசுத்துரோகச் சட்டத்தையும் இயற்றிற்று. இச்சட்டங்கள் குடியரசுக் கட்சியினருக்கு எதிராக இயற்றப்பட்டன எனலாம். கூட்டரசுவாதிகள் கட்சியினரான ஆடம்ஸ், குடியரசுக் கட்சியினரது உரிமைகளைப் பறிக்கவும் அவர்கள் கூட்டாட்சி அரசை மதிக்கச் செய்யவும் விரும்பினார். ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து குடிபுகுந்தவர்களில் பெரும்பாலோர்

தாராளக் கொள்கையினராக இருந்தனர். அவர்கள் குடியரசுக் கட்சியினரது எண்ணிக்கையை அதிகப்படுத்தினர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. அயலவர்க்குக் குடியுரிமை வழங்கும் சட்டப்படி (Naturalization Act) அயல் நாட்டவர் அமெரிக்க குடிமகனாவதற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்க வேண்டிய காலம் ஐந்தாண்டிலிருந்து பதினான்கு ஆண்டுக் காலமாக உயர்த்தப்பட்டது. அயலவர் சட்டப்படி (Alien Act) நாட்டின் அமைதிக்கு ஊறுவிளைவிக்க கூடிய அயலவர்களைச் சிறையிடவோ, நாட்டினின்று வெளியேற்றவோ குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் தரப்பட்டது. இச்சட்டம் மூலம் பிரான்சு நாட்டிலிருந்து வந்து குடியேறியிருந்த பலர் மீண்டும் பிரான்சிற்கே திரும்பினர். அரசுத்துரோகச் சட்டத்தின்படி (Sedition Act) குடியரசுத் தலைவருக்கெதிராகவோ, அரசுக்கெதிராகவோ சதி செய்பவருக்கு ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையும், ஐந்தாயிரம் டாலர் தண்டமும் விதிக்கப்படும். அமெரிக்க காங்கிரசையோ, குடியரசுத் தலைவரையோ இகழ்ந்து கட்டுரைகள் வெளியிடுபவர்க்கு இரண்டாண்டுச் சிறைவாசமும் இரண்டாயிரம் டாலர் தண்டமும் விதிக்கப்படும்.

வர்ஜீனியா, கென்டக்கி – தீர்மானங்கள்

அயலவர் சட்டமும், அரசுத் துரோகச் சட்டமும் தனிமனிதனது அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் இருந்தமையால் மக்கள் அவற்றைப் பெரிதும் வெறுத்தனர். நீதித்துறையிலும் கூட்டாட்சிவாதிகளே பெருமளவில் இருந்தமையால் இச்சட்டங்கள் வலித்து செயல்படுத்தப்பட்டன. இவற்றை ஜெபர்சன் மற்றும் மாடிசன் போன்ற தலைவர்கள் கண்டித்தனர். அவர்கள், கூட்டாட்சி வாதிகள் கூட்டாட்சி அரசின் அதிகாரங்களை அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதாகக் கருதினர். பல்வேறு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கூட்டாட்சி அமைக்கப்பட்டதென்றும், அவ்வொப்பந்தத்தையும், அரசியலமைப்பையும் மீறும் வண்ணம் கூட்டாட்சி, சட்டங்களை இயற்றினால் அவற்றைத் தள்ளுபடி செய்யவும், அவற்றிற்குக் கட்டுப்பட மறுப்பதற்கும் மாநிலங்களுக்கு உரிமையுண்டு எனக்கூறினர். இதுவே, 'செல்லுபடியற்றதாகும் கோட்பாடு' (Doctrine of Nullification) எனப்படும். இக்கோட்பாட்டினை உள்ளடக்கிய தீர்மானங்கள் வர்ஜீனியா, கென்டக்கி ஆகிய மாநிலங்களின் சட்ட மன்றங்களில் இயற்றப்பட்டன.

குடியரசுத் தலைவர் தேர்தல் (1800)

கூட்டாட்சிவாதிகள் ஆடம்ஸையும், குடியரசுக் கட்சியினர் ஜெபர்சனையும் தத்தம் வேட்பாளராக 1800இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் நிறுத்தினர். கூட்டாட்சிவாதிகளிடையே பிளவுகள் பல உண்டாயிருந்தன. ஹாமில்டனுக்கும், ஆடம்ஸுக்கும் இடையே மனக்கசப்பு அதிகரித்தது. பிரான்சுக்கு அமெரிக்க தூதுவராகச் செல்ல மறுத்த இரு அமைச்சர்களை ஆடம்ஸ் பதவியிலிருந்து விலக்கினார். பிரான்சோடு தொடுத்த போர்களினாலும், அதனால் ஏற்பட்ட செலவாலும் கூட்டாட்சி வாதிகள் மக்களிடத்துச் செல்வாக்கிழந்தனர். அயலவர் சட்டமும், அரசுத்துரோகச் சட்டமும், தங்களது அடிப்படை உரிமையை மீறும் வகையில் இருந்தமையை மக்கள் வெறுத்தனர். இக்காரணங்களால் ஆடம்ஸ் 65 வாக்குகள் மட்டும் பெற்று 73 வாக்குகள் பெற்ற ஜெபர்சனிடம் தோற்றார்.

கூட்டாட்சிவாதிகளின் நற்பணி

அமெரிக்க குடியரசு ஆரம்பித்து, முதல் பன்னிரண்டு ஆண்டுகள் கூட்டாட்சி அரசு, கூட்டாட்சிவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அச்சமயத்தில் பல மாநிலங்கள் கூட்டாட்சி அரசின் வலிமையைக் குறைக்கும் வகையில் பல உரிமைகளை மாநிலங்களுக்குத் தருமாறு கேட்டன. ஐரோப்பாவிலும் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு அச்சமயம் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அப்படிப்பட்ட சிக்கலான நேரத்தில் கூட்டாட்சி வாதிகள் பிரிவினை சக்திகளைக் களைந்து குடியரசை வலுப் படுத்தினர். நாட்டிற்குச் சிறந்ததொரு கூட்டாட்சி அரசியலமைப்பை ஆக்கித் தந்தனர். கட்டுத் தளர்வான அரசியலமைப்பும் கூட்டாட்சி அரசை வலுவாக்க வழி செய்தது. வலிமைமிக்க கூட்டாட்சி அரசு அமைக்கப்பட்டது. கூட்டாட்சியின் நிதி நிலைமையும் சீர்திருத்தப்பட்டு ஒரு வங்கியும் நிறுவப்பட்டது. மேற்குப் பகுதியில் பூர்வீக இந்திய குடிகள் அடக்கப்பட்டுக் குடியேற்றத்தில் வழிவகை செய்யப்பட்டது. கூட்டாட்சி யாளர்கள் பலவகைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். தொழில் முன்னேற்றத் திற்கான வழிவகைகளையும் வகுத்தனர். ஜார்ஜ் வாஷிங்டனால் வகுக்கப் பெற்ற "தனித்திருத்தல் கொள்கை"யே பின்னர் மன்ரோ கோட்பாடு ஆயிற்று. அமெரிக்க குடியரசு குலையாமல் நிலைத்திருக்குமா என்று 1789இல் தோன்றிய ஐயம் 1800இல் யாருக்கும் தோன்றவில்லையெனலாம்.

1800இல் குடியரசுக் கட்சியினரது வெற்றியின் சிறப்பு

அமெரிக்க குடியரசு மக்களுடைய அரசாக இருக்க வேண்டுமெனக் கூட்டாட்சி வாதிகள் நினைக்க மறந்தனர். தனிப்பட்ட உயர்குடிப் பிறப்பாளருக்கு மட்டுமே ஊதியமும் உரிமைகளும் வழங்கும் வகையில் தங்களது கொள்கைகளை வகுத்தனர். இவற்றைக் கண்ட மக்கள் ஆட்சியில் ஒரு மாற்றத்தை விரும்பினர். 1800ஆம் ஆண்டில் அமெரிக்க நாடும் மாறுதலுக்கு ஆயத்தமாக இருந்தது. அந்த ஆண்டு மாபெரும் அரசியல் கிளர்ச்சியுடைய ஆண்டாக இருந்தது. குடியரசுக் கட்சியினர் தங்களது கட்சியைச் சிறப்புற அமைத்திருந்தனர். கூட்டாட்சி அரசு குறிப்பிட்ட சில கூட்டத்தாரின் நன்மைக்காக இருக்கக்கூடாது என்றும், பொதுமக்களின் நன்மைக்காகவே பாடுபட வேண்டுமென்றும் குடியரசுக் கட்சியினர் மக்களுக்கு எடுத்துக் கூறி மக்களைப் பெரிதும் கவர்ந்தனர். குடியரசுக் கட்சியின் தலைவரான ஜெபர்சனும், சிறுகுடியானவர்கள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள், இதர தொழிலாளர்கள் முதலியோரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். எனவே, ஜெபர்சன் உறுதியான நம்பிக்கையோடு 1800இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டார்.

குடியரசுக் கட்சியினர் ஜெபர்சனைக் குடியரசுத் தலைவர் பதவிக்கும், ஆரன்பர் (Aaron Burr) என்பவரைத் துணைத்தலைவர் பதவிக்கும் வேட்பாளராக நியமித்தனர். கூட்டாட்சியாளர்கள், ஜான் ஆடம்ஸைத் தலைவர் பதவிக்கும், பின்க்கினி (Pinckney) என்பவரைத் துணைத் தலைவர் பதவிக்கும் தேர்ந்தெடுத்தனர். அப்போதிருந்த தேர்தல் விதிப்படி குடியரசுத் தலைவருக்கும், துணைத்தலைவருக்கும் ஒரே வாக்கெடுப்புத்தான் இருந்தது. அதிக வாக்குப் பெற்றவர் குடியரசுத் தலைவராகவும் அடுத்து அதிக வாக்குப்பெற்றவர் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். 1800இல் நடைபெற்ற

தேர்தலில் ஜெபர்சனுக்கு 73 வாக்குகளும், ஆரன்பர்க்கு 73 வாக்குகளும், ஆடம்ஸிற்கு 63 வாக்குகளும் கிடைத்தன. இப்படித் தேர்தலில் இரு வேட்பாளருக்கிடையே சமநிலை ஏற்பட்டால், சட்டமன்றத்தின் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபைக்கு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தரப்பட்டிருந்தது. பிரதிநிதிகள் சபையில் ஹாமில்டன் தம் செல்வாக்கை ஜெபர்சனுக்காகப் பயன்படுத்தி அவருக்கு வெற்றியைத் தேடித்தந்தார். ஆரன்பர் குடியரசு துணைத்தலைவரானார். 1804ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பன்னிரண்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி குடியரசுத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் தனித்தனியே வாக்கெடுப்பு நடத்த வகை செய்யப்பட்டது.

குடியரசுக் கட்சியினரது வெற்றி ஒரு புரட்சிகரமான செயல் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஜெபர்சன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவராயினும் அவர் செயல் முறையில் கூட்டாட்சி வாசிகளின் கொள்கைகளையே பின்பற்றினார் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இரண்டு கூற்றுக்களையும் நாம் சரியானவை என ஏற்றுக் கொள்ள முடியாது. குடியரசுத்தலைவர் பதவியும், கூட்டாட்சி அரசும் ஒரு கட்சியினரிடமிருந்து மற்றொரு கட்சியினர் கைக்குமாறியமை ஓரளவு புரட்சிகரமான செயலேயாகும். பன்னிரண்டு ஆண்டுகள் கூட்டாட்சி வாதிகள் பதவியிலிருந்த பிறகு, புதியதொருகட்சி முற்றிலும் மாறான கொள்கைகளோடு பதவிக்கு வந்தது. பழைமை வாதிகளான கூட்டாட்சி வாதிகள் நீக்கப்பட்டுத் தாராளக் கொள்கையை பின்பற்றும் குடியரசுக் கட்சியினர் அரசைக் கைப்பற்றினர். கிழக்குப் பகுதியினராலும், கடலோரப் பகுதியினராலும் கட்டுப்படுத்தப்பட்ட கூட்டாட்சி அரசு, தெற்குப் பகுதியினராலும் மேற்கு (உட்) பகுதியினராலும் கைப்பற்றப்பட்டது. அதிகாரம் ஒரு உயர்குடி வகுப்பாரின் கையினின்று மற்றோர் உயர்குடி வகுப்பாரின் கைக்கு மாறிற்றே ஒழிய, அரசு பொது மக்களால் கட்டுப்படுத்தப்படவில்லை. வணிகர்கள் முன்பு ஆட்சிப் பொறுப்பிலிருந்த வர்களைக் கட்டுப்படுத்தினர். இப்போது நிலக்கிழார்களின் கை, ஆட்சிப்பொறுப்பில் ஓங்கிற்று எனலாம்.

பயிற்சி வினா

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான் ஆடம்ஸின் ஆட்சியின்போது நடந்த முக்கிய சம்பவங்களைக் கூறுக.

பாடம் – 7 தாமஸ் ஜெபர்சனின் ஆட்சி

1800ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சி வெற்றி பெற்றது. அது கூட்டாட்சி கட்சியினருக்கு முற்றிலும் மாறான கொள்கைகளோடு பதவிக்கு வந்தது. குறைந்த அளவில் ஆட்சிப் பொறுப்பையுடைய அரசே சிறந்த அரசு (The government was the best that governed the least) என்று குடியரசுக்கட்சியினர் கருதினர். மக்கள், அரசால் அதிகமாகக் கட்டுப்படுத்தப்படாமல் உரிமைகளோடு வாழ விடப்படவேண்டும் என்பதே குடியரசுக் கட்சித் தலைவர் ஜெபர்சனின் தலையாயக் கொள்கையாகும். 1800ஆம் ஆண்டிற்குப் பின் கூட்டாட்சி வாதிகளின் செல்வாக்குப் படிப்படியாகக் குன்றத் தொடங்கியது. 1800ஆம் ஆண்டிலிருந்து 1824ஆம் ஆண்டுவரை குடியரசுக் கட்சியின் ஆட்சி ஜெபர்சன், மாடிசன் (Madison) மற்றும் மன்றோ (Monroe) போன்ற பெருந் தலைவர்களைக் கொண்டு மிகச் செல்வாக்குடன் நடைபெற்றது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவராகப் பதவியேற்கும் போது ஜெபர்சனுக்கு வயது ஐம்பத்து ஏழாகும். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்பாகவே ஜெபர்சன் சுமார் இருபது ஆண்டு காலமாக ஓர் அமெரிக்க ஐக்கிய நாட்டு தலைசிறந்த பெருங்குடிமகனாகத் திகழ்ந்து வந்தார். சிற்பக் கலையில் விருப்பம் உடையவர்; விலங்கியல் அவருக்கு விருப்பமான பாடங்களிலொன்று; பல மொழிகளில் பேசும் திறமை பெற்றவர்; பரிசுத்த வேதாகமத்தின் (Holy Bible) புதிய ஏற்பாட்டை (The New Testament) ஆங்கிலத்தில் தானே மொழி பெயர்த்தார். ஆடம்பர உடைகளை தரிப்பதில் நாட்டமில்லாதவர்; அரசு தனிப்பட்டவர்களது உரிமைகளுக்கும், பெரும்பான்மையோரது விருப்பங்களுக்கும் மதிப்புத்தரவேண்டுமென்றும், இராணுவம் அரசுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டுமென்றும் விரும்பினார். மாநிலங்களின் உரிமைகளுக்காக எதையும் அர்பணிக்கத் தயாராயிருந்தார். கூட்டாட்சி அரசின் (Federal government) அலுவல்கள் கட்டுப்படுத்தப்பட்டு மாநில அரசுகளுக்கு பேரளவில் உரிமைகள் தரப்படவேண்டுமென்று அவர் கூறினார். சட்டத்தின் முன் எளியோர் செல்வந்தர் என்று வேறுபாடின்றி குடிமக்கள் அனைவரும் சமமாகக் கருதப்படவேண்டும் என்பதும் அவரது கொள்கையாகும்.

ஜெபர்சன் பதவியேற்றல்

வாஷிங்டன் நகரில் புதிதாக எழுப்பப்பட்ட தலைநகரில் தாமஸ் ஜெபர்சன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக 1801இல் பதவியேற்றார். பதவியேற்பு விழா மிகவும் எளிய முறையில் நடைபெற்றது. பகட்டு, ஆரவாரம், இன்ப நுகர்வு ஆகியவற்றில் ஜெபர்சனுக்கு ஈடுபாடு கிடையாது. பதவியேற்றவுடன் அவர் நிகழ்த்திய சொற்பொழிவில் அவர் மக்களிடையே சகோதரத்துவ மற்றும் சமத்துவ உணர்ச்சிகள் காணப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். சமூக வேறுபாடுகள் எதுவேனும் அவரிடம் காணப்பட வில்லை. அமெரிக்கச் சுதந்திர அறிவிப்புப் பத்திரத்தைத் (Declaration of American Independence) தயாரித்தவர் ஜெபர்சன் ஆவார்.

1801இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவராகப் பதவியேற்றதும் ஜெபர்சன் தனக்கு உதவியாக ஜேம்ஸ் மாடிசன் (James Madison) என்பவரை வெளிநாட்டுறவுத் துறைச் செயலாளராகவும், ஆல்பர்ட் காலட்டின் (Albert Gallatin) என்பாரை நிதித்துறைச் செயலாளராகவும் நியமித்தார். ஜெபர்சன் இருமுறைகள் குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார். 1805ஆம் ஆண்டு வரை நீடித்த அவரது முதலாம் பதவிக்காலம் பொதுவாக செழிப்பான ஒரு காலக்கட்டமாக அமைந்தது. சில முக்கிய உள்நாட்டு அரசியல் திருத்தங்கள் அமல்படுத்தப்பட்டன. மேற்குப் பிரதேசக் குடியானவர்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெறும் பொருட்டு அவர்கள் மீது முந்திய நிதித்துறை அதிகாரியான ஹாமில்டன் விதித்திருந்த சாராயத் தீர்வையை (Whisky tax) ரத்து செய்தார். இதனால் வருமானத்தில் ஏற்படக் கூடிய குறையை ஈடு செய்ய இறக்குமதி பொருட்கள் மீதான சுங்கவரி உயர்த்தப்பட்டது. குடியரசுக் கட்சியினரை ஒடுக்கும் நோக்கத்தோடு ஜான் ஆடம்ஸ் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட அரசுத் துரோகச் சட்டம் (Sedition Act) ரத்து செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி தண்டம் செலுத்தியவர்கள் அத்தொகையைத் திரும்பப் பெற்றனர். காலாட்படை, கப்பற்படை மற்றும் கூட்டாட்சி அரசு அலுவலர்கள் மீதான செலவு குறைக்கப்பட்டது. 1801ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நீதித்துறைச் சட்டமும் (Judiciary Act) ரத்து செய்யப்பட்டது. இச்சட்டத்தின் அடிப்படையில் ஜான் ஆடம்ஸ் கூட்டாட்சி வாதிகளையே நீதிபதிகளாக நியமித்தார். அந்நீதிபதிகள் 'நடுஇரவு' நீதிபதிகளெனவும் அழைக்கப்பட்டனர். ஏனென்றால் ஜான் ஆடம்ஸ் குடியரசுத் தலைவர் பதவியை விட்டு விலகிய கடைசி நாள் இரவு 9 மணி அளவு மட்டும் தனது அலுவலகத்திலிருந்து கொண்டு அந்நீதிபதிகளை நியமித்தாராம். ஜெபர்சன் இச்சட்டத்தை ரத்து செய்த காரணத்தால் அவ்வாறு பதவியிலமர்த்தப்பட்ட நீதிபதிகள் பதவியிழந்தனர்.

மார்பரி வழக்கு

ஜான் ஆடம்ஸால் நியமிக்கப்பட்ட 'நடுஇரவு' நீதிபதிகளில் மார்பரியும் ஒருவராவார். ஆனால் இவரது நியமனத்தைக் கூட்டாட்சி அரசின் வெளியுறவுச் செயலாளராகிய மாடிசன் செயற்படுத்தவில்லை. மார்பரி வெளியுறவு செயலாளராகிய மாடிசன் மீது வழக்குத் தொடரலானார். பதவியிழந்த நீதிபதிகளை மீண்டும் பதவியிலமர்த்தும் பொருட்டு நீதிமன்ற ஆணை ஒன்றைப் (Writ of Mandamus) பிறப்பிக்கும்படி உயர்நீதி மன்றத்தை வேண்டினார். இவ்வழக்கினை விசாரித்த தலைமை நீதிபதி ஜான்மார்ஷல் (John Marshall) புகழ்மிக்கதொரு தீர்ப்பை வழங்கினார். மார்பரிக்கு பதவி நியமனத்தைச் செயற்படுத்தாதது தவறு என்று கூறினார். 1789ஆம் ஆண்டு நீதித்துறைச் சட்டத்தின் படி ஆணை பிறப்பிக்கும் உரிமை உயர் நீதிமன்றத்தின் அடிப்படை நீதியின் செயலாட்சியில் (Original Jurisdiction) ஒரு உரிமை எனத் திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்கூறிய உரிமையானது அமெரிக்க அரசியலமைப்பில் (American Constitution) உயர் நீதிமன்றத்திற்குத் தரப்படவில்லை என்று மார்ஷல் கூறிவிட்டார். ஆகையால் அந்த உரிமையை எடுத்துக் கூறிய 1789-ஆம் ஆண்டுச் சட்டம் செல்லுபடியாகாது என்று மார்ஷல் தீர்ப்புக் கூறினார். இதனால் அமெரிக்கக் காங்கிரசால்

இயற்றப்பட்ட சட்டமொன்று செல்லுபடியாகாது என்று தீர்ப்புக் கூறும் உரிமை உயர்நீதி மன்றத்திற்கு உண்டு என்ற நியதியையும் மார்ஷல் எடுத்துரைத்தார். இவ்வாறு கூட்டாட்சிக் காங்கிரஸ், (Federal Congress) மற்றும் மாநில சட்டமன்றங்களால் இயற்றப் படும் சட்டங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அவை அரசியலமைப்போடு ஒத்திருக் கின்றனவா இல்லையா என்று கூறும் உரிமையே நீதித்துறை மறு ஆய்வு (Judicial review) என வழங்கப்படுகிறது. கூட்டாட்சி வாதியான ஜான் மார்ஷல் வெற்றிகரமாக 1789-ஆம் ஆண்டுச் சட்டத்தை தள்ளுபடி செய்த பின்பு, நீதித்துறை தள்ளுபடி (Judicial Veto) என்னும் உரிமையைப் பயன்படுத்தி மாநில நீதிமன்றங்கள் இயற்றிய பல சட்டங்களை செல்லுபடி ஆகாதவாறு செய்தார்.

லூசியானாவை விலைக்கு வாங்குதல்

லூசியானாப் பகுதியை விலைக்கு வாங்கியமை ஜெபர்சன் ஆட்சியில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இப்பகுதி மிசிசிபி நதிக்கு மேற்கேயுள்ளது. அப்பகுதி முதன்முதலாக பிரெஞ்சுக்காரரால் குடியேறப்பெற்று 14ஆம் லூயி மன்னரை கௌரவிக்கும் பொருட்டு லூசியானா என்று அழைக்கப்பட்டது. அப்பகுதியில் குடியேறிய பிரெஞ்சு மக்கள் அமெரிக்க மக்களை அப்பலேச்சியன் (Apallachian) மலைத் தொடருக்கு மேற்கே குடியேற விடக்கூடாதென்று எண்ணினர்.

1763-ஆம் ஆண்டுப் பாரிஸ் உடன்படிக்கையின்படி லூசியானா பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்டு ஸ்பெயினுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஸ்பெயின் தனது வடஅமெரிக்கக் குடியேற்ற நாடாகிய புளாரிடாவை (Florida) அமெரிக்காவிற்குக் கொடுத்தது. ஆனால் அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்திற்குப் பின் கையெழுத்தாகிய 1783ஆம் ஆண்டுப் பாரிஸ் உடன்படிக்கையின்படி ஸ்பெயின் புளாரிடாவை மீண்டும் பெற்றது. 1800-ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கும், பிரான்சுக்குமிடையே ஏற்பட்ட ஓர் இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரான்ஸ் லூசியானாப் பகுதியை மீண்டும் பெற்றது. இது ஜெபர்சனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தது. லூசியானாப் பகுதியின் தென் முனையிலுள்ள நியூஆர்லியன்ஸ் (New Orleans) ஒரு நல்ல துறைமுகப்பட்டினமாக விளங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென்பகுதியிலுள்ள அமெரிக்க வர்த்தகர்கள் இத்துறைமுகப்பட்டினத்தின் வாயிலாகத் தங்களது ஏற்றுமதி பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் சலுகைகளைப் பெற்றிருந்தனர். 1800-ஆம் ஆண்டு நடந்தேறிய இரகசிய ஒப்பந்தத்திற்குப் பின் அமெரிக்க வர்த்தகர்கள் இச்சலுகையை இழக்க நேரிட்டது.

ஜெபர்சன் ஒரு சமாதானப் பிரியர். இருப்பினும், பிரான்ஸ் தனது ஆதிக்கத்தை லூசியானாவில் ஏற்படுத்துவது அமெரிக்க மக்களுக்கு பல வழிகளில் மோசடி விளைவிக்கும் என்று எண்ணி, அங்கு ஏற்படுத்தப்பட்ட பிரெஞ்சு ஆதிக்கத்தை எவ்வாறேனும் தொலைத்துக் கட்டத் திட்டங்களைத் தீட்டினார். வலிமைமிக்கதொரு ஐரோப்பிய அரசு மேற்கு எல்லைப் பகுதியில் ஆட்சியை நிறுவினால் அது அமெரிக்கா

வின் முன்னேற்றத்திற்குத் தடங்கலாக அமையுமென்று அறிந்து நியூஆர்லியன்ஸ் மற்றும் அதற்கு அடுத்துள்ளப் பகுதிகளையும் பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்க எண்ணினார். இதைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்த பாரிஸ் நகரில் அமெரிக்கத் தூதுவராக பணியாற்றிவந்த ராபர்ட் லிவிங்ஸ்டன் என்பவருக்குத் துணையாக ஜேம்ஸ் மன்ரோவை பாரிஸுக்கு ஜெபர்சன் அனுப்பினார். நியூஆர்லியன்சையும் அதற்குக் கிழக்கேயுள்ளப் பகுதிகளையும் பத்து மில்லியன் டாலருக்கு விலை பேசும்படி ஜெபர்சன் சொல்லியனுப்பினார்.

பேச்சு வார்த்தையின் மூலம் தனது காரியத்தைச் சாதிக்க முடியவில்லையானால் அமெரிக்காவின் எதிரி நாடான இங்கிலாந்துடன் கூட ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரான்சை எதிர்ப்பதற்கென ஒரு திட்டத்தையும் ஜெபர்சன் தன் மனதில் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அமெரிக்க தூதுவரான ஜேம்ஸ் மன்ரோ பாரிஸ் நகரம் சேரும் முன் லூசியானாப் பகுதி முழுவதையும் அமெரிக்காவிற்கு விற்று விடுவதற்கு நெப்போலியன், ராபர்ட் லிவிங்ஸ்டனிடம் இசைவு தெரிவித்துவிட்டார். நெப்போலியனது இம்முடிவுக்குப் பல காரணங்கள் உள. நெப்போலியன் வட அமெரிக்காவில் ஒரு பேரரசை நிறுவ உறுதி கொண்டிருந்தார். அதில் முதற்கட்டமாக பிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளில் தமது ஆதிக்கத்தினை நிலைநாட்ட முனைந்தார். ஹைத்தி (Haiti) தீவின் கிழக்குப் பகுதியில் நீக்ரோக்களோடு பெரும் போர் புரிய நேரிட்டது. ஆனால் இப்போரினால் நெப்போலியன் நீக்ரோக்களை அடக்குவதற்கான முயற்சிகள் பயனளிக்கவில்லை. சுமார் ஐம்பதாயிரம் பிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டனர். ஹைத்திப் போரினால் நெப்போலியன் சோர்வுற்றிருந்தார். அதே சமயம் ஐரோப்பாவில் பிரிட்டனோடு மீண்டும் போர் தொடங்கும் நிலை உருவாகியிருந்தது. இச்சிக்கலான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டு அங்கலாய்த்த நெப்போலியன் மேற்கிந்தியத் தீவுகளுக்கு மேலும் தமது படைகளை அனுப்பவில்லை.

பிரிட்டனோடு போர் மூளுமானால் லூசியானாவை அமெரிக்கர்களுக்கு எதிராகக் காப்பது பெருஞ்சுமையாகுமெனவும் நெப்போலியன் கருதினார். மேலும், ஐரோப்பாவில் பல போர்களை நடத்த நெப்போலியனுக்குப் பணம் தேவைப்பட்டது. நெப்போலியன் லூசியானாவை அமெரிக்காவிற்கு விற்றுவிட இசைவு தெரிவித்தபின், பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சரான டாலிரண்டு (Talleyrand) அமெரிக்க தூதுவரான லிவிங்ஸ்டனிடம் லூசியானாப் பகுதிக்கு எவ்வளவு விலை கொடுக்க முடியுமென வினவ, அவர் பதினைந்து மில்லியன் டாலர் தர ஒப்புக்கொள்ள, லூசியானா அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு விற்கப்பட்டது. இப்பகுதியை பெற்றதன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிலப்பரப்பு இருமடங்காகப் பெருகிற்று. இப்பகுதியிலிருந்து மொத்தம் பதின்மூன்று மாநிலங்கள் உருவாக்கப்பெற்றன. நியூஆர்லியன்ஸ் துறைமுகம் அமெரிக்க வர்த்தகத்தைப் பன்மடங்கு பெருகச் செய்ய துணை புரிந்தது. லூசியானாப் பகுதி அமெரிக்க நாட்டின் மேற்கு நோக்கிய விரிவுக்கு (Westward expansion) வித்திட்டது. பல பெரிய நதிகளும் கால்வாய்களும் கொண்ட வட அமெரிக்கக் கண்டத்தின் செழிப்பான நடுப்பகுதி மக்கள் குடியேற்றத்திற்குப் பெரிதும் பயன்படலாயிற்று. ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்

லூசியானா நன்கு பயிரிடப்பட்டு உலகத்தின் தானியக் களஞ்சியங்களுள் ஒன்றாக விளங்கிற்று. லூசியானாவின் எல்லைகள் திட்டவட்டமாக, வரையறுக்கப்படாம லிருந்தமையால் அதன் பேரில் அமெரிக்கா பின்னர் டெக்ஸாஸ் (Texas) புளோரிடாவின் ஒரு பகுதி ஆகியவற்றைப் பெறமுனைந்தது. லூசியானாப் பகுதியில் மிகுதியாக வசித்து வந்த இந்தியப் பழங்குடி மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அம்மக்கள் அமெரிக்கர்களுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளினின்று பெற்று வந்த உதவி இனியும் தொடர்ந்து கிடைக்காமல் போயிற்று.

நெப்போலியனிடமிருந்து லூசியானாப் பகுதியை விலைக்கு வாங்கிய செயல் நீதிக்கு புறம்பான செயலென சிலர் கருதினர். ஏனெனில் ஸ்பெயினிடமிருந்து நெப்போலியனால் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பே லூசியானா நிலப்பகுதியாகும். மற்றும், அமெரிக்க அரசியலமைப்பில் அயல்நாட்டு ஆட்சியிலிருக்கும் நிலத்தை குடியரசுத் தலைவர் வாங்க உரிமை தரப்படவில்லை. அமெரிக்க காங்கிரசின் ஒப்புதலைப் பெற்றப் பின்னரே நிலம் வாங்கப்படவேண்டும். ஆனால், ஜெபர்சன் துணிவுடன் காங்கிரசின் ஒப்புதலைப் பெறாமலேயே லூசியானாப் பகுதியை விலைக்கு வாங்கி விட்டார். ஆனால் உள்ளடங்கிய அதிகாரக் கோட்பாட்டின்படி (Doctrine of Implied Powers) குடியரசுத் தலைவர் நாட்டின் நலனுக்காக மற்ற நாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தார். அதன்படி புதிய நிலப்பகுதியை வாங்கி ஒப்பந்தம் செய்து கொள்ளவும் குடியரசுத் தலைவருக்கு உரிமையுண்டு என்றும் அவர் வாதாடினார். லூசியானா நிலப்பகுதியில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, அந்நிலப்பகுதியின் தன்மைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு ஜெபர்சன் 1804இல் லூயி, வில்லியம் கிளார்க் என்ற இரு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு பல நிலப் படங்களோடு குறிப்புகளை வெளியிட்டனர். இவ்விரு இளைஞர்களும் மிசிசிப்பி நதியைக் கடந்து மிசௌரி நதியை அடைந்த பின்னர் கொலம்பியா நதியின் மூலம் பசிபிக் கடற்கரையை அடைந்தனர். இது ஒரு சிறப்பு மிக்க பயணம் எனக் கருதப்படுகிறது. இப்பயணத்தின் பயனாக அமெரிக்க குடியேற்றங்கள் பல மேற்கு சமவெளிப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டன. அப்பகுதிகளில் வசித்துவந்த ஆதிக்குடி மக்கள் அரிசோனா (Arizona) பாலைவனப் பகுதிக்கு விரட்டப்பட்டனர்.

வட ஆப்பிரிக்க நாடுகளை அடக்குதல்

ஜெபர்சன் சமாதான முறைகளையே கைக்கொள்ள விரும்பினார். ஆனால் வட ஆப்பிரிக்க நாடுகளான அல்ஜீரியா, டியூனிஸ், டிரிப்போலி போன்ற நாடுகளோடு போர் தொடுப்பதைத் தவிர்க்க அவரால் முடியவில்லை. மத்தியத் தரைக்கடல் வழியாக சென்ற அமெரிக்க வர்த்தகக் கப்பல்களை மறித்து இந்நாடுகள் கப்பம் திரட்டி வந்தன. ஜெபர்சனின் ஆட்சியின் போது டிரிப்போலி நாட்டைச் சேர்ந்த கடற்கொள்ளைக் காரர்கள் அமெரிக்க கப்பல் ஒன்றைத் தாக்கி அமெரிக்கக் கொடியினையும் இழிவு படுத்தினர். இதுமட்டுமின்றி பலமுறைகள் பல அமெரிக்க மாலுமிகள் கைது செய்யப் பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற ஜெபர்சன் உடனடியாக

அமெரிக்கப் படைகளை அனுப்பினார். டிரிப்போலி இரண்டு ஆண்டு போர்களுக்குப் பின்பு 1805இல் அடக்கி ஒடுக்கப்பட்டது. அதன் பின், அமெரிக்கக் கப்பல்களை வழிமறிப்பதில்லை என்று அது ஒப்புக்கொண்டது. சிறை செய்யப்பட்ட அமெரிக்க மாலுமிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1812ஆம் ஆண்டளவில் அமெரிக்க வணிகக் கப்பல்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த இதர ஆப்பிரிக்க நாடுகளும் ஒடுக்கப்பட்டன. கப்பம் திரட்டும் முறைக்கும், மீட்புப்பணம் பெறும் முறைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதன் விளைவாக எல்லா நாட்டுக் கப்பல்களும் மத்தியதரைக் கடல்வழியாக அச்சமின்றி செல்லலாயின.

ஆரன்பரின் சூழ்ச்சி (Aaron Burr Conspiracy)

1804ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜெபர்சன் மறுபடியும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜார்ஜ் கிளின்டன் (George Clinton) என்பவர் துணைத்தலைவரானார். குடியரசுக் கட்சியினர் பெற்றிருந்த ஆதரவையும் செல்வாக்கையும் கண்ட கூட்டாட்சிவாதிகள் பொறாமையுற்றிருந்தனர். நியூ இங்கிலாந்துப் பகுதியில் கூட்டாட்சிவாதிகள் மிக்க செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். குடியரசு கட்சியைச் சார்ந்திருந்த ஆரன்பர் தனக்குக் குடியரசுத் துணைத்தலைவர் பதவியை இரண்டாம் முறையாக அளிக்காததால் அக்கட்சியின் மீது மிக்கச் சினங் கொண்டிருந்தார். இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டாட்சிவாதிகள் தம்பக்கம் ஆரன்பரைக் கவர்ந்து, அவரை நியூயார்க்கின் ஆளுநராகத் தேர்தலில் போட்டியிடச்செய்து, நியூயார்க் உட்பட நியூஇங்கிலாந்து பகுதி அனைத்தும் கூட்டாட்சியினின்று பிரிந்து விட வேண்டுமென சூழ்ச்சி செய்தனர். இத்திட்டத்தைக் கேள்வியுற்ற ஹாமில்டன் திடுக்குற்றார். தமது செல்வாக்கைப் பயன்படுத்தி ஆரன்பர் நியூயார்க் ஆளுநர் தேர்தலில் தோல்வியடையச் செய்யவே, ஆரன்பர் ஹாமில்டனை பழிவாங்கும் எண்ணத்தோடு அவரைச் சண்டைக்கிழுத்தார். இருவருக்குமிடையே ஒரு பெருஞ் சண்டை நடந்தது. அச்சண்டையில் ஹாமில்டன் பலத்த காயமுற்று உயிர் துறந்தார். ஹாமில்டன் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்ட மக்கள் வெகுண்டெழுந்தனர். தமது உயிருக்கஞ்சி ஆரன்பர் அமெரிக்காவின் மேற்குப் பகுதியை நோக்கி தப்பியோடினார். இறுதியாக அவர் கைப்பற்றப்பட்டு அரசியல் துரோக குற்றச்சாட்டுக்கு ஆளானார். ஆனால் கூட்டாட்சி வாதிகளின் பக்கம் சார்ந்திருந்த உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியான ஜான்மார்ஷலின் உதவியால் ஆரன்பர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

ஜெபர்சனின் வெளிநாட்டுக் கொள்கை

ஜெபர்சனின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுறவில் மாபெரும் சிக்கல்கள் தோன்றின. ஜெபர்சனது காலத்தில் பிரஞ்சுப் புரட்சி போர்கள் நடந்து கொண்டிருந்தன.

நெப்போலியனுக்கும், இங்கிலாந்துக்கும் தீவிரமாகப் போர்கள் நடந்த வண்ணமாகவே இருந்தன. நிலப் பகுதிகளில் நடந்த போர்களில் நெப்போலியனது படைகளுக்கே வெற்றி கிடைத்தது. 1807-ஆம் ஆண்டளவில் ஐரோப்பியக் கண்டத்தின் பெரும்பகுதி பிரான்சின் ஆதிக்கத்தினுள் கொண்டுவரப்பட்டது. ஆனால் கடற்போர் களைப் பொருத்தளவில் ஆங்கிலப் படைகளே முன் தங்கியிருந்தன. புகழ்மிக்க ஆங்கிலேய கடற்படைகள் நெப்போலியன் இங்கிலாந்தைக் கைப்பற்றும் பொருட்டு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் சிதறடிக்கச் செய்தன. இவ்விரு நாடுகளும் ஒன்றை ஒன்று நேர்முகமாகத் தாக்கிக் கைப்பற்ற முடியாதிருந்த காரணத்தால் அந்நாடுகள் பொருளாதாரத் துறையில் ஒன்றையொன்று போட்டியிடலாயின. 1806-ஆம் ஆண்டில் பிரிட்டனைப் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தோடு நெப்போலியன் சில ஆணைகளைப் பிறப்பித்தார். அதன்படி இங்கிலாந்தின் மீது பொருளாதார முற்றுகை இடப்பட்டது. பிரிட்டிஷ் தீவுகள் மற்ற நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்யவோ அல்லது சரக்குகளை இறக்குமதி செய்யவோ அனுமதிக்கப்படவில்லை. இவ்வாணைகளை மீறி சரக்குகளை ஏற்றிச் சென்ற பிரிட்டிஷ் மற்றும் ஏனைய நாடுகளின் கப்பல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் இவ்வாணைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல், இங்கிலாந்து பிரான்சின் மீது எதிர் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. ஆங்கிலக் கடற்படைகள் பிரெஞ்சு மற்றும் ஐரோப்பிய கடற்கரை எல்லைப் பகுதிகளை முற்றுகையிடலாயின.

அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பொறுத்த அளவில் ஜார்ஜ் வாஷிங்டன் வகுத்துச் சென்ற கொள்கைகளையே வெளியுறவில் ஜெபர்சன் கையாண்டார். பிரிட்டனுக்கும், பிரான்சுக்குமிடையே நடந்த இப்போர்களில் அமெரிக்கா தலையிடாது, நடுநிலையைப் (Neutrality) பின்பற்றி வந்தது. இன்னும் போதிய அனுபவம் பெறாத இளம் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு போரற்ற வாழ்க்கை இன்றியமையாதது என்பதை ஜெபர்சன் நன்கு உணர்ந்தார். ஆனால், ஐரோப்பாவில் நடந்து கொண்டிருந்த போர்களினால் நடுநிலை வகிக்கும் நாடுகளின் கடல் போக்குவரத்து உரிமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இப்போர்களினால் அமெரிக்கக் கப்பல்கள் பெருந்தாக்குதல்களுக்கு ஆளாயின. பிரெஞ்சு மேற்கு இந்தியத் தீவுகளின் விளைபொருள்களை ஏற்றிச்சென்ற அமெரிக்க கப்பல்களை பிரிட்டிஷார் தடுத்து நிறுத்தினர். மற்றும் ஆங்கிலக் கப்பற்படையினர் அமெரிக்கக் கப்பல் களை அடிக்கடி சோதிக்கவும், பொருட்களை கைப்பற்றவும், மற்றும் அக்கப்பல்களில் ஆங்கிலேயகுடிகள் இருந்தால் அவர்களைப்பற்றிக் கொள்ளவும் (Impressment) தங்களுக்கு உரிமை உண்டு எனக் கருதினர். பிரிட்டன் மாபெரும் கப்பற்படையைத் தன்னகத்தே கொண்ட போதிலும், பிரிட்டிஷ் மாலுமிகளுக்கு அதில் நல்லவிதமாகப் பணிபுரியும் சூழ்நிலை ஒன்று இல்லாத காரணத்தால் அநேக மாலுமிகள் தங்கள் வேலையை விட்டுவிட்டு பிறநாட்டுக் கப்பல்களில் பணிபுரியச் சென்றனர். இதனால் பிரிட்டிஷ் கப்பற்படையில் போதிய மாலுமிகள் இல்லாமல் போயிற்று. இதைக் கண்டிக்கும் வகையில் நடுக்கடலில் சென்ற அமெரிக்கக் கப்பல்களை பிரிட்டிஷார் சோதனையிட்டனர். சோதனையிடும் நேரம் பல பிரிட்டிஷ் அதிகாரிகள் இறுமாப்போடும், நியாயம் தவறியும் நடந்து கொண்டனர். அவர் உண்மையான பல அமெரிக்க மாலுமிகளை வலுக்கட்டாயப் படுத்தித் தம் படையில் பணிபுரியச் செய்தனர். அமெரிக்கக் கப்பல்களுக்கு பிரெஞ்சுக்

காரர்களிடமிருந்து ஆபத்து நேரிட்ட வண்ணமாக இருந்தது. பிரிட்டிஷ் தீவுகளுக்கு சரக்குகள் ஏற்றிச் சென்ற அமெரிக்கக் கப்பல்கள் பல பிரான்சால் பறிமுதல் செய்யப் பட்டன. இதற்கு ஜெபர்சன் தெரிவித்த எதிர்ப்புகள் அனைத்தும் பயனற்றவாயிருந்தன. 1807ஆம் ஆண்டு 'செசபீக்' (Chesapeake) என்ற அமெரிக்கப் போர்க்கப்பலை 'லெப்பர்டு' (Leopard) என்ற பிரிட்டிஷ் கப்பல் தாக்கியதனால் அமெரிக்காவிற்கு பெருமிழப்பு ஏற்படலாயிற்று. மூன்று அமெரிக்க மாலுமிகள் உயிரிழந்தனர். பதினான்கு மாலுமிகள் காயமுற்றனர். நான்கு அமெரிக்க மாலுமிகள் பிரிட்டிஷ் கப்பல்களில் பணிபுரியுமாறு வலுக்கட்டாயப்படுத்தப்பட்டனர். இச்சம்பவத்திற்கு பிரிட்டன் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்ததோடு நஷ்ட ஈட்டுத் தொகை ஒன்றையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. இதனால் போரும் தவிர்க்கப்பட்டது. அமைதியை என்றும் பேணிக் காக்கும் ஜெபர்சன் இந்நிகழ்ச்சிக்குப்பின் அமெரிக்க உரிமைகளைக் காக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்கலாயினர். ஐரோப்பியப்போரில் ஈடுபட்டிருந்த நாடுகளுக்கு அமெரிக்க வாணிபத் தொடர்பு இன்றியமையாததென்று நன்கு அறிந்திருந்த ஜெபர்சன், அத்தொடர்பை முற்றிலும் முறித்துக் கொள்ளத் திட்டமிட்டார். அப்படிச் செய்வதால் அமெரிக்க நடுநிலை வாணிப உரிமைகளுக்கு ஐரோப்பிய நாடுகள் மதிப்புத்தரக்கூடும் என்று ஜெபர்சன் நினைத்தார். இதன் விளைவாக ஜெபர்சனின் பரிந்துரைப்படி 1807-ஆம் ஆண்டில் அமெரிக்க காங்கிரஸ் வாணிகத் தடைச் சட்டம் (The Embargo Act) ஒன்றை இயற்றியது. வெளிநாடுகளோடு வாணிபத் தொடர்பு முற்றிலும் தடைப்பட்டது. இத்தடையினால் ஐரோப்பிய நாடுகள் பெரும் இடர்ப்பாடுகட்குள்ளாயின. அதே சமயம் இச்சட்டத்தினால் அமெரிக்கப் பொருளாதார நிலையும் சீர்குலையலாயிற்று. வெளிநாட்டு வர்த்தகத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட நியூஇங்கிலாந்துப் பகுதி மக்கள் இவ்வாணிகத் தடையினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தானியம், புகையிலை முதலிய பொருட்களை ஏற்றுமதி செய்ய இயலவில்லை. அதனால் அவற்றின் விலைகள் சரிந்தன; வேளாண்மையாளர்கள் பெருமிழப்புக்கு ஆளானார்கள். இச்சட்டத்தை எதிர்த்துப் பல கலகங்கள் நாட்டில் எழலாயின. இதைக் கண்ட ஜெபர்சன் தன் கொள்கையை சற்று மாற்றியமைத்தார். வாணிபத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக 1809-ஆம் ஆண்டில் உறவின்மைச் சட்டம் (Non-Intercourse Act) விதிக்கப்பட்டது. அதன்படி பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அந்நாடுகளோடு தொடர்பு கொண்டுள்ள ஏனைய நாடுகளோடும் வாணிபம் செய்யக்கூடாது என்றும் அவ்விரு நாடுகளில் ஏதேனும் ஒன்று நடுநிலைமை வகிக்கும் நாட்டின் வர்த்தகத்தைத் தாக்காதிருந்தால், அந்நாட்டுடன் வாணிப உறவு மறுபடியும் ஏற்படுத்தப்படும் என்றும் விளக்கம் தெரிவிக்கப்பட்டது. நெப்போலியன் அமெரிக்காவுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை நிறுத்திவிட்டதாக உடனடியாகச் சட்டபூர்வமாய் அறிவித்தார். இதன் விளைவாக, அமெரிக்க ஐக்கியநாடு பிரான்சோடு வியாபாரத் தொடர்பை மீண்டும் ஏற்படுத்தியது. பிரிட்டனோடு மட்டும் அமெரிக்கா வாணிப உறவு கொள்ளாமல் இருந்தது.

ஜெபர்சன் ஓய்வு பெறல்

வாணிகத் தடைச் சட்டத்தால் ஜெபர்சனது செல்வாக்கு சற்று குறைந்த போதிலும், அவரது இரண்டாவது பதவிக்காலம் முடியுந்தறுவாயில் பல மாநில சட்டமன்றங்கள்

அவரையே தொடர்ந்து மூன்றாவது முறையாகக் குடியரசுத் தலைவராகப் பதவியேற்க வேண்டி தீர்மானங்கள் இயற்றின. இதற்குப் பதிலாக ஜெபர்சன் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் தாம் ஓய்வு பெற முடிவு செய்திருப்பதாகவும், தனக்குப் பின் தன்னிடம் வெளிநாட்டுறவு செயலாளராகப் பணியாற்றிய ஜேம்ஸ் மாடிசன் குடியரசுத்தலைவர் பதவிக்கு உகந்தவரென்றும், குறிப்பிட்டிருந்தார். இரண்டு பதவிக்காலமே உகந்தது என்றும் யோசனை கூறினார். அதற்கு மேலாக பதவி வகித்தால் அது சர்வாதிகார ஆட்சிக்கு ஒப்பாகும் என்றும் அவர் கூறினார்.

மதிப்பீடு

ஜெபர்சன் தமது முதலாவது பதவிக்காலத்தில் தமது சிறந்த உள்நாட்டுக் கொள்கையின் மூலம் மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் அமோகமாகப் பெற்றார். போர்கள் எழக்கூடிய சூழ்நிலை ஐரோப்பாவில் நிலவிய போதிலும், ஜெபர்சன் தமது நாட்டை சமாதானப் பாதையிலேயே இட்டுச் சென்றார். அவர் ஓய்வு பெற்றுச் சென்ற போது அவர் வகுத்து விட்டுச் சென்ற கொள்கைகளும், வழிமுறைகளும் பயனற்றவை யாகுமெனப் பலர் நினைத்தனர். ஆனால், அதற்கு மாறாக அவை நற்பயனளித்தமையை அனைவரும் உணர்ந்தனர். 1826ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ஆம் நாள் ஜெபர்சன் தமது 91-ஆம் வயதில் காலமானார். ஜெபர்சன் இவ்வுலகை விட்டு மறைந்த போதிலும், அவர் வகுத்துச் சென்ற மக்களாட்சி முறைக் கொள்கைகளும் தாராளக் கொள்கைகளும் அமெரிக்க அரசியலில் இரண்டறக் கலந்து ஒளிவீசுகின்றன.

பயிற்சி வினாக்கள்

1) குடியரசுத் தலைவர் தாமஸ் ஜெபர்சனின் ஆட்சியின் சிறப்பை எடுத்துக் கூறுக.

2) ஜெபர்சோனிய மக்களாட்சிக் கருத்துக்களைக் கூறுக.

பாடம் – 8 1812–ஆம் ஆண்டுப்போர்

1808-ஆம் ஆண்டு நடந்தேறிய குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பாக போட்டியிட்ட ஜேம்ஸ் மாடிசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெபர்சனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜேம்ஸ் மாடிசன் இரண்டு பதவி காலத்திற்கு (1809-1817) அமெரிக்கக் குடியரசின் தலைவராகப் பணியாற்றினார். அமெரிக்க அரசியலில் அதிக அனுபவம் பெற்றவராய்த் திகழ்ந்தார். கூட்டாட்சி அரசியலமைப்பினை வகுப்பதில் முக்கிய பங்கு பெற்றார். மாடிசன் ஜெபர்சனது ஆட்சியில் அயல்நாட்டுத்துறை செயலாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். ஆகவே, அத்துறையில் சிறந்ததோர் அனுபவம் பெற்றிருந்தார். ஆனால், சிக்கலான பிரச்சினைகள் எழும்பொழுது அவற்றிற்குத் தக்க முடிவுகளை எடுக்கும் ஆற்றலற்றவர். அவரது காலத்து முக்கிய நிகழ்ச்சி, 1812ஆம் ஆண்டுப் போராகும். 1812ஆம் ஆண்டுப்போர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும், பிரிட்டனுக்குமிடையே நடந்த போராகும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் நடுநிலை உரிமைகள் மீறப்பட்டதும், இந்தியப் பழங்குடியினர் மீது அமெரிக்கர் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக் கொள்கையும், அவர்களின் மண்ணாசையுமே போருக்கான அடிப்படைக் காரணங்களாயின.

நடுநிலை உரிமைகளை மீறல்

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின், பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள் தொடர்ந்து நடக்கலாயின. இந்த ஐரோப்பியப் போர்களில் அமெரிக்க ஐக்கிய நாடு நடுநிலைமை வகித்தும், அதனுடைய உரிமைகள் பல அசட்டை செய்யப்பட்டன. பிரான்சும், இங்கிலாந்தும் ஒன்றையொன்று நேர்முகமாகத் தாக்கி வெற்றி கொள்ள முடியவில்லை. ஆகையால் பொருளாதாரத் துறையில் போரிட்டு ஆங்கிலேயப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் பொருட்டு 1806, 1807ஆம் ஆண்டுகளில் பிரான்சின் தலைவராகிய நெப்போலியன் போனபார்ட்டு, பெர்லின் மற்றும் மிலான் ஆணைகளைப் பிறப்பிக்கலானார். அவற்றின்படி பிரான்சின் ஆதிக்கத்திலுள்ள எல்லா நாடுகளும், மற்றும் நடுநிலை வகிக்கும் நாடுகளும் பிரிட்டனுடன் எவ்வித வர்த்தகத் தொடர்பும் கொள்ளலாகாது என்று அறிவுறுத்தப்பட்டது. இதற்கு எதிராக பிரிட்டனும் பல தடைகளை விதித்து பிரான்சின் பொருளாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டது. இப்பொருளாதாரப் போராட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நடுநிலை உரிமைகள் பல பாதிக்கப்பட்டன. ஜார்ஜ் வாஷிங்டன் காலந்தொட்டே அமெரிக்கா, நடுநிலையைக் கடைப்பிடித்து வந்தது. தனது வணிகக் கப்பல்கள் பிரான்சோடும், இங்கிலாந்தோடும் வர்த்தகத்தில் ஈடுபட்டன. ஆனால், அவைகளை பிரான்சும், இங்கிலாந்தும் பறிமுதல் செய்தன. அமெரிக்கக் கப்பல்கள் பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குச் சென்றால் அவை பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டன. அதற்கு மாறாக அக்கப்பல்கள் பிரெஞ்சு மேற்கத்தியத் தீவுகளுக்குச் சென்றால் ஆங்கிலேயர்களால் அவை கைப்பற்றப்பட்டன. தங்களது கப்பற்படையில் சேவே செய்வதை விட்டுவிட்டு அமெரிக்கக் கப்பற்படையில் அதிக மான்யம் கிட்டும் என்ற நம்பிக்கையில் அநேக ஆங்கில மாலுமிகள் அமெரிக்கக் கப்பற்படையில் பணியாற்றும் பொருட்டு அப்படையில் சேர்ந்தனர். இச்செயலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஆங்கிலக் கப்பல்கள் அமெரிக்கக் கப்பல்களை

நடுக்கடலில் மறித்து சோதனை செய்து அமெரிக்கப் படையில் பணிபுரியும் ஆங்கில மாலுமிகளை அக்கப்பல்களிலிருந்து பதவி விலகும்படிச் செய்தனர். இவ்வாறு செய்கையில் சில உண்மையான அமெரிக்க மாலுமிகளையும் கடத்திச் சென்றனர். இச்செயலை அமெரிக்க அரசு வன்மையாகத் தாக்கியது. 1807-ஆம் ஆண்டு லெப்பர்டு (Leopard) என்னும் பிரிட்டிஷ் போர்க் கப்பல் செசப்பீக் (Chesapeake) என்னும் அமெரிக்கப் போர்க்கப்பலை வழிமறித்து பலமுறை பீரங்கியினால் சுட்டது. நான்கு அமெரிக்க மாலுமிகள் கடத்திச் செல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி இரு நாடுகளுக்குமிடையேயுள்ள மனக்கசப்பை அதிகரிக்கச் செய்தது. இதுபோன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பிரிட்டன் பலாத்காரமாக அமெரிக்கக் குடிமக்களைக் கவர்ந்து சென்றமையைக் குறித்து குடியரசுத் தலைவர் ஜெபர்சன் அமெரிக்கச் சட்ட மன்றத்தில் ஓர் அறிக்கையில் தெரிவித்தார். உடனே போர் தொடுக்குமாறு பலர் வேண்டினர். பிரான்சும், இங்கிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை அதிகமாக நம்பி இருந்ததால் ஜனாதிபதி ஜெபர்சன் இவ்விரு நாடுகளுக்கும் ஒரு சிறந்த பாடம் கற்பிக்க எண்ணினார். வணிகத் தடை நடவடிக்கை சட்டம் (The Embargo Act) ஒன்று இயற்றினார். இச்சட்டத்தின்படி ஐரோப்பாவுடன் வாணிபம் நிறுத்தப்பட்டது. இதனால் பிரான்சும், இங்கிலாந்தும் அமெரிக்கப் பொருட்களைப் பெறமுடியாது போயிற்று. அந்நாடுகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா கைக்கொண்ட இவ்வணிகத் தடைச்சட்டம் தங்கள் வாணிப வளர்ச்சியையும், கப்பல் தொழிற்சாலையையும் பெரிதும் பாதித்தது. அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் துறைமுகங்களில் முடங்கிக் கிடந்தன. (இந்நிலையை மாற்ற 1808-ஆம் ஆண்டு உறவின்மைச் சட்டம் (Non-Intercourse Act) ஒன்றைத் தாக்கல் செய்து, 1809இல் செயற்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளோடு மறுபடியும் வாணிபத்தொடர்பை அமெரிக்கா மேற்கொண்டது. 1810-இல் இயற்றப்பட்ட மற்றொரு சட்டத்தின்படி (Macon's Bill No. 2). இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று வியாபாரத் தடைகளை நீக்கும்போது அதனோடு மறுபடியும் வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை அமெரிக்கா ஏற்படுத்தும் என்று கூறப்பட்டது. முதலில் பிரிட்டன் இச்சட்டத்திற்கு செவி சாய்க்க நினைத்தது. ஆனால் பின்னர் வாளாயிருந்து விட்டது. நெப்போலியன் இதுவே தக்க தருணம் என்று நினைத்து பெர்லின் மற்றும் மிலான் ஆணைகளை ரத்து செய்ய விரும்புவதாகக் குடியரசுத் தலைவர் மாடிசனுக்கு அறிவித்தார். மாடிசனும் மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்றார். அமெரிக்க ஐக்கிய நாடு பிரான்சோடு மறுபடியும் வாணிபத் தொடர்பை ஆரம்பித்து இங்கிலாந்தோடு மேற்கொண்ட வியாபாரத்திற்கு தடை விதித்தது. இதுவே 1812-ஆம் ஆண்டுப் போருக்கான அடிப்படைக் காரணமாகும்.

செவ்விந்தியர்களுக்கு பிரிட்டிஷாரின் உதவி

ஓகியோ நதிக்கும், மிசிசிபி நதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அமெரிக்கப் பழங்குடி மக்களாகிய செவ்விந்தியர் வாழ்ந்து வந்த பகுதியாக இருந்தது. அமெரிக்கக் குடியேற்றங்களை விரிவுபடுத்தும் பணியில் அமெரிக்கர்கள் செவ்விந்தியர்களது எதிர்ப்பைச் சம்பாதித்தனர். அமெரிக்கக் குடியேற்றங்களின் வளர்ச்சியைத் தடை செய்வதற்காக ஒரு கூட்டணியை செவ்விந்தியர் அமைத்ததற்கு ஆங்கிலேயர் அளித்த

ஊக்கமே காரணம் என்று அமெரிக்கர் கருதலாயினர். செவ்விந்தியரது நிலங்களைக் கையூட்டுக் கொடுத்தும் வஞ்சித்தும் அமெரிக்கர் தமக்குப் பெற்று வந்தனர். பல ஒப்பந்தங்கள் வாயிலாகவும் அவர்களிடமிருந்து பெருநிலப்பரப்பினை அமெரிக்கர் பெற்றார்கள்.

செவ்விந்தியர் பல குடும்பங்களாக தனிப்பெயர் பெற்றிருந்தனர். அவை கிரீக்ஸ் (Creeks), சோக்டாஸ் (Choctaws), சிக்சாஸ் (Chicksaws), செரோக்கிஸ் (Cherokees), செமினோல்ஸ் (Seminoles) என்பனவாகும். இவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு தெக்கும்சே (Tecumseh) என்ற செவ்விந்தியத் தலைவரின் கீழ் திப்பிக்கானோ (Tippecanoe) என்னும் இடத்தில் தலைநகரை நிறுவி, ஒரு கூட்டணியை அமைத்தனர். வெள்ளை அமெரிக்கர்களுக்கு எதிராக பல நடவடிக்கைகளை தெக்கும்சே ஆரம்பித்தார். பழங்குடியினர் அனைவரது அனுமதி இன்றி நிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் தரக்கூடாது என்றும் அறிவித்தார். செவ்விந்தியருக்கு, பிரிட்டிஷ் அரசு மறைமுகமாக கனடா வழியாக அமெரிக்கருக்கெதிராக உதவுவதாகவும், இந்தியர்கள் ஒரு தனி அரசை நிறுவ ஊக்குவிப்பதாகவும் தெரியவந்தது. இதனைக் கேள்வியுற்ற அமெரிக்கர் வெகுண்டனர். பிரிட்டிஷாரின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டனர்.

அமெரிக்கரின் மண்ணாசை

அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிலப்பரப்பளவைப் பெருக்க வேண்டுமெனச் சில அமெரிக்க மக்கள் பேராசை கொண்டிருந்தனர். வடக்கே பிரிட்டிஷ் பேரரசின் பகுதியான கனடாவையும், தெற்கே ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்த புளாரிடாவையும் கைப்பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டோடு இணைக்க வேண்டுமென்று பல அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்வத்தோடு உரையாற்றினர். அவர்களில் முக்கியமானவர்கள், ஜான் சி. கால்ஹான் (John C. Calhoun) என்பவரும், ஹென்றி கிளே (Henry Clay) என்பவருமாவர். 1811இல் சட்டமன்றத்திற்கு நிகழ்ந்த தேர்தலில் தேசிய சட்டமன்றத்தின் பழைய அங்கத்தினர்கள் பலர் தங்களது இடங்களை இழந்தனர். அவர்களின் தோல்வியால் வெற்றிடமான இடங்கள் பெரும்பாலும் போர் வெறிபிடித்த இளைஞர்களால் (War Hawks) நிரப்பப்பட்டது. இவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு பிரிட்டன் மீது போர் தொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கினர். வலிமை வாய்ந்த தங்கள் தலைவரான ஹென்றி கிளே என்பவரை அவைத் தலைவர் பதவியில் அமர்த்துவதில் அவர்கள் வெற்றி கண்டார்கள், ஹென்றி கிளே முக்கியமான குழுக்களில் தனது கொள்கையாளர்களை நியமித்தார். அவரது கொள்கைகள் போர் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கின. போர் எழும் சமயத்தில் அமெரிக்க சட்டமன்றத்தில் மூன்று முக்கிய பிரிவினர் இருந்தனர். புதிய இங்கிலாந்துப் பிரிவினர் போரை எதிர்த்தனர். மேற்குப் பகுதியினரான போர் வெறியர்கள் போர்ப்பறை அறிவிக்கத் திரண்டெழுந்தனர்; பழமை விரும்பிகளாகிய தென்பகுதி அங்கத்தினர்கள் மேற்குப் பகுதியினரின் பிரச்சினைகளில் அதிக ஆர்வம் காட்டவில்லை. எனினும் நாட்டுப்பற்றால் தூண்டப்பட்டு அவர்களும் போர் வெறியரோடு ஒன்று சேர்ந்து கொண்டனர்.

1812-ஆம் ஆண்டுப் போர் அமெரிக்க வரலாற்றிலேயே பல விதங்களிலும் மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். இப்போரை எளிதில் தவிர்த்திருந்திருக்கலாம். போர் வெறியர்களின் முயற்சியால் போர் குறித்த தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டு

வரப்பட்டு 1812 ஜூன் திங்கள் 18ஆம் நாள் போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது. சட்ட மன்றம் இத்தீர்மானத்தை இயற்றிய அதே நேரத்தில் பிரிட்டிஷ் அரசும் அமெரிக்கருக்கு எரிச்சலூட்டிய கவுன்சில் ஆணைகளை ரத்து செய்ததாக அறிவித்தது. இச்செய்தியை அமெரிக்க அரசுக்கு விரைவில் அறிவிப்பதற்கான வசதி இருந்திருக்குமென்றால் போர் ஒருவேளை மூளாமலேயே இருந்திருக்கலாம். மற்றும் இப்போர் மூண்டபோது அமெரிக்காவினுள் உள்நாட்டுப் பூசல்கள் வளர்பிறைபோல் வளர்ந்து கொண்டிருந்தன. அமெரிக்க இராணுவம் சீர்கேடான நிலையிலிருந்தது.

போரின் போக்கு

போர் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. இருதரப்பினரும் போருக்கான ஆயத்தமான நிலையில் இல்லை. புதிய இங்கிலாந்து மாநிலங்களும் மற்ற சில மாநிலங்களும் போர்ச் செலவினை பகிர்ந்துகொள்ள மறுத்தன. அமெரிக்க வங்கியின் சாசனம் 1811-இல் புதுப்பிக்கப்படாமல் விடப்பட்டமையால் நாட்டின் நிதி நிலைமையும் சீர்குலைந்திருந்தது. அமெரிக்கப் படைகள் போதிய படைக்கலன்கள் பெறாதிருந்தது. போதிய பயிற்சி பெறாத தகுதியற்ற படைத்தலைவர்களைப் பெற்றிருந்தது. பிரிட்டன் இச்சமயம் பிரான்சோடு போரிட்டுக் கொண்டிருந்தமையால் தனது முழு கவனத்தையும் அமெரிக்காவின் பால் செலுத்த வாய்ப்பில்லாமலிருந்தது. ஆயினும், போர் தொடங்கப் பெற்றது. பிரிட்டனுக்கு அமெரிக்கப் பழங்குடியினரான செவ்விந்தியரது ஆதரவு இருந்தது.

கனடா மீது போர்

முதலாவதாக, அமெரிக்கப் படைகள் ஜெனரல் ஹல் (General Hull) தலைமையில் கனடாவைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. டெட்ரோயிட் (Detroit) என்னும் இடத்தில் அமெரிக்கப் படைகள் ஒன்று சேர்க்கப்பட்டன. 1812-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சுமார் 3000 படைவீரர்கள் டேட்ரோவிட் நதியைக் கடந்து கனடாவைத் தாக்கினர். ஆனால், அமெரிக்கத் தளபதி ஹல் நடத்திச் சென்ற படைகளைச் செவ்விந்தியர் தோற்கடித்து, பிரிட்டிஷார் உதவியுடன் டெட்ரோயிட் நகரைக் கைப்பற்றினர். நயாகரா நதியின் மார்க்கமாக மற்றொரு முறை கனடாவின் மீது அமெரிக்கர் படையெடுத்தனர். ஆனால், தளபதி பிரோக் (General Brock) தலைமையில் நடத்தப்பட்ட பிரிட்டிஷ் படை அமெரிக்க படையெடுப்பை முறியடித்தது. இப்போரில் தளபதி பிரோக் தனது உயிரை இழக்க நேரிட்டது. அமெரிக்கரது படைகள் மற்றொரு முறையாக நியூயார்க்கிலிருந்து கனடாவைத் தாக்கின. இப்படையெடுப்பும் தோல்வியில்தான் முடிவுற்றது. வின்செஸ்டர் (Winchester) என்ற அமெரிக்கத் தளபதி பிரெஞ்சுடவுன் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் தோற்கடிக்கப்பட்டார். இவ்விதமாகக் கனடாவைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட அமெரிக்க முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன.

தெற்கு அரங்குப் போர்

தெற்கு அரங்கில் தெக்கும்சேயின் கீழ் பல்வகை செவ்விந்தியக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து அமெரிக்கரோடு மோதினர். இப்போரில் செவ்விந்தியர்களுக்கு புளாரிடாவி

லிருந்த ஸ்பானியரிடமிருந்து ஓரளவு உதவி கிட்டியது. ஆனால் அமெரிக்க ஜெனரல் கிளெய்போர்ன் (Claiborne) செவ்விந்தியர் புளாரிடாவுடன் கொண்ட தொடர்பைத் தண்டித்து, கிரீக்கப் பகுதிக்குள் அடியெடுத்து வைத்தார். மற்றுமொரு அமெரிக்கப் படை புளாரிடா சென்று அங்கு அணிவகுத்திருந்த செமினோல்ஸ் மற்றும் நீக்ரோக்களின் ஒன்றிணைப்பைத் தகர்த்தெறிந்தது. ஜாக்ஸன் (Jackson) என்னும் அமெரிக்கத் தளபதி தனது படைகளை கிரீக் பகுதிக்கு இட்டுச் சென்று தலப்பூசா (Tallapoosa) நதிக்கரையில் ஹார்ஷ்ஷூபென்ட் (Horse shoe Bend) என்னுமிடத்தில் செவ்விந்தியரைத் தோற்கடித்தார். கிரீக்குகள் வாழ்ந்து வந்த பகுதியை தன்வயப்படுத்திக்கொண்டார்.

தெக்கும்சேயின் வீழ்ச்சி

தளபதி ஹல் என்பவருக்குப் பின் 1813-இல் வடமேற்கு அரங்குப் படைகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வில்லியம் ஹென்றி ஹாரிசன் (William Henry Harrison) தமது படைகளைச் சீர்திருத்தி அமைத்தார். அச்சமயம் அமெரிக்கக் கடற்படைத் தலைவராகிய பெரி (Perry) பிரிட்டிஷ் கடற்படையை ஐந்து ஏரிகளில் (Great Lakes) தோற்கடித்தார். இதன் பின் ஏரிகளைக் கட்டுப்படுத்தி போரிடும் வாய்ப்பை அமெரிக்கர் பெற்றனர். அமெரிக்காவின் முற்போக்கை நிறுத்தும் குறிக்கோளுடன் தெக்கும்சே கனடாவின் எல்லையோரத்திற்குத் தனது படையை ஓட்டலானார். இப்படையை ஹாரிசன் சின்னாபின்னமாக்கி, பிரிட்டிஷாரையும், செவ்விந்தியரையும் தேம்ஸ் (Thames) போரில் வென்றார். 1813-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் நடைபெற்ற இப்போரில் தெக்கும்சே உயிர் நீத்தார். தங்களது அரும்பெருந்தலைவர் உயிர் நீத்தபிறகு செவ்விந்தியர் தப்பியோடிச் சென்றனர். தெக்கும்சே மீதான இப்பெரும் வெற்றி நாளடைவில் ஜாக்சனுக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவியையும், ஹாரிசனுக்கு துணைத் தலைவர் பதவியையும் பெற்றுத் தந்தது.

மாபெரும் வெற்றிகளை அமெரிக்கர் பெற்றபோதிலும் அவர்களால் கனடாவைக் கைப்பற்ற முடியவில்லை. 1814-ஆம் ஆண்டு இறுதியில் பிரிட்டிஷ் படைகள் நெப்போலியனைத் தோற்கடித்து கைதியாக எல்பா (Elba) தீவிற்கு அனுப்பியபின்பே, தனது முழு ஊக்கத்தையும் கவனத்தையும் பிரிட்டிஷ் அரசு அமெரிக்கப் போரில் ஈடுபடுத்தி, தனது 10,000 படைவீரர்கள் அடங்கிய படை ஒன்றை நியூயார்க் நகருக்குள் இட்டுச் சென்றது. புளாட்ஸ்பர்க் (Plattsburg) என்னும் இடத்தில் நடந்த கடற்போரில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர். ஏரி வழியாகச் செலுத்தப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்கள் பின்வாங்கின.

இருப்பினும், 4000 வீரர்களைக் கொண்ட மற்றொரு ஆங்கிலப் படை 1814-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் வாஷிங்டன் நகரைச் சென்றடைந்து அங்கிருந்த முக்கியமான கட்டிங்களைத் தீக்கிரையாக்கிற்று. சட்டமன்ற அலுவலமும் (Capitol) குடியரசுத் தலைவரின் வெள்ளை மாளிகையும் (White House) தீக்கிரையாயின. மாடிசனும் அவரது பாதுகாவலர்களும் வேட்டையாடப்பட்ட முயல்கள் போன்று பக்கத்துக் குன்றுகளுக்கு விரட்டப்பட்டனர். மூன்றாவதாக மற்றொரு அமெரிக்கப் படை ஒன்று நியூ ஆர்லியன்சைச் சென்றடைந்தது. ஆனால், ஜாக்சன் அதைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார். நியூ ஆர்லியன்ஸ் போர் 1815-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ஆம் நாள்

நடந்தது. இப்போர் ஏற்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னரே போரில் ஈடுபட்ட இரு நாடுகளும் தற்போது பெல்ஜியத்தில் உள்ள கெண்ட் (Ghent) என்னும் இடத்தில் ஒரு சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. ஜான்குவின்ஸி ஆடம்ஸ் (John Quincy Adams) அமெரிக்கக் குழுவிற்குத் தலைமை தாங்கினார். கெண்ட் உடன்படிக்கையின்படி போருக்கு முந்திய நிலையை ஏற்றுக் கொள்ளவும், இரு நாடுகளின் சிக்கல்களை நடுவர் தீர்ப்புக்கு விடவும், இருநாடுகளும் இசைந்தன. அதன் பயனாக பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 1815இல் வாணிக ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்குமிடையே வாணிகத் தொடர்பு மீண்டும் நிறுவப்பட்டது. 1817இல் ரஷ்- பேகாட் (Rush-Bagot) ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி இரு நாடுகளும் ஐம்பெரும் ஏரிகளில் போர்க்கப்பல்கள் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும், கோட்டை கொத்தளங்கள் கட்டக் கூடாதென்றும் முடிவு செய்தன. 1818இல் கையெழுத்தாகிய மீன் பிடிப்பு ஒப்பந்தத்தின்படி கனடாவின் நீர்ப்பகுதியில் அமெரிக்கருக்கு மீன் பிடிக்க உரிமை தரப்பட்டது.

ஐம்பெரும் ஏரிப் பகுதியிலிருந்து மேற்கே ராக்கி மலைகள் வரை 49^0 எல்லைக் கோடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், நடுநிலை உரிமைகள் பற்றியோ, வலுக் கட்டாயமாக அமெரிக்க மாலுமிகளை வேலைக்குச் சேர்த்துக் கொள்வது பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. இருப்பினும், இரு நாடுகளிடையே சமாதானம் ஏற்பட்டதால் வாணிபப் போக்குவரத்து அதிகரித்தது.

போரின் விளைவுகள்

இப்போரினால் கூட்டாட்சிவாதிகளின் செல்வாக்கு நாட்டிலிருந்து மறையலாயிற்று. 1812ம் ஆண்டுப் போரின் போது அக்கட்சியினர் பிரிட்டனிடத்து பரிவு காட்டினர். புதிய இங்கிலாந்து மாநிலங்கள் அக்கட்சியின் கோட்டையாக விளங்கிற்று. இம்மாநிலங்கள் போரின்போது மற்ற மாநிலங்களோடு சேர்ந்து தமது ஒத்துழைப்பைத் தர மறுத்தன.

இரண்டாவதாக, இப்போரில் செல்லுபடியற்றதாக்கும் கோட்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. 1814ஆம் ஆண்டு புதிய இங்கிலாந்து மாநிலங்கள் ஹார்ட்போர்டு (Hartford) என்னுமிடத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டி அம்மாநாட்டில் போரைக் கண்டிப்பதற்கான திட்டங்களைத் தீட்டின. கூட்டாட்சி அரசின் உரிமைகள் கட்டுப் படுத்தப்பட வேண்டுமென்றும், அரசியலமைப்பின் வரம்பை மீறும் வகையில் சட்ட மன்றத்தால் இயற்றும் சட்டங்களை எதிர்க்க மாநிலங்களுக்கு உரிமை உண்டென்றும் தீர்மானங்கள் இம்மாநாட்டில் இயற்றப்பட்டன. கூட்டாட்சி அரசுக்கு பிறநாடுகளின் மீது போர் தொடுக்கும் உரிமை தரப்படக் கூடாதென்றும், தென் மாநிலங்களுக்குச் சட்டமன்றத்தில் நீக்ரோ மக்கள் தொகை அடிப்படை உள்படத்தரப்பட்ட பிரதிநிதித்துவ இடங்கள் பறிக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டம் கருத்துத் தெரிவித்தது.

மூன்றாவதாக, இப்போர் அமெரிக்கப் பழங்குடி மக்களாகிய செவ்விந்தியர்களைத் தங்களது சொந்த நிலப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தியது. செவ்விந்தியர் தெக்கும்சே என்ற தங்கள் தலைவரின் கீழ் ஒரு கூட்டணியை ஏற்படுத்த பல முயற்சிகள் எடுத்தனர்.

ஆனால், அவர்களது நம்பிக்கை அமெரிக்கர்களால் நாசமாக்கப்பட்டது. தங்களது பிரிட்டிஷ் நண்பர்களாலும் அவர்கள் கைவிடப்பட்டனர். பூர்வீக இனத்தவர் மீது அமெரிக்கர் காட்டிய வெறுப்புணர்ச்சி இந்தியர்களைக் கொடூரமாகக் கொன்று குவித்த ஜாக்ஸன், ஹாரிசன் என்பவரை குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு இருந்தது. கெண்ட் உடன்படிக்கையிலும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய பாதுகாப்பைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

நான்காவதாக, வெளிநாடுகளோடு, அமெரிக்கா நிலையான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வேண்டாமென்று ஜார்ஜ் வாஷிங்டன் அன்று அறிவுரை கூறினார். ஜெபர்சனும் அதனையே மீண்டும் வலியுறுத்தினார். ஐரோப்பிய நிகழ்ச்சிகளில் தலையிடுவதால் உண்டாகும் பயனற்ற தன்மையை அமெரிக்க ஐக்கிய நாடு இப்போது உணரலாயிற்று. எனவே, தனித்திருக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயிற்று. இக்கொள்கை அமெரிக்கரால் ஒரு நூறாண்டுக் காலம் கையாளப்பட்டது. இதன் விளைவாக, அமெரிக்கர் தமது நாட்டின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தலாயினர்.

ஐந்தாவதாக, இப்போர் அமெரிக்கத் தொழிற்புரட்சியை விரைவுபடுத்தியது. தொழிற்புரட்சி அமெரிக்காவில் 1812-ஆம் ஆண்டுப் போருக்குச் சற்று முன்பாகவே ஆரம்பித்து விட்டது. 1793-இல் எலி விட்னி (Eli Whitney) என்பவர் ஒரு பஞ்சு இயந்திரத்தைக் (Cotton gin) கண்டுபிடித்தார். இதிலிருந்து தொழிற்புரட்சி ஆரம்பித்ததாக அமெரிக்கர் கணக்கிடுகின்றனர். அவ்வியந்திரம் பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தெடுப்பதை எளிதாக்கிற்று; இவர் தொடர்ந்து பல இயந்திரங்களைக் கண்டுபிடித்தார்.

ஆறாவதாக, இப்போரினால் அரசுக்கும் பல தொல்லைகள் ஏற்பட்டன. நிதி நிலை சீர்குலைந்தது. பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது. தேசியக் கடன் அதிகமாக இருந்தது. ஹாமில்டன் தோற்றுவித்த வங்கிக்கான சாசனம் 1811 வரை நீடித்திருந்தது. பங்கு தாரர்கள் சாசனத்தில் காலவரையறையை நீட்டிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர். ஆனால், குடியரசுக் கட்சியினர் சாசனத்தை நீட்டிக்க மறுத்துவிட்டனர். அவர்கள் மாநில அதிகாரங்களை அதிகமாகப் பேணி வந்ததால் மாநிலப் பாங்குகளே போதுமென்றும் தேசிய வங்கி வேண்டாமென்றும் கருதினர். எனவே அமெரிக்க வங்கியின் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. அதற்குப் பதிலாக சிறிய மாநில வங்கிகள் நிறுவப்பட்டன. 1812-ஆம் ஆண்டுப் போரின் போது தேசிய வங்கி இருந்திருந்தால் நிதி மற்றும் பொருளாதார நிலையைச் சமாளிப்பதில் அரசுக்கு பேருதவியாயிருந்திருக்கும். மாநில வங்கிகளால் போரைத் திறம்பட நடத்த வழிவகை செய்ய முடியவில்லை. எனவே, 1816இல் இரண்டாவது அமெரிக்க வங்கி தோற்றுவிப்பதற்கான சாசனம் வரையப்பட்டது.

இறுதியாக, போரின் விளைவாக தேசிய உணர்வு ஏற்பட்டு, அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டது. ஒரு வலுவான தேசிய அரசின் இன்றியமை யாமையை இப்போர் மக்களுக்கு எடுத்தியம்பியது.

பயிற்சி வினா

1812-ஆம் ஆண்டுப் போருக்கான காரணங்கள் யாவை? அதன் போக்கையும், விளைவுகளையும் தொகுத்துக் கூறுக.

பாடம் – 9 மன்ரோ கோட்பாடு

ஜேம்ஸ் மாடிசன் ஓய்வு பெற்றபின் ஜேம்ஸ் மன்ரோ அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திறமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த ஜேம்ஸ் மன்ரோ (James Monroe) சட்டத்துறை, நிர்வாகத்துறை ஆகிய துறைகளில் மிக்க அனுபவம் பெற்றிருந்தார். குடியரசுத் தலைவராகப் பதவியை ஏற்குமுன் உயர்ந்த பதவிகளை மன்ரோ சிறப்புடன் வகித்திருந்தார். அமெரிக்காவின் தூதுவராக பிரான்சிலும், இங்கிலாந்திலும் பணியாற்றியிருந்தார். மாடிசன் நிர்வாகத்தின் போது வெளிநாட்டுறவுச் செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தார். 1817 முதல் 1825 வரை அவர் குடியரசுத் தலைவராகப் பதவிவகித்த காலத்தில் எவ்வித கடுமையான கட்சிப் போராட்டங்களும் எழவில்லை. இவரது காலத்தில் குடியரசுக் கட்சியினருக்கும், கூட்டாட்சி கட்சியினருக்கு மிடையே இருந்த வேறுபாடுகளெல்லாம் முற்றிலும் மறைந்து போய் நாட்டில் "` நல்லுறவு காலம்" (Era of good feelings) நிலவிற்று. ஜான் ஆடம்ஸின் புதல்வரான ஜான் குயின்ஸி ஆடம்ஸ் (John Quincy Adams) என்பவரை வெளிநாட்டுறவுச் செயலாளராகவும், வில்லியம் கிராபோர்ட் (William Crawford) என்பவரை நிதித்துறைச் செயலாளராகவும், ஜான் சி கால்ஹீன் (John C. Calhoun) என்பவரை இராணுவச் செயலாளராகவும் நியமித்தார்.

ஃபுளோரிடாவை (Florida) ஸ்பெயினிடமிருந்து பெறுதல்

ஃபுளோரிடாவின் இரு பகுதிகளான மேற்கு ஃபுளோரிடாவும் கிழக்கு ஃபுளோரி டாவும் ஸ்பெயின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அங்கு பெரும்பாலும் செமினோல் (Seminole Indians) என்றழைக்கப்படும் பழங்குடி செவ்விந்தியரே வாழ்ந்து வந்தனர். லூசியானாப் பகுதியை அமெரிக்கா விலைக்கு வாங்கியபொழுது அதன் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படாது விடப்பட்டன. எனவே ஃபுளோரிடாவும், டெக்சாசும் (Texas) லூசியானாப் பகுதியைச் சேர்ந்ததே என்று கூறி அமெரிக்க அந்நிலப் பகுதிகளுக்குச் சொந்தம் கொண்டாடியது. ஆனால், ஐயத்திற்கிடமில்லாமல் ஃபுளோரிடா ஸ்பானியப் பேரரசுக்கு உட்பட்டதாக இருந்தது. ஆனாலும், அமெரிக்கர் அது லூசியானாவின் ஒரு பகுதியே என வாதாடினார். ஃபுளோரிடாவில் கொலைகாரர்களும், தப்பியோடிய அடிமைகளும், முன்னாள் பிரிட்டிஷ் வீரர்களும் தஞ்சம் புகுந்தனர். அங்கு எப்பொழுதும் குழப்பமான நிலையே நிலவிற்று. இதனால் அமெரிக்காவின் எல்லைப்புற ஊர்கள் பாதிக்கப்பட்டன.

ஃபுளோரிடாப் பகுதியைப் பெற ஜெபர்சன் தொடர்ந்து பலமுறை முயன்றார். அதற்காக அவர் பலமுறைகளைப் பின்பற்றியிருக்கலாம். போரின் மூலமாவது, விலைக்காவது அல்லது அமெரிக்க மக்களைப் படிப்படியாக உள்சென்று குடியேறச் செய்வதன் மூலமாவது ஃபுளோரிடாவைப் பெற்றிருக்கலாம். ஜெபர்சன் அப்பகுதியை விலைக்கு வாங்க தனது விருப்பத்தைத் தெரிவித்தபோது ஸ்பெயின் அப்பகுதியை விற்க மறுத்து விட்டது. இறுதியாக, ஜெபர்சன் அமெரிக்கர்களை ஃபுளோரிடாப் பகுதியினுள் குடியேற ஊக்குவித்தார். அங்கு சென்று குடியேறிய அமெரிக்கர், 1810-இல் உரிமைகள் பெறக் கிளர்ச்சி செய்தனர். அந்த ஆண்டில் தான் நெப்போலியன் போனபார்ட் ஸ்பெயினைக் கைப்பற்றினார். நெடுந்தொலைவிலிருந்த ஃபுளோரிடாப் பகுதியைத் தாய்

நாடான ஸ்பெயினுக்கு அடக்கி ஆள முடியவில்லை. அதே ஆண்டில் அமெரிக்கர் புரட்சி செய்து மேற்கு ஃபுளோரிடாவை அமெரிக்கர் தங்கள் நாட்டோடு இணைத்துக் கொண்டனர். 1812ஆம் ஆண்டுப் போரின்போது ஸ்பெயின் அமெரிக்காவை எதிர்த்து பிரிட்டனை ஆதரித்தது. எனவே இப்போரின் போது, அமெரிக்கத் தளபதி ஆண்ட்ரூ ஜாக்ஸன் தலைமையில் ஸ்பானியருக்குச் சொந்தமான பெர்ல் நதிக்கும், மொபைல் (Mobile) நதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைக் கைப்பற்றியது. ஆனால் இன்னும் கிழக்குப் ஃபுளோரிடாப் பகுதி மட்டும் அமெரிக்கரால் கைப்பற்றப்படாமலிருந்தது.

1815-இல் ஸ்பெயின் நாட்டுத் தூதுவராக ஒனிஸ் (Onis) என்பவர் வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்டார். ஸ்பெயினுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள எல்லையை நிர்ணயித்து ஒரு சுமுகமான முறையில் சச்சரவுகளைத் தீர்த்து, வைக்குமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது. அமெரிக்காவிற்கும், ஸ்பெயினுக்கும் இடையேயுள்ள எல்லையை நிர்ணயித்தல், ஸ்பெயின் மீது அமெரிக்கா கொண்டாடும் உரிமைகளை ஆராய்தல், கிழக்கு ஃபுளோரிடாவை விற்றல் முதலியனபற்றிப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் அவற்றில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. இதற்கிடையே கிழக்கு ஃபுளோரிடாவிலிருந்த இந்தியப் பழங்குடியினரும், நீக்ரோக்களும் எல்லைப்புறப் பகுதிகளில் வாழ்ந்து வந்த அமெரிக்கருக்கு அதிக அளவில் தொல்லை தந்தமையால் அமெரிக்கர் தங்களது பொறுமையை இழக்க நேரிட்டது. தம் நாட்டு மக்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த செவ்விந்தியர்களையும், நீக்ரோக்களையும் தண்டிக்கும்படியும், அவர்களைக் கிழக்கு ஃபுளோரிடாப் பகுதிக்குள் துரத்தியடிக்கவும் ஜனாதிபதி மன்ரோ தளபதி ஜாக்சனுக்குக் கட்டளையிட்டார். ஜாக்சன் ஃபுளோரிடாப் பகுதியினுள் புகுந்து செவ்விந்தியர்கள் இருவரையும், ஆங்கிலேயத் தளபதிகள் இருவரையும் கொன்று குவித்தார். கிழக்கு ஃபுளோரிடாவிலுள்ள ஸ்பானிய நகரங்களான செயின்ட் மார்க்கையும் (St. Mark), பென்சகோலாவையும் (Pensacola) தரைமட்டமாக்கினார். ஸ்பானிய ஆளுநர் விரட்டியடிக்கப்பட்டார். இச்செயல்களைக் கேள்விப்பட்ட ஜனாதிபதி மன்ரோ மனம் வருத்தப்பட்டார். ஒருவேளை பிரிட்டன் ஸ்பெயினின் சார்பாக அமெரிக்காவைத் தாக்கக் கூடும் என்று அவர் அஞ்சினார். தமது அமைச்சரவையை உடனடியாகக் கூட்டினார். அமைச்சர்களில் பெரும்பாலோர் ஜாக்சனைத் தாக்கிப் பேசினர். அவர் செய்தது ஒரு பெருங்குற்றம் என்று முடிவு செய்து அவருக்கு தக்கத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனறு தங்களது கருத்தைத் தெரிவித்தனர். ஆனால் வெளிநாட்டுறவுச் செயலாளரான ஜான் குயின்சி ஆடம்ஸ், ஜாக்சனின் செயலை முற்றிலும் ஆதரித்துப் பேசினார். தமது சீரியக் கருத்துக்களை எடுத்துரைத்து அமைச்சரவையின் பிற அங்கத்தினர்களையும் தம் பக்கம் ஈர்த்து விட்டார். ஃபுளோரிடாவின் மக்களைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் ஸ்பெயின் 1795ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் ஏற்படுத்திய நேச ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஆடம்ஸ் புகார் கூறினார். கிழக்குப் ஃபுளோரிடாப் பகுதியைக் கட்டுப்படுத்தி, அமைதியை அங்கு நிலைநாட்ட வேண்டும் அல்லது அப்பகுதியை அமெரிக்கா கைப்பற்றிக் கொள்ளக்கூடும் சூழ்நிலை ஒன்று ஏற்படலாம் என்று ஆடம்ஸ் அச்சுறுத்தினார். கிழக்கு ஃபுளோரிடாவை அமெரிக்கா வன்முறையால் கைப்பற்றக்கூடும் என்று அஞ்சிய ஸ்பெயின், ஃபுளோரிடாவை விற்றுவிட விருப்பம் தெரிவித்தது. அதன்பயனாக ஆடம்ஸ் ஒனிஸ் உடன்படிக்கை (Adams-Onis Treaty) 1819இல் கையெழுத்திடப்பட்டது. அவ்வுடன்படிக்கையின்படி கிழக்கு ஃபுளோரிடாவை

அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அளித்துவிடவும், 1810இலும், 1812இலும் அமெரிக்கா கைப்பற்றிய பகுதிகளை அமெரிக்காவிற்கே அளித்துவிடவும் ஸ்பெயின் இசைந்தது. இதற்கு ஈடாக ஸ்பானிய அரசிடம் அமெரிக்க குடிமக்கள் கோரிய இழப்பீட்டுத் தொகைகளை அவர்களுக்கு அளிக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டது. அத்தொகை ஐந்து மில்லியன் டாலர் எனக் கணக்கிடப்பட்டது. லுசியானாவின் எல்லையும், ஸ்பானிய மெக்ஸிகோவின் எல்லையும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன. அமெரிக்காவிற்குச் சொந்தமான ஓரிகான் (Oregon) பகுதி மீது ஸ்பெயின் சொந்தம் கொண்டாடுவதை நிறுத்தியமையால் ஸ்பெயினுக்குச் சொந்தமான டெக்ஸாஸ் (Texas) பகுதி மீது அமெரிக்கா சொந்தம் கொண்டாடுவதை நிறுத்திக்கொண்டது. கிழக்கு ஃபுளோரிடாவை அமெரிக்கா பெற்றமை அமெரிக்காவின் எல்லை விரிவடையும் வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். ஸ்பெயின் ஓரிகான் மீது சொந்தம் கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டமையால் அமெரிக்கா தமது எல்லையை பசிபிக் கடலோரம்வரை நீட்டிச் செல்ல ஏதுவாயிற்று.

மன்ரோ கோட்பாடு

அமெரிக்காவின் வெளிநாட்டுறவில் மன்ரோ கோட்பாடு முக்கியமானதொரு பத்திர மாகக் கருதப்படுகிறது. இக்கோட்பாடு அமெரிக்காவின் தனித்திருத்தல் கொள்கையின் கருத்தை எடுத்துக் காட்டுகின்றது. அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப் பிறகு இக்கோட் பாடு பெரிதும் செயல் முறையில் பின்பற்றப்பட்டது. மன்ரோ இக்கோட்பாட்டினை வகுக்க ரஷ்யாவிடமிருந்து வந்த மிரட்டல் ஒரு முக்கிய காரணமாகும். வட அமெரிக்காவின் வடமேற்குக் கோடியிலிருந்த அலாஸ்கா (Alaska) நிலப்பகுதியை ரஷ்யா தன் ஆதிக்கத்தினுள் வைத்திருந்தது. அச்சமயம் ரஷ்ய மன்னர் ஒரு பேராணை பிறப்பித்து, ரஷ்யாவின எல்லைக் கோட்டை 55^0 யிலிருந்து, 51^0 ஆக மாற்றிக் கூறி அதற்குட்பட்ட நிலமெல்லாம் ரஷ்யாவிற்குச் சொந்தமானதென அறிவித்தார். மற்றும் வெளிநாட்டுக் கபபல்கள் அமெரிக்கக் கடற்கரையினின்று நூறு மைல் தொலைவுக்குள் வரக்கூடாது என்றும் ரஷ்ய மன்னர் கட்டளை பிறப்பித்தார். இவ்வகையில் வடபகுதியில் ரஷ்யா தன் நிலப்பரப்பினைப் பெருக்குவதில் முனைந்தது. இதனைக் கண்ட அமெரிக்க ஐக்கிய நாடு அந்நிலையை மாற்ற உறுதி பூண்டது. இக்கோட்பாட்டினை ஏற்படுத்துவதற்கான மற்றொரு காரணம் என்னவென்றால் ஐரோப்பிய அரசியல் அரங்கில், ரஷ்யா, பிரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஒன்று கூடி ஒரு கூட்டணியை (Concert of Europe) அமைத்து, முடியாட்சிக்கு எதிரான புரட்சி இயக்கங்களை ஒடுக்குவதில் முனைந்தன. ஸ்பெயினிலும், இத்தாலியிலும் ஜனநாயக ஆட்சி வளராமல் தடுக்கப்பட்டது. தென் அமெரிக்காவிலுள்ள ஸ்பானிய குடியேற்ற நாடுகளில் சுதந்தரப் போர்கள் நடந்து கொண்டிருந்தன. 1822இல் வெரோனாவில் கூட்டப்பட்ட ஐரோப்பிய கூட்டணியின் மாநாட்டில் தென் அமெரிக்க ஸ்பானிய குடியேற்ற நாடுகளை அடக்கும் பணி பிரான்சிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் விளைவாக பிரான்சுக்கும் சில குடியேற்றங்கள் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மீண்டும் தென் அமெரிக்காவில் முடியாட்சி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைக் கண்ட அமெரிக்க ஐக்கிய நாடு அஞ்சியது. மீண்டும் முடியாட்சி நிறுவப்பட்டால், தென் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளோடு அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டிருந்த வாணிகத் தொடர்பும் அறுபடக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஸ்பானிய குடியேற்ற நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த உரிமை இயக்கங்களை ஐரோப்பிய நாடுகள் அடக்குவதைக் கண்ட பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் கானிங் (George Canning) மிகவும் துயருற்றார். பொதுவாக பிரிட்டன் உரிமை இயக்கங்களை ஆதரிப்பதே வழக்கம், ஆகையால், உரிமை இயக்கங்களை அடியோடு ஒழித்துக்கட்டுவதற்காக அமைக்கப்பட்ட ஐரோப்பியக் கூட்டணியில் பிரிட்டன் சேர மறுத்துவிட்டது. மேலும், பிரிட்டன் தென் அமெரிக்க நாடுகளோடு வியாபாரத் தொடர்பு கொள்ளவும் விழைந்தது. ஆனால், இங்கிலாந்து மன்னரான நான்காம் ஜார்ஜ் தென் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் ஸ்பெயினிடமிருந்து உரிமை பெறுவதை விரும்பவில்லை. அத்துடன் பிரிட்டனும், ஸ்பெயினும் நேசநாடுகளாக விளங்கின. எனவே, கானிங் வெளிப்படையாக உரிமை பெற்ற தென் அமெரிக்கக் குடியேற்றங்களை அங்கீகரிக்க முடியவில்லை. அதற்காக கானிங் அமெரிக்க ஐக்கிய நாடும், பிரிட்டனும் சேர்ந்து தென் அமெரிக்கக் குடியரசுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு கூட்டறிக்கையை வெளியிடலாமெனப் பிரிட்டனிலிருந்த அமெரிக்கத் தூதுவரான ரிச்சர்டு ரஷ் (Richard Rush) என்பவரிடம் கருத்து தெரிவித்தார், அவ்வறிக்கையில் இரு முக்கியக் கொள்கைகள் தெளிவாக்கப்பட வேண்டும் என்று கானிங் எடுத்துரைத்தார். பிரிட்டனுக்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் அமெரிக்கக் கண்டத்திலுள்ள பிற ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்திலுள்ள குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றும் நோக்கம் எதுவுமில்லையென்றும், தென் அமெரிக்க நாடுகள் மீது ஐரோப்பிய நாடுகள் வலுக்கட்டாயமாகத் தங்களது ஆட்சியைத் திணிக்கக்கூடாதென்றும் தெளிவுபடுத்த கானிங் விரும்பினார், ஆனால், அச்சமயம் அமெரிக்க ஐக்கிய நாடு அண்டையிலிருக்கும் ஸ்பானியக் குடியேற்ற நாடாகிய கியூபாத் தீவைக் கைப்பற்றப் பல திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தது. ஆகையால், அமெரிக்க ஐக்கிய நாடு பிரிட்டனோடு சேர்ந்து கூட்டறிக்கை விட விரும்பவில்லை. மற்றும் அமெரிக்கக் கண்டம் பற்றிய விவகாரங்களில் அமெரிக்க ஐக்கிய நாடு தனித்து செயற்பட விரும்பியதேயொழிய, பிரிட்டனோடு சேர விரும்பவில்லை. மற்றும் தென் அமெரிக்கக் குடியரசுகளைப் பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டுமென்றும் அமெரிக்க ஐக்கிய நாடு கோரியது. ஆனால், அதற்கு பிரிட்டன் செவிசாய்க்கவில்லை, இப்பிரச்சனையை ஜெபர்சனிடமும், மாடிசனிடமும் தெரிவித்தபொழுது அவர்கள் கூட்டறிக்கை வெளியிடுவதே நல்லதென்று கருதினர். ஆனால், முன்பு குறிப்பிட்டது போன்று வெளியுறவுச் செயலாளரான ஜான் குவின்சி ஆடம்ஸ் அமெரிக்க ஐக்கியநாடு தனியாகவே அந்நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கூறினார். மன்ரோவும் அவ்வாறே தனது விருப்பத்தைத் தெரிவித்தார். "ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கக் கண்டத்தின் அரசியலில் தலையிடக் கூடாதென்பதை" ஓர் அறிக்கையின் மூலம் மன்ரோ வெளியிட விரும்பினார். ஆனால், முடிவில் அக்கருத்தை 1823இல் சட்டமாமன்றத்தில் நிகழ்த்தும் ஆண்டுச் செய்தியறிக்கையில் இணைத்து வெளியிட்டார். அதுவே, "மன்ரோ கொள்கை" என்று பின்பு அழைக்கப்படலாயிற்று.

மன்ரோ கொள்கை

மன்ரோ கொள்கை சில குறிப்பிட்ட முக்கியமான கோட்பாடுகளை எடுத்தியம்பியது. 1) இனிமேல் ஐரோப்பிய குடியேற்றத்திற்கான இடமாக அமெரிக்க நிலப்பகுதிகள் கருதப்படலாகாது. 2) தற்போதைய ஐரோப்பாவின் அமெரிக்க கண்டத்திலுள்ள

குடியேற்றங்களில் அமெரிக்க ஐக்கிய நாடு தலையிடாது. 3) அமெரிக்காவின் மீது தங்களின் அரசியலமைப்பைத் திணிக்க அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டின் காரியங்களில் தலையிட அல்லது அமெரிக்க நிலப்பகுதிகளில் குடியேற்றங்கள் நிறுவ ஐரோப்பிய அரசுகள் மேற்கொள்ளும் எத்தகைய முயற்சியையும் தனது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் தீங்கிழைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே அமெரிக்க ஐக்கிய நாடு கருதும். 4) அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிடையே எழும் போர்களில் தலையிட ஆர்வம் காட்டுவதில்லை.

மன்ரோ கொள்கை அறிவிப்பு தேவையற்றது என்று சில வரலாற்றாசிரியர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அச்சமயம் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஆபத்து எதுவும் எழவில்லை. அப்படியே ஒரு வேளை ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த முற்பட்டால் அதனைத் தடுத்து நிறுத்துமளவிற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் போதிய வலிமை அச்சமயம் கிடையாது. அடுத்து ரஷ்ய நாட்டின் அச்சுறுத்தல் உண்மையானதன்று. அச்சமயம் ரஷ்யா ஆக்கிரமிப்பு செய்ய முடியாத நிலையில் பல தொல்லைகளுக்குட்பட்டிருந்தது. மற்றும் அலாஸ்காவின் தென் பகுதியில் சொந்தம் கொண்டாடுவதையும் நிறுத்திக் கொண்டது. அடுத்து ஐரோப்பிய நாடுகளினின்று எதிர்பார்த்த அச்சுறுத்தலும் கற்பனையானதென்றெ கொள்ளலாம். பிரான்சு மட்டுமே தென் அமெரிக்க நாடுகளைக் கட்டுப்படுத்துவதில் விருப்பங் காட்டிற்றே ஒழிய பிற நாடுகள் வாளாயிருந்தன. பிரிட்டனும் பிரான்சை ஏற்கனவே எச்சரித்திருந்தது. மேலும், பிரிட்டிஷ் கப்பற்படை உதவியின்றியும், பிரிட்டனுக்கு எதிராகவும் ஐரோப்பிய நாடுகள் செயல்படக்கூடிய நிலையில் அப்போதில்லை. அடுத்து தென் அமெரிக்க நாடுகளும் தங்களைக் காப்பாற்றும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து எவ்வித உதவியையும் கேட்கவில்லை. சில நாடுகள் ஏற்கனவே சுதந்திரம் பெற்ற தனி நாடுகளாக மாறிவிட்டன. அவை பிரிட்டனின் உதவியைத்தான் நாடின.

மன்ரோ கொள்கைபற்றிப் பிற நாடுகளின் கருத்து

அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் இவ்வறிக்கையை முழு ஆதரவோடு வரவேற்றனர். தேசிய இயக்கமும் உணர்ச்சியும் மேலோங்கிய காலம் அது. இளங்குடியரசின் வளரும் வலிமையின் சின்னமாகக் கருதப்பட்டது. இருப்பினும், உடனே அக்கொள்கையைச் செயல்படுத்த அமெரிக்க ஐக்கிய நாடு முனையவில்லை. கொலம்பியா பிரான்சுக்கு எதிராகவும், பிரேசில் போர்ச்சுக்கலுக்கு எதிராகவும் உதவி கோரி அமெரிக்க ஐக்கிய நாட்டை நாடிய போது, அமெரிக்க ஐக்கிய நாடு வாளாயிருந்துவிட்டது.

அமெரிக்க ஐக்கியநாடு தானாகவே தென் அமெரிக்கக் குடியரசுகளுக்கு காவலனாக செயல்படுவதை தென் அமெரிக்க நாடுகள் விரும்பவில்லை. அவை பிரிட்டனிடம் உதவியைக் கோரினவே ஒழிய, அமெரிக்க ஐக்கிய நாட்டை நாடவில்லை. தென் அமெரிக்கப் புரட்சித் தலைவரான சைமன் பொலிவர் (Simon Bolivar) ஸ்பானிய ஆதிக்கத்தை உதறியெறிந்த நாடுகளை 1826இல் பனாமாவில் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைத்தார். எவ்வித ஐரோப்பிய ஆக்கிரமிப்புகளினின்றும் தங்களது உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும். மாநாட்டின் ஒரு சில அங்கத்தினர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டை மாநாட்டில் பங்கு பெற அழைக்க வேண்டுமென்று விரும்பிய போதிலும்

சைமன் பொலிவர் வேண்டுமென்றே அமெரிக்க ஐக்கிய நாட்டை அழைக்கவில்லை. ஆனால், பிரிட்டன் அழைக்கப்பட்டது. இருப்பினும், அமெரிக்க ஐக்கிய நாடு தானே தனது பிரதிநிதிகளை அனுப்பிற்று. அப்பிரதிநிதிகள் மாநாடு முடிந்தபின் போய் சேர்ந்ததனால் கேலிக்குள்ளாயினர். அமெரிக்க ஐக்கிய நாட்டைவிட பிரிட்டனே தென் அமெரிக்காவில் செல்வாக்குடன் திகழ்கிறது என்பதனை மாநாட்டின் தீர்மானங்கள் தெள்ளத் தெளிவாக்கின.

மன்ரோக் கொள்கை அறிவிக்கப்பட்ட போது ஐரோப்பிய நாடுகளில் அதற்குப் பெரும் எதிர்ப்பு எழுந்தது. மன்ரோ தனித்து இக்கொள்கையை அறிவித்தமையால் பிரிட்டனின் அயல்நாட்டுறவு அமைச்சரான ஜார்ஜ் கானிங் சினங்கொண்டிருந்தார். என்வே, பிரிட்டன் அமெரிக்க நாட்டிற்கு எதிராகத் தென் அமெரிக்காவில் செயல்பட லாயிற்று. ஆஸ்திரிய வேந்தரான மெட்டர்னிச் (Metternich) மன்ரோ அறிக்கையை கண்ணியமற்ற ஒன்று என்று கருதினார். ரஷ்யாவும் மன்ரோ அறிக்கையைப் பொருட் படுத்தாதிருந்தது. இருப்பினும், ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஒன்றுகூடி இக்கொள்கை யினடிப்படையில் அமெரிக்கா ஐக்கிய நாட்டை எதிர்க்க முடியவில்லை. அதனாலேயே இக்கொள்கை காலத்தை வென்று நிற்கிறது எனலாம்.

மன்ரோ கொள்கையின் முக்கியத்துவம்

"அமெரிக்கா அமெரிக்க மக்களுக்கே" என்ற கருத்தினை மன்ரோ கொள்கை தெளிவுற வலியுறுத்தியது எனலாம். முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்காக ஐரோப்பாவில் உருவாகியிருந்த சக்திகளை எதிர்க்கும் வகையில் இக்கொள்கை அமைந்தது. குடியாட்சிக்கு உரிய இடமாக அமெரிக்கா கருதப்பட்டது.

மன்ரோ கொள்கை புதிய உலகையும், பழைய உலகையும் பிரிக்கும் கருத்துக் கோவை யாகவும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் தன்னலத்தைப் பாதுகாக்கும் கொள்கையாகவும் மட்டுமே ஆரம்பத்தில் கருதப்பட்டது. முதல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவரான ஜார்ஜ் வாஷிங்டனால் உருவாக்கப்பட்ட 'தனித்திருத்தல்' கொள்கைக்கு முழு வடிவத்தை அளிக்கும் வகையில் மன்ரோ கொள்கை அமைந்துவிட்டது. அமெரிக்க நாட்டின் வலிமை பெருகப் பெருக இக்கொள்கையின் நோக்கெல்லையும் (Scope) விரிவாக்கப்பட்டது. புதிய உலகின் காப்பாளராகவும், தலைவராகவும் விளங்கும் வகையில் அமெரிக்க ஐக்கிய நாடு தான் விரும்பியபடியெல்லாம் மன்ரோ கொள்கையை நெகிழ்ச்சியுடையதாக்கி விளக்கங் காணலாயிற்று. அனைத்து அமெரிக்க தேசிய உணர்விற்கும், இணையற்ற பேரரசுக் கொள்கைக்கும் முன்னோடியாக இக்கொள்கை அமைந்தது எனலாம்.

பயிற்சி வினா

அமெரிக்க வரலாற்றில் மன்ரோக் கொள்கையின் சிறப்பிடத்தைத் திறனாய்வு செய்க.

பாடம் – 10 ஆண்ட்ரூ ஜாக்ஸன் (1829–37)

ஆண்ட்ரூ ஜாக்ஸன் (Andrew Jackson) அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாற்றில் புகழ்பெற்றுத் திகழும் தலைவர்களுள் ஒருவராவார். தனது சொந்த முயற்சியின் மூலமாக அவருக்கு அமெரிக்க அரசியல் துறையில் மிக்க செல்வாக்கு கிட்டியது. டென்னசி (Tennessee) என்னும் இடத்தில் கி.பி. 1767இல் ஜாக்ஸன் பிறந்தார். சட்டக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றபின் வட கரோலினாவில் 1787இல் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். நாளடைவில் செல்வமிக்க வழக்கறிஞராகக் காட்சியளித்தார். பொது மக்களிடையே இருந்த அவரது செல்வாக்கும் நாளடைவில் வளர்ந்து வந்தது. 1790ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர் அமெரிக்க பிரதிநிதிகள் மன்றத்திலும், செனட் சபையிலும் அங்கத்தினராகப் பணியாற்றினார். பின்பு 1804ஆம் ஆண்டு முடிய, டென்னசி மாநிலத்து நீதிபதியாகத் தொண்டாற்றினார்.

ஆனால் 1812ஆம் ஆண்டுப் போரின்போதுதான் ஜாக்ஸனின் புகழ் நாடு முழுவதும் பரவலாயிற்று. அப்போரின் போது ஒரு சிறிய படையை நியூஆர்லியன்ஸ் (New Orleans) நகரிலிருந்து திரட்டிக்கொண்டு அதன்மூலம் பிரிட்டிஷ் படைகளைத் தோற்கடித்த பெருமை ஜாக்ஸனையே சாரும்.

1817இல் மன்ரோ அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது, அவர் போர்த்துறைச் செயலாளர் (Secretary of War) பதவியை ஜாக்ஸனுக்கு அளித்தார். ஜாக்ஸன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 1818இல் செமினோல் இந்தியரின் புரட்சி ஒன்றை அடக்குவதற்கான பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. ஃபுளோரிடாவில் குடிபுகுந்திருந்த இவ்விந்தியர்களை அடக்கியபின், இவர் அப்பகுதியிலுள்ள சில ஸ்பானியக் கோட்டைகளையும் கைப்பற்றினார். ஃபுளோரிடா அமெரிக்கர் வசம் வந்த பொழுது, ஜாக்ஸன் அதன் முதல் அமெரிக்க ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

1820ஆம் ஆண்டுக்குப் பின்பு ஜாக்ஸனுக்கு இருந்த அரசியல் செல்வாக்கு வளர்பிறை போன்று வளரலாயிற்று. 1823இல் செனட் சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1828இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜான் குயின்சி ஆடம்ஸைத் தோற்கடித்து ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார். 1828ஆம் ஆண்டுத் தேர்தல் அமெரிக்க வரலாற்றில் ஒரு புதிய காலக் கட்டத்தை உருவாக்கியது என்று வரலாற்றாசிரியர் சி.பி. ஹில் கூறுகிறார். மேலும் இத்தேர்தலின் மூலம் மக்களின் உண்மையான பிரதிநிதி ஒருவர் வெள்ளை மாளிகையினுள் (White House) அழைக்கப்பட்டார் என்றும் அவ்வாசிரியர் கூறுகின்றார். சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் ஜனாதிபதியாவது இதுவே முதல் தடவை.

ஜாக்ஸன் தமது ஜனாதிபதி தேர்தல் போட்டியில் தனது எதிரியான ஜான் குயின்சி ஆடம்ஸின் ஆதரவாளர்களின் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஜான் குயின்சி ஆடம்ஸ் ஒரு செல்வந்தரென்றும் அரசுக்குச் சொந்தமான வருவாயை சுரண்டித் தின்பவரென்றும் ஜாக்ஸனின் ஆதரவாளர்கள் ஆடம்ஸ் மீது குற்றஞ் சாட்டினர். இதற்கு மாறாக ஜாக்ஸனைப் பற்றி ஆடம்ஸின் ஆதரவாளர்கள் அவர்

தனது மனைவியை அவரது முந்திய கணவரிடமிருந்து விவாகரத்து பெறும் முன்பே தாம் மணந்துவிட்டதாக குற்றஞ் சாட்டினர். இருப்பினும், இறுதியில் ஜாக்ஸன் 178 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். ஆடம்ஸுக்கு 83 வாக்குகளே கிடைத்தன. தேர்தலுக்குப் பின்பும் இருவருக்குமிடையே மனக்கசப்பு சிறிது காலம் இருந்துவந்தது.

ஜாக்ஸனின் பதவியேற்பு அமெரிக்கர் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தமாகக் காட்சியளித்தது என்று புகழ்மிக்க வரலாற்றாசிரியர்களான ஆலன் நெவின்ஸ் மற்றும் ஹென்றி கொமேகரும் கூறுகின்றனர். பதவியேற்கும் சடங்குகள் யாவும் மிக ஆடம்பரமாக நடந்தேறின. பல துறைகளில் பணிபுரியும் பலதர மக்கள் இப்பட்டமேற்பு விழாவில் பங்கு பெற்றனர். மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று. அவ்விழாவில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாக்ஸன் நிகழ்த்திய உரை அரசியல் நுண்ணறிவுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

ஜாக்ஸனது கருத்துக்கள்

அமெரிக்க மக்களுக்கு மற்ற ஜனாதிபதிகளை விட ஒரு நல்ல விதமாகத் தலைமை தாங்கி நடத்துவதற்கான திறமை பெற்றவராக ஜாக்ஸன் விளங்கினார். சாதாரண அமெரிக்க மக்களின் பால் மிக்க அன்பு காட்டினார். தானும் தமது இளமைப் பருவத்தில் பலவித துன்பங்களை அனுபவித்த காரணத்தினால், வறுமையினால் துன்பப்பட்ட மக்களிடம் ஆழ்ந்த அனுதாபம் காட்டலானார். தான் பிறக்கும் முன்பே, தனது தகப்பனாரை இழக்க நேரிட்டது. இளம் பிராயத்தில் அமெரிக்கப் புரட்சியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டார். சிறுவயதிலிருந்தே அவர் ஆங்கிலேயரை வெறுக்கத் தொடங்கினார். சாதாரண மனிதனுக்குப் புதுமையான காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். அத்தகைய மக்களிடமே தனது நம்பிக்கையை வைத்திருந்தார். எல்லோருக்கும் சமமான பொருளாதார சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், ஏகபோக உரிமை (Monopoly) சிறப்புரிமைகள் வழங்கப் படுதல் (special privileges) போன்ற காரியங்களை அடியோடு வெறுக்கலாயினர்.

தாம் எட்டு ஆண்டுக் காலம் பணிபுரிந்து வேலையினின்று 1837இல் ஓய்வு பெறுமுன் ஆற்றிய முடிவுரையில் தாம் ஜனநாயக முறைகளில் எவ்வாறு அதிக நாட்டம் கொண்டிருந்தார் என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினார். "அரசு, பயிரிடு வோர், வேளாளர், தொழில் நிபுணர், மற்றும் தொழிலாளி ஆகியோரின் நலத்தையே எப்பொழுதும் கட்டிக்காக்க வேண்டும்" என்று எடுத்துரைத்தார். தொழிலாளரும் குடியானவரும் ஒன்று சேர்ந்து ஐசுவரியவான்களுடைய செருக்கை அடக்க வேண்டு மென்றே ஜாக்சோனியர்கள் உறுதி பூண்டனர். தடையிலா வர்த்தகத்தை ஆதரிப்பதன் மூலமாகவே மேற்கூறிய குறிக்கோளைச் செயல்படுத்த முடியும் என்று எண்ணினர். சிறிய சொத்து உடையவர்களது நலன் பேணிக் காக்கப்பட வேண்டும். வங்கிகளும், மற்றும் உற்பத்திச் சங்கங்களும் (Corporation) பாதுகாக்கப்பட வேண்டும்; வியாபாரப் போட்டி அனுமதிக்கப்பட வேண்டும். இறுதியாக, அமெரிக்க அரசுக்குப் பாத்திரமான நிலங்களில் மக்கள் குடியேற்றத்தை ஏற்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும். இவைகள் ஜாக்சோனியர்களின் முக்கியக் கருத்துக்களில் சில.

ஆண்ட்ரூ ஜாக்ஸன் ஒரு சீரிய மனிதர். ஒல்லியானதும் வளர்த்தியானதுமான உடலைப் பெற்றவர். ஒரு தூய எல்லைப்புறவாசி (frontiersman). எளிமையும் நேர்மையும் பொருந்திய பேச்சாளி. வேலையில் அமர்ந்திருந்த காலக்கட்டம் முழுவதும் பிறரிடம் அன்பாகவும், மரியாதையுடனும் பழகிவந்தார். எப்பொழுதும் நேர்மையாக நடக்க முயற்சி செய்தார். அமெரிக்கச் சுதந்திரப் போரின் போது போர் வீரராகப் பணியாற்றியதன் விளைவாக அவருடைய உடல் நலம் பாதிக்கப்பட்டது. இருப்பினும், தனது மனோதிடத்தினால் மறுபடியும் நல்ல சுகம் பெற்று தனது பிற்கால வாழ்க்கையை நல்லவிதமாக அமைத்துக்கொண்டார்.

ஜாக்ஸனுக்கு முன்பு ஜனாதிபதியாகப் பணியாற்றிய குவின்சி ஆடம்ஸ் காலத்தில் சிவில் நிர்வாகம் திறமையாகப் பணியாற்றவில்லை. அவரது காலத்தில் சிவில் நிர்வாகம் அரசுடன் சார்ந்திராமல் தனித்தே செயல்பட்டு வந்தது. ஆனால், இப்பழக்கம் ஜாக்ஸனது காலத்தில் மாற்றியமைக்கப்பட்டது. இவரது காலத்தில் ஜாக்ஸனது கட்சியைச் சார்ந்தவர் களுக்கும், அவரது நண்பர்களுக்கும் மட்டுமே நிர்வாகத் துறையில் பல முக்கிய பதவிகள் பரிசாக வழங்கப்பட்டன. இப்பழக்கம் முதல் அமெரிக்கத் தலைவராகிய ஜார்ஜ் வாஷிங்ட னாலும் பின்பற்றப்பட்டது. அவர் கூட்டாட்சிவாதிகளுக்கு மட்டுமே பதவிகளை வழங்கினார். ஜான் குவின்சியின் ஆதரவாளர்கள் பலரை ஜாக்ஸன் பதவிநீக்கம் செய்தார். இம்முறை பல வரலாற்றாசிரியர்களால் கண்டனம் செய்யப்படுகிறது. முந்திய சிவில் நிர்வாகத்திலிருந்து சுங்கவரி அதிகாரிகள், ஆளுநர்கள், அஞ்சல் அதிகாரிகள், மற்றும் எழுத்தர்கள் ஆகியோர்கள் மொத்தம் 900 பேர்கள் வேலையினின்று நீக்கப்பட்டு அவர்களின் இடங்களில் தமது கையாட்களுக்கு அப்பதவிகளைப் பிரித்துக் கொடுத்து விட்டார் ஜாக்ஸன். இது ஒரு மோசமான முறை. இம்முறை பின்வந்த பல குடியரசுத் தலைவர்களாலும் பின்பற்றப்பட்டது. மற்றொரு தவறான முறையும் ஜாக்ஸனால் பின்பற்றப்பட்டது. அதாவது அவர் அமைச்சரவை அங்கத்தினர்கள் அல்லாத பல தோழர்களைக் கலந்து பேசி நிர்வாகம் சம்பந்தமான முடிவுகள் பலவற்றை எடுத்தார். இப்படிப்பட்டோரின் செல்வாக்கு அரசு நிர்வாகத்தைச் சீரான முறையில் நடத்திச் செல்ல ஊக்குவிக்கவில்லை.

ஜாக்ஸனும், தென் கரோலினா மாநிலமும்

தென் மாநிலங்களின் உதவியைக் கொண்டு தான் ஜாக்ஸன் அதிக வாக்குகளைப் பெற்றுக் குடியரசுத் தலைவர் பதவியைப் பெற்றார். ஆனால் அவரது ஆட்சியின்போது தென் மாநிலமான தென் கரோலினா அவருக்குப் பல தொல்லைகள் தந்தது. அம்மாநிலத் தலைவராகத் திகழ்ந்தவர் துணைத்தலைவரான ஜான் சி. கால்ஹூன் என்பவர்தான். சுமார் 1820ஆம் வருடம், இம்மாநிலத்தின் பொருளாதார நிலை சற்று பாதிக்கப்பட்டு இதன் செழிப்பு குன்றியது. பருத்தி பயிரிடப்படுவதற்கான நிலங்கள் யாவும் பயிரிடப்பட்டுவிட்டன. வேறு நிலங்கள் எதுவும் இல்லை. ஆகவே, அநேக குடியானவர் மக்கள் இம்மாநிலத்தைவிட்டு மிஸிசிப்பிப் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்கு விரைந்தனர். இதே சமயம் வடமாநிலங்களில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு அவைகளுடைய பொருளாதார நிலை சீர்பெற்றுச் செல்வமும் செழிப்பும் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்நிலைக்கு முக்கிய காரணம் என்னவென்றால் காங்கிரஸால் இயற்றப்பட்ட காப்புவரிச் சட்டங்களேயாகும். இதனால் தென்கரோலினா மற்ற வட மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்துவந்த பொருட்களின் விலைவாசி அதிகரித்தது.

செல்லுபடியற்றதாக்கும் கோட்பாட்டின் மீதான விவாதம்

காப்புவரிக் கொள்கையை முன்னிட்டு ஜாக்ஸனது முதல் ஆட்சியில் ஒரு பெரிய சிக்கல் எழலாயிற்று. 1828இலும், 1832இலும் இயற்றப்பட்ட காப்புவரிச் சட்டங்கள்படி தென் மாநில மக்கள் தங்களுக்கு வேண்டிய இறக்குமதிப் பொருட்களைக் காப்பு வரியால் காக்கப்பட்ட வடகிழக்கு மாநிலங்களிலிருந்தே பெறவேண்டிய நியதி ஏற்பட்டது. இதனைத் தென் மாநிலங்கள் வெறுத்தன. அவர்கள் நேரடியாக இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் பருத்திக்குப் பண்ட மாற்றாக எளிய விலைக்கு பொருள்களை இறக்குமதி செய்து கொள்ள விரும்பினர். ஆனால், அதற்கு காப்பு வரிச் சட்டங்கள் இடந்தரவில்லை. தென் கரோலினா மாநிலம் இதனைக் கண்டிக்க மாநாடு ஒன்றைக் கூட்டியது. அம் மாநாட்டில் கூட்டாட்சி அரசின் அதிகாரத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அமெரிக்கக் குடியரசுத் துணைத்தலைவர் கால்ஹூன் இத்தீர்மானத்தை முன்னின்று நிறைவேற்றினார். மாநிலங்களுக்கே முழு அதிகாரம் உண்டு என்று கொள்கையை உருவாக்கியவரும் அவரேயாவார். "மாநிலங்களெல்லாம் ஒன்றுகூடி கூட்டாட்சி அரசுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளன. கூட்டாட்சி அரசு அவ்வதிகாரங் களை மீறிச் சட்டங்களை இயற்றினால் அவற்றைச் செல்லுபடி ஆகாதவையென எடுத்துக்கூற மாநிலங்களுக்கு உரிமை உண்டு" என்று கால்ஹூன் வாதாடினார். இதனடிப்படையில் 1832இல் இயற்றப்பட்ட காப்புவரிச் சட்டம் தென் கரோலினா மாநிலத்தில் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டது.

நாட்டின் ஒற்றுமையையும் தேசிய உணர்ச்சியையும் ஊறுவிளைவிப்பதாக செல்லுபடியற்றதாக்கும் கோட்பாடு (Doctrine of nulification) வளர்ந்து வருவதைக் கண்ட ஜாக்ஸன் சினங்கொண்டார். நாட்டின் நலத்தையும் ஒற்றுமையையும் காக்கவும், காங்கிரசின் அதிகாரத்தை நிலைப்படுத்தவும் உறுதி பூண்டார். தென் கரோலினாவை, படை வலிமை கொண்டு இணங்கச் செய்ய, காங்கிரஸ் அடக்கி ஆளும் சட்டம் (Force Act) ஒன்றை இயற்றச் செய்தார். அதே சமயம் ஜாக்ஸன் தென் கரோலினாவுக்கு விட்டுக்கொடுக்கும் வகையில் 1833-இல் காப்புவரிகளின் தொகையைக் கணிசமாகக் குறைத்தார். உடனே தென் கரோலினா கூட்டாட்சி அரசுக்கு எதிராக நடத்திவந்த இயக்கத்தைக் கைவிட்டு புதிய காப்புவரிச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஜாக்ஸன் உறுதிப்பாட்டோடு செயலாற்றியமையால் கூட்டாட்சி அரசின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்ததோடு நாட்டின் ஒருமைப்பாடும் காப்பாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

1832இல் தேர்தல்

1832இல் நடந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சி கட்சியின் சார்பாக ஜாக்ஸனும், தேசிய குடியரசுக் கட்சியின் சார்பாக ஹென்றி கிளே (Henry Clay) என்பவரும் போட்டியிட்டனர். அமெரிக்க வங்கியின் பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டுமா, அல்லது வேண்டாமா என்பதுதான் தேர்தலின் முக்கியப் பிரச்சனையாகக் கருதப்பட்டது.

1816-இல் அமெரிக்க வங்கி, காங்கிரஸால் ஒரு பட்டயத்துடன் உருவாக்கப் பெற்றது. அப்பட்டயம் 20 ஆண்டு காலத்திற்குத் தரப்பட்டிருந்தமையால் 1836இதல் அது புதுப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. ஜாக்ஸன் வங்கியின் பட்டயத்தைப் புதுப்பிக்கக் கூடாதென முடிவு செய்தார். வெகுநாட்களாக அவருக்கு அவ்வங்கியின் மீது வெறுப்பு இருந்து வந்தது. வங்கியானது குறிப்பிட்ட சில கிழக்குப் பகுதி செல்வந்தர்களின் தனியுரிமையாக இருந்ததோடு அவர்களை மேன்மேலும் பணக்காரர்களாக்கவே பணியாற்றியது. இருப்பினும், மொத்தத்தில் அது நாட்டின் நன்மையையே கருதிச் செயலாற்றியது; நாட்டிற்கு நன்மையே ஏற்பட்டது. நிக்கோலாஸ் பிடில் (Nicholas Biddle) என்பவரின் தலைமையில் சீரிய முறையில் இயங்கி வந்தது. ஆனால், நிக்கோலாஸ் ஜாக்ஸனுக்கு எதிராக தேர்தலில் செயலாற்றியிருந்தார். ஜாக்ஸன் 1832ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட நேரிட்டது. அத்தேர்தலில் நிக்கோலாஸ் வங்கியின் பட்டயத்தைப் புதுப்பிப்பதா வேண்டாமா என்ற கொள்கையின் அடிப்படையில் ஜாக்ஸனைப் போட்டியிட அறைகூவல் விடுத்தார்.

1832ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜாக்ஸன் மகத்தான வெற்றி பெற்று இரண்டாம் முறையாக குடியரசுத் தலைவர் பதவிக்கு வந்தார். மாபெரும் வெற்றியை மக்கள் தன்னுடையக் கொள்கைகளுக்குத் தந்த ஆதரவாக ஜாக்ஸன் விளக்கங் கூறினார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் வங்கியிலிருந்த அரசாங்க வைப்பு நிதியையெல்லாம் திரும்பப் பெற்று அவற்றைப் புதிதாக ஏற்படுத்திய மாநில வங்கிகளில் சேமித்து வைத்தார். இச்செய்கையினால் அமெரிக்க வங்கி தானாகவே வீழ்ச்சியுற்றது.

ஜாக்ஸன் வங்கியைக் கலைத்தது ஒரு பெருந்தவறு என்று பலரும் கருதுகின்றனர். செல்வந்தர்களை மட்டும் ஆதரித்து அவர்களின் நலத்தைப் பேணிக் காத்தது என்று குறை கூறப்பட்டாலும் இவ்வங்கியினால் அமெரிக்கா பெற்ற பயன்கள் பல. அமெரிக்கத் தொழிற்சாலைகள் வளர்ச்சிக்கு வங்கி பாடுபட்டது. ஜாக்ஸனது இரண்டாவது பதவிக் காலத்தின் இறுதியில் திடீரென நாட்டில் பணப்புழக்கம் அதிகமாகி நாட்டின் செல்வ நிலையில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது. அம்முன்னேற்றத்தின் அடிப்படையில் குறைபாடுகள் இருந்தமையால் விரைவில் நாட்டின் பொருளாதார நிலையில் மந்தம் ஏற்படலாயிற்று. இதற்கான காரணங்களுள் முதலானது ஜாக்ஸன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வங்கியை அழித்தமையாகும்.

கூட்டாட்சி அரசின் நிதித்தொகை மாநில வங்கிகளில் வைக்கப்பட்டமையால் மாநில வங்கிகளின் ஆதார நிதி நிலைமை உறுதிப்படுத்தப்பட்டது. எனவே, இவ்வங்கிகள் வாணிக ஊகத்திற்கேற்றாற்போல (speculation) தங்களது தொழிலைப் பெருக்கலாயின. கூட்டாட்சியின் வங்கி இப்பொழுது இம்மாநில வங்கிகளைக் கட்டுப்படுத்த இல்லாமல் போனமையால், இம்மாநில வங்கிகள் தங்களது விருப்பம்போல் காகிதப் பணத்தை அச்சிட்டுப் புழங்குமாறு செய்து வந்தன. 1829இல் சுமார் 329 மாநில வங்கிகள் இருந்தன. ஆனால் 1937இல் 788 ஆக அவற்றின் எண்ணிக்கை உயர்ந்திருந்தது.

தெற்கு, மேற்கு மாநிலங்களில் இத்திடீர் செல்வப்பெருக்கைச் சிறப்புறக் காண முடிந்தது. மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், சாலைகளும், கால்வாய்களும் அமைக்கப் பட்டு போக்குவரத்து வசதிகள் பெருகியதாலும் நிலங்களின் விலை வெகு வேகமாக

உயர்ந்தது. மக்களும் கடன் மேல் கடன் பெற்று நிலங்களை வாங்குவதில் ஆர்வங் கொண்டனர். மாநில அரசுகளும் வருங்கால முன்னேற்றத்தை மனதில் கொண்டு சாலைகள் அமைக்கவும், கால்வாய்கள் வெட்டவும், இருப்புப்பாதைகள் போடவும் ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டன. இவற்றால் உடனடியாகப் பலனேதும் கிட்டவில்லை. இவற்றிற்கெல்லாம் மாநில வங்கிகள் பாதுகாப்பற்ற காகிதப் பணத்தை ஏராளமாக அச்சிட்டு வழங்கிவந்தன. வெளிநாட்டு நிதியாளர்களும் ஏராளமாக முதலீடு செய்யலாயினர்.

ஜாக்சனும் அவரது ஆலோசனைக்காரர்களும், நாட்டில் தாண்டவமாடிய பண வீக்கத்தையும், பாதுகாப்பற்ற காகிதப் பணத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் நாணயச் சுற்றறிக்கை (The Specie Circular 1816) ஒன்றை வெளியிட்டனர். அதன்படி கூட்டாட்சி அரசுக்குச் சொந்தமான நிலங்களை விற்று வந்த அலுவலகங்கள், விற்கப்படும் நிலத்திற்கான தொகையை நாணயமாகவே பெறவேண்டுமென கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதனால், காகிதப் பணத்தின் மதிப்பு திடீரெனக் குறையலாயிற்று. வெளிநாட்டு நிதியாளர்கள் காகிதப் பணத்தைப் பெற மறுத்தனர். மாநில பாங்குகள் மக்களுக்குக் கொடுத்திருந்த பணத்தைத் திருப்பிக் கேட்கலாயின. இதனால் மக்களிடையே பீதி உண்டாயிற்று. சில மாநில பாங்குகள் நாணயங்களைத் தரமறுத்தன; சில தங்களது கதவுகளை மூடின. இதனால் கடைகள் மூடப்பட்டன. தொழிற்சாலைகள் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டன. பலர் வேலை இழந்தனர். வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் தலைவிரித்தாடியது. தென் மாநிலங்களில் பருத்தியின் விலை குறைந்து போய் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடந்தது. இந்நிலையில் ஜாக்ஸனது இரண்டாவது பதவிக் காலம் முடிவுற்றது. சில ஆண்டுகள் கழித்து காங்கிரஸ் கருவூலச் சட்டம் (Independent Treasury Act 1840) ஒன்றை இயற்றி, கூட்டாட்சி அரசின் நிதியினைக் கவனித்துக் கொள்ள மாநிலந்தோறும் கருவூலங்களைத் தோற்றுவித்தது. காகிதப் பணமும் கூட்டாட்சி அரசால் அச்சிடப்பட்டு பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றால் நிதி நிலைமை ஓரளவு சீரடைந்தது.

ஜாக்ஸனது வெளிநாட்டுக் கொள்கை

வெளிநாட்டுத் துறையில் ஜாக்ஸன் முந்தியத் தலைவரான ஆடம்ஸைவிட சாமர்த்தியம் வாய்ந்தவராகக் காட்சியளித்தார். மேற்கிந்தியத் தீவுகளுடன் இங்கிலாந்து வாணிபத்தொடர்பு மேற்கொண்டது. இங்கிலாந்து அரசுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டு மேற்கிந்தியத் தீவுகளுடன் அமெரிக்க ஐக்கியநாடும் தொடர்பு கொள்ள ஆவன செய்தார் ஜாக்ஸன். பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நடைபெற்ற போர்களின் போது பிரான்சால் கைப்பற்றப்பட்ட கப்பல்களுக்கான இழப்பீட்டுத் தொகையை தரும்படி ஜாக்ஸன் பிரெஞ்சு அரசைக் கேட்டார். முதலில் பிரான்சு இத்தொகையைத் தர மறுத்தது. அதைக்கண்ட ஜாக்ஸன் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு உடைமைகள் அனைத்தையும் பறிமுதல் செய்ய தனக்கு உரிமையளிக்கும்படி காங்கிரசை வேண்டினார். இதனை அறிந்த பிரெஞ்சு அரசு உடனடியாக இழப்பீடு அளித்தது. இப்படி மிரட்டல்வழி இராஜதந்திரம் (shirt sleeve diplomacy) மூலம் ஜாக்ஸன் அமெரிக்காவுக்குச் சில நன்மைகளைத் தேடித்தந்தார்.

ஜாக்ஸனும் மெக்ஸிகோவும்

மெக்ஸிகோ அரசுக்குட்பட்ட டெக்சாஸ் (Texas) மாநிலத்தில் மெக்ஸிகோ அரசை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். மெக்ஸிகோ அரசானது டெக்சாஸின் கிளர்ச்சி அமெரிக்க ஐக்கிய நாட்டின் தூண்டுதலின் விளைவே என்று பறைசாற்றியது. இது உண்மைதான். டெக்சாசைக் கைப்பற்ற ஜாக்ஸன் திட்டமிடாவிடிலும், டெக்சாஸ் மாநிலத்தின் கிளர்ச்சியையும், பின்னர் அது மெக்ஸிகோவின் பிடியிலிருந்து பிரிந்து 1837இல் தனிக்குடியரசாக (Lone Star Republic) மாறிய போதும் உடனே அமெரிக்க அரசின் ஒப்புதலைத் தெரிவித்தார்.

ஜாக்ஸன் ஆற்றிய இதர தொண்டுகள்

ஜாக்ஸனது காலத்தில் அமெரிக்க மக்களுக்குப் பலவித நன்மைகள் கிட்டின. வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டது. மேல்நிலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. தொழிலாளருக்குத் தக்க கல்விப் பயிற்சி புகட்டப்பட்டது. ஜாக்ஸன் நிர்வாகத்துறைக்கு ஒரு உயரிய இடத்தைப் பெற்றுத்தந்தமை அவராற்றிய பணிகளில் தலையாயதானது. தன்னுடைய உறுதிப்பாட்டாலும், அதிகார மனப்பான்மை கொண்ட உள்ளப் பாங்காலும், மக்களது ஆதரவாலும் குடியரசுத் தலைவர் பதவியினை வலிமை மிக்கதொரு அங்கமாக உருவாக்கினார். மக்களால் நேரடியாக முதலாவதாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட குடியரசுத் தலைவர் என்ற முறையில், தம்மை மக்களின் பிரதிநிதியாக ஜாக்ஸன் பெருமையுடன் கருதினார். குடியரசுத் தலைவருக்கிருந்த தள்ளுரிமை அதிகாரத்தையும் (Veto Power) இவர் அதிக அளவில் பயன்படுத்தினார். பொது மக்கள் குடியாட்சியில் கொண்டிருந்த பேரார்வத்திற்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் வலிமைக்கும் ஜாக்ஸன் ஒரு சின்னமாக விளங்கினார்.

பயிற்சி வினாக்கள்

1) ஜாக்ஸனது ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.

2) ஜாக்சோனிய மக்களாட்சி தத்துவத்தை விளக்குக.

பாடம் – 11 தேசிய உணர்வின் துவக்கம்

பிரிட்டனுடனான இரண்டாவது போரில் (1812) அமெரிக்கர் பெற்ற வெற்றி அவர்கட்கு பெருமிதத்தைத் தந்தது. ஒற்றுமையுணர்வுடன் செயலாற்ற முற்பட்டனர். நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டலாயினர். ஆனால் இப்போக்கு ஏறத்தாழ பத்தாண்டுகட்கே நீடித்ததெனலாம். இடையில் அவ்வப்போது பிரிவினைச் சக்திகளும், வகுப்பு வாதங்களும் எழலாயின. இருப்பினும் இவற்றால் நாட்டுப்பற்று பாதிக்கப்படவில்லையென்றே சொல்லலாம். கெண்ட் உடன்படிக்கையை அடுத்த சில ஆண்டுகட்குக் கட்சிகளின் அடிப்படையிலான அரசியல் செயல்முறை இல்லாதிருந்தன. இதனால் அரசியலில் பூசல்களும், பிரிவினைகளும் இல்லாதிருந்தன. எனவே, இவ்வாண்டுகளை நல்லுறவுக்காலம் என்றழைத்தனர். அதன் பயனாக அமெரிக்கர்களிடம் தேசிய உணர்வு தலைதூக்கியது.

கூட்டாட்சிவாதிகள் அரசியல் வானில் தேய்பிறையாக இருந்தபோதிலும், அவர்கள் உருவாக்கிவிட்டுச் சென்றிருந்த பல கொள்கைகளை அவர்களையடுத்து வந்த குடியரசுக் கட்சியினர் தொடர்ந்து பின்பற்றினர். எடுத்துக்காட்டாக, இளைய குடியரசுக்கு வலுவூட்ட வலிமை மிக்க மைய ஆட்சியை நிறுவுவதில் கூட்டாட்சிவாதிகள் கவனம் செலுத்தினர். ஆனால் குடியரசுக் கட்சியினரோ வலிமைமிக்க மைய ஆட்சியை விரும்பவில்லை. எனினும் பதவிக்கு வந்தபோது நாட்டின் நலன் கருதி கூட்டாட்சிவாதிகள் உருவாக்கிவிட்டுச் சென்றிருந்த அதே கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். 1812-ஆம் ஆண்டுப்போருக்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாட்டினை வலிமை மிக்க நாடாக்குவதிலும், பொருளாதாரத்தில் பிற நாடுகளின் உதவியை நாடாமல் தன்னிறைவு பெறவும், தேசிய ஒற்றுமையை நிறுவுவதிலும், பிரிவினைச்சக்திகளைக் களைவதிலும் குடியரசுக் கட்சியினர் முனைந்தனர்.

தொழிற்புரட்சி அமெரிக்காவுக்கு வருதல்

அமெரிக்கா உரிமை பெறும்முன் தாய்நாடான பிரிட்டன் தன்னலங்கருதி அமெரிக்காவில் செய்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்காதிருந்தது. உரிமைபெற்ற பிறகு அமெரிக்கர் உற்பத்தியைப் பெருக்க விழைந்தபோதிலும் போதிய மூலதனம், கருவிகள், அனுபவம் இல்லாது இடர்பட்டனர். இந்நிலை 1812ஆம் ஆண்டுப் போரின் விளைவாக மாறலாயிற்று. போரின் போதும், போருக்குப் பின்னும் செய்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே செய்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்டு மக்களுக்குத் தேவையான அன்றாடப் பொருட்களை உற்பத்தி செய்ய ஆங்காங்கே சிறு தொழிற்சாலைகள் தோன்றின. வெளிநாட்டுச் சரக்குகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்தமையால் உள்நாட்டில் செய்யப்பட்ட பொருட்கள் நன்கு விற்பனையாயின. பெருநிலக்கிழார்களும், பணம் படைத்தோரும் சிறு தொழில்களில் தங்களது செல்வத்தை முதலீடு செய்ய முற்பட்டனர்.

ஆலைத் தொழிலின் தோற்றம்

தொழிற்சாலை முறை பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டனில் தோன்றிற்று. தங்களுடைய தொழில் நுணுக்கங்களைப் பிறநாட்டார் கற்றுக்கொள்ளா வண்ணம்

பிரிட்டிஷார் தடைகளை விதித்தனர். பிரிட்டனைவிட்டு இயந்திரங்களையோ, அவற்றின் வரைபடங்களையோ எடுத்துச்செல்லாது தடுத்தனர். ஆனால் பிரிட்டனிலிருந்து அமெரிக்கா வந்து குடியேறிய சாமுவேல் சிலேட்டர் (Samuel Slater) என்பவர் இயந்திர அமைப்பை நினைவில் இருத்திக் கொண்டுவந்து, அமெரிக்காவில் முதன் முறையாக நெசவு இயந்திரங்களை அமைத்தார். புதிய இங்கிலாந்துப் பகுதியில் 1800ஆம் ஆண்டளவில் பதினைந்து நெசவாலைகள் இயங்கின. பலர் இவற்றில் முதலீடு செய்தனர். மலைப் பகுதியிலிருந்து வந்த இளைஞர்கள் ஆலைகளில் விரும்பி வேலை செய்யலாயினர். பல ஆறுகள் ஓடியமையால் இப்பகுதியில் ஆலைகளை இயக்க, நீர்விசை பயன்படுத்தப்பட்டது. போதிய மூலதனம், வேலை தெரிந்த தொழிலாளிகள், நீர்விசை ஆகிய மூன்றும் புதிய இங்கிலாந்துப் பகுதியில் இருந்தமையால் அமெரிக்காவில் தொழிற்புரட்சி இங்குதான் துவங்கிற்று.

பிரிட்டனிலிருந்து நினைவாற்றலில் கொண்டுவரப்பட்ட இயந்திரங்களின் அமைப்புகளோடு மேலும் பல புதிய இயந்திரங்களையும் அமெரிக்கர் உருவாக்க முற்பட்டனர். 1796இல் எலிவிட்னி (Eli Whitney) என்பவர் நியூஹேவனில் துப்பாக்கிகள் செய்வதில் ஒரு புதிய முறையைக் கையாண்டனர். அதற்கு முன் ஒவ்வொரு துப்பாக்கியும் சற்று வேறுபட்டு இருக்கும். ஆனால் விட்னி செய்த முறையில் எல்லா துப்பாக்கிகளும் ஒரே சீரான அளவினதாய், மாற்றக்கூடிய உறுப்புகளைக் கொண்டதாய் விளங்கின. வெவ்வேறு பகுதிகளை ஒரே அளவில் செய்து எளிதில் இணைக்கும் முறை பெரிதும் வரவேற்கப்பட்டது. இம்முறையில் கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள் மற்றும் பல இயந்திரங்கள் ஏராளமாகச் செய்யப்படலாயின. இதனாலேயே உலக அரங்கில் சிறந்த தொழில் வளமுடைய நாடாக விரைவில் அமெரிக்கா சிறப்புறத் திகழத் துவங்கிற்று.

குடியரசுக் கட்சி நாட்டுப்பற்றை வளர்த்தல்

கூட்டாட்சிவாதிகள் பின்பற்றிய பல அடிப்படைக் கொள்கைகளைக் குடியரசுக் கட்சியினர் பின்பற்றலாயினர். எனவே, கூட்டாட்சிவாதிகள் செய்வதறியாது குடியரசுக் கட்சியினர் துவக்கத்தில் கொண்டிருந்த பல பிற்போக்கான கொள்கைகளை மேற்கொள்ள லாயினர். மாநில உரிமைகளுக்காகவும், வலிமைமிக்க மைய ஆட்சிக்கெதிராகவும் கூட்டாட்சிவாதிகள் வாதிடலாயினர். இதற்கு நேர்மாறாகக் குடியரசுக் கட்சியினர் கூட்டாட்சி அரசின் அதிகாரங்களைப் பெருக்கி தேசிய உணர்வை நாட்டுப்பற்றோடு இணைக்க முயற்சித்தனர்.

குடியரசுக் கட்சியின்ருள் ஒரு சிறுபான்மையினர் பழமைவாதிகளாகவே இருந்தனர். பழைய மாநில உரிமைக் கோட்பாட்டினையும், வலிமையற்ற மைய அரசுக்காகவும் அவர்கள் பரிந்து பேசினர். இவர்களைப் பழைய கோட்பாட்டினர் என்றழைப்பர். ஜான் டெய்லர் (John Taylor), ஜான் ராண்டால்ப் (John Randolph) ஆகியோர் அப்பிரிவில் இடம்பெற்றனர். எனினும் நாட்டுப்பற்றுடையவர்களின் எண்ணிக்கையே குடியரசுக் கட்சியில் மிகுந்திருந்தது. இவர்களெல்லாம் இளைய குடியரசுவாதிகள் என்றழைக்கப் பட்டனர். இவர்களின் தலைவர்களாய் திகழ்ந்த ஹென்றி கிளே (Henry Clay), ஜான் கால்ஹூன் (John Calhoun) ஆகியோரெல்லாம் வயதில் இளையோராயிருந்தனர். முன்பு அலெக்சாண்டர் ஹாமில்டன் கடைப்பிடித்த அதே திட்டங்களைத்தான் கிளே பின்பற்ற

லாயினார். ஹாமில்டனுக்கும், கிளேவுக்குமிடையே ஒரு வேறுபாடிருந்தது, ஹாமில்டன் சமூகத்தில் மேட்டுக் குடியினரிடையே மட்டும் தனதுதிட்டங்கட்கு ஆதரவு தேடினார். ஆனால் கிளே அமெரிக்க மக்கள் அனைவரின் ஆதரவையும் வேண்டினார். வேளாண்மை யிலீடுபட்டிருந்த தெற்கு மேற்கு மாநில மக்களின் ஒத்துழைப்போடு தேசியத் தன்மை பொருந்திய திட்டங்களை உருவாக்கினார். இதற்கு 'அமெரிக்க அமைப்பு முறை' (American System) என்று பெயர். கிளேயின் திட்டங்கட்கு தென் கரோலினாவைச் சேர்ந்த கால்ஹூன் பெரும் ஆதரவாக விளங்கினார். முன்பு வணிகர் நலனைப் பேணி, கூட்டாட்சிவாதிகளின் கோட்டையெனத் திகழ்ந்த புதிய இங்கிலாந்து இப்பொழுது குறுகிய மனப்பான்மையோடு தேசியத் திட்டங்களை எதிர்க்கலாயிற்று. அதன் தலைவராக டேனியல் வெப்ஸ்டர் (Deniel Webster) என்பவர் சட்டமாமன்றத்தில் கிளேயின் திட்டங்களைக் கடுமையாக எதிர்த்து வாதிட்டார்.

நாட்டுப் படையை வலுப்படுத்தல்

1812ஆம் ஆண்டுப் போர் நல்லதொரு பாடத்தை அமெரிக்கருக்குக் கற்பித்தது. நாட்டுப் படையிலிருந்த குறைகள் நன்கு வெளிப்பட்டன. அயல்நாட்டு எதிரிகளின் தாக்குதலினின்று நாட்டைக் காக்கவும், எல்லைப் புறங்களிலிருந்து எழக்கூடிய தர்க்குதல்களைக் களைந்தெறியவும் வலிமை பொருந்திய இராணுவம் கட்டாயம் தேவை என்பதை உணர்ந்தனர். நிலையான படையொன்று நாட்டிற்குத் தேவையில்லை என்ற குடியரசுக் கட்சியினரது பழைய கொள்கை முற்றிலும் தவறானதென்பதும் தெளிவாயிற்று. நிலையான படையிருந்தால் ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் அதனைத் தவறான வழிகளில் பயன்படுத்தி மக்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடுமென்ற அச்சம் மறைந்தது. ஜேம்ஸ் மாடிசன் சட்டமாமன்றத்தின் இசைவோடு 10,000 வீரர் கொண்ட ஒரு நிலையான படையைக் கூட்டினார். ஜேக்கப் பிரவுன் என்பவரை வடபகுதித் தளகர்த்த ராகவும், ஆண்ட்ரூ ஜாக்சனைத் தென்பகுதித் தளகர்த்தராகவும் நியமித்தார். கடற்கரை யோரப் பகுதிகளின் பாதுகாப்புக்காகக் கரையோரக் காவல் படை வலுப்படுத்தப்பட்டது. போர்க்கப்பல்கள் கட்டப்பட்டன. சட்டமாமன்றமும் தாராளமாக நிதியொதுக்கிற்று.

தேசியத் தன்மை பொருந்திய அரசுப் பணிகள்

1) இரண்டாவது பாங்கு அமைக்கப்படல்

ஹாமில்டனால் உருவாக்கப்பட்ட முதல் பாங்கின் பட்டயம் 1811இல் முடிவுற்றது. அதனைச் சட்டமாமன்றம் புதுப்பிக்காது விடவே மாநிலங்களில் பாங்குகள் பல தோன்றின. இவற்றின் நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்தவில்லை, இதனால் நாட்டின் நிதிநிலைமை பெருங்குழப்பத்திற்குள்ளாகியது. எனவே, நாட்டில் நிலவிய பணவீக்கத்தைச் சரிக்கட்டவும், முறையற்ற பாங்கு நடவடிக்கைகளை எடுக்கவும் மைய பாங்கு ஒன்று கட்டாயம் தேவையென உணரப்பட்டது. கிளேவும், கால்ஹூனும் பெருமுயற்சி செய்து இரண்டாவது அமெரிக்க ஐக்கிய நாட்டு பாங்கினை உருவாக்குவதற்கான பட்டயத்தைச் சட்டமாமன்றத்தில் இயற்றினர். முப்பத்தைந்து மில்லியன் டாலர் ($ 35,000,000) மூலதனமாக வைக்கப்பட்டது. இதில் ஐந்தில் ஒரு பங்கை மையக் கூட்டாட்சி அரசு ஏற்றது. எஞ்சியவற்றைத் தனியார் மனமுவந்து அளித்தனர். பாங்கின் தலைமைச்

செயலகம் பிலடெல்பியாவில் அமைக்கப்பட்டு, இதன் கிளைகள் நாடெங்கிலும் நிறுவப்பட்டன. கூட்டாட்சி அரசு வரிப்பணத்தையும், பிற வருவாய்களையும் இப்பாங்கில் போட்டு வைத்து, செலவுகளையும் இதன் வழியாகவே செய்தது. இப்பாங்கு பணத்தாளை அச்சிட்டு வழங்கியமையால் பணத்தாளின் மதிப்பு உயர்ந்து மக்களிடையே நம்பிக்கை யேற்பட்டது.

2) காப்பு வரிகள் விதிக்கப்படல்

புதியதாகத் துவக்கப்பட்ட தொழிற்சாலைகளில் செய்பொருட்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. 1812ஆம் ஆண்டுப்போர் முடிவுற்ற பின் பிரிட்டிஷ் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை அமெரிக்காவில் மீண்டும் விற்க பெருமுயற்சி செய்தனர். விலைக் குறைப்பு செய்தனர். அமெரிக்கரை எப்படியாவது தொழிற் துறையில் பின்வாங்கச் செய்ய வேண்டுமென திட்டமிட்டனர். எனவே அமெரிக்க உற்பத்தி யாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இறக்குமதிப் பொருட்கள் மீது கூடுதலான வரிகளை விதிக்கக் கூட்டாட்சி அரசை வேண்டினர். அதற்கிணங்க கூட்டாட்சி அரசு 1816இல் காப்பு வரிகளை விதித்தது. காப்பு வரிகளை விதிக்கும் கொள்கையினை முதன்முதலாக ஹாமில்டன் வெளியிட்டிருந்தார். இவற்றை இப்பொழுது குடியரசுக்கட்சியினரே ஏற்றுக்கொண்டு செயற்படுத்தலாயினர்.

உள்நாட்டுப் போக்குவரத்து வசதிகள்

மக்களிடையே தேசிய உணர்வையும், நாட்டுப் பற்றையும் வளர்க்கும் வகையில் நாட்டின் பல பகுதிகளை இணைக்கும் வகையில் பல சாலைகளும், கால்வாய்களும் அமைக்கப்பட்டன. 1812ஆம் ஆண்டுப் போரின்போது நாட்டில் போதிய அளவுக்கு நல்ல சாலைகள் இல்லாமையின் குறைபாட்டை அனைவரும் உணர்ந்தனர். அலெகனி மலைக்கு அப்பால் மேற்கே மக்கள் பெருமளவில் சென்று குடியேறியிருந்தனர். தங்களது செய்பொருட்களைச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல மிசிசிபி நதியையும், அதன் கிளையாறுகளையுமே நம்பியிருந்தனர். எனவே அப்பகுதி மக்களெல்லாம் மேற்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் இணைக்கும் வகையில் நல்ல சாலைகளும் கால்வாய்களும் தேவையென கேட்கலாயினர்.

சட்டமாமன்றம் ஏற்கனவே 1806இலேயே முதல் தேசியச்சாலை போடுவதற்காக நிதியளித்திருந்தது. இதற்குக் கம்பர்லாந்துச் சாலை என்று பெயர். இச்சாலை பின்னர் மிசிசிபி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் பல தேசியச் சாலைகளை அமைக்கவும், கால்வாய்களை வெட்டவும் கால்ஹூன் போன்ற தீவிரவாதிகள் 1817இல் $ 81,500,000 நிதியுதவி கேட்டு ஒரு மிகையூதிய சட்டவரைவை (Bonus Bill) இயற்றினர். ஆனால் இதனைக் குடியரசுத் தலைவர் மாடிசன் தள்ளுபடி செய்துவிட்டார். சாலைகளுக்கும், கால்வாய்களுக்கும் பணம் செலவிட கூட்டாட்சி அரசுக்கு அரசியலமைப்பில் அதிகாரம் தரப்படவில்லையென மாடிசன் விளக்கம் தந்தார். இதனை எதிர்த்து, உள்ளடங்கிய அதிகாரக் கோட்பாட்டின்படி கூட்டாட்சி அரசுக்கு பொதுப்பணிகட்குப் பணம் செலவிட உரிமையுண்டு என கால்ஹூன் வாதாடினார்.

குடியரசுத் தலைவருக்கும், சட்டமாமன்ற உறுப்பினர்கட்குமிடையே கருத்து வேறுபாடு நிலவவே பல மாநில அரசுகளும், தல ஆட்சி மன்றங்களும் தாமே பணம் செலவழித்து சாலைகள், கால்வாய்கள் அமைத்தனர். இவற்றுள் குறிப்பிடத்தக்கது ஈரி கால்வாயாகும் (Erie Canal). இக்கால்வாய் அதே பெயர்கொண்ட ஏரியையும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலோடு சேரும் ஹட்சன் ஆற்றையும் இணைத்தது. இதனால் அட்லாண்டிக் கரையோரத்திலிருந்து ஐம்பெரும் ஏரிகள் வரை ஒரு பெருவழி அமைந்தது. பண்டங்களை ஏற்றிச்செல்வதற்கான கட்டணத்தொகை 80 சதவீதம் குறைந்தது. ஐம்பெரும் ஏரிகளையொட்டி பவல்லோ (Buffalo), கிளீவ்லண்ட் (Cleveland), டெட்ராய்ட் (Detroit) ஆகிய நகரங்கள் முக்கியத்துவம் பெறலாயின. இதுபோன்று மேலும் பல கால்வாய்கள் வெட்டப்பட்டன. வெல்லண்டு கால்வாய் (Welland Canel) ஒண்டோரியா ஏரியையும் (Lake Ontario) ஈரி ஏரியையும் இணைத்தது. இது கனடாவில் வெட்டப்பட்டது. சூ கால்வாய் (Soo Canal) மிச்சிகன் மாநிலத்தில் வெட்டப்பட்டது.

தேசிய உணர்வை வளர்ப்பதில் தலைமை நீதிமன்றம் ஆற்றிய பணி

இளம் அமெரிக்கக் குடியரசில் நாட்டுப் பற்றை வளர்ப்பதில் நீதித்துறையும் தனது பங்கைச் சிறப்புற ஆற்றியது. ஹென்றி கிளே பொருளாதார அடிப்படையிலான தேசியத் திட்டங்களை உருவாக்கி அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வலுவூட்டினார். அதேபோல் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான ஜான்மார்ஷலும் தமது தீர்ப்புகளின் மூலம் தேசிய உணர்வை வளர்த்தார். ஜான்மார்ஷல் (1755-1835) வர்ஜீனியா மாநிலத்தைச் சேர்ந்தவர். வில்லியம் மேரி கல்லூரியில் சட்டக்கல்வி பயின்றார். அமெரிக்கப் புரட்சியில் பங்கேற்றார். வர்ஜீனியா மாநிலச் சட்டமன்றத்து உறுப்பினராகவும், பின்னர் அரசியலமைப்பை ஏற்க கூட்டப்பட்ட வர்ஜீனியாச் சிறப்பு மாநாட்டு உறுப்பினராகவும் பணியாற்றினார். ஜார்ஜ் வாஷிங்டன் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது ஜான்மார்ஷலை நியாயத்துறைத் தலைவராக நியமித்தார். அப்பதவியை மார்ஷல் ஏற்கவில்லை. பிரான்சுக்கு சென்ற X, Y, Z குழுவின் ஓர் உறுப்பினராக மார்ஷல் சென்று வந்தார். பின்பு சட்டமாமன்றத்து உறுப்பினராக (1799-1800) பணியாற்றினார். ஜான் ஆடம்ஸ் குடியரசுத் தலைவரானபோது ஓராண்டு வெளியுறவு அமைச்சராகத் திகழ்ந்தார். பின்னர் 1801இல் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அப்பதவியில் முப்பத்தைந்து ஆண்டுகள் சிறப்புற பணியாற்றினார்.

ஜான்மார்ஷல் பதவியேற்றபோது தலைமை நீதிமன்றம் வலுவற்றதாய், அதற்குரிய மதிப்பினைப் பெறாமல் இருந்துவந்தது. இப்போக்கினை மாற்றித் தலைமை நீதிமன்றத்தை ஆற்றலும், மேன்மையும் படைத்த ஒரு தீர்ப்பு மன்றமாக மாற்றியமைத்த பெருமை ஜான்மார்ஷலையே சாரும். குடியரசுத் தலைவரையும், சட்டமாமன்றத்தையும் காட்டிலும் மதிப்புமிக்க ஓர் அங்கமாக நீதித்துறையை அரசியலமைப்பில் மார்ஷல் இடம் பெறச் செய்தார். அவர் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் மொத்தம் 1106 தீர்ப்புகள் வழங்கப்பட்டன. இவற்றுள் 519 தீர்ப்புகளைத் தானே

எழுதினார். எட்டேமுறைதான் சிறுபான்மை எண்ணிக்கையோடு தீர்ப்பு வழங்கியிருந்தார். நீதிபதிகளிடையே ஒற்றுமையுணர்வை வளர்த்து, கருத்து வேறுபாடில்லாது சிறப்புற நீதித்துறையை நடத்தினார். இவரது பதவிக்காலத்தில் ஏறத்தாழ ஐம்பது வழக்குகள் அரசியலமைப்பைச் சார்ந்தவையாக எழுந்தன. அவை அனேகமாக எல்லா அங்கங்களோடும் தொடர்புடையனவாயிருந்தன. அவற்றையெல்லாம் தனது சிறந்த அனுபவத்தாலும், அரசியல் நுண்ணறிவாலும் சிறப்புறத் தீர்த்து வைத்தார். ஏனவே அவருடைய நீண்ட பதவிக்காலம் முடிவுற்றபோது அமெரிக்க அரசியலமைப்பு பெரும்பாலும் ஜான்மார்ஷலின் விளக்கம் பெற்றதாகவே வளர்ந்திருந்தது.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்தின் மேன்மையை நிலைநாட்டல்

மார்ஷலின் பதவிக் காலத்தின்போதுதான் தலைமை நீதிமன்றத்திற்கே உரிய நீதிமறு ஆய்வு (Judicial Review) அதிகாரம் உறுதியாக்கப்பட்டது. அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட சிக்கல்களையெல்லாம் விசாரித்துத் தீர்த்து வைக்கும் பொறுப்புத் தலைமை நீதிமன்றத்தைச் சார்ந்திருந்தது. சட்டமாமன்றமும், மாநிலச் சட்டமன்றங்களும் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்பு நெறிக்கு உட்பட்டவையா அல்லது முரணானவையா என்று கூறும் அதிகாரம் தலைமை நீதிமன்றத்திற்கு உண்டு. இதனையே நீதிமறு ஆய்வு என்பர். ஒரு சட்டம் இயற்றப்பட்டதும் அது அரசியலமைப்பு கூறும் நெறிமுறைகட்குட்பட்டதா இல்லையா என்பதை உடனே கூறும் பணி தலைமை நீதிமன்றத்துக்கு இல்லை. இயற்றப்படும் சட்டங்கள் மீது யாரேனும் வழக்கு தொடுத்தால், அந்த நிலையில் தலைமை நீதிமன்றம் தனது இறுதியான தீர்ப்பையளித்திடும்.

கூட்டாட்சி அரசின் இறைமையை வலியுறுத்தல்

தேசிய உணர்வும், நாட்டுப்பற்றும் வளர்ந்துவந்த அந்நாளில் கூட்டாட்சியரசின் அதிகாரமும், பணிகளும், பொறுப்புகளும் நாளுக்குநாள் பெருகிக் கொண்டேயிருந்தன. கூட்டாட்சியரசின் இப்புதிய நிலையை உறுதிப்படுத்துவதில் ஜான்மார்ஷலும் தனது பணியைச் சிறப்புற ஆற்றினார். கூட்டாட்சி அரசின் சட்டங்களையும், மாநில சட்டங்களையும் மறு ஆய்வு செய்யும்போது தலைமை நீதிமன்றம் "உள்ளடங்கிய அதிகாரக் கோட்பாட்டினை" (implied powers) ஏற்றுக் கொண்டு, கூட்டாட்சியரசு அதன் அதிகாரங்களைச் செயல்படுத்தவும், அதன் இறைமைத் தன்மையை நிலைநாட்டவும் உதவிற்று.

தனிநபரின் சொத்துரிமைக்குப் பாதுகாப்பளித்தல்

இளங்குடியரசாக அமெரிக்கா வளர்ந்தபோது பல மாநிலங்களில் தீவிரக் கருத்துக்களைக் கொண்ட மக்களாட்சிக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். தனிப்பட்ட குடிமக்களின் சொத்துரிமைக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் சட்டங்கள் இயற்றப்படுவதை மார்ஷல் விழிப்போடு பார்த்துவந்தார். அவைபற்றிய வழக்குகள் வந்தபோதெல்லாம் தனியார் சொத்துரிமையைக் காக்கும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க சில தீர்ப்புகளை மார்ஷல் வழங்கினார்.

இப்படிப் பலவகையிலும் மார்ஷல் கூட்டாட்சி அரசுக்கு வலிமையூட்டி அதை உயிருள்ள, வளரும் ஒரு நிறுவனமாக மாற்றியமைத்தார். தேசிய நோக்கில் அரசியலமைப்புக்கு புதிய விளக்கங்கள் பல தந்தார். அஃது அவர் அமெரிக்கக் கூட்டாட்சி அமைப்பு முறைக்கு ஆற்றிவிட்டுச் சென்ற நிலையான தொண்டாகும். தேசிய உணர்வு உருவாகி, வளர்ச்சியுற்ற நல்லுறவுக் காலத்தின்போது அமெரிக்காவில் கிளே, மார்ஷல், மன்றோ ஆகிய முப்பெரும் அரசியல் விற்பன்னர்களும் தத்தம் பணியைச் செவ்வனே ஆற்றியிருந்தனர். ஹென்றி கிளே தமது அமெரிக்க அமைப்பு முறையின் மூலம் பொருளாதாரத்தில் தேசிய உணர்வை உருவாக்கினார். நினைவிலிருந்து நீங்காத் தனது தீர்ப்புகளின் மூலம் ஜான்மார்ஷல் வலிமை மிகுந்த தேசிய அரசை அமைப்பதில் உதவினார். தாமஸ் மன்றோ வெளிநாட்டுறவில் தேசியக் கொள்கையொன்றை வகுத்து உலக அரங்கில் அமெரிக்காவின் பெருமையை நிலைநாட்டினார்.

பயிற்சி வினா

அமெரிக்காவில் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசிய உணர்வு வளர வழிவகுத்த சூழல்கள் யாவை?

பாடம் – 12 மேற்கு நோக்கி விரிவடைதல் (முதல் கட்டம் – 1840 வரை)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து அமெரிக்க மக்கள் மேற்கு நோக்கி குடி பெயரலாயினர். 1850ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ பசிபிக் கடற்கரை வரை சென்றடைந்தனர். இக்குடியேற்ற வரலாற்றை இரண்டு கட்டங்களில் காணலாம். 1840வரையிலான முதல் கட்டத்தில் அமைதியான முறையில் விரிவாக்கம் சென்றது. இரண்டாவது கட்டத்தில் (1840-50) போர் முறைகளில் ஈடுபட்டதால் மேலும் பல்லாயிர சதுர மைல்கள் அமெரிக்கருக்குக் கிட்டிற்று. இவ்விரிவாக்கத்தினால் அடிமை முறையும் பரவிற்று. அதையொட்டி பிரிவினைக் கூக்குரல் எழுப்பப்பட்டது. இறுதியில் பெரும் உள்நாட்டுப் போரே மூண்டது.

மேற்கு நோக்கிச் செல்லக் காரணங்கள்

(1) அஞ்சா நெஞ்சம் கொண்ட இளையோருக்கு மேற்கு எல்லைப்புறம் அறைகூவல் விடுக்கும் களமாகத் திகழ்ந்தது. எல்லைப்புறம் அமெரிக்க வரலாற்றின் போக்கினையும், அமெரிக்க மக்களது பண்பாட்டினையும் முற்றிலும் மாற்றியமைத்தது. மேற்கு எல்லைப் பகுதியில் மக்கள் தொகை நெருக்கமே இல்லை. ஒரு சதுர மைலுக்கு ஆறு பேரே இருந்தனர். அட்லாண்டிக் கடலோரப் பகுதியிலிருந்தோர் மேற்கு நோக்கிச் சென்று, காடுகளைத் திருத்தி கழனிகளாக்கி வாழமுற்பட்டனர். அடுத்தடுத்து வந்தோர்க்கு வழிகாட்டி, மேலும் முன்னேற உதவினர், மேலைப்புறம் நோக்கிச் சென்றோரின் குணங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அமெரிக்க சமுதாய வரலாற்றில் எல்லைப் பகுதி (frontier) என்பது வரைபடத்திலுள்ள ஒரு கோடாகத் திகழாமல் அஃது ஒரு வாழ்க்கைப் பாங்கைக் குறிப்பிடுவதாயிற்று. மக்களிடையே தன்னம்பிக்கையை வளர்த்தது; தன்முயற்சியை ஊக்குவித்தது; அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும் மக்களாட்சிக் கோட்பாடுகளை வளர்த்தது, அன்றாட வாழ்க்கையில் ஒருவகையான முரட்டுத் தன்மை வளர்ந்தது. பழமை மீதான பற்று அகன்றது. கூட்டாட்சி அரசிடம் மரியாதை ஒருபுறம் இருக்க, மற்றொருபுறம் தொலைவில் விலகிச்செல்லச் செல்ல தல ஆட்சியில் தன்னாட்சி வேட்கையே மிகுந்தது. இது அமெரிக்கப் பண்பாட்டுக் கூற்றின் மையக் கருத்தாயிற்று.

(2) மலிவான விலையில் ஏராளமான நிலம் மேற்கு எல்லைப்புறத்தில் இருந்தமையும் மக்களை ஈர்த்தது. 1820இல் ஒரு ஏக்கரின் விலை $ 1.25 ஆக இருந்தது. பழைய குடியேற்றங்களில் வாழ்ந்த குடியானவர்களுக்கு மேலும் வேளாண்மையைப் பெருக்க விளைநிலம் தேவைப்பட்டது. 1812ஆம் ஆண்டுப் போரின்போது எல்லைப்புறத்தில் போர்புரிந்த படைவீரர்கள் அப்பகுதியின் செழிப்பினைக் கண்டு சென்று பிறருக் குரைத்தனர். இதனைக் கேட்டோருக்கு மேற்கு நோக்கிச் செல்ல அவா ஏற்படலாயிற்று.

(3) 1812ஆம் ஆண்டுப் போரையடுத்து ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவினால் மக்கள் பெருந்துயருக்குள்ளாயினர். மாறுபட்ட சூழலுக்கேற்பத் தங்களை மாற்றிக்கொள்ள முடியவில்லை. வெளிநாட்டு வாணிபத்தின் மீது அரசு பல கட்டுப்பாடுகளை விதித்தமையால் வடபகுதியில் வாழ்ந்த கப்பல் உரிமையாளர்களும், வணிகர்களும்

நொடித்துப் போயினர். மாலுமிகளும் வேலையிழந்தனர். துவக்க நிலையிலிருந்த தொழிற்புரட்சியும் எல்லோருக்கும் வேலை வாய்ப்பினைத் தரவில்லை. இந்நிலையில் மக்களிடையே அரசியல், சமூக, சமய பொருளாதார நிலைகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டிருந்தன. இவற்றிலிருந்து விடுதலைபெற்று உரிமையோடு வாழ மக்கள் மேற்கிலிருந்த புதிய நிலப்பகுதிகட்குக் குடியேறலாயினர். அப்பகுதியின் பொருளாதார வளமும், சமுதாய சுதந்திரமும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

(4) மேற்கு நோக்கிக் குடிபெயருவோரின் தொகை ஏராளமான ஐரோப்பியரின் வருகையாலும், பெருகிற்று. ஐரோப்பாவில் தொடர்ந்து நெப்போலியன் காலத்தில் இருபது ஆண்டுகட்குமேல் போர்கள் நடைபெற்றன. இவற்றால் ஐரோப்பியர் பெருந்துயருக் குள்ளாயினர். மேலும், 1820, 1830, 1848 ஆகிய ஆண்டுகளில் புரட்சிகள் மூண்டன. தொடர்ந்து பழமைவாதிகட்கும், புதிய கோட்பாட்டினருக்குமிடையே மோதல்கள் இருந்து வந்தன. இவர்கட்கெல்லாம் அமெரிக்கா ஒரு சொர்க்கமாக விளங்கிற்று. பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புக்களில் எல்லையற்ற உரிமையிருப்பதைக் கண்டு நாடினர். தன்னம்பிக்கையும், பேரவாவும் கொண்டோர் புதிய உலகிற்கு வந்தனர். பயிர்த் தொழிலுக்கும், ஆலைத் தொழிலுக்கும், கால்வாய்கள் வெட்டவும், சாலைகள் போடவும் தொழிலாளர்களை அமெரிக்கர் வரவேற்றனர். ஐரோப்பியர் ஆயிரக்கணக்கில் வரலாயினர். 1825இல் பத்தாயிரம் பேர் குடியேறினர். இத்தொகை 1843இல் ஒரு லட்சமாகவும், 1850இல் மூன்று லட்சமாகவும் உயர்ந்தது. மொத்தத்தில் 1830-1850 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்காவுக்கு வந்தோரின் எண்ணிக்கை இருபது லட்சமாக வளர்ந்திருந்தது. அயர்லாந்தியர், ஜெர்மானியர், ஸ்காந்திநேவியர் - ஆகிய மூவகை ஐரோப்பியரே வந்தோரில் பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர். அமெரிக்காவின் தென்பகுதிகட்கு ஒரு சிலரே சென்றனர். அங்கு அடிமை முறை குடியேற்றத்திற்குத் தடையாயிருந்தது. எனவே மக்கட்தொகைப் பெருக்கத்தில் வடக்கு, மேற்கு பகுதிகளைக் காட்டிலும் தென்பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது.

(5) வேளாண்மை, ஆலைத் தொழில், மக்கட்தொகை ஆகியவை பெருகப்பெருக மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. போக்குவரத்து வசதிகள் மேன்மேலும் தேவைப்பட்டன. 1800ஆம் ஆண்டுவரை பெரும்பாலான அமெரிக்கர் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியிலேயே வாழ்ந்தனர். ஒரு சில சாலைகளே இருந்தன; அவையும் மோசமான நிலையில் இருந்தன. தொழிற்புரட்சியையடுத்து ஜான்மெக்கடம் கண்டுபிடித்த முறையில் தரமான சாலைகள் போடப்பட்டன. தனியார் நிறுவனமொன்று ஒரு சாலையையமைத்து அது வழியாகச் செல்வோரிடம் கட்டணம் திரட்டியது. ஊதியம் கிட்டியதோடு, மேலும் பல நிறுவனங்கள் பல சாலைகளைப்போட முன்வந்தன. 1812ஆம் ஆண்டளவில் பென்சில்வேனியா, நியூயார்க் புதிய இங்கிலாந்துப் பகுதிகளில் 400 சாலைக் கட்டண நிறுவனங்கள் இருந்தன. ஆனால் கட்டணங்கள் கூடுதலாக இருந்தமையால், பொது மக்கள் நன்மைக்காக சாலைகளை அரசே அமைக்க வேண்டுமென்றனர். கூட்டாட்சி யரசும் முன்வந்து முதலாவதாக தேசிய கம்பர்லாந்து சாலையை அமைத்தது. 1825 ஆம் ஆண்டுக்குள்ளாக கூட்டாட்சியரசும், மாநில அரசுகளும், தல ஆட்சிமன்றங்களும் தேசிய நெடுஞ்சாலைகளை அமைத்தமையால் மக்கள் மேற்கு நோக்கிச் செல்ல ஏதுவாயிருந்தது. பயண நேரமும், கட்டணமும் குறைந்தது.

மூன்று நிலையில் மேற்கு நோக்கி முன்னேறல்

அட்லாண்டிக் கரையோரப்பகுதியில் பதின்மூன்று குடியேற்றங்கள் நிறுவப்பட்ட போது அதுவே முதல் எல்லையாக புதிய உலகில் குடியேறியோருக்குக் காட்சியளித்தது. அப்பகுதியில் நாளாவட்டத்தில் மக்கள்தொகை பெருகவே நியூ இங்கிலாந்து வடக்கே இருந்த மெயின் (Maine) மாநிலத்துக்கு மக்கள் குடிபெயர்ந்தனர். உரிமைப் போருக்குப் பின்னர் ஒரு தலைமுறை (30 ஆண்டு) காலத்துக்கு அட்லாண்டிக் கடற்கரையை யொட்டிய பகுதியே முதல் எல்லையாகத் திகழ்ந்தது. துவக்கத்தில் குடியேறிய மக்களைத் தடுத்து நிறுத்திய அப்பலேச்சியன் மலைப்பகுதியே இரண்டாவது எல்லைக்கோடாக அமைந்தது. மக்கள் படிப்படியாக இம்மலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகளின் பள்ளத்தாக்குகளிலும், மலையின் மேட்டுப்பகுதிகளிலும் குடிபெயரலாயினர். கடலோரப் பகுதிகளிலிருந்த மக்கள் நியூயார்க்கிற்கு மேற்கேயும், பென்சில்வேனியாவிலிருந்த வியோமிங் (Wyoming) பள்ளத்தாக்கிற்கும், பிட்ஸ்பர்க்கிற்கும், தென்னசியின் கிழக்குப் பகுதிக்கும், ஜார்ஜியாவின் மேட்டு நிலத்திற்கும் இடம் பெயர்ந்தனர். 1800ஆம் ஆண்டுக்குப் பின்னர் அப்பலேச்சியன் மலைக்கு மேற்கேயிருந்த மிசிசிபி நதிப் பள்ளத்தாக்கும், ஓகியோ நதிப்பள்ளத்தாக்கும் மூன்றாவது எல்லைப் பகுதிகளாக விளங்கின. இரண்டு மில்லியன் (இருபது லட்சம்) ஏக்கர் நிலத்தை சட்டமாமன்றத்திடமிருந்து பெற்ற ஓகியோ நிறுவனம் நூற்றுக்கணக்கில் குடிபெயர்ந்து செல்பவர்களைக் கவர்ந்தது. நில ஊக வாணிபஞ் செய்யும் ஒரு நிறுவனம் சின்சினாட்டி என்ற பகுதியில் மக்களைக் குடியேற ஊக்குவித்தது. கென்டக்கியிலும், தென்னசியிலும் மக்கள் திரள் திரளாக வந்து குடியேற முற்பட்டனர்.

வடமேற்கிலும், தென்மேற்கிலும் மக்கள் தொடர்ந்து குடியேறலாயினர். இப்பகுதிகளில் குடிபுகுந்த மக்கள் துவக்கத்திலிருந்து உரிமையோடு வாழ முற்பட்டு தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டனர். அட்லாண்டிக் கடற்கரையான முதல் எல்லைப் பகுதிக்கும் ஐரோப்பாவிற்கும் இணைப்பு அதிகமாக இருந்தது. இரண்டாவது எல்லைப்பகுதி கரையோர மக்களோடு ஓரளவு தொடர்பு கொண்டிருந்தது. ஆனால் மூன்றாவது எல்லைப்பகுதியான மிசிசிபி, ஓகியோ பள்ளத்தாக்கு கிழக்குப் பகுதியோடு அதிகம் தொடர்பில்லாது தனித்து தனித்தன்மைபெற்று விளங்கலாயிற்று. அமெரிக்கா உரிமை பெற்றிருந்த போதிருந்த பதின்மூன்று மாநிலங்களோடு 1821க்குள் பத்து மாநிலங்கள் புதிதாக வளர்ந்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. அவை :

1792	கென்டக்கி	1817	மிசிசிபி
1796	தென்னசி	1818	இலினாய்
1808	ஓகியோ	1819	அலபாமா
1812	லூசியானா	1820	மெயின்
1816	இந்தியானா	1821	மிஸ்ஸூரி

மேற்கு நோக்கிச் சென்ற மூன்று அலைகள்

மேற்கு நோக்கிக் குடிபெயர்ந்த அமெரிக்க மக்களை மூன்று அலைகளாகப் பகுக்கலாம். முதல் அலையில் சென்ற முன்னோடிகள் மலையேறுவோரும், வேடர்களும்

ஆவர். பொறி வைத்து மிருகங்களையும், பறவைகளையும் பிடிப்பர். இவர்கள் பெரும்பாலும் திருமணமாகாத காளையர்; முரட்டு வாழ்க்கையை மேற்கொண்டோர் ஆவர். புதிய பாதைகளைக் கண்டறிவதில் நாட்டங்கொண்டிருந்தனர். மண்குடிசைகள் எழுப்பியும் மரவீடுகள் கட்டியும் வாழ்ந்த இவர்கள், சில பயிர்களைப் பயிர் செய்து மிகவும் கடினமாக வாழ்க்கை நடத்தினர். பலர் பழங்குடியினரான செவ்விந்தியர்களோடு ஏற்பட்ட மோதல்களில் மடியவும் நேரிட்டது. எனினும் இவர்களது வீரம் பொருந்திய செயல்களால்தான் அடுத்து இரண்டாவது அலையினர் மேற்கு நோக்கிச் செல்ல வழி வகுக்கப்பட்டது. இவ்விரண்டாவது அலையினர் வேட்டையாடியதோடு, பயிர்த் தொழிலையும் மேற்கொண்டனர். இவர்கள் சற்று வசதிகள் கூடிய மரத்தால் கட்டப்பட்ட இல்லங்களில் வாழ்ந்தனர். ஓடை நீரைப் பருகாமல் கிணறு வெட்டித் தூய ஊற்றுநீரைப் பருகினர். காடுகளையழித்து கழனிகளாக்கி தானியங்கள், காய் கனிகள் பயிர் செய்தனர். வேட்டையாடி உண்பதற்கான இறைச்சியைப் பெற்றனர். வீடுகளில் பன்றி, மாடு வளர்த்தனர். ஓடைகளில் மீன்பிடித்தனர். மொத்தத்தில் இவர்களது வாழ்க்கை சற்று வசதி மிகுந்ததாகவே காணப்பட்டது.

இரண்டாவது அலையில் சென்றோர் சற்றுத் துணிவோடு முதலில் மலிவான விலையில் மேற்குப் பகுதியில் ஏராளமான நிலத்தை வாங்கி பின்பு நில விலை உயர்ந்ததும் அதனை விற்று விட்டு மேலும் மேற்கு நோக்கி நகர்ந்தனர். இந்நிலையில் அடுத்து மூன்றாவது அலையாக வருவோர்க்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினர்.

மூன்றாவது அலையில் வந்தோர் பல்வேறு சமூகப் பிரிவினைச் சார்ந்தோராவர். குடியானவர், மருத்துவர், வழக்குரைஞர், கடைக்காரர் செய்தித்தாள் ஆசிரியர், சமயக் குருமார், ஆலைத் தொழிலாளர், அரசியல்வாதி என பலதரப்பட்டவர்களாயிருந்தனர். சமூக முன்னேற்றத்துக்கான வசதிகள் அனைத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். வேளாண்மைத் தொழிலைச் சிறப்பாக மேற்கொண்டோர் நிரந்தரமாக வாழ முடிவு செய்தமையால், ஆயுள் முழுவதும் வாழ்வதற்கான செங்கல்லால் கட்டப்பட்ட சீரான வீடுகளைக் கட்டினர். தானியக் களஞ்சியங்களையும் எழுப்பினர். சிறந்த எருதுகள் கொண்டு நிலத்தை நன்கு உழுது, தரமான விதைகளிட்டு சிறப்புறப் பயிர் செய்தனர். சிறு அளவிலான மாவாலை, மரமறுக்கும் ஆலை, சாராயம் வடிக்கும் ஆலை ஆகியவற்றை நிறுவினர். நல்ல சாலைகள் போட்டனர். ஆலயங்கள்; கல்விக் கூடங்கள் எழுப்பினர். விரைவில் பட்டணங்கள் வளர்ந்தன. பாங்குகள் திறக்கப்பட்டன. வாணிபம் செழித்து வளரலாயிற்று. இம்மூன்றாவது அலையில் சென்று குடியேறிய மக்களே அமெரிக்க நாகரிகத்தின் விளக்குநர்களாக விளங்கினர்.

மேற்கு நோக்கிச் செல்ல கூட்டாட்சி தந்த ஊக்கம்

உரிமை பெறும்முன் குடியேற்றங்களில் வெவ்வேறு முறையில் மேலைப்புறத்திருந்த நிலப்பகுதி பகிர்ந்தளிக்கப்பட்டது. தென் மாநிலங்களில் வாழ்ந்தோர் தாம் விரும்பிய வண்ணம் குடியேறிவிட்டுப் பின்னர் நிலஅளவை பதிவு செய்யப்படும் முறையைப் (in-discriminate location and subsequent survey) பின்பற்றினர். வட மாநிலங்களில் வாழ்ந்தோர் முதலில் நிலத்தை முறையாக அளந்து குடியிருப்புகளாகப் பிரித்தபின் குடி யேறுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். தென் மாநிலத்தவர் பின் பற்றிய முறையிலிருந்த

குறைபாடுகள் யாவரும் அறிந்ததே. எனவே, உரிமைபெற்றதும் நேசக்கூட்டாட்சியின்போது 1785இல் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, புதிய நிலப்பகுதிகள் விற்கப்படும் முன்னர் அவை சீராக அளக்கப்பட்டு குடியிருப்புக்களாகப் பிரித்திட வழிவகுக்கப்பட்டது.

துவக்கத்தில் ஒருவர் குறைந்தது 640 ஏக்கர் வாங்க வேண்டுமெனப்பட்டது. இந்த அளவு 1800இல் 320 ஏக்கராகக் குறைக்கப்பட்டது. நிலம் வாங்குவோர் நிலத்திற்கான தொகையை நான்கு ஆண்டுத் தவணைமுறையில் செலுத்த அனுமதிக்கப்பட்டனர். ஒருவர் வாங்க வேண்டிய குறைந்த அளவு நிலப்பரப்பு 160 ஏக்கராக 1804இலும், 80 ஏக்கராக 1820இலும் குறைக்கப்பட்டது. இதனால் பல மில்லியன் ஏக்கர் நிலம் பொதுமக்களுக்கு விற்கப்பட்டது. இப்படி அரசிடமிருந்து முறையாக வாங்கிய நிலங்களில் குடியேறியோர் ஒருபுறமிருக்க, பலர் சட்டப்படி பட்டயமேதுமில்லாது பொதுநிலத்தில் வாழ்ந்து வந்தனர். (Squatters) இவர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆங்காங்கே அப்படியே வாழ விரும்பினர். துவக்கத்தில் குடியேறிய பகுதிகளையெல்லாம் சீர்திருத்திச் செப்பம் செய்து உழைத்தமைக்கு ஈடாக அந்நிலங்களைச் சொற்ப விலைக்கு தங்கட்கே அரசு விற்கவேண்டு மென வேண்டினர். அரசும் இவர்தம் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தது. குறைந்த விலைக்கு இவர்கட்கு நிலங்கள் விற்கப்பட்டன. புதிய குடியேற்றப் பகுதிகளில் நெடுநாளாக விலைக்கு வாங்காமல் விடப்பட்ட நிலங்களின் விலையைப் படிப்படியாகக் குறைக்க 1854இல் சட்டமாமன்றம் முடிவு செய்தது. இதன்படி முப்பதாண்டுகளாக விற்கப்படாமல் கேட்பாரற்றுக்கிடந்த நிலத்தின் விலை ஒரு ஏக்கருக்கு பன்னிரண்டரை சென்ட் என வரையறுக்கப்பட்டது.

இந்தியப் பழங்குடியினர் விரட்டப்படல்

அமெரிக்கர் மேற்கு நோக்கி குடிபெயர்ந்தபோது ஆங்காங்கே தொன்றுதொட்டு வாழ்ந்துவந்த செவ்விந்தியப் பழங்குடியினரோடு மோத நேரிட்டது. அவர்களுடைய நிலங்களையெல்லாம் கைப்பற்றினர். எதிர்த்துப் போரிட்டோரைக் கொன்று வீழ்த்தினர். கூட்டாட்சியரசும் இதில் ஈடுபட்டது. தென்பகுதியில் வாழ்ந்த கீரீக் பழங்குடியினரை ஆன்ட்ரூ ஜாக்சன் கொன்று குவித்தார். புளோரிடாவில் வாழ்ந்த செமினோல் ஆதிவாசி களும் அடக்கப்பட்டனர். அவர்தம் தலைவரான தேக்கும்சேவும் கொல்லப்பட்டார். படிப்படியாக இப்பழங்குடியினர் மிசிசிபி நதிக்கு அப்பாலுள்ள சமவெளிப்பகுதிக்கு வெளியேற்றப்பட்டனர். இதற்கான சட்டத்தையும் சட்டமாமன்றம் இயற்றிற்று. 1840ஆம் ஆண்டுக்குள் அநேகமாக மிசிசிபி நதிக்குக் கிழக்கே வாழ்ந்து வந்த எல்லா இந்தியர்களும் மேற்கே சென்றுவிட்டிருந்தனர். எனவே அமெரிக்கர் அச்சமின்றி மேற்குப்புறம் நோக்கிப் பெருமளவில் குடிபெயரலாயினர்.

பயிற்சி வினா

அமெரிக்கர் மேற்கு நோக்கிச் செல்ல வழிவகுத்த சூழ்நிலைகள் யாவை? இக்குடிப்பெயர்ச்சிக்கு கூட்டாட்சியரசு ஆற்றிய உதவிகள் யாவை?

பாடம் – 13 மேற்கு நோக்கி விரிவடைதல் (இரண்டாம் கட்டம் – 1840–1850)

ஆரம்பத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேற்கு எல்லையாக மிசிசிபி ஆறு அமைந்தது. ஸ்பானியர்கட்குச் சொந்தமான புளோரிடா தெற்கு எல்லையில் இருந்தது. ஜெபர்சன் பதவிக் காலத்தில் லூசியானாப் பகுதி விலைக்கு வாங்கப்பட்டதால் மேற்கு எல்லை மிசிசிபி ஆற்றங்கரையிலிருந்து ராக்கி மலைகளுக்கு நகர்ந்து சென்றது. வடபகுதி மாநிலத்தோர் மேற்கு நோக்கிக் குடிபெயர இடர்ப்பாடு ஏதுமில்லாமலிருந்தது. எளிதில் இடம் பெயர்ந்தனர். தென்பகுதி மக்களின் முன்னேற்றம் அவ்வளவு எளிதாக அமையவில்லை. ஏனெனில் ஸ்பானியர்களுடைய புளோரிடாவும், மெக்ஸிகோவும் தடைகளாக இருந்தன. இதுபோன்ற தடைகளைக் களைய அந்நாளில் ஐரோப்பிய நாடுகள் போர்கள் மூலம் பேரரசுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தன. இதே முறையை இப்போது அமெரிக்காவும் பின்பற்றலாயிற்று.

டெக்ஸாஸ் இணைப்பு

வலிமை குன்றியிருந்த மெக்சிகோவிடமிருந்து டெக்சாசையும், கலிபோர்னியாவையும், தென்மேற்குப் பகுதியையும் அமெரிக்கா கைப்பற்றியதுடன் அதன் மேற்கு எல்லை திட்டவட்டமாக பசிபிக்பெருங்கடல் வரை நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகளைக் கைப்பற்றிய முறை அந்நெறிக்கு முரணான செயலென சில அமெரிக்க வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

டெக்சாஸ், மெக்சிகோ குடியரசின் ஒரு பகுதியாகும். அது பரப்பளவில் ஜெர்மனியை ஒத்திருந்தது. ஆனால், அங்கு வாழ்ந்த மக்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. கால்நடை பராமரிப்போரும், வேடர்களுமே வாழ்ந்து வந்தனர். டெக்சாசில் ஓர் அமெரிக்கக் குடியேற்றத்தை நிறுவ மோசஸ் ஆஸ்டின் எனும் அமெரிக்கர் 1812இல் ஸ்பானிய அதிகாரிகளிடமிருந்து ஒரு பட்டயம் பெற்றார். மோசஸ் ஆஸ்டின் இறந்தபின் அவருடைய புதல்வர் ஸ்டீபன் ஆஸ்டின் தந்தை துவக்கியிருந்த பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு குடியேற்றமொன்றை நிறுவினார். மெக்சிகோ ஸ்பெயினிடமிருந்து 1822இல் உரிமைபெற்றதும், ஸ்படீன் புதிய மெக்சிகோ அரசு அதிகாரியிடமிருந்தும் இசைவு பெற்றார். 1830ஆம் ஆண்டில் டெக்சாசில் 20,000 அமெரிக்கக் குடும்பங்கள் இருந்தன. இவர்கள் மெக்சிகோ அரசுக்குப் பற்றுறுதி காட்டாது அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீதே பற்றுறுதி கொண்டிருந்தனர். இதனைக் கண்ணுற்ற மெக்சிகோ அரசு ஐயப்பாடுற்று, ஒருகால் அமெரிக்கா அப்பகுதியைக் கைப்பற்றத் திட்டமிடக் கூடும் என அஞ்சி, மேலும் அமெரிக்கர் வந்து குடியேறுவதைத் தடை செய்தது.

அமெரிக்கர் டெக்சாசுடன் தடையற்ற வாணிபத்தை ஊதியத்தோடு மேற்கொண்டிருந்தனர். இதனையறிந்த மெக்சிகோ அரசு ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை விதித்தது. இதனால் அமெரிக்க வணிகருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனையடுத்து 1829இல்

மெக்சிகோ அரசு அடிமை முறையைத் தனது நாட்டில் ஒழித்தது. இதனால் டெக்சாசில் அடிமைகளை வேலைக்கு வைத்திருந்த அமெரிக்கர் சினமுற்றனர். மற்றொரு ஆட்சிமுறை சீர்திருத்தத் திட்டத்தின்படி மெக்சிகோ அரசு டெக்சாஸ் மாநிலத்தை வேறொரு மாநிலத்தின் ஒரு பகுதியாக மாற்றியமைத்தது. இச்சீர்திருத்தத்தால் அப்புதிய மாநிலத்தில் அமெரிக்கர் சிறுபான்மையினராயினர். அமெரிக்கக் குடிமக்களெல்லாம் ஒன்றுகூடித் தங்களுடைய வணிக உரிமைகளை மீண்டும் தரும்படியும், அடிமைமுறையைத் தொடரவும், தன்னாட்சி உரிமை வேண்டுமெனவும் மெக்சிகோ குடியரசுத் தலைவரை வேண்டினர். அவர் வேண்டுகோளை நிராகரித்தமையால் டெக்சாசை சார்ந்த அமெரிக்கர் புரட்சியிலிறங்கினர்.

டெக்சாசைக் கூட்டாட்சியினுள் சேர்த்தல்

டெக்சாஸ் அமெரிக்காவின் தலைவராகத் தளபதி சாம் ஹஸ்டன் (Sam Houston) போரிலிறங்கி, மெக்ஸிகோ படைகளை சான் ஜேசிண்டோ (San Jacinto) என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடித்தார். 1386இல் டெக்சாஸ் மக்கள் தங்களை ஓர் உரிமைபெற்ற நாடாக அறிவித்துக் கொண்டனர். தங்களை ஒரு மாநிலமாக அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் சேர்த்துக் கொள்ள வேண்டினர். டெக்சாசை அமெரிக்காவுடன் சேர்த்துக் கொண்டால், ஒருவேளை மெக்சிகோவுடன் போர் மூளக்கூடுமென அஞ்சி அப்போதிருந்த குடியரசுத் தலைவர் ஆண்ட்ரூ ஜாக்சன் அவ்வேண்டுகோளை ஏற்கவில்லை. மேலும், டெக்சாஸ் அடிமை முறையை வைத்திருந்ததால் அமெரிக்க வடமாநிலத்தவர்கள் அந்நாடு சேர்வதை வரவேற்கவில்லை. எனவே, டெக்சாஸ் ஒரு தனித்த குடியரசாக விளங்கலாயிற்று.

தனிமையில் விடப்பட்ட டெக்சாஸ் குடியரசு பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளலாயிற்று. டெக்சாசில் விளைந்த பருத்தியெல்லாம் பிரிட்டனுக்கு அனுப்பப் பட்டது. மாற்றாக டெக்சாஸ் தனக்கு வேண்டிய செய்பொருட்கள் அனைத்தையும் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்தது. பிரிட்டிஷ் நாட்டு அரசுப்பேராளர் டெக்சாசைப் பிரிட்டனுக்குச் சொந்தமாக்கத் திட்டமிட்டார். இதனைக் கண்ணுற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான் டைலர் (1841-45) டெக்சாசை அமெரிக்காவுடன் இணைக்க முடிவு செய்தார். வெளியுறவுச் செயலாளரான கால்ஹூன், டெக்சாஸ் அரசுடன் அதற்கான ஓர் உடன்படிக்கையைத் தயார் செய்து அதனைச் சட்டமன்றத்தில் சமர்ப் பித்தார். ஆனால் செனட் அவை அவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தது.

இதற்குள்ளாக, 1844இல் அடுத்த குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் டெக்சாசை இணைப்பதா கூடாதா என்ற சிக்கலின் மீது வேட்பாளர்கள் போட்டியிட்டனர். விக்குக் கட்சியைச் சேர்ந்த ஹென்றி கிளே, டெக்சாசை இணைக்கக் கூடாதென வாதாடினார். மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த ஜேம்ஸ் போக் டெக்சாசை இணைத்துக்கொள்ள வேண்டுமென வாதிட்டார். இறுதியில் ஜேம்ஸ் போக் வெற்றி பெற்றார். ஜான் டைலர் இவ்வெற்றியைத் தமது கொள்கையின் வெற்றியாகக் கொண்டு தமது பதவிக் காலம் முடியும்முன் டெக்சாசை அமெரிக்காவுடன் இணைக்கத் தீர்மானித்தார். இதற்கான தீர்மானம் ஒன்றை சட்டமாமன்றத்தில்

கொண்டுவந்து அதன் இசைவைப் பெற்றார். டைலர் பதவியினின்று ஓய்வுபெற மூன்று நாள் முன்னர்தான் அத்தீர்மானம் இயற்றப்பட்டது. டெக்சாசும் இறுதியில் அமெரிக்காவுடன் இணைவதற்கான விதிமுறைகளை ஏற்றுக் கொண்டு 1845இல் ஓர் அரசியலமைப்பை உருவாக்கி, பின்னர் அமெரிக்காவுடன் இணைந்தது.

ஆரிகான் (Oregon) பகுதியைப் பெறல்

மக்களாட்சிக் கட்சி தனது 1844ஆம் ஆண்டுத் தேர்தல் கொள்கை விளக்க அறிக்கையில் டெக்சாஸ் பகுதியையும், ஆரிகான் பகுதியையும் கைப்பற்றுவதென கூறியிருந்தனர். புதியதாகப் பெறவிருக்கும் பகுதிகளில் அடிமை முறையைத் தொடருவதா, நீக்குவதா என்பது குறித்து கருத்து வேறுபாடு நிலவிற்று. முடிவில் டெக்சாசில் அடிமை முறையைத் தொடரலாம் என்றும், ஆரிகானில் அடிமை முறையை வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் முடிவு செய்தனர். இதன் அடிப்படையில்தான் மக்களாட்சிக் கட்சியின் வேட்பாளர் ஜேம்ஸ் போக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பதவியேற்கு முன்னரே டெக்சாஸ் அமெரிக்காவோடு இணைக்கப்பட்டுவிட்டது. எனவே போக் பதவியேற்றதும் ஆரிகான் பகுதியை அமெரிக்காவோடு இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடு, ஆரிகான் நிலப்பகுதிமீது பல வகையிலும் சொந்தங் கொண்டாடிற்று. அமெரிக்க உரிமைப் போருக்குப் பிறகு ராபர்ட் கிரே எனும் தளபதி கொலம்பியா ஆற்றுப் பள்ளத்தாக்கில் ஆய்வுப் பயணங்கள் மேற்கொண்டிருந்தார். 1819இல் ஏற்பட்ட ஆடம்ஸ் - ஒனிஸ் உடன்பாட்டின்படி ஸ்பெயின் 42° குறுக்கையளவு கோட்டிற்கு மேல் (வடக்கே) உரிமை கோரவில்லை என ஒப்புக்கொண்டது. 1824இல் இரஷியாவும் தனக்குச் சொந்தமான அலாஸ்காவின் தெற்கு எல்லையை 54° 40” குறுக்கையளவுக்குக் கீழ் (தெற்கே) நீட்டிப்பதில்லை என உறுதி தந்தது. இந்நிலையில் இங்கிலாந்து, ஆரிகான் நிலப்பகுதி மீது உரிமை கொண்டாடத் துவங்கிற்று. காரணம் 1778ஆம் ஆண்டிலேயே ஆங்கிலப் பயணி குக் என்பவர் அப்பகுதியில் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். மேலும் முதல் குடியேற்றங்கள் நிறுவப்பட்ட சமயத்தில் ஹட்சன் வளைகுடா நிறுவனம் ஆரிகான் பகுதியில் ஒரு வணிக நிலையத்தை நிறுவியிருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடும், பிரிட்டனும் ஆரிகான் நிலப்பகுதி மீதான உரிமைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக, 1818இல் கூடிப் பேசி 49° குறுக்கையளவைப் பசிபிக் கடலோரப்பகுதி வரை எல்லைக்கோடாக ஏற்றுக் கொண்டன.

ஆரிகான் நிலப்பகுதியில் குடியேற்றங்களை அமைக்க அமெரிக்க ஐக்கிய நாடு அவ்வளவாக முயலவில்லை. 1824இல் ஆரிகானில் வாழ்ந்த இந்தியப் பழங்குடியினர், செயின்ட் லூயி நகரத்திற்குச் சென்று, அங்கு வாழ்ந்த அமெரிக்க சமயப் பரப்பாளர்களைத் தங்கள் பகுதிக்கு வந்து, சமயநெறியைப் புகட்டும்படி வேண்டினர். அதற்கிணங்க சமயகுருமார்கள் ஆரிகானுக்குச் சென்று கிறித்தவ சமயக் கருத்துக்களைப் போதித்தனர். அவர்களோடு ஆய்வுப் பயண வீரர்களும் சென்றனர். அவர்கள் அப்பகுதியின் இயற்கை வளத்தைப் பற்றியும், சிறந்த வெப்ப தட்ப நிலை பற்றியும் அமெரிக்கருக்கு எடுத்துக் கூறினர். இதைக்கேட்ட அமெரிக்கர் பலர் மகிழ்வோடு அப்பகுதிகட்குச் சென்று குடியேறலாயினர்.

நிலவெறி கொண்ட அமெரிக்கர் ஆரிகான் எல்லையை 54° 50", குறுக்கையளவுக்கு (வடக்கே) நீட்டிக்க வேண்டுமென மக்களாட்சிக் கட்சியினர் 1844ஆம் ஆண்டுத் தேர்தல் கொள்கை விளக்க அறிவிப்பில் வாதிட்டனர். அதையொட்டி "ஐம்பத்து நான்கு, நாற்பது, இல்லையெனில் போர்" என்ற போர்க்குரல் அமெரிக்கத் தேர்தல் பரப்புரையில் ஒலித்தது. தேர்தலில் மக்களாட்சிக் கட்சியின் வேட்பாளரான ஜேம்ஸ் போக் வெற்றி பெற்றார். அவர் ஆரிகான் பகுதியைக் கைப்பற்றி அமெரிக்காவுடன் இணைக்க முனைந்தார். குடியரசுத் தலைவரின் தூண்டுதலின் பேரில் சட்டமாமன்றம் இங்கிலாந்துக்கு ஓர் அறிக்கையை அனுப்பிற்று. அவ்வறிக்கையில் ஆரிகான் பகுதி மீதான கூட்டு உரிமையை இங்கிலாந்து கைவிடவேண்டுமென அமெரிக்கா அறிவித்தது. மேலும் அப்பகுதியில் அமெரிக்கச் சட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும், அங்கு குடியேறும் அமெரிக்கருக்கு அரசு பாதுகாப்புத் தருமென்றும் சட்டமாமன்றம் முடிவு செய்தது. இவ்வகையில் ஆரிகான் பகுதி மீதான உரிமை குறித்து அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்குமிடையே போர் மூளக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. ஆனால், பிரிட்டனோ போரை விரும்பவில்லை. அமெரிக்காவுடன் உடன்பாடு செய்துகொள்ள விரும்பிற்று. எனவே 1847இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி 49° குறுக்கையளவு அமெரிக்க - பிரிட்டிஷ் நிலப்பரப்புக்களின் எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. வான்கூவர் (Vancouver) தீவு மட்டும் பிரிட்டனுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. கொலம்பியா ஆற்றினைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தவும் பிரிட்டனுக்கு உரிமையளிக்கப்பட்டது.

மெக்சிகோ போரும் (1846–48), கலிபோர்னியா நியூமெக்சிகோவைக் கைப்பற்றலும்

கலிபோர்னியா நிலப்பகுதி மெக்சிகோ அரசுக்கு உட்பட்டதாகும். அங்கு பெரும்பாலும் இந்தியப் பழங்குடியினரே வாழ்ந்து வந்தனர். ஸ்பானியர் சிலர் ஒரு சில குடியேற்றங்களை நிறுவி கிறித்தவ சமயத்தைப் பரப்பியிருந்தனர். சில பள்ளிக் கூடங்களையும் அமைத்திருந்தனர். கலிபோர்னியாவுக்கும் மெக்சிகோ நகருக்குமிடையே நீண்ட தொலைவாகையால் போக்குவரத்து வசதிகள் குறைவான அந்நாளில் மெக்சிகோ அரசு கலிபோர்னியாவைக் கட்டுப்பாட்டுடன் ஆளமுடியவில்லை. அங்கு தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதும் அமெரிக்கர் பெருமளவில் சென்று குடிபுகலாயினர். அமெரிக்க மக்கள் எண்ணிக்கை நாளடைவில் கூடிற்று. கலிபோர்னியாவை அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைக்கத் திட்டமிட்டு அங்கு வாழ்ந்த அமெரிக்கக் குடிமக்கள் மெக்சிகோவுக்கெதிராகக் கிளர்ச்சி செய்யலாயினர். கலிபோர்னியாவில் அமெரிக்க அரசுப்பேராளராக இருந்த லர்க்கின் கிளர்ச்சியாளர்கட்கு ஊக்கம் தந்ததோடு அவர்கட்கு அமெரிக்க அரசின் உதவியும் கிட்டுமென உறுதியளித்தார். ஆனால் கிளர்ச்சியாளர்களை மெக்சிகோ அரசு எளிதில் அடக்கி ஒடுக்கிற்று. கலிபோர்னியாவை விலைக்கு வாங்க அமெரிக்கா விரும்பியபோது, மெக்சிகோ அரசு விற்க மறுத்துவிட்டது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜேம்ஸ் போக் அமைதியான வழியில் கலிபோர்னியாவை இணைக்க விரும்பினார். மெக்சிகோ அரசுடன் நட்புறவு கொள்ளவும் விழைந்தார். ஆனால், மெக்சிகோ அரசு, அமெரிக்க ஐக்கிய நாடு டெக்சாசைக் கைப்பற்றியதை நியாயமற்ற செயலெனக் கூறிற்று. இந்நிலையில் கலிபோர்னியாவை விலைக்கு விற்க இசையவில்லை. எனினும் ஜேம்ஸ் போக் அமெரிக்க அரசின் சிறப்புத் தூதராக ஜான்

சிலிடல் (John Silidel) என்பவரை மெக்சிகோவிற்கு அனுப்பினார். ரியோ கிராண்டு (Rio Grande) நதியை மெக்சிகோவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான எல்லையாகக் கொள்ளவும், கலிபோர்னியாவையும் நியூமெக்சிகோவையும் அமெரிக்காவிற்கு இருபத் தைந்து மில்லியன் டாலருக்கு விற்கவும், நியூமெக்சிகோவை மட்டும் விட்டுக் கொடுப்ப தானால் ஐந்து மில்லியன் டாலருக்குத் தரும் என ஜான் சிலிடல் கருத்துத் தெரிவித்தார். மெக்சிகோவில் ஏற்பட்ட புரட்சிகளிலும், கலகங்களிலும் பல அமெரிக்கர் உயிரையும், உடைமைகளையும் இழந்திருந்தனர். இவர்களுக்கான இழப்பீட்டையளிக்க அமெரிக்க அரசு ஒப்புக்கொண்டது. ஆனால், மெக்சிகோவிலோ அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது வெறுப்புணர்வு உச்சகட்டத்தில் இருந்தது. எனவே, ஜான் சிலிடல் நினைத்ததை சாதிக்க முடியவில்லை. டெக்சாசை அமெரிக்கா நயவஞ்சகமாகக் கைப்பற்றியதெனவும், அமெரிக்கா மெக்சிகோவின் ஒற்றுமையையே சிதைக்கின்றதெனவும் மெக்சிகோவின் தேசியவாதிகள் கருதியதோடு, அமெரிக்கா மீது போர் தொடுக்கவும் துடித்தனர்.

மெக்சிகோ போர்

மெக்சிகோவுடன் போர் தொடுப்பதென அமெரிக்க அரசு முடிவு செய்தது. டெக்சாசின் தென் எல்லை நியூசெஸ் (Nueces) ஆறாக நடைமுறையில் ஒப்புக்கொள்ளப் பட்டபோதிலும், ரியோ கிராண்டு ஆறே தென் எல்லையென ஜேம்ஸ் போக் அறிவித்தார். இவ்விரண்டு ஆறுகட்கும் இடைப்பட்ட நிலப்பகுதி வாதத்திற்குட்பட்டதாக இருந்தது. தளபதி சாக்கரி டெய்லர் (Zachary Taylor) என்பவரது தலைமையில் அப்பகுதியைக் கைப்பற்ற ஒரு படையை ஜேம்ஸ் போக் அனுப்பினார். அப்படை மெக்சிகோ படையுடன் மோதிற்று. ரியோ கிராண்டு நதி முகத்துவாரத்தில் நிகழ்ந்த இருபோர்களில் மெக்சிகோ படையினர் தோல்வியுற்றனர். சில அமெரிக்க வீரர்களும் கொல்லப்பட்டனர். அமெரிக்க மண்ணில் அமெரிக்க வீரர்கள் தாக்கப்பட்டுக் குருதி சிந்தியமையால் இருநாடுகட்குமி டையே போர் நிலை நிலவுவதாக சட்டமாமன்றம் முடிவு செய்தது. மெக்சிகோ அரசு தான் அமெரிக்காவின் மீது வலுச்சண்டை தொடுத்துள்ளது என்ற குடியரசுத் தலைவரின் கருத்துரையைச் சட்டமாமன்றம் ஏற்றுக் கொண்டது; ஐம்பதாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு படையைத் திரட்ட பத்து மில்லியன் டாலர் நிதியொதுக்கப்பட்டது. தெற்கு, மேற்கு மாநிலங்கள் இப்போரைப் பெரிதும் வரவேற்று கூட்டாட்சியரசுக்குத் தங்களது ஆதரவை நல்கின. ஆனால், வடகிழக்கு மாநிலங்கள் போரை வரவேற்கவில்லை. நியூ இங்கிலாந்தி லுள்ள அடிமை ஒழிப்புக் கோட்பாட்டினர் கூட்டாட்சி அரசின் கொள்கைகளைக் கண்டித்தனர்.

தளபதி சாக்கரி டெய்லரின் தலைமையில் ஒரு படை தெற்கே அனுப்பப்பட்டது. இப்படை மெக்சிகோ தளபதி சாண்ட ஆனா (Santa-Anna) தலைமையின்கீழ் வந்த படையுடன் பியூனா விஸ்டா (Buena Vista) என்னுமிடத்தில் பிப்ரவரி 1847இல் மோதின. டெய்லரிடத்து ஐந்தாயிரம் பேர் கொண்ட படை மட்டுமே இருக்க, சாண்ட ஆனாவிடம் இருபத்தையாயிரம் வீரர் கொண்ட படை இருந்தது. டெய்லர் தனது போர்த் திறமையினாலும், அமெரிக்க வீரர்களின் சிறந்த போர்ப் பயிற்சியினாலும் மெக்சிகோ படையினரைப் படுதோல்வியடையச் செய்தார். மற்றொரு அமெரிக்கப்படை தளபதி கியர்னி (S.W. Kearney) என்பவரின் தலைமையில் மேற்கு நோக்கிச் சென்று மெக்சிகோ

படைகளை நியூமெக்சிகோவில் சாண்டாபீ (Santa Fe) என்னுமிடத்திலும், அடுத்து லாஸ் ஏஞ்சல்சிலும் (Los Angeles) தோற்கடித்தது. கியர்னியின் படைகள் கலிபோர்னியாவைச் சென்றடைவதற்குள்ளாக அங்கிருந்த அமெரிக்கர், தளபதி ஜான் பெர்மான்டு என்பவரின் தலைமையில் அமெரிக்க ஆட்சியை அமைத்துவிட்டனர். ஜேம்ஸ் போக் மற்றொரு படையை வின்பீல்டு ஸ்காட் (Winfield Scott) தலைமையில் கடல் வழியாக மெக்சிகோ நகரைத் தாக்க அனுப்பினார். இப்படை வீராகுரூசில் (Veracruz) இறங்கி, கடும்போருக்குப் பிறகு அத்துறைமுகப்பட்டினத்தை கைப்பற்றிற்று. பின்னர் உட்பகுதிக்குச் சென்று மெக்சிகோ நகர் முற்றுகையிடப்பட்டது. இறுதியில் மெக்சிகோ படையினர் தோற்கடிக்கப்பட்டதால் (ஏப்ரல் 1847) சரணடைந்தனர்.

கூடலுப் ஹிடால்கோ உடன்பாடு (Treaty of Guadaluph Hidalgo)

போர் முடிவுற்றதும் உடன்பாட்டுக்கான நியதிகளை வரையறுக்க ஜேம்ஸ் போக் வெளிநாட்டுத்துறையின் தலைமை அலுவலரான நிக்கோலஸ் டிரிஸ்ட் (Nicholas P. Trist) என்பாரை மெக்சிகோவிற்கு அனுப்பினார். அங்கு அவர் மெக்சிகோ அரசு அலுவலர்களோடு கலந்து பேசி ஓர் உடன்பாட்டை வரைந்தார். அதன்படி மெக்சிகோ அரசு ரியோ கிராண்டு நதியை டெக்சாசின் எல்லையாக ஏற்றுக்கொண்டது. மேலும் அமெரிக்காவிடமிருந்து பதினைந்து மில்லியன் டாலரை ஏற்றுக்கொண்டு கலிபோர்னியாவையும், நியூமெக்சிகோவையும் தந்திட மெக்சிகோ அரசு இசைந்தது. அமெரிக்கக் குடிமக்களுக்கு மெக்சிகோ அரசு தரவேண்டிய இழப்பீட்டுத் தொகையை அமெரிக்க அரசே அளிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வுடன்பாட்டை 1848ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் அமெரிக்க செனட் அவை உறுதி செய்தது.

போரின் விளைவுகள்

மெக்சிகோப் போரின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடு நியூ மெக்சிகோ பகுதியையும், கலிபோர்னியாவையும் பெற்றது. இவற்றுடன் டெக்சாஸ் உட்பட ஒன்பது இலட்சம் சதுர மைலுக்கும் அதிகமான நிலப்பரப்பு அமெரிக்காவிற்குக் கிட்டிற்று. அமெரிக்காவின் மேற்கு எல்லை பசிபிக் பெருங்கடலை அரணாகக் கொண்டது. அமெரிக்கரது "மெய்ம்மை காட்டு அமைவு நோக்கக் கோட்பாடு" (Doctrine of Manifest Destiny) வெற்றிகரமாகச் செயலாக்கப்பட்டு இப்பொழுது உச்சகட்டத்தை அடைந்தது எனலாம். இதனால் பசிபிக் பெருங்கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளோடு அமெரிக்கா தொடர்புகொண்டு தனது கடல்கடந்த வாணிபத்தைப் பெருக்க முற்பட்டது.

அமெரிக்காவின் விரிவாக்கத்தால் நியூ மெக்சிகோ பகுதியில் குடியேறியிருந்த செவ்விந்தியப் பழங்குடியினர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். முதலில் அவர்கள் கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அச்சமயம் அவர்கள் நியூ மெக்சிக்கோ பகுதிக்கு நகர்ந்தனர். நியூ மெக்சிகோ அமெரிக்கர் ஆட்சியின் கீழ் வந்ததும் மீண்டும் செவ்விந்தியர்கள் அப்பகுதியை விட்டகல வேண்டியதாயிற்று. இவர்களைப் போலவே கிழக்கு மாநிலங்களில் அமெரிக்கரால் வெறுக்கப்பட்டு, வெளியேற்றப்பட்ட ஒரு கிறித்தவச் சமயப் பகுதியினரான மார்மானியர் (Mormons) கலிபோர்னியாவை ஒட்டிய பாலைவனப் பகுதியில் குடியேறி வாழ்ந்து வந்தனர். அமெரிக்கர் அந்நிலப் பகுதியினைப் பெற்றமையால் மார்மானியர் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

மெக்சிகோப் போரினால் மீண்டும் அடிமை முறைபற்றிய சிக்கல் எழுந்தது. மெக்சிகோவிடமிருந்து பெற்ற நிலப்பகுதியினைக் கட்டுப்படுத்துவதில் வடமாநிலங்களும், தென் மாநிலங்களிலும் போட்டியிடலாயின. அடிமை முறையை அகற்ற விரும்பிய வட மாநிலங்கள் மெக்சிகோவிடமிருந்து பெற்ற நிலங்களில் அடிமை முறையை மேற்கொள்ளக் கூடாதென்றும், அடிமை முறையை விரும்பிய மாநிலங்கள் அடிமை முறையைக் கொள்ளலாமென்றும் வாதாடின. இச்சிக்கலின்மீதே பின்னர் உள்நாட்டுப் போர் மூண்டது.

கலிபோர்னியாவை அமெரிக்கா பெற்றதனால் அங்கு ஏராளமான அமெரிக்கர் குடிபுகுந்தனர். விரைவில் இரயில் பாதைகள் போடப்பட்டன. நியூ மெக்சிகோவின் தென் எல்லையை ஒட்டி கலிபோர்னியாவை இணைக்கும் முறையில் ஓர் இரயில் பாதை யமைக்க மெக்சிகோ நாட்டு நிலம் சிறிது தேவைப்பட்டது. மெக்சிகோவில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தூதுவராகப் பணியாற்றிய ஜேம்ஸ் காட்ஸ்டன் (James Gadsden), 1835இல் பக்குவமாகப் பேசிப் பத்து மில்லியன் டாலருக்கு 54,000 சதுர மைல்களை விலைக்குப் பெற்றார். அப்பகுதிக்கு "காட்ஸ்டன் வாங்கிய நிலம்" (Gadsden Purchase) எனப் பெயர் சூட்டப்பட்டது. அதன் வழியே பின்னர் இரயில் பாதையமைக்கப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) மேற்கு நோக்கி விரிவடைந்தபோது டெக்சாஸ், ஆரிகான் பகுதிகளை அமெரிக்கர் கைப்பற்றிய முறையினை விளக்குக.

2) மெக்சிகோ போரினால் (1846-48) அமெரிக்காவுக்கு ஏற்பட்ட ஆதாயங்களை எடுத்தியம்புக.

பாடம் – 14 வகுப்புணர்ச்சியும், அடிமை முறையும்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் துவக்கத்திலிருந்தே தென் மாநிலங்கட்கும் வடமாநிலங்கட்குமிடையே கருத்து வேறுபாடுகள் நிலவிவந்தன. அடிமை முறை மீதான கருத்து வேறுபாடு நாளடைவில் பகைமையாக உருவெடுத்தது. இக்கருத்து வேற்றுமையானது அமெரிக்காவின் பொருளாதார, அரசியல், சமுதாய அடிப்படைகளில் ஊடுருவிச்சென்றிருந்தது. மெக்சிகோ போருக்குப் பிறகு (1846-48), இது தீவிரமடைந்து இருதரப்பினருக்குமிடையே போர் மூளக் கூடுமென்றும் அஞ்சப்பட்டது. இதனால் நாட்டின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று அஞ்சப்பட்டது. அவ்வப்போதிருந்த அரசியல் தலைவர்கள் வெகு திறமையாக நெருக்கடிகளைத் தீர்த்தனர்; ஆனால் அடிமை முறை மீதான சிக்கல் தொடர்ந்து இருந்து வந்தது.

அடிமை முறை

பதினெட்டாம் நூற்றாண்டில் அடிமை முறை வடஅமெரிக்காவிலிருந்த அனைத்து பிரிட்டிஷ் குடியேற்றங்களிலும் பரவியிருந்தது. ஆப்பிரிக்காவின் மேலைக் கரையோரப் பகுதிகளிலிருந்து நீக்ரோக்கள் வன்முறையில் பிடிக்கப்பட்டு வந்து புதிய உலகில் அடிமைகளாக விற்கப்பட்டனர். இவர்களில் இருவகையினர் இருந்தனர். ஒருவகையினர் நிலச்சுவான்தார்களின் இல்லங்களில் பணியாட்களாக எடுபிடி வேலை செய்தனர். மற்றொரு சாரார் பண்ணைத் தோட்டங்களிலும், வயல்களிலும், பணிபுரிந்தனர்.. இல்லங்களில் பணியாற்றிய அடிமைகளின் வாழ்க்கை நிலை, வயல்களில் வேலை செய்த அடிமைகளின் வாழ்க்கை நிலையை விட சற்று நன்முறையில் அமைந்திருந்தது. பண்ணைத் தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்த நீக்ரோ அடிமைகள் குழுவாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அடிமைகளிடமிருந்து உயர்ந்த அளவு எவ்வளவு வேலை பெறமுடிகிறது என்பதனடிப்படையில் கண்காணிப்பாளரின் திறமை . பண்ணை உரிமையாளரால் அளக்கப்பட்டது. எனவே கண்காணிப்பாளர்கள் இரக்கமில்லாது அடிமைகளைச் சித்திரவதை செய்து கொடுமையாக வேலை வாங்கினர்.

அடிமை முறையைத் தொடரலாமா கூடாதா

அடிமை முறை நாட்டுக்கு நலம் பயக்கும் ஒரு அமைப்பு எனத் தென்மாநிலத் தவர்கள் வாதிட்டனர். மக்கட் தொகை குறைவாக இருந்த அந்நாளில் வேலை செய்ய போதிய ஆட்கள் இல்லை. தென்மாநிலங்களில் சர்க்கரைக்கான கரும்பு, பருத்தி, புகையிலைப் பயிர்த்தொழிலுக்கு வேலை செய்ய அடிமைகள் மேன்மேலும் தேவைப்பட்டனர். எனவே இம்முறை தொடர்வதையே இவர்கள் விரும்பினர், தென்மாநில எழுத்தாளர்களெல்லாம் அடிமை முறையை ஆதரித்து கவிதைகளும், கட்டுரைகளும், நூல்களும் எழுதினர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தாமஸ்டியூ என்பவரும், ஜார்ஜ் பிட்ஸ்கியூ என்பவருமாவர். இவர்கள் கீழ்நிலையிலிருந்த நீக்ரோ மக்கட்கு முறையாக உணவளித்துக்

காப்பாற்றுவதை வெள்ளையரின் கடமையென வாதிட்டனர். வெள்ளையரின் கண்காணிப்பில் நீக்ரோக்கள் நலமுடன் வாழ்ந்தனர் என்றும், அவர்களிடையே கிறித்தவ சமயம் நன்முறையில் பரப்பப்பட்டதென்றும், அவர்கட்கு போதிய உணவு, உடை தரப்பட்டதென்றும் தென் மாநிலத்தவர்கள் பரிந்து பேசினர். வடமாநிலங்களில் இருந்த 'தலையிடா முதலாளித்துவத்தை' அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைவிட அடிமை முறையிலான பொருளாதாரமே மேலானது என்றும், வடக்கேயிருந்த கூலி முறையை விட அடிமை முறை மேலானது என்றும் அவர்கள் எடுத்தியம்பினர்.

வட மாநிலத்தவர் அடிமை முறையைக் கடுமையாக எதிர்த்தனர். அங்குப் பல அடிமை எதிர்ப்புக் கழகங்கள் தோன்றியிருந்தன. இவற்றின் கிளைகள் அடிமை முறையை மேற்கொண்ட மாநிலங்களில் இருந்தன. அடிமை முறையைக் கண்டித்து வெளியிடப்பட்ட செய்தித்தாட்களில் தலையாயதாக காரிசன் (Garrison) வெளியிட்ட 'லிபரேடர்' (Liberator) விளங்கிற்று. ஹாரியட் பீச்சர் ஸ்டொவ் (Harriet Beecher Stowe) எழுதிய (1852) 'அங்கிள் டாம்சு கேபின்' (Uncle Tom's Cabin) என்ற நூல் அடிமை முறையின் மடமையையும், கொடுமையையும் வன்மையாகக் கண்டித்தது. சின்சினாட்டியில் வாழ்ந்து வந்த திருமதி ஸ்டொவ், அடிமைகள் இருந்த பண்ணைகட்கு அடிக்கடி சென்று அடிமைகள் படும் துயரை நேரில் கண்டிருந்தார். அடிமை முறையிலிருந்து கொடுமைத் தன்மையினை பிரிக்க இயலாது என்றும், ஒரே நாட்டில் ஒரு பக்கம் உரிமை பெற்ற சமூகமும், மற்றொரு பக்கம் அடிமைச் சமூகமும் விளங்குவது அடிப்படையில் முரண்பாடானது என்றும் திருமதி ஸ்டொவ் இந்நூலில் கூறியிருந்தார். இதனை படித்த மக்கள் மன்பதை நோக்கில் மனக்கிளர்ச்சியுற்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் இரயில் பாதைகள் பல போடப்பட்டன. இவற்றால் வடபகுதியும், மேலைப் பகுதியும் நன்கு இணைக்கப்பட்டன. ஆனால் தென் பகுதியிலோ போதுமான இரயில் பாதைகள் போடப்படவில்லை. இக்குறையைத் தென் மாநிலத்தவர் சுட்டிக்காட்டினர். அடிமைமுறை எதிர்ப்பாளர்கள் பலர் நீக்ரோக்கள் தப்பிச் செல்ல உடந்தையாக இருந்தனர். இரயில் பாதையில் இரவு நேரத்தில் சரக்கு வண்டிகளிலும், கடற்கரையோரப் பகுதியில் கப்பல்களிலும், சில நேரம் மறைவாகக் குதிரை வண்டிகளிலும் தப்பி செல்ல அடிமைகட்கு உதவினர். தப்பிச் சென்ற அடிமைகட்கு தஞ்சமளிக்கும் நிலையங்கள் பல அமைக்கப் பட்டன. இப்படித் தப்பியோடுவதற்கான வழிகளைச் 'சுரங்க இரயில் பாதை' Under ground Rail road) என்றழைத்தனர்.

மிசௌரி சமரச உடன்பாடு – 1820

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1787இல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி வட மேற்குப் பகுதியில் அடிமை முறை தடை செய்யப்பட்டது. 1808இல் ஆப்பிரிக்க அடிமை வாணிபம் நிறுத்தப்பட்டது. இதனால் நாளடைவில் நாட்டிலுள்ள அடிமைகளெல்லாம் தாமாகவே விடுதலையடைந்து விடுவர் எனப் பலரும் கருதினர். ஆனால் அதற்கு மாறாக

நிலைமை மோசமாயிற்று. தென் மாநிலப் பண்ணை முதலாளிகள் அடிமை முறை தொடர வேண்டுமென பிடிவாதமாக வற்புறுத்தலாயினர். மேற்கு நோக்கி முன்னேறி மக்கள் குடியேறிய போது வடபகுதியின் உரிமையோடு விளங்கிய சமூகமும், தென் பகுதியின் அடிமைச் சமூகமும் ஒன்றோடொன்று போரிட ஆயத்தமாயின. வடமாநிலத் தவர் அடிமை முறையை எதிர்த்தனர். தென்மாநிலத்தவர் புதிதாக உருவாகிவரும் மேற்கு மாநிலங்களிலும் அதைப் புகுத்த முற்பட்டனர். இந்த இரு கோட்பாட்டாளருக்குமி டையே, சட்டமாமன்றத்தில் அதிலும் குறிப்பாக செனட் மன்றத்தில் சமநிலை இருக்கும் படியாகப் பார்த்துக் கொள்வது அரசியல் வாதிகளின் கடமையாயிற்று. இல்லையெனில் ஒரு தரப்பாரின் வலிமை மற்றொருவரைக்காட்டிலும் மிகுந்து விடக்கூடும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் 1818இல் இலினாய் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது அடிமை முறையை ஏற்றிருந்த மாநிலங்கள் பத்தாகவும், அடிமை முறையைத் தடை செய்த மாநிலங்கள் பதினொன்றாகவும் இருந்தன. அலபாமா அடிமை முறையை ஏற்றுக் கொண்ட மாநிலமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட போது இரு கோட்பாட்டாளருக்கு மிடையே சமநிலை ஏற்படுத்தப்பட்டது. அடுத்து மிசௌரி அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் சேர விரும்பிற்று. வடமாநிலத்தவர் ஒன்று கூடி மிசௌரி ஓர் அடிமை முறையை ஏற்ற மாநிலமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதைக் கண்டித்தனர். இதற்கான சட்ட வரைவு கொண்டு வரப்பட்ட போது சட்டமாமன்றத்தில் கடும் விவாதத்திற்குப் பின் ஒரு திருத்தம் கூறப்பட்டது. அதன்படி மிசௌரியினுள் மேலும் நீக்ரோக்களை நுழைய விடக் கூடாதென்றும், படிப்படியாக அங்கு அடிமை முறை ஒழிக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டது.

இந்நேரத்தில் 1819இல் மெயின் மாநிலம் அடிமை முறையை ஏற்காத மாநிலமாக கூட்டாட்சியில் சேர விண்ணப்பித்தது. பேராளர் மன்றம் (கீழவை) உடனே மெயினை சேர்த்துக் கொள்ள வாக்களித்தது. அடுத்து, செனட் மன்றம் மெயினை அடிமை முறையை ஏற்காத மாநிலமாகவும், மிசௌரியை அடிமை முறையைக் கொண்ட மாநிலமாகவும், லூசியானாவின் மேற்குப் பகுதியில் அடிமை முறை தடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்தது. இதனைத் தீர ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு ஒரு சமரச உடன்பாட்டை உருவாக்கிற்று. அதன்படி மெயின் அடிமை முறையை ஏற்காத மாநிலமாகவும், மிசௌரி அடிமை முறையை ஏற்றுக் கொண்ட மாநிலமாகவும் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. லூசியானாப் பகுதியின் வழியாகச் செல்லும் $36^{0}\ 30'$ குறுக்கையளவுக் கோடு (அட்சரேகை) அடிமை முறையை ஏற்ற, ஏற்காத நிலப்பகுதியினைப் பிரிக்கும் கோடாக வரையறுக்கப்பட்டது. இதுவே மிசௌரி இணக்கமெனப்பட்டது. அந்நேரம் அடிமை முறை உள்ள மாநிலங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகவும், அடிமை முறையை ஏற்கா மாநிலங்களின் தொகை பன்னிரண்டாகவும் இருந்தது. அடுத்துக் குடியரசுத் தலைவர் ஜேம்ஸ்போக் பதவிக்காலத்தில், டெக்சாஸ் அடிமை முறையைக் கொண்ட மாநிலமாகவும், ஆரிகான் அடிமை முறையை ஏற்காத மாநிலமாகவும் சேர்க்கப்பட்டு சமநிலை காக்கப்பட்டது.

1850ஆம் ஆண்டு சமரச உடன்பாடு

மெக்சிகோ போரின் (1846-1848) விளைவாகப் பெற்ற பகுதிகளில் அமெரிக்கர் குடியேற முயன்ற போது மீண்டும் அடிமை முறை குறித்த சிக்கல் எழுந்தது. போரின் போதே மெக்சிகோவிடமிருந்து கைப்பற்றப்படவிருக்கும் பகுதிகளில் அடிமை முறை தடைசெய்யப்பட வேண்டுமென வட மாநில உறுப்பினரான டேவிட் வில்மாட் (David Wilmot) என்பவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். தென்மாநிலத்தவர்கள் இதனை வன்மையாக எதிர்த்தனர். அவர்களில் "தீயுண்போர்' (Fire Eaters) என்றழைக்கப்பட்ட சில தீவிரவாதிகள் உடனே பிரிவினை கோரவேண்டுமென்றும் கூக்குரலிட்டனர்.

மிசௌரி சமரச உடன்பாட்டு எல்லைக்கோட்டைப் பசிபிக் பெருங்கடல் வரை நீட்டித்தால் நியூமெக்சிகோவும், கலிபோர்னியாவும் தென் பகுதிக்குட்படுவதை தென் மாநிலத்தவர் சுட்டிக்காட்டினர். எனவே அப்பகுதியில் அடிமை முறையைத் தொடரலா மெனக் கருதப்பட்டது. கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதையொட்டி பல வடமாநிலத்தவர்கள் அங்கு சென்று குடியேறியிருந்தமையால் வடமாநிலத்தவர் அக்கருத்தை ஏற்க மறுத்தனர். ஆனால் நற்பயனாக தீவிரவாதிகட்கிடையே சில மிதவாதிகளும் இருந்தனர். அவர்களுள் சிறந்தவர்களாக விளங்கியோர் ஹென்றி கிளே (Henry Clay) என்பாரும், ஸ்டீபன் டக்லாஸ் (Stephen A. Douglas) என்பவருமாவர். அவர்கள் இச்சிக்கலுக்கு தீர்வுகாண முயன்ற நேரத்தில் கலிபோர்னியாவும், வடமெக்சிகோவும் அடிமை முறையை ஏற்காத அரசியலமைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டு, கூட்டாட்சியினுள் சேர 1850இல் விண்ணப்பித்தன. அப்பகுதிகளை மாநிலங் களாக ஏற்பது பற்றிய வினா எழவே, அடிமை முறை மீதான சிக்கலை உடனடியாகத் தீர்த்து வைப்பது கட்டாயமாயிற்று.

ஹென்றி கிளே செனட் மன்றத்தில் மேற்கூறிய சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் கீழ்க்காணும் ஐந்து கருத்துக்களை வெளியிட்டார். (1) கலிபோர்னியாவை அடிமை முறையை ஏற்கா மாநிலமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். (2) அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைநகராகிய வாஷிங்டனில் அடிமை முறை தொடர்ந்த போதிலும், அடிமை வாணிபம் தடை செய்யப்பட வேண்டும். (3) தப்பிச்செல்லும் அடிமைகளைப் பிடித்து அவர்தம் உரிமையாளரிடம் ஒப்படைக்க அப்போதிருந்ததைவிடச் செயல் திறம் மிக்க சட்டங்களை சட்டமாமன்றம் இயற்ற வேண்டும். (4) மெக்சிகோ போருக்கு முன் டெக்சாசால் பெறப்பட்ட பொதுக்கடனை கூட்டாட்சி அரசு திருப்பியளிக்க முன்வர வேண்டும். (5) நியூமெக்சிகோவிலும், உடாவிலும் (Utah) தல ஆட்சி அரசுகள் நிறுவப்பட வேண்டும். பின்னர் அவற்றின் விருப்பப்படி அடிமை முறையை ஏற்ற அல்லது ஏற்காத மாநிலங்களாக சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். இறுதியில் இந்த ஐந்து கருத்துகளினடிப்படையில் இருதரப்பாருக்குமிடையே சமரச இணக்கம் ஏற்பட்டது. இதற்கு 1850ஆம் ஆண்டு உடன்பாடு என்று பெயர். அடிமை முறை சிக்கலுக்கு இறுதி விடையாக இவ்வுடன்பாட்டைக் கொள்ள வேண்டுமென வடபகுதி, தென்பகுதி அரசியல்வாதிகள் வற்புறுத்தினர். இச்சிக்கலினால் உள்நாட்டு வாணிபம் பெரிதும்

தடைப்பட்டுச் சீரழிந்ததைக் கண்ட வணிகர்கள், இவ்வுடன்பாட்டால் நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டு வாணிபம் செழிக்கும் என எண்ணினர். ஆனால் இவ்வுடன்பாடு ஒன்றையும் சாதிக்கவில்லை என்பதை அடுத்து வந்த நிகழ்ச்சிகள் உணர்த்தின.

கான்சாஸ் – நெப்ராஸ்கா சட்டம் 1854

மேற்கு நோக்கி வெகு வேகமாக முன்னேறிய அமெரிக்க ஐக்கிய நாட்டை இணைப்பதற்கான இரயில்பாதைத் திட்டத்தில், ஒரு மத்திய இரயில்பாதை கான்சாஸ் - நெப்ராஸ்கா நிலப்பகுதி வழியாக அமைக்க வேண்டிய நிலையேற்பட்டது. அடிமை முறையைக் கடுமையாக எதிர்த்த வடமாநிலத்தவர்கள் அடிமை முறையைக் கொண்டுள்ள ஒரு நிலப்பகுதி வழியே அந்த இரயில்பாதை செல்லக்கூடாது எனக் கண்டனம் தெரிவித்தனர். இச்சிக்கலைத் தீர்க்க இலினாய் மாநிலத்தைச் சேர்ந்த செனட் மன்ற உறுப்பினரான ஸ்டீபன் டக்லாஸ் கான்சாஸ் - நெப்ராஸ்கா சட்டத்தைக் கொண்டு வந்தார். அச்சட்டத்தின்படி கான்சாசும், நெப்ராஸ்காவும் இருபகுதிகளாக 40^0 குறுக்கை யளவுக்கோட்டில் பிரிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டது. தென்பகுதி கான்சாஸ் என்றும், வடபகுதி நெப்ராஸ்கா என்றும் அழைக்கப்பட்டது. இச்சட்டத்தில் மேலும் இரு முக்கிய கருத்துக்கள் கூறப்பட்டிருந்தன. (1) கான்சாஸ், நெப்ராஸ்கா ஆகிய இரு புதிய மாநிலங்களிலும் அடிமைமுறை குறித்த எல்லாச் சிக்கல்களையும் அம்மாநில மக்களே தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். (2) இதற்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிசௌரி சமரச இணக்கம் இரத்து செய்யப்பட்டது. ஏனெனில், கான்சாஸ், நெப்ராஸ்கா பகுதிகள் $36^0\ 30''$ குறுக்கையளவு கோட்டிற்கு வடபகுதியிலிருந்தன. இப்போது 40^0 குறுக்கையளவுக்கோடு எல்லையாயிற்று. மற்றும் நாட்டின் எப்பகுதியிலும் அடிமை முறையை நீக்க சட்டமாமன்றத்துக்கு அதிகாரம் இல்லையென்றும் தெளிவுபட இச்சட்டத்தில் கூறப்பட்டது. இவ்வாறு அடிமைமுறை பற்றி முடிவு செய்வதற்கான இறைமைத் தன்மை பொதுமக்களையே சார்ந்தது என்ற கோட்பாடு இச்சட்டத்தின் மூலம் செயல்முறைக்கு வந்தது எனலாம்.

கான்சான், நெப்ராஸ்கா சட்டத்தால் முன்பு அடிமைமுறை விலக்கப்பட்டிருந்த பகுதிகளிலெல்லாம் அடிமைமுறை புகுத்த வழிவகுக்கப்பட்டது. இதனால் மீண்டும் வகுப்புவாத உணர்வு வெறியாக தலைதூக்க ஆரம்பித்தது. இச்சட்டத்தை அடிமை எதிர்ப்பாளர்கள் கடுமையாகக் கண்டித்தனர். ஸ்டீபன் டக்லாசின் கொடும்பாவிகள் கோபத்துடன் கொளுத்தப்பட்டன. அடிமைகளைக் கொண்டு வேலை செய்யத் தகுதியற்ற நில்ப்பகுதியாக நெப்ராஸ்கா இருந்தமையால் அங்கு அடிமை முறையினைப் புகுத்தத் தென்மாநிலத்தவர்கள் முயற்சி செய்யவில்லை. ஆனால் கான்சாசில் அடிமை முறையைப் புகுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அடிமைமுறை எதிர்ப்பாளர்கள் புகவொட்டாது தடுக்க முயன்றனர். இருவகுப்பாருக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. பொருட்கள் களவாடப்பட்டன; படுகொலைகள் செய்யப்பட்டன கான்சாசில் குருதி பெருக்கெடுத்து ஓடியமை, வரவிருந்த உள்நாட்டுப் போரை ஒருவகையில் உணர்த்திற்று எனலாம்.

குடியரசுக் கட்சியின் தோற்றம்

கான்சாஸ் - நெப்ராஸ்கா சட்டம் அமெரிக்க அரசியல் கட்சிகளிடையே பூசல் களையும், பிளவுகளையும் ஏற்படுத்திற்று. அச்சட்டத்தின்படி வடபகுதியிலும் அடிமை முறை புகுத்தப்படுவதற்கான வழிமுறைகள் இருப்பதைக் கண்ட வடமாநிலத்தவர் சினமுற்றனர். ஆகவே, அடிமை முறையை ஒழிப்பதெனக் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படலாயினர். இதனால் அரசியல் கட்சிகளிடையே சில மாறுதல்கள் நிகழ்ந்தன. (1) மக்களாட்சிக் கட்சியினருள்ளேயே (Democratic Party) வடபகுதி மக்களாட்சிக் கட்சியினர் என்றும், தென்பகுதி மக்களாட்சிக் கட்சியினர் என்றும் பிளவு தோன்றிற்று. அடிமை முறையை எதிர்ப்போர் நெஞ்சங்கோடா விக்குகள் (Conscience Whigs) என்றும், அடிமை முறையை ஆதரித்தோர் பருத்தி விக்குகள் (Cotton Whigs) என்றும் பெயர் பெற்றனர். இவ்விரு கட்சிகளில் பிளவு ஏற்பட்டபோது இரண்டு வேறு கட்சிகளும் தோன்றின. அவை : (1) நில உரிமையினர் கட்சி (Free Soilers), (2) அமெரிக்கக் கட்சி (American Party). இவ்விரண்டும் சில ஆண்டுகள் கழித்து மறைந்தன.

இப்படிப்பட்ட அரசியல் சூழ்நிலையில்தான் குடியரசுக்கட்சி (Republican Party) தோன்றிற்று. நில உரிமையினரையும் வடபகுதி மக்களாட்சிக் கட்சியினரையும் கருவாகக்கொண்டு குடியரசுக்கட்சி உருவெடுத்தது. பின்னர் நெஞ்சங்கோடா விக்குகளும் சேர்ந்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் எந்தப் பகுதியிலும் அடிமை முறை இருக்கக்கூடாது என்பதே அக்கட்சியின் தலையாய கொள்கையாக அமைந்தது. துவக்கத்தில் குடியரசுக்கட்சி மேற்குநடுப்பகுதியில் செல்வாக்குப் பெற்றது.

டிரெட் ஸ்காட் வழக்கில் கொடுமையான தீர்ப்பு (1857)

அமெரிக்காவின் வரலாற்றிலேயே முக்கியமானதொரு தீர்ப்பைத் தலைமை நீதிமன்றம் டிரெட்ஸ்காட் வழக்கில் தந்தது. டிரெட் ஸ்காட் (Dred Scott) என்னும் அடிமை மிசௌரி மாநிலத்தைச் சார்ந்த ஒரு பண்ணை முதலாளியின் உடைமையாக இருந்தான். பின்னர் அம்முதலாளி அவனை அடிமைமுறை இல்லாத இல்லினாய் மாநிலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து வடபகுதிக்குச் சென்று குடியேறினார். மிசௌரி சமரச உடன்பாட்டின்படி அங்கெல்லாம் அடிமைமுறை தடுக்கப்பட்டிருந்தது. எனவே அங்கு வாழ்ந்த அடிமை முறை எதிர்ப்பாளர்களெல்லாம் ஒன்று கூடி டிரெட் ஸ்காட் பல நாட்களாக அடிமைமுறை தடுக்கப்பட்ட நிலப்பகுதியில் வாழ்ந்து வருவதால் அவன் அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்கப்பட வேண்டுமென ஒரு வழக்கைத் தொடுத்தனர். அவ்வழக்கு இறுதியாகத் தலைமை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. இறுதியில் தலைமை நீதிபதி ரோஜர் டேனி (Roger B. Taney) குறிப்பிடத்தக்க ஒரு தீர்ப்பினை வழங்கினார். அதில் ஒரு நீக்ரோவோ அல்லது ஒரு நீக்ரோவின் சந்ததியினரோ அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியுரிமையைப் பெற முடியாது என்றும், அதனால் ஸ்காட் இவ்வழக்கினை நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரத் தகுதியற்றவன் என்றும் கூறப்பட்டது. இத்தீர்ப்பினைக் காட்டிலும் அத்துடன் இணைத்துச் சொல்லப்பட்ட சில கருத்துக்களே குறிப்பிடத் தக்கனவாம். அரசியலமைப்பின் ஐந்தாவது திருத்தத்தின்படி தனிப்பட்ட

அமெரிக்கனின் சொத்துரிமைக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமென்றும், அமெரிக்காவின் எப்பகுதியிலும் அடிமை முறையைத் தடைசெய்யச் சட்டமன்றத்துக்கு உரிமையில்லை என்றும், அதனால் மிசௌரி சமரச இணக்கம் இயற்றப்பட்ட நாளிலிருந்தே செல்லுபடியாகாதென்றும் தீர்ப்பில் கூறப்பட்டது.

அடிமைமுறை மீதான சிக்கலை நீதிமன்றம் நன்முறையில் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, எரியும் தீயில் நெய்யை வார்த்தது போல இச்சிக்கலை மேலும் தீவிரமாக்கியது. இத்தீர்ப்பு தென்மாநிலத்தவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியினைத் தந்தது. நாடு முழுவதும் அவர்களது அடிமை சொத்துக்குச் சட்டபூர்வமாக பாதுகாப்பளிக்கப்பட்டது. அடிமை முறையைச் சட்டபூர்வமாக ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டிருந்த குடியரசுக் கட்சி மேலும் தீவிரமாகச் செயலாற்ற முற்பட்டது.

1860–ஆம் ஆண்டுத் தேர்தல்

புதியதாகத் தோன்றிய குடியரசுக் கட்சியின் ஒப்பற்றத் தலைவராகத் திகழ்ந்த ஆபிரகாம் லிங்கன் குடியரசுத் தலைவர் பதவிக்கு அக்கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அடிமை முறையைத் தொடர உறுதிபூண்ட தென் மாநிலத்தவர்கள் மக்களாட்சிக் கட்சியின் சார்பில் ஜான் பிரிக்கின்ரிட்ஜ் (John C. Breckinridge) என்பவரை வேட்பாளராகவும், பழைய விக்குக் கட்சியினர் ஜான் பெல் (John D. Bell) என்பவரை வேட்பாளராகவும் நியமித்தனர். குடியரசுக் கட்சியினர் அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்ததோடு, வணிகர்கள் செல்வாக்கைப் பெறக் காப்பு வரிகள் விதிப்பதாகவும், விவசாயிகளின் ஆதரவைப் பெறக் குடியிருப்புச் சட்டம் இயற்றுவதாகவும் தேர்தல் அறிக்கையில் உறுதிதந்தனர். கடுமையான போட்டிக்குப் பிறகு இறுதியில் லிங்கன் 180 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பிரிக்கின்ரிட்ஜுக்கு 72 வாக்குகளும், பெல்லுக்கு 39 வாக்குகளும், டல்லாசுக்கு 12 வாக்குகளுமே கிடைத்தன. ஆபிரகாம் லிங்கனுக்குக் கிடைத்த வெற்றி, வடமாநிலத்தவருக்குத் தென்மாநிலத்தவர் மீது கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டது. எனவே தென்மாநிலத்தவர்கள் கூட்டாட்சி அரசை விட்டு விலகிச் செல்ல முடிவு செய்தனர். அப்படி விலகியதும் உள்நாட்டுப்போர் துவங்கிற்று.

பயிற்சி வினா

உள்நாட்டுப் போருக்கான காரணங்களை விவரி.

பாடம் – 15 உள்நாட்டுப் போர் (1861–1865)

ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை வரலாறு

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களுள் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் 1809ஆம் ஆண்டு, கென்டக்கியில் ஓர் ஏழைச் தச்சருக்கு மரத்தால் கட்டப்பட்ட ஒரு வீட்டில் பிறந்தார். மேற்கு நோக்கி அமெரிக்கர் முன்னேறிய போது இந்தியானாப் பகுதியில் குடியேறியவர்களுள் லிங்கன் குடும்பமும் ஒன்றாகும். லிங்கன் சிறு பையனாக இருக்கும் போதே தாயை இழந்தார். அவருடைய தந்தை ஒரு விதவையை மறுமணம் செய்து கொண்டார். அவரது இளமைப் பருவம் இந்தியானாவில் சென்றது. பின்பு இல்லினாயிலுள்ள ஸ்பிரிங்பீல்டு (Spring field) என்னுமிடத்தில் லிங்கன் குடும்பத்தினர் வாழலாயினர்.

சட்டமும் அரசியலும் படித்து முடித்த லிங்கன் 28வது வயதில் ஸ்பிரிங்பீல்டில் வழக்குரைஞராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். அந்நகரத்தினர் லிங்கனது கூர்ந்த மதியையும், வழக்குகளைத் தீர ஆராயும் முறையினையும் கண்டு போற்றினர். வழக்குரைஞராக மக்களது நன்மதிப்பைப் பெற்ற லிங்கன் இலினாய் மாநில சட்டமன்றத்தில் எட்டாண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றினார். பின் சட்டமாமன்றத்தின் கீழவையில் விக்குக்கட்சியின் பேராளராக 1844 முதல் 1846 வரை இருந்தார். விக்குக் கட்சியினர் அவருக்குச் சிறப்புமிக்கதோர் இடத்தை அரசியலில் அளிக்காமல் விடவே அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதென லிங்கன் நினைத்தார். ஆனால் அடிமை முறை மீதான சிக்கல் மீண்டும் எழுப்பப்படவே லிங்கன் அரசியலில் தொடர்ந்து ஈடுபட முடிவு செய்தார்.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட குடியரசுக் கட்சியின் கோட்பாடுகளோடு லிங்கனுக்கு முழுமையான கருத்து உடன்பாடு இருந்தமையால் அதில் அவர் சேர்ந்தார். 1858ஆம் ஆண்டு நடைபெற்ற செனட் மன்ற தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் லிங்கன் போட்டியிட்டார். அவரை எதிர்த்து மக்களாட்சிக் கட்சியின் வேட்பாளராக ஸ்டீபன்டக்லாஸ் போட்டியிட்டார். இறுதியில் டக்லாசே வெற்றி பெற்றார். இருப்பினும் இத்தேர்தலின்போதுதான் அரசியலில் அறிமுகமாயிருந்த லிங்கன், டக்லாசுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க வாதங்களை நடத்தினார். இருவரும் கென்டக்கியில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பின்னர் மேற்கே குடியேறியவர்கள். இளமையில் இருவரும் பல இடர்பாடுகட்குட்பட்டிருந்தனர். நெருங்கிய நண்பர்களாயிருந்த போதிலும் அரசியலில் மாறுபட்ட கோட்பாடுகளைக் கொண்டவர்களாயிருந்தனர். டக்லாஸ் தனது சொல் வன்மையாலும், பொருட்செறிவாலும் கேட்போரைக் கவர்ந்தார்; லிங்கன் திறமையாக வாதிட்டு உண்மையை உணர்த்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இவர்களது அடிமை முறைபற்றிய வாதங்கள் நாடு முழுவதிலும் ஆர்வமுடன் கேட்கப்பட்டதோடு, செய்தித் தாட்கள் வாயிலாகப் படிக்கப்பட்டன. லிங்கனுடைய ஆங்கிலநடை எடுப்பானதாகவும், எளியதாகவும் அமைந்திருந்தது. அவருடைய சொற்பொழிவுகளில் ஆழ்ந்த கருத்துக்களிருந்தன. லிங்கன், இறப்பதற்கு ஒரு திங்கள் முன்பு இரண்டாவது பதவியேற்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவில் “எவரிடமும் மனக்காழ்ப்புக் கொள்ளற்க;

அனைவரிடத்தும் மன்பதை அன்பு கொள்க" (With malice toward none, with charity for all) என்று அறிவுரை வழங்கினார். இச்சொற்றொடருக்கு இலக்கணமாகவே லிங்கன் தமது வாழ்க்கையை நடத்தினார். 1860ஆம் ஆண்டுக் குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக நின்ற லிங்கன் மாபெரும் வெற்றி பெற்றார். இதனைக் கண்ட தென் மாநிலத்தவர்கள் பிரிந்து சென்று உள்நாட்டுப் போருக்கு ஆயத்தமாயினர்.

தென்மாநிலங்கள் பிரிந்து செல்லல்

லிங்கன் வெற்றிபெற்றால் நாடு பிளவுறும், போர் மூளுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அவரது வெற்றி அறிவிக்கப்பட்டதும் தென் கரோலினா கூட்டாட்சியினின்று பிரிந்து சென்று ஒரு மாநாட்டைக் கூட்டிற்று. அதற்கு பல தென் மாநிலங்களிலிருந்து உறுப்பினர்கள் வந்திருந்தனர். அவர்களெல்லாம் ஒரு மனதாகத் தென் கரோலினா செய்தது போல அமெரிக்கக் கூட்டாட்சி அரசினின்று பிரிந்து செல்வதெனத் தீர்மானித்தனர். புளோரிடா, அலபாமா, ஜார்ஜியா, லூசியானா, டெக்சாஸ், மிசிசிபி ஆகிய மாநிலங்கள் கூட்டாட்சியிலிருந்து பிரிந்தன. இப்பிரிவினைக்கு ஆபிரகாம் லிங்கன் எதிர்ப்பு தெரிவித்ததும் மேலும் வடகரோலினா, வர்ஜீனியா, தென்னசி, அர்க்கன்சாஸ் ஆகிய நான்கு மாநிலங்களும் விலகின. இவ்வகையில் மொத்தம் பதினொரு மாநிலங்கள் பிரிந்து சென்றன. இவை அலபாமாவிலுள்ள மான்ட்கோமெரியில் ஒன்றுகூடி மாநாடு நடத்தின. இதில் ஒரு புதிய கூட்டாட்சி ஏற்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், ஒரு புதிய அரசியலமைப்பும் தீட்டப்பட்டது. இதில் 'அடிமை முறைக்கு' முக்கியத்துவம் தரப்பட்டது. ஜெபர்சன்டேவிஸ் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இக்கூட்டாட்சியின் தலைநகர், வர்ஜீனியாவிலுள்ள ரிச்சுமாண்டு (Richmond) என முடிவு செய்யப்பட்டது. மற்றும் சட்டமன்றத்துக்கு அனைத்து அதிகாரமும் தரப்பட்டது. குடியரசுத் தலைவர் பதவிக்கு ஒருவர் ஒருமுறைதான் பதவி வகிக்கலாம் என்றும், பதவிக்காலம் ஆறு ஆண்டு என்றும் வகுக்கப்பட்டது.

இருதரப்பாருடைய படை வலிமை

தங்களுடைய உரிமையைப் பெற்றதால் வலிமையைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று பிரிந்து சென்ற தென் மாநிலத்தவர் எண்ணினர். அவர்கள் உழைப்பை மூச்சாகக் கொண்டவர்கள். வலிமை அவர்களது வாழ்வு. திறமை அவர்களது செயல். இதனால் வடமாநிலங்களை எளிதில் வென்றிடலாமென அவர்கள் எண்ணினர். மேலும் ஐரோப்பிய நாடுகள் பருத்தி, புகையிலை, கரும்பு ஆகியவற்றைத் தென்மாநிலங்களிலிருந்து பெறுவதால், ஐரோப்பியர் வடமாநிலங்களைவிட தென்மாநிலங்கட்கு ஆதரவு தருவார்கள் என எண்ணினர். காப்புவரித் தடைகள் இல்லாததால், உற்பத்தியைப் பெருக்கவும், இறக்குமதியைக் கூட்டவும் முடியுமென திட்டமிட்டனர். அடிமை முறை ஏற்கப்பட்டதால், அவர்களின் மூலம் உழைப்பைப் பெருக்கலாமென உறுதி கொண்டன.

பொருளாதார வளத்தைப் பொறுத்தமட்டில் வடமாநிலத்தவர்கள் பல நன்மை களைப் பெற்றிருந்தனர். அங்கு தொழிற்சாலைகள் மிகுந்திருந்தன. பெரும்பாலான வெளிநாட்டு வாணிகம் வடபகுதி வணிகர்கள் கையிலிருந்தது. செய்பொருட்களை உற்பத்தி செய்வதில் வட மாநிலத்தவரே உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். கடல்கடந்த வெளிநாடுகளின் உறவும் இவர்களால் கட்டுப்படுத்தப்பட்டது.

கூட்டாட்சி அரசிடம் கருவூலத்துறை இருந்ததோடு, சீரான பணத்தாள் முறையும் போரின் போது இருந்தது. இதற்கு மாறாகத் தென்மாநிலக் கூட்டிணைவிடம் (Confederate States of America) சரியான நிதியமைப்பு முறை இல்லாதிருந்தது. இருதரப்பினரும் வரிகள் விதித்தும், கடன்பத்திரங்கள் வழங்கியும், தாள் பணம் வெளியிட்டும் தத்தம் நிதிநிலையை வலுப்படுத்திக் கொண்டன. இதனால் நாட்டில் பொதுவாகப் பணவீக்கம் அதிகமாகி விலை வாசி ஏறிற்று.

இராணுவ அடிப்படையில் ஒப்பிடும்போது தென்மாநிலத்தவர்களே அதிக வலிமை பெற்றிருந்தனர். நல்ல அனுபவம் பெற்ற பல இராணுவ அதிகாரிகள் இருந்தனர். பல சிறந்த தளபதிகளும் இருந்தனர். அவர்களுள் சிறப்புமிக்கவர்கள் ராபர்ட்லீ (Robert Lee) என்பவரும், ஸ்டோன்வால் ஜாக்சன் (Stonewall Jackson) என்பவருமாவார். இதற்கு மாறாக கூட்டாட்சி படைகளில் குறிப்பிடத்தக்க தளபதிகளே இல்லையெனலாம்.

போரின் நிகழ்ச்சிகள்

வடபகுதியில் கூட்டாட்சியின் சார்பாக இருந்த 23 மாநிலங்கள் ஒன்றுசேர்ந்து, பிரிந்து சென்ற பதினொரு தென்மாநிலங்களைத் தோற்கடிக்க முடிவுசெய்து படைகளைத் திரட்டின. போர் நான்கு பகுதிகளில் நடைபெற்றது. மிசிசிபி பள்ளத்தாக்கு, வர்ஜீனியா, தென்கோடி மாநிலங்கள், கடற்கரைப் பகுதிகள் ஆகிய இடங்களில் போர் நடைபெற்றது. கூட்டாட்சியினைப் பாதுகாக்க வடமாநிலங்கள் வகுத்த படைக்கு கூட்டாட்சிப் படையெனவும், பிரிந்து சென்ற தென்மாநிலப் படைகட்கு கூட்டிணைவுப் படையெனவும் பெயரிடப்பட்டது.

போரின் தொடக்கத்தில், தென்பகுதியினருக்கு பெரும் வெற்றி கிட்டியது. 1861இல் போர்ட்சம்டர் (Fort Sumter), புல்ரன் (Bull Run) ஆகிய இடங்களில் கூட்டிணைவுப்படை வெற்றிபெற்றது. தென்மாநிலங்களின் தலைநகரான ரிச்மாண்டை கூட்டாட்சிப்படை தாக்கிற்று. ஆனால் தோல்வியுற்றது. கூட்டிணைவுப் படை வடமாநிலமான மேரிலாந்தில் வெற்றிகண்டது. கூட்டாட்சிப் படைகள் பிரடெரிக்ஸ்பர்க் (Fredericksburg) சான்சலர்ஸ்வில் (Chancellorsville) ஆகிய இடங்களிலும் தோல்வியுற்றது.

போரின் போக்கைத் திருப்புவதற்காக 1863 ஜனவரி முதல் நாளன்று ஆபிரகாம் லிங்கன் வரலாற்றுச் சிறப்புமிக்க விடுதலைப் பேரறிக்கையை வெளியிட்டார். "அடிமைத்தளையை அகற்றுவதற்காகவும், கூட்டாட்சியில் பிளவு ஏற்பட்டதற்காகவும்தான் உள்நாட்டுப் போர் மூண்டது" என்ற விளக்கத்தை லிங்கன் வெளியிட்டு, அடிமைகட்கு விடுதலையளித்ததாகக் கூறினார். போர் தொடர்ந்து நடைபெற்றது. வடமாநிலப்படைகள் தீவிரமாக முன்னேறின. 1863இல் கெட்டிஸ்பர்க் போர் முழு மூச்சுடன் நடைபெற்றது. இப்போரில் கூட்டாட்சி படைத்தளபதி ஜெனரல் ஜார்ஜ் மீட் கூட்டிணைவுப் படைத்தளபதி ஜெனரல் லீயைத தோற்கடித்தார். இதனால் தென் மாநிலப்படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டது. மேலும் மிசிசிபி நதியைக் கட்டுப்படுத்துவதில் கூட்டாட்சி அரசு வெற்றிகளைப் பெற்றது. அத்தோடு கப்பற் படையைப் பயன்படுத்தி நியூஆர்லியன்ஸ் துறைமுகத்தைக் கைப்பற்றியமையால் வெளிநாடுகட்கும் தென்மாநிலங்கட்குமிடையே நடைபெற்று வந்த வாணிபம் அறவே தடைப்பட்டது. இறுதியாகக் கூட்டாட்சிப் படைகள்

ரிச்மாண்டைக் கைப்பற்ற முனைந்தன. வடபகுதி தளபதி கிரண்ட் தென்மாநிலப் படைத்தளபதி லீயை அப்போமட்டாக்ஸ் என்னுமிடத்தில் தோற்கடித்து 1865 ஏப்ரலில் சரணடையச் செய்தார். அத்துடன் போர் நின்றது.

போரின் விளைவுகள்

1861 முதல் 1865 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் அமெரிக்காவின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. வளமாக வளர்ந்து வந்த நாடு பாழாயிற்று. குறிப்பாகத் தென்பகுதியில் ஏராளமான மக்கள் மடிந்தனர்; உடைமைகள் பாழாக்கப் பட்டன. வளமான வயல்களெல்லாம் அழிவுற்றன. பல நகரங்கள் தீக்கிரையாயின; பல பண்ணைகள் கேட்பாரற்றுக் கிடந்தன. தென்மாநிலங்களின் நிதிநிலைமை ஒழுங்கற்ற முறையிலிருந்தது. இப்போரினால் அமெரிக்க அரசியலிலும், சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

அரசியலில், தென் மாநிலங்கள் பிரிந்து செல்ல முடியாதபடி மீண்டும் அவைகள் கூட்டாட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இப்போரின் விளைவால் கூட்டாட்சி அமைப்பு நிரந்தரமாக்கப்பட்டதோடு வலுப்பெற்றதாகவும் புத்துயிர் பெற்றது. உள்நாட்டுப் போரின்போது பிரான்சு அரசர் மூன்றாம் நெப்போலியன் தன் படையையனுப்பி, மெக்சிகோவைக் கைப்பற்றி, மேக்சி மில்லியன் என்ற ஆஸ்திரிய இளவரசனை அரியணை ஏற்றினார். உள்நாட்டுப்போர் முடிந்ததும், பிரான்சிற்கெதிராக இம்மக்கள் கிளர்ந்தெழுந்தனர். மன்றோ கோட்பாட்டின்படி லிங்கன் ஒரு படையை அனுப்பி வைத்தார். இறுதியில் பிரெஞ்சுப்படைகள் விரட்டப்பட்டன. இஃது அமெரிக்காவின் மன்றோக் கோட்பாட்டுக்குக் கிடைத்த ஒரு சிறப்பான வெற்றியாகும்.

தென்மாநிலங்களின் நலனில் கூட்டாட்சி அரசு அக்கரை கொண்டு புனரமைப்புப் பணிகளைத் துவங்கிற்று. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி அடிமை முறை ஒழிக்கப்பட்டது. பதினான்காவது திருத்தத்தின்படி நீக்ரோக்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட்டது. பதினைந்தாவது திருத்தத்தின்படி அவர்கட்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டது. உரிமை பெற்ற நீக்ரோக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக 'விடுவிக்கப்பட்டோரின் பணிமனை' களை நிறுவிற்று.

பொருளாதாரத்தில் மாபெரும் முன்னேற்றம் காணப்பட்டது. பல புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. உற்பத்தி பன்மடங்கு பெருகிற்று. தொழிலாளர் எண்ணிக்கை உயர்ந்தமையால் அடுத்து முதலாளி, தொழிலாளி போராட்டம் ஏற்பட்டது. தென்மாநிலங்களிலுள்ள பண்ணைகள் சிறிதாக்கப்பட்டு ஏழைகட்கும், நீக்ரோக்களுக்கும் வழங்கப்பட்டன. நாடு முழுவதும் பல இரயில்பாதைகளால் இணைக்கப்பட்டது. அமெரிக்கா தொழில்வளமிக்க நாடாக இருபதாம் நூற்றாண்டில் உலக அரங்கில் பீடுநடை போடுவதற்கான அடித்தளம் செம்மையாக அமைக்கப்பட்டது.

பயிற்சி வினா

உள்நாட்டுப் போருக்கான காரணங்களை விவரி.

பாடம் – 16 புனரமைப்பு (1865–1877)

உள்நாட்டுப் போருக்குப்பின் தெற்கு மாநிலங்கள்

1861இல் தொடங்கிய உள்நாட்டுப் போர் நாட்டை நாசமாக்கிற்று. போர் முடிவுற்ற ஆண்டாகிய 1865இலிருந்து சுமார் 12 ஆண்டுகளுக்கு நாசமாகிய தெற்கு மாநிலங்களை பழையபடி செம்மைப்படுத்தும் பணி தொடர்ந்து நடந்தது. நாட்டில் இரு முக்கிய பிரச்சனைகள் தோன்றின. அவையாவன : அரசியல் புனரமைப்பும், பொருளாதார புனரமைப்பும் ஆகும். கூட்டாட்சியை விட்டுப் பிரிந்து தனித்து நின்று போர் செய்த தெற்கு மாநிலங்களையெல்லாம் எவ்வாறு மறுபடியும் அமெரிக்கக் கூட்டாட்சி அரசில் சேர்த்துக்கொள்வதென்பது ஒரு முக்கிய அரசியல் பிரச்சனையாக இருந்தது. மற்றும் விடுதலைபெற்ற நீக்ரோக்களை எவ்வாறு வேலையில் அமர்த்தி அவர்களது வாழ்க்கையை மறு சீரமைக்க முடியுமென்பது ஒரு பெரிய பொருளாதார பிரச்சனையாகக் காணப்பட்டது.

புனரமைப்பு சிக்கல்கள் (Problems of Re-Construction)

தென் மாநிலங்கள் ஏற்படுத்திய அரசியலமைப்பான நேசக் கூட்டாட்சி அரசானது போருக்குப்பின் வீழ்ச்சியுற்றது. அக்கூட்டாட்சித் தலைவரான ஜெபர்சன் டேவிஸ் (Jefferson Davis) கைது செய்யப்பட்டார். நாட்டில் அமைதி குன்றியது. தெற்குப் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய போர் வீரர்களும் விடுதலைபெற்ற நீக்ரோ மக்களும் பாமர மக்களைப் பயமுறுத்திவந்தனர். அமெரிக்க காங்கிரஸ் தென் மாநிலங்களை மறுபடியும் கூட்டாட்சியில் சேர்க்கும் பணியைப் பற்றிப் பல கருத்துக்களை வெளியிட்டது. காங்கிரசின் அங்கத்தினர்களில் சிலர் தென் மாநிலங்களுக்கு எவ்வித தீங்கும் செய்ய லாகாது என்றும் அவைகளைத் தீவிரமாகத் தண்டிக்காமல் பழையபடி கூட்டாட்சியில் சேர்க்கவேண்டுமென்றும் பறைசாற்றினர். ஆனால், காங்கிரஸ் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் தென் மாநிலங்களைத் தண்டிக்க வேண்டுமென்று கோரினர். சிலர் தென் மாநிலங்கள் அனைத்தையும் படைபலம் மூலம் நிர்வகிக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்தனர்.

குடியரசுத் தலைவர் லிங்கனின் திட்டங்கள் (Lincoln's Plans)

நாடு முழுவதும் மறுபடியும் ஒருமைப்பட்டு சீரமைப்பு செய்யப்படவேண்டும் என்று லிங்கன் விரும்பினார். உள்நாட்டுப் போரின்போது மக்கள் கொண்ட காழ்ப்பு உணர்ச்சியை மறந்துவிட்டு, மக்கள் அனைவரும் நாட்டு ஒற்றுமைக்காகவும் முன்னேற்றத் திற்காகவும் பாடுபட வேண்டுமென்று தமது இரண்டாம் பதவியேற்பு விழாவின்போது எடுத்துரைத்தார். அவர் உயிர் தப்பியிருந்தால் ஒரு வேளை தாம் நினைத்ததை செய்து காட்டியிருப்பார். ஆனால், அவரது எதிர்பாராத மரணத்தால் அவர் வகுத்த மகத்தான திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்த முடியாமல் வீணாயின.

லிங்கன் தனது திட்டத்தை 1863ஆம் ஆண்டு அறிவித்தார். மீட்கப்பட்ட தென் மாநிலப்பகுதியில் 1860ஆம் ஆண்டு தேர்தலின் வாக்காளர்களில் 10 சதவீத வாக்காளர்கள் மறுபடியும் கூட்டாட்சி அரசின் மீது பற்றுறுதி வாக்குப் பிரமாணம் எடுத்தால் அப்பகுதி மறுபடியும் கூட்டாட்சி அரசுடன் இணைக்கப்படுமென்று லிங்கன் தமது திட்டத்தில் கூறினார். இத்திட்டத்தை 10 சதவீதத் திட்டம் என்றும் அழைப்பர்.

லிங்கனது திட்டத்தை காங்கிரஸ் அங்கத்தினர்களில் பலர் எதிர்த்தனர். அவர்களுள் முக்கியமானவர் தடேயஸ் ஸ்டீபன்ஸ் (Thaddeus Stevens) என்பவரும் சார்லஸ் சம்னர் (Charles Sumner) என்பவருமாவர். 74 வயது முடிந்த தடேயஸ் ஸ்டீபன்ஸ் ஒரு பெரிய பேச்சாளி. நீக்ரோ மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டுமென்று அவர் உறுதி பூண்டிருந்தார். தென் மாநிலங்கள் மீது பலத்த வெறுப்பும் ஒரு புறம் அவருக்கு உண்டு. அவரைப் போலவே, சார்லஸ் சம்னரும் நீக்ரோக்களுக்கும் வெள்ளையருக்குமிடையே சமத்துவம் காணப்படவேண்டும் என்று தமது கருத்தைத் தெரியப்படுத்தினார். இவரும் தடேயஸைப் போல ஒரு சிறந்த பேச்சாளி.

1865இல் ஏற்பட்ட லிங்கனின் மரணத்திற்குப் பின் துணைத் தலைவரான ஆண்ட்ரூ ஜான்சன் (Andrew Johnson) குடியரசுத் தலைவராக ஆக்கப்பட்டார். டென்னஸ்ஸி மாநிலத்திலுள்ள ஒரு எளிய வெள்ளையர் குடும்பத்தைச் சார்ந்தவர். தனது சொந்த ஆற்றலினாலும் அறிவுத்திறமையினாலும் வாழ்க்கையில் முன்னேறியவர் அவர். ஒரு காலத்தில் அவர் தமது கிராமத்தில் தையல் வேலை செய்து பிழைத்தவர். ஜான்சன், லிங்கனது புனரமைப்புத் திட்டத்தை செயலாற்றப்பாடுபட்டார். இதன் விளைவாக காங்கிரஸில் இருந்த தீவிரவாதிகளுடன் அவர் மோத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. லிங்கனைப் போன்று அவர் தம் எதிரிகளிடமிருந்து சமாளிக்கும் சாமர்த்தியம் அற்றவர். எதையும் அவசரப்பட்டு பேசிவிடுவார். அதனால் காங்கிரஸுடன் அவர் அடிக்கடி மோத நேரிட்டது.

பொது மன்னிப்புப் பேரறிக்கை (General Pardon) ஒன்றினை ஜான்சன் வெளியிட்டார். ஒரு சில தலைவர்கள், அலுவலர்களைத் தவிர ஏனைய தென்பகுதியினர் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது. முன்பு தென்மாநில கூட்டரசிலிருந்த ஏழு மாநிலங்களில் தற்காலிக அரசுகளை ஜான்சன் நிறுவினார். அங்கு வாழ்ந்துவந்த பற்றுறுதிகொண்ட வெள்ளையர்கள் மாநில சட்டசபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டனர். அச்சட்டமன்றங்கள் பிரிவினை ஆணைகளை ரத்து செய்யவும், முன்னாள் தென்மாநில கூட்டரசின் கடன்களைத் தள்ளுபடி செய்யவும், 13வது அரசியல் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவும், கோரப்பட்டன. 1865ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க காங்கிரஸ் கூடியபோது, ஜான்சனின் திட்டப்படி டெக்ஸாஸைத் (Texas) தவிர ஏனைய தென்மாநிலங்கள் அமெரிக்கக் கூட்டாட்சி அரசினுள் சேரத் தயாராக இருந்தன. ஜாக்ஸனின் இசைவோடு நிறுவப்பெற்ற தற்காலிகத் தென்மாநில அரசுகளால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளையும், செனட் உறுப்பினர் களையும் ஏற்றுக்கொள்ள காங்கிரஸ் மறுத்துவிட்டது. காங்கிரஸிலிருந்த தீவிர குடியரசு

கட்சியினரெல்லாம் ஒன்றுகூடி வேறொரு புனரமைப்புத் திட்டத்தை வகுக்கப் பதினைந்துபேர் அடங்கிய ஒரு கூட்டுக்குழுவினை அமைத்தனர். அரசியல் புனரமைப்பின் பல கோணங்களையும் நன்றாக ஆராய்ந்து, காங்கிரஸ் மேற்கொள்ள வேண்டிய புதிய திட்டங்களைப் பரிந்துரை செய்ய அதிகாரம் அக்குழுவிற்குத் தரப்பட்டது.

இதற்கிடையில் தென்மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஜான்சனின் புனரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் ஆட்சிப் பொறுப்பையேற்றதும் நீக்ரோக்களை வேறுபடுத்தும் வகையில் பல சட்டங்களை இயற்றின. நீக்ரோக்கள் ஆயுதம் தரிக்கக் கூடாதென்றும், முறைகாண் ஆயத்தில் (Jury) பணிபுரியக்கூடாது என்றும், வேலை செய்யாது திரிந்தால் கைது செய்யப்படுவரென்றும் அச்சட்டங்கள் கூறின. இச்சட்டங்கள் பொதுவாக 'கறுப்பர் விதிகள்' (The Black Codes என்று அழைக்கப்பட்டன.

கறுப்பர் விதிகளுக்குக் கடுமையான எதிர்ப்பு வடபகுதியில் தோன்றிற்று. அடிமை முறையை வேறு வழியில் மறுபடியும் நாட்டில் புகுத்தும் ஒரு ஏற்பாடு என்று வடபகுதியினர் தென்பகுதியினர் மீது குற்றஞ்சாட்டினர். குடியரசுக் கட்சியிலிருந்த தீவிர வாதிகள் தீட்டிய திட்டங்கள் உயர்ந்த ஒழுக்க நடத்தைச் சார்புடையனவாகவும் இருந்தன; அதே சமயத்தில் கட்சி அடிப்படையிலான தன்னல நோக்குடையனவாகவும் அமைத்திருந்தன. அத்தகைய செயல் நோக்கத்தை அவர்கள் கொண்டிருந்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவையாவன : தென்மாநிலங்களில் வாழும் நீக்ரோ மக்களுக்கு நல்வாழ்வை கொடுக்கவேண்டுமென்ற மனித இன நல விருப்பம், தென்மாநில மக்களது செல்வாக்கை காங்கிரஸிலிருந்து அகற்றுவதன் மூலம் தங்களது வாணிக விஸ்தரிப்புக்கு வேண்டிய சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ளலாம் என்ற வடபகுதிகளில் வாழும் தொழிலதிபர்களது நம்பிக்கை; பிரிந்து சென்ற தென்மாநில நேச கூட்டரசின் அரசியல் வாதிகள் விரைவில் தென்மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டமையைக் கண்டு சீற்றம்; தங்கள் குடியரசுக் கட்சியின் கொள்கை முறைகளை தென்பகுதியில் பரப்பவேண்டுமென்ற குடியரசுக் கட்சித் தலைவர்களின் குறிக்கோள்; குடியரசுத் தலைவரான ஜான்சன் காங்கிரஸின் அதிகாரங்களை பறித்து விடுவாரோ என்ற அச்சம்; எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்ட்ரூ ஜான்சன் குடியரசுத் தலைவர் பதவிக்கு அருகதையற்றவர் என்று காங்கிரஸ் உறுப்பினர் நினைத்து அவர் மீது கொண்ட வெறுப்பு. மேற்கூறிய செயல் நோக்கோடு, காங்கிரஸிலிருந்த தீவிரவாதிகள் செயலாற்றத் திட்ட மிட்டனர். எவ்வளவு காலத்திற்கு கூட்டாட்சியரசு நீக்ரோ மக்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமோ அதற்கான முயற்சியில் இறங்கினர். நீக்ரோவின் வாழ்க்கை நிலை உரிமை பெற்ற குடிமகனது நிலைக்கு உயர்த்தப்படும் வரையில் கூட்டாட்சி அரசு அவர்களுக்கு ஆவன செய்யும் என்று மறைமுகமாகக் கூறப்பட்டது.

காங்கிரஸின் புனரமைப்புத் திட்டம்

(அ) 1866இல் ஒரு சட்ட வரைவின் மூலம் விடுவிக்கப்பட்டோரின் (Freed Slaves) பணி மனைகள் தென்மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டன. பகையுணர்வு கொண்ட

சமுதாயத்தில் வாழும் நீக்ரோக்களின் பொது உரிமைகளைக் காக்கவும், நீக்ரோக்கள் வேலைக்கு அமர்த்தப்படும் முறையினைக் கண்காணிக்கவும் இப்பணி மனைகள் பொறுப்பேற்றன. மேலும் இப்பணி மனைகள் தேவைப்பட்ட நீக்ரோ மக்களுக்கு உணவுப் பொருட்களைப் பங்கிட்டுத் தந்தன. இலவச மருத்துவ உதவியளித்தது; மருத்துவக் கூடங்களும், கல்விக் கூடங்களும் அமைக்கப்பட்டன. இறுதியாக விடுவிக்கப்பட்டோரின் பணிமனை 1872இல் மூடப்பட்டபோது அது மகத்தான பணிகளை ஆற்றியிருந்தது.

(ஆ) பொது உரிமைகள் சட்டம் 1866 (Civil Rights Act)

நீக்ரோக்களுக்கு எல்லாவற்றிலும் சமத்துவம் அளிப்பதற்கு காங்கிரஸ் அடுத்த படியாக பொது உரிமைகள் சட்டத்தை இயற்றியது. ஜான்சன் இச்சட்டத்திற்கு தமது இசைவைத் தெரிவிக்காமல் அதைத் தள்ளுபடி செய்தார். காங்கிரஸ் அதை இரண்டாம் முறை இயற்றி செயல்படுத்தலாயிற்று. நீதிமன்றங்களில் வெள்ளையர்களையும் நீக்ரோக் களையும் சமமாகக் கருத இச்சட்டம் வழி வகுத்தது. இச்சட்டம் மாநிலங்களின் உரிமை களில் தலையிடுவதால் அரசியலமைப்புக்கு முரணானது என்று தலைமை நீதிமன்றம் கூறி அதனை ரத்துச் செய்தது. அதனால் காங்கிரஸ் 14வது திருத்தத்தை அரசிய லமைப்புக்குக் கொண்டு வந்தது. அதன்படி நீக்ரோக்களுக்கு சம குடியுரிமைகள் வழங்கப் பட்டன. மேலும் அத்திருத்தம் குறிப்பிட்டதாவது : எந்த தென் மாநிலமானது நீக்ரோக் களுக்கு வாக்குரிமை அளிக்க மறுத்தால், அம் மாநிலத்தின் பிரதிநிதித்துவம் காங்கிரஸின் இரு சபைகளிலும் குறைக்கப்படும் என்றும், பழைய தென் மாநில நேச கூட்டரசின் கடன்களை திருப்பித் தரப்படமாட்டாது என்றும் அத்திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. தென்னசி மாநிலம் இத்திருத்தத்தை உடனே ஏற்றுக் கொண்டது. ஆகையால் அது உடனடியாக அமெரிக்கக் கூட்டரசோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஜான்ஸனுடைய ஆலோசனையின் பேரில் பிற தென் மாநிலங்கள் இத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தன. இருப்பினும், நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் இந்தப் பதினான்காவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டதும், 1868இல் அது செயலுக்கு வந்தது.

1867ஆம் ஆண்டு புனரமைப்புச் சட்டம் (Reconstruction Act of 1867)

1867ஆம் ஆண்டு புனரமைப்புச் சட்டம் காங்கிரஸால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி தென்னசி மாநிலத்தைத் தவிர எஞ்சியுள்ள பத்து தென் மாநிலங்கள் ஐந்து இராணுவ மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டார். தளபதிக்கு உதவி புரியுமாறு ஒரு வலிமை பொருந்திய படையும் நியமிக்கப்பட்டது. தென் மாநில மக்கள் கைதிகள் போல் நடத்தப்பட்டனர்.

நீக்ரோக்கள் மற்றும் பற்றுறுதி கொண்ட வெள்ளையர்களுக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டது. முந்திய தென் மாநில நேசக் கூட்டரசின் தலைவர்களுக்குத் தற்காலிகமாக வாக்குரிமை வழங்குதல் நிறுத்தப்பட்ட மாநில அலுவலகங்களிலும் தேசிய அரசின் அலுவலகங்களிலும் நீக்ரோக்கள் இச்சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டனர்.

14வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டால்தான் முந்திய தென் மாநில நேசக் கூட்டரசின் மாநிலங்கள் மீண்டும் அமெரிக்கக் கூட்டாட்சியினுள் அனுமதிக்கப் படும் என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. நீக்ரோக்கள் போதிய கல்வியறிவு அற்றவர்களாயும், ஆட்சி முறை பற்றிய அனுபவம் பெறாதவர்களாயும் இருந்தனர். இச்சந்தர்ப்பத்தினைக் குடியரசுக் கட்சியினைச் சார்ந்த வெள்ளையர்களும் ஊதியம் பெருவதற்காக வட பகுதியிலிருந்து தென் பகுதிக்கு வந்த அரசியல்வாதிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் தன்னலத்திற்காக நீக்ரோக்களை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

வடபகுதி வெள்ளையர்களால் ஆதரிக்கப்பட்ட தென் மாநில நீக்ரோக்களின் ஆட்சியில் பல சீர்கேடுகள் மலிந்தன. கையூட்டும் ஊழலும் பெறுகின. தென்பகுதி வெள்ளையர்கள் மீது கடுமையான வரிப்பளு சுமத்தப்பட்டது. இவற்றையெல்லாம் எதிர்க்கத் தென்பகுதி மக்கள் வலிமையற்றிருந்தனர். ஏனெனில் நாடு முழுவதும் தேசிய அரசுப்படைகள் ஆட்சியினருக்கு உறுதுணையாக இருந்தன.

நீக்ரோக்களின் ஆட்சியில் பல குறைபாடுகள் தென்பட்ட போதிலும் பல நன்மைகள் தென் பகுதியினருக்கு ஏற்பட்டமையையும் மறக்க முடியாது. நீதிமன்றங்கள், தல ஆட்சி நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவையெல்லாம் செம்மையாக நிறுவப்பட்டன. பழைய நிலமானிய முறையின் அடிப்படையிலான சமூகம் மறைந்து மக்களாட்சிமுறை மலரத் தென்பகுதியானது மாற்றியமைக்கப்பட்டது.

ஜான்சன் மீது அரசியல் குற்றச்சாட்டு

தங்களது சட்டங்கள் அனைத்தையும் ஒரு வேளை குடியரசுத்தலைவர் தடுத்து விடுவாரோ என்று அஞ்சிய காங்கிரஸ் 'அலுவல் பதவிக்காலச் சட்டம்' (The Tenure of Office Act 1867) என்ற ஒன்றினை இயற்றிற்று. செனட் சபையின் இசைவு பெறாமல் குடியரசுத் தலைவர் குறிப்பிட்ட அலுவலர்களைப் பதவியிலிருந்து விலக்கக் கூடாது என்று அச்சட்டம் கூறியது. ஜான்சன் வேண்டுமென்றே தீவிரவாதிகளைச் சார்ந்திருந்த தமது போர்ச்செயலாளரான எட்வின் ஸ்டான்டனைப் (Edwin Stanton) பதவி நீக்கம் செய்தார். இச்செய்கை சட்டத்திற்கு முரணானது எனக் கூறிக் காங்கிரஸ், ஜான்சனை பதவியிலிருந்து விலகக் குற்றம் சாட்டியது. செனட் சபையில் ஜான்சன் விசாரிக்கப் பட்டார். இறுதியில் குற்றச்சாட்டினின்றும் விடுவிக்கப்பட்டார்.

பதினைந்தாவது அரசியல் திருத்தம்

இச்சீர்திருத்தத்தின்படி இனம், நிறம், முன்பிருந்த அடிமை வாழ்வு நிலை ஆகியவற்றின் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களின் வாக்குரிமையைக் கூட்டாட்சி அரசோ, மாநில அரசோ தடைசெய்யக்கூடாது என்று கூறப்பட்டது. அதுவரை இயற்றியிருந்த சட்டங்கள் நீக்ரோவுக்கு வாக்குரிமையை உறுதியாக அளிக்கும் வகையில் அமையாததால் மேற்கூறப்பட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தென் மாநிலங்கள் அதிகாரங்களை மீண்டும் பெறல்

தொடக்கத்திலிருந்தே முந்திய தென் மாநிலக் கூட்டாட்சிவாதிகளுக்கு நீக்ரோக்களின் ஆட்சி அறவே பிடிக்கவில்லை. தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். எப்படியாவது நீக்ரோக்களின் ஆட்சியை கவிழ்த்துவிட்டு வெள்ளையரது ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தும் பொருட்டு பல முயற்சிகளில் ஈடுபட்டனர். வன்முறைகளைக் கையாளவும் முற்படலாயினர். வெள்ளையர்கள் அடங்கிய இரகசியக் குழுக்கள் துவக்கப்பட்டன. அக்குழுக்கள் பல வன்முறைகளைப் பயன்படுத்தி நீக்ரோக்களைத் தங்களது வாக்குரிமையைத் தேர்தல்களில் பயன்படுத்த முடியாதவாறு தடுத்தனர். இரகசியக் கழகங்களுள் மிகவும் அஞ்சத்தக்கதாக விளங்கியது. கூ—கிலக்ஸ்—கிலேன் (Ku Klux Klan) என்ற கழகமாகும். இக்கழகத்தின் உறுப்பினர்கள் நீண்ட வெண்ணிற அங்கிகளை அணிந்து முகமூடிகளுடன் இரவில் குதிரைகளில் ஏறிச் சென்று நீக்ரோக்களையும், அவர்களை ஆதரித்த வெள்ளையர்களையும் அச்சுறுத்தினர். தேர்தல் நடக்கும் இடங்களை அணுக வொட்டாதபடி நீக்ரோக்கள் தடுக்கப்பட்டனர்; அல்லது கொலை செய்யப்பட்டனர். கூட்டாட்சியரசு பல சட்டங்களை இயற்றிய பொழுதும் இக்கழகங்களின் பயங்கர நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. இரகசியக் கழகங்களின் நடவடிக்கைகளால் வடபகுதி வெள்ளையர்கள் தென்பகுதியிலிருந்து வெளியேற நேர்ந்தது. சிறிது காலத்திற்கெல்லாம் மக்களாட்சி கட்சியினர் (Democratic Party) தென் பகுதியில் மீண்டும் தங்களுடைய செல்வாக்கை நிறுவினர்.

அரசியலமைப்பின் 15வது திருத்தத்தை மீறாதபடி நீக்ரோவின் வாக்குரிமையினைத் தடை செய்யும் பல சட்டங்கள் தென்மாநிலச் சட்ட சபையில் இயற்றப்பட்டன. உதாரணமாக பெரும்பான்மையான நீக்ரோக்களுக்குச் சொத்துக்கள் இல்லாத காரணத்தால், வாக்குரிமை பெறச் சொத்துத் தகுதி கோரப்பட்டது. இதனால் சில ஏழை வெள்ளையர்களும் பாதிக்கப்பட்டனர். அதன் பேரில் பாட்டனார் விதியும் (Grand-father clause), எழுத்தறிவுச் சோதனையும் (Literacy test) வாக்குரிமையை நிர்ணயிக்கக் கொண்டு வரப்பட்டன. பாட்டனார் விதிப்படி 1867ஆம் ஆண்டுக்கு முன் ஒருவருடைய தந்தையோ, பாட்டனோ வாக்குரிமை பெற்றிருந்தால் அவருக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டது. எந்த ஒரு நீக்ரோவின் தந்தைக்கும், பாட்டனாருக்கும் வாக்குரிமை இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எழுத்தறிவுச் சோதனைப்படி ஒருவர் வாக்குரிமை பெற அரசியலமைப்புப் பத்திரம் அல்லது பரிசுத்த வேதாகமம் (Bible) ஆகியவற்றின் சில பகுதிகளைப் படித்துக் காண்பிக்க வேண்டும். பெரும்பான்மையான நீக்ரோக்களுக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. இவ்வகையிலும் நீக்ரோக்களின் வாக்குரிமை தடை செய்யப்பட்டது.

நீக்ரோக்களின் பொது உரிமைகள் பறிக்கப்படல்

இராணுவ பலத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட்ட புனரமைப்புத் திட்டங்கள், நீக்ரோ மக்களுக்கு பல தீங்குகளை இழைத்துவிட்டுச் சென்றன. துவக்கத்தில் வடபகுதியிலிருந்து வந்த குடியரசுக் கட்சியைச் சார்ந்த அரசியல்வாதிகளின் பேராசைக்கு

நீக்ரோ பலியானான். 15வது அரசியல் திருத்தத்தால் நீக்ரோ பெற்ற உரிமைகள் சிறிது சிறிதாக தென் மாநில சட்டமன்றங்களால் பறிக்கப்பட்டன. கறுப்புநிற நீக்ரோக்களை வெள்ளையர்கள் தங்களுக்கு ஒப்பாக மதிக்க வில்லை. அவர்களை வெள்ளையர் ஒதுங்கியே வாழச் செய்தனர். அதற்கான இன ஒதுக்கல் (Jim Crow Laws) சட்டங்களை இயற்றினர். நீக்ரோக்கள் வசிப்பதற்கென்று தனித்தெருக்களும், அவர்களது பிள்ளைகளுக்கெனத் தனிப்பள்ளிகளும் ஏற்படுத்தப் பட்டன. உடலுழைப்பு வேலைகள் மட்டுமே நீக்ரோக்களுக்குத் தரப்பட்டன. உள்நாட்டுப் போருக்கு முன் எந்த நிலையில் நீக்ரோக்கள் இருந்தனரோ அதே நிலைமைக்கு அவர்கள் 1875ஆம் ஆண்டளவில் திரும்பினர்.

வெள்ளையர்கள் மீண்டும் தென்மாநிலங்களில் பதவிக்கு வந்ததும், அவர்கள் பொருளாதார புனரமைப்பு வேலையில் ஈடுபட்டனர். சில பெருநிலக்கிழார்கள் தங்களது பண்ணைகளை விற்றுவிட்டு வாணிகத்தில் ஈடுபட்டனர். பழையபடி நீக்ரோக்கள் பண்ணைகளில் தொழிலாளிகளாக பணி புரியலாயினர். தொழிற்சாலைகள் பல தென் மாநிலங்களிலும் உருவாயின. தென் பகுதி முழுவதும் மக்களாட்சிக்கட்சி நன்கு வேரூன்றியது. 1876ஆம் ஆண்டின் தேர்தலில் போட்டி கடுமையாக இருந்தது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ரூதர்ஃபோர்டு ஹேசும் (Rutherford B. Hayes) மக்களாட்சி கட்சியின் வேட்பாளரான சாமுவேல் டில்டனும் (Samuel J. Tilden) சமவாக்குகள் பெற்றனர். தென்பகுதியிலுள்ள கூட்டாட்சிப் படைகளை விலக்கிக் கொள்வதாக உடன்பாடு செய்து கொண்டமையால் ஹேசு குடியரசுத் தலைவரானார். அதன்படி 1877ஆம் ஆண்டு தென் மாநிலங்களிலிருந்து படைகள் வெளியேற்றப்பட்டன. அத்துடன் கூட்டாட்சி அரசின் புனரமைப்பு வேலையும் முற்றுப் பெற்றது.

பயிற்சி வினா

புனரமைப்பின் பல்வேறு அம்சங்களை விளக்குக.

பாடம் – 17 பெரும் வாணிக வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாற்றின் மைய நிகழ்ச்சி அப்பொழுது ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியாகும். 1860ஆம் ஆண்டிலிருந்து 1900ஆம் ஆண்டுக்குள்ளாக குறிப்பிடத்தக்க முறையில் எல்லா வகையான தொழில்களும் வளர்ச்சியுற்றிருந்தன. மக்களின் பொருளாதார சமுக வாழ்வை முற்றிலும் மாற்றியமைத்த தொழிற்புரட்சி உள்நாட்டுப் போருக்கு முன்னரே ஆரம்பமாயிற்று. முதலாவதாக தொழிற்புரட்சிக்கான முக்கியக் காரணங்களை நாம் காண்போம். நாட்டில் பலவகைப் பட்ட கச்சாப் பொருள்கள் ஏராளமாக இருந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்புத்தாது, நிலக்கரி, எண்ணெய் முதலியனவாம். ஏராளமாகக் கிடைத்த பல்வகைக் கச்சாப் பொருட்களையும் செய்பொருட்களாக மாற்றியமைக்கப் புதிய தொழில்துறை முறைகளும், அறிவியல் கண்டுபிடிப்புகளும் அமெரிக்காவில் திகழ்ந்தன. பொருளாதார வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் நீர்வழியாகவும், இரயில்பாதை மூலமாகவும் போக்குவரத்து வசதிகள் பெருகிக்கொண்டேயிருந்தன. மக்கள் தொகைப் பெருக்கத்தால் உள்நாட்டிலும் செய் பொருட்களுக்குத் தேவை அதிகமாக இருந்தது. அதே போன்று அயல்நாட்டு வணிகக் களங்களிலும் அமெரிக்கப் பொருட் களுக்கு அதிகத் தேவை இருந்தது. அடிமைமுறை ஒழிக்கப்பட்டபின், ஐரோப்பிய குடியேற்றத்தினர் பெருமளவில் அமெரிக்காவில் குடியேறியமையால் தேவைப்பட்ட தொழிலாளர்கள் கிடைக்கப்பெற்றனர். பெருந்தொழிற் சாலைகள் நிறுவுவதற்குத் தேவையான மூலதனம் உள்நாட்டிலும் இருந்ததோடு வெளிநாடுகளிலிருந்தும் கிடைத்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டினுள்ளேயே தொல்லை தருகிற வகையில் மாநிலங்களுக் கிடையேயும், வெவ்வேறு பகுதிகளுக்கிடையேயும் இருந்து வந்த சுங்கச் சாவடிகளெல்லாம் மறைந்து போயின. அயல்நாடுகளின் போட்டியை எதிர்க்கும் வகையில் கூட்டாட்சி அரசு காப்பு வரிகளையும் விதித்திருந்தது. அத்தோடு அரசு நேரடியாகவும், மறைமுக மாகவும் ஊக்கத் தொகையளித்துத் தொழில் முன்னேற்றத்தை ஊக்குவித்தது.

நிலக்கரி, எண்ணெய், இரும்பு, மற்றும் மின்சாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தொழிற்புரட்சி ஏற்பட்டது. நிலக்கரியைப் பொருத்த மட்டும் நாட்டிலேயே பெருமளவில் நிலக்கரிச் சுரங்கங்கள் பென்சில்வேனியா மாநிலத்தின் வடகிழக்குப் பகுதி யில் உள்ளன. 1910ஆம் ஆண்டளவில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆண்டொன்றுக்கு 500 மில்லியன் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. 1850ஆம் ஆண்டளவில் இரும்பை உருக்குவதற்கு பெஸிமர் முறை நாடெங்கிலும் பின்பற்றப்பட்டதால் நிலக்கரிக்கு அதிகமான தேவை ஏற்பட்டது. உள்நாட்டுப் போருக்குப் பிறகு சுப்பீரியர் ஏரியைச் (Lake Superior) சுற்றியுள்ள பகுதியில் இரும்புத் தாதுக்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப் பட்டன. எனவே அங்கு பல இரும்புத் தொழிற்சாலைகள் தோன்றலாயின. கனமான தாதுப்பொருளை இரயில் பாதை வழியாக அனுப்புவது கடினமாக இருந்ததோடு, அதற்கானக் கட்டணத் தொகையும் கூடுதலாக இருந்தது. எனவே, நீர்வழி ஒன்று இன்றியமையாததாயிற்று. சுப்பீரியர், யூரான் (Huron), ஈரி (Erie) ஏரிகளை இணைக்கும் வகையில் கால்வாய் வெட்டத் திட்டமிட்டு அதில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் எஃகு உற்பத்தித் தொழிலில் தலைசிறந்து விளங்கிய தொழிலதிபர் ஆன்ட்ரு கார்னேகி (Andrew Carnagie) என்பவராவார். இவரது குடும்பத்தினர் ஸ்காட்லாந்திலிருந்து வந்து பிட்ஸ்பர்க்கில் 1848இல் குடியேறினர். அப்பொழுது ஆன்ட்ரு கார்னேகிக்கு வயது பதின்மூன்று, அவர் முதலாவதாக ஒரு பஞ்சாலையில் வேலைக்கு அமர்ந்தார். பின்பு பென்சில்வேனியா இரயில் பாதை நிறுவனத்தில் பணியாற்றினார். 1864இல் அவர் பிட்ஸ்பர்க்கில் இரும்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டார். தமது சேமிப்பையெல்லாம் பெரிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தார். அதன்மூலம் அவருக்கு ஆண்டுதோறும் நல்ல வருவாய் கிடைத்தது. அவ்வூதியத்தைப் பயன்படுத்தி அவர் தமது இரும்புத் தொழிலைப் பெருக்கினார். வெகு சீக்கிரத்தில் அவர் பல நிலக்கரிச் சுரங்கங்கள், உலைக்களங்கள், சுண்ணாம்புக்கல் இருக்கைகள், இரும்புத் தாதுச் சுரங்கங்கள், கப்பல்கள், இரயில் பாதைகள் ஆகியவற்றின் உரிமையாளராகத் திகழ்ந்தார். 1901இல் கார்னேகி தமது நிறுவனங்களையெல்லாம் இணைத்து அதற்கு "அமெரிக்க ஐக்கிய நாட்டு எஃகுக் கூட்டுரிமைக் குழு" என்ற பெயரினைத் தந்தார். அதே ஆண்டு அவர் தனது வாணிகத் தொழிலினின்று ஓய்வு பெற்றார். தான் ஈட்டிய பெருஞ்செல்வத்திலிருந்து பெருந்தொகைகளைப் பொது நூலகங்கள் துவக்கவும், கல்வியைப் பரப்பவும், உலக அமைதியைக் காக்கவும் அளித்தார்.

ஜான் டி. ராக்பெல்லர் (John D. Rockefeller)

இவர் ஓகியோ (Ohio) மாநிலத்தைச் சேர்ந்தவர். எண்ணெய் வாணிகத்தை சிறப்புற நடத்திய தொழிலதிபராவார். ஆரம்பத்தில் ராக்பெல்லர் ஒரு நிறுவனத்தில் கணக்கராகப் பணிபுரிந்தார். பூமி மட்டத்திற்கு கீழிலிருந்து எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதும் அதனைச் சுத்தப்படுத்தும் எளிய முறை ஒன்றினைக் கண்டுபிடித்தார். தமது இளைய சகோதரனுடன் கூட்டுச்சேர்ந்து ஒரு எண்ணெய்த் தொழிற்சாலையை நிறுவினார். அதிலிருந்து பெற்ற ஊதியத்தைக் கொண்டு ஆங்காங்கே இயங்கிவந்த எண்ணெய் நிறுவனங்களை ஒவ்வொன்றாக வாங்கி எல்லாவற்றையும் இணைத்து அதற்கு "ஸ்டாண்டர்டு எண்ணெய் வாணிகக் கூட்டு நிறுவனம்" Standard Oil Trust 1881) எனப் பெயரிட்டார். ஏகபோக தனியுரிமை (Monopoly) பெற்ற முதல் நிறுவனமாக அது திகழ்ந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவின் எண்ணெய் வாணிகத்தில் 90 சதவீதத்தை ராக்பெல்லர் கட்டுப்படுத்தியிருந்தார். அவருடைய கூட்டு நிறுவனத்திற்கு எதிராகப் போட்டிபெயரளவில் கூட இல்லாது போகவே அவர் விருப்பப்படியெல்லாம் எண்ணெய் விலையைக் கூட்டலானார். ராக்பெல்லர் நிறுவிய இந்நிறுவனம் விரைவில் பல இரயில் பாதைகளையும், இரும்புத் தாதுச் சுரங்கங்களையும், செப்புச் சுரங்கங் களையும், மற்றைய தொழிற்சாலைகளையும் தனக்கே உரிமையாக்கிக் கொண்டது. இவரும், கார்னேகியைப் போலவே வாணிகத்திலிருந்து ஓய்வு பெற்று, இறுதி முப்பதாண்டுகளை மருத்துவம், அறிவியல், கல்வி - ஆகியத் துறைகளின் வளர்ச்சிக்காக நிதியளித்துத் தொண்டாற்றுவதில் செலவிட்டார்.

மின்சாரம்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் தொழில் தேவைகளுக்கு வேண்டிய சக்தியை அங்குள்ள நீர்நிலைகள் குன்றாது அளித்து வருகின்றன. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே

ஒளிபெற மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறை தெரிந்திருந்தது. ஆனால் மின்சார விளக்குகளைச் செய்ய பயன்படுத்தப்பட்ட இழைக் கம்பி நீடித்து உழைக்காது விலையும் அதிகமானதாக இருந்தது. தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison) விலை மலிவான நீடித்து உழைக்கக் கூடிய இழைக் கம்பிகளை பொருத்தி விளக்குகளைச் செய்யும் முறையைக் கண்டு பிடித்தார். முதன் முதலாக 1882இல் நியூயார்க் நகரத்தில் எடிசன் மின்சார நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டு அந்நகரில் விளக்குகள் எரிய மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அளிக்கப்பட்டது. சீக்கிரத்தில் மின் ஆற்றலைப் போக்கு வரத்துக்குப் பயன்படுத்தும் முறையும் கண்டு பிடிக்கப்பட்டு 1887இல் வெர்ஜினியா விலுள்ள ரிச்மாண்டில் (Richmond) முதல் மின்சார ஊர்திகள் தெருக்களில் ஓட ஆரம்பித்தன.

இரயில் பாதைகளின் வளர்ச்சி

உள்நாட்டுப் போர் முடிவுற்ற பின், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள இரயில் பாதைகள் ஆறு மடங்காக பெருகின. புதிய இரயில் எஞ்சின்கள் செய்வதற்கும், இரயில் பெட்டிகளைக் கட்டுவதற்கும், பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனையொட்டி எஃகு உற்பத்தியும், நிலக்கரி சுரங்கத் தொழிலும் வெகுவாக வளர்ச்சி யுற்றன. இரயில் பாதைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல பகுதிகளையும் இணைத் தமையால், மேற்குப்பகுதியில் மக்கள் விரைவில் சென்று குடியேறினர். இரயில் பாதைகள் அமைப்பதற்கு முன்பு நாட்டில் செய்பொருள் விற்பனைக்கு பெரிய சந்தைகள் இல்லாமல் இருந்தது. இந்நிலை இப்போது மறைந்து புதிது புதிதாகச் செய்யப்பட்ட செய்பொருட் களின் விற்பனைக்கு நாடு முழுவதிலும் சந்தைகள் (National Markets) ஏற்படலாயின. கச்சாப் பொருட்களையும் கிடைக்குமிடத்திலிருந்து தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லவும், செய்பொருட்களைத் தொழிற்சாலைகளிலிருந்து சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவும் இரயில் போக்குவரத்து சாதனங்கள் பெரிதும் உதவின. 1862இல் நாட்டின் குறுக்கே ஒரு இரயில் பாதை அமைப்பதற்கான திட்டத்தை காங்கிரஸ் வகுத்தது. நெப்பிராஸ்காவிலிருந்து (Nebraska) கலிபோர்னியாவை (California) இணைக்கும் வகையில் ஒரு இரயில் பாதையை அமைப்பதற்கான பட்டயம் பசிபிக் கூட்டிணைவு ரயில் நிறுவனத்திற்கு (Union Pacific Company) அளிக்கப்பட்டது. அந்நிறுவனத்திற்கு ரயில்பாதை செல்லும் நிலப்பகுதியும், அவ்வழியிலுள்ள மரங்களை இலவசமாகப் பயன் படுத்தவும், அவ்வழியிலுள்ள தாதுப் பொருட்களை எடுத்துக் கொள்ளவும், கட்டப்படும் ஒரு மைல் நீளமுள்ள இரயில்பாதைக்கு ஈடாகப் பத்து சதுரமைல் நிலப்பகுதியும் பெற உரிமையளிக்கப்பட்டது. மேலும், அந்நிறுவனத்திற்குக் கடன் தந்துதவவும் காங்கிரஸ் முன்வந்தது. அதே நேரத்தில் கலிபோர்னியாவில் இருந்து துவக்கப்பட்டு கிழக்கு நோக்கி ஒரு இரயில் பாதையை அமைக்க கலிபோர்னியாவில் மத்திய பசிபிக் நிறுவனம் (Central Pacific Company) ஒன்று நிறுவப்பட்டது. இரயில் பாதைகள் அமைக்கும் வேலை 1867இல் துவக்கப்பட்டது. அயர்லாந்திலிருந்தும், சீனாவிலிருந்தும் ஏராளமான கூலிகள் வேலைக்கு வந்து அமர்ந்தனர். நெப்ராஸ்காவிலிருந்து கலிபோர்னியாவை இணைக்கும் இரயில்பாதை 1869இல் கட்டி முடிக்கப்பட்டது. 1890ஆம் ஆண்டுக்குள் பன்னிரண்டு ரயில் பாதைகள் மிசிசிபி ஆற்றுப் பகுதியையும் பசிபிக் கடலோரத்தையும், இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டன.

புதிய இரயில் பாதைகள் அமைக்கப்பட்ட அதே ஆண்டுகளில் இரயில் பயணம் துரிதமானதாகவும், பாதுகாப்பு மிக்கதாகவும், பல வசதிகள் நிறைந்ததாகவும், குறைந்த கட்டணமுடையதாகவும் மாறிற்று. 1864இல் தூங்குவதற்கான படுக்கைகளைக் கொண்ட பெட்டியை ஜார்ஜ் புல்மேன் (George Pullman) என்பவர் கட்டினார். இரயில் வண்டிகளின் பாதுகாப்புக்காக காற்றுத்தடையை (Air-brake) ஜார்ஜ் வெஸ்டிங் ஹவுஸ் (George Vestinghouse) என்பவர் 1868இல் கண்டு பிடித்தார். அடுத்த இருபது, முப்பது ஆண்டுகளில் நாடு முழுவதும் இரயில் பாதைகள் ஒரே சீரான முறையில் (Standard guage) அமைக்கப்பட்டன.

தனியார் நிறுவனங்கள் (Private Enterprises)

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வணிக வளர்ச்சி ஆரம்பமான காலத்தில் தனியார் நிறுவனங்கள் செல்வாக்குப் பெற்று வளரத் தொடங்கின. தனிப்பட்டவர்களது முயற்சிக்கு நல்லாதரவு அளிக்கும் வகையில் அமைந்திருந்த பொருளாதார கோட்பாடே அதற்கு அடிப்படையான காரணமாகும். ஆனால் நாளடைவில் எல்லையற்ற அளவிற்குத் தனியுரிமைகளைப் பெற்ற நிறுவனங்களும், இரயில் பாதை நிறுவனங்களும் பொது மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் வகையில் முறைகேடான செயல்களில் ஈடுபடலாயின. இவற்றைக் கண்டிக்க அரசியலமைப்பு செயலற்றதாக இருந்தது. உயர்ந்த காப்பு வரிகளால் பாதுகாப்புப் பெற்ற தொழில் துறையில் நிதி அடிப்படையில் அதிக ஏற்ற தாழ்வுகள் தோன்றின. உயர்ந்த காப்பு வரிகளை ஆதரித்தோர் தொடர்ந்து காங்கிரசில் தங்களுக்குச் சாதகமான சட்டங்களை இயற்றிக் கொண்டனர். இவற்றால் பொது மக்கள் தான் பெருந்தொல்லைக்குள்ளானார்கள்.

வாணிகக் கூட்டு நிறுவனங்கள் (Trusts)

தொழிற் புரட்சி அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆரம்பமான காலத்தில் முதன் முதலாக பற்பல சிறிய தொழிற்சாலைகள் ஆங்காங்கே தொடங்கப் பெற்றன. பல சிறிய தொழில் நிறுவனங்களால் தொழிலதிபர்களுக்கு அதிக லாபம் கிடைக்கவில்லை. ஏனென்றால் நிறுவனங்களிடையே அதிகமான போட்டி மனப்பான்மை காணப்பட்டது. ஆகையால் செய்பொருட்களின் விலைகளும் சரிந்தன. ஆகவே, பல தொழிற்சாலைகள் ஒன்று சேர்ந்து தங்களது வளங்களை இணைத்து ஒரு கூட்டு நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாமென உணர்ந்தன.

அப்படி அமைக்கப்பட்ட கூட்டு நிறுவனங்கள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு பொருட்களின் விலையை நிர்ணயிக்கவும், நாட்டின் எப்பகுதியில் பொருளாதார வளப்பத்திற்கேற்ப இணைத்து செயல்படலாம் என்பதை நிர்ணயிக்கவும் முற்பட்டன. 1900ஆம் ஆண்டளவில் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டிருந்த சுமார் 5000 நிறுவனங்கள், ஒன்றோடொன்று பிணைந்து 300 கூட்டு நிறுவனங்களாக உருவெடுத்தன. ஒவ்வொரு கூட்டு நிறுவனமும் ஒரு துறையில் போட்டியிடுவாரின்றி முழுதனியுரிமை பெற்று வாணிபம் நடத்தி வந்தன.இக்கூட்டு நிறுவனங்கள் தேசிய

அளவில் செயல்பட்டு வந்தன. இந்நிறுவனத் தலைவர்கள், பழிபாவங்களுக்கு அஞ்சாதவர் களாக, தம் செல்வத்தை பெருக்குவதிலேயே நாட்டமுடையவர்களாக இருந்தனர். அக்கூட்டு நிறுவனங்களுள் முக்கியமானவைகளாகத் திகழ்ந்தவை யு.எஸ். ஸ்டீல் கார்ப்பரேஷன் (U.S. Steel Corporation) அமெரிக்கன் ஷுகர் ரிபைனிங் கம்பெனி (American Sugar Refining Company), புல்மேன் பாலஸ் கார் கம்பெனி (Pullman Palace Car Company) யு.எஸ். ரப்பர் கம்பெனி (U.S. Rubber Company) ஆகியவையாகும். இக்கூட்டு நிறுவனங்கள் தனியுரிமைகளை நன்கு வளர்த்துவிட்டன. அதனால் பல கேடுகள் விளைந்தன. போட்டியில்லாதிருந்தமையால் சரக்குகளின் விலைகள் உயர்த்தப்பட்டன. இதன்மூலம் தொழிலதிபர்கள் தங்களது இலாபத்தை பன்மடங்காகப் பெருக்கினர். தங்களது தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலிதான் கொடுத்தனர். மேலும் வாணிபத்தில் ஊழலும் மலிந்து காணப்பட்டது. தனியுரிமைக் கூட்டு நிறுவனங்களின் வளர்ச்சியால் சிறுவணிகர்களும், சிறு தொழிலதிபர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு நொடித்துப் போயினர். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் உறுப்பினராகச் சேருவதையும் கூட்டு நிறுவனங்கள் எதிர்த்தன. தங்களுக்குச் சில சலுகைகளைப் பெறுவதற்காக காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கையூட்டு அளிக்கவும் கூட்டு நிறுவனங்களின் அதிபர்கள் தயங்கவில்லை.

கூட்டு நிறுவனங்சளில் கேடுகள் வளர்ந்து வருவதைக் கண்ட குடியானவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், சமூக சீர்திருத்தவாதிகளும் கண்டனம் தெரிவிக்கலாயினர். கூட்டு நிறுவனங்கள் மீது கூட்டாட்சி அரசு தனது அதிகாரத்தைச் செலுத்தி அவற்றைச் செம்மைப்படுத்த வேண்டுமென மக்கள் கோரலாயினர். முக்கியமாக குடியானவர்கள் கூட்டு இரயில் நிறுவனங்களின் கேடுகளால் பெரிதும் அவதிப்பட்டனர். தங்களது தானியங்களை தூரத்திலமைந்த சந்தைகளுக்கு ஏற்றிச் செல்லுவதற்கான அதிகப்படியான இரயில் கட்டணத்தை அவர்களால் செலுத்த முடியவில்லை. குடியானவர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு கிரான்ஜ் (Grange) என்னும் ஒரு விவசாயிகளின் சங்கத்தை நிறுவி தங்களது உரிமைகளுக்காகப் போராடலாயினர். நாளாவட்டத்தில் பாப்புலிஸ்ட் கட்சி (Populist Party) என்னும் ஓர் அரசியல் கட்சியும் தோன்றிற்று.

மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மாநில சட்ட மன்றங்கள் கூட்டு நிறுவனங் களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்கள் இயற்றலாயின. ஆனால் வாணிகக் கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சில சட்டங்களைத் தலைமை நீதிமன்றம் சட்டத்துக்கு முரணானவையெனத் தள்ளுபடி செய்தது.

மாநில அரசுகளுக்கிடையேயான வாணிகச் சட்டம் 1887 (The Inter-State Commerce Act)

மக்களது கோரிக்கைகளுக்கு இணங்க அமெரிக்கக் கூட்டாட்சி அரசு மாநில அரசுகளுக்கிடையேயான வாணிகச் சட்டம் (Inter-State Commerce Act) ஒன்றை

1887இல் இயற்றியது. அதன்படி ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய மாநில அரசுகளுக்கிடையேயான வாணிபக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ரயில் பாதை போக்குவரத்துக் கட்டணங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு அவற்றை வெளியிட வேண்டுமென்றும், அக்கட்டணங்கள் நிதானமானதாகவும், நியாயமானவையாகவும் இருக்க வேண்டுமென்றும் அச்சட்டம் அழுத்திக் கூறியது. நிறுவனங்கள் கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதையும், வேண்டியவர்களுக்குக் கட்டணக் குறைப்பு தருவதையும், கப்பல் உரிமையாளர்களிடையே கட்டண வேறுபாடு இருப்பதையும் அச்சட்டம் தடுத்தது. கூட்டு நிறுவனங்களின் கணக்கு வைப்பு முறை, கட்டணப்பட்டியல், வணிக முறைகள் ஆகிய வற்றை மேற்பார்வையிடவும்,பொதுமக்களது குறையீடுகளைக் கேட்கவும், இவ்வாணிபக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், இச்சட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்படாமல் இருந்து வந்தது. அதற்கான காரணங்கள் பல. அவை : (1) மாநில அரசுகளுக்கிடையேயான வாணிபக்குழு தொடுத்த வழக்குகளில் பலர் சாட்சி சொல்ல முன்வரவில்லை. அவர்களைக் கட்டாயப் படுத்த குழுவுக்கு அதிகாரம் தரப்படவில்லை. (2) இக்குழுவின் தீர்ப்புக்கெதிராக எண்ணற்ற பேர் மேல்மன்றங்களுக்கு முறையீடு செய்தனர். (3) இரயில்பாதை நிறுவனங்களின் வழக்குரைஞர்கள் குழுவின் தீர்ப்பின்மீது முறையீடு செய்து பலமுறை வெற்றி பெற்றனர். (4) மாநில அரசுகளுக் கிடையேயான வாணிபச் சட்டத்திற்கு தலைமை நீதிமன்றம் மிகக் குறுகிய விளக்கம் கண்டது. அதனால் குழுவின் செயல்களும் குறுகிய எல்லைக்குள் உட்பட்டதாகவே அமைந்தன. எனவே, பொதுமக்கள் கூட்டு நிறுவனங்களின் தொல்லையிலிருந்து விடுபட, பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) குடியரசுத் தலைவரான பொழுதுதான், காங்கிரஸ் துணிந்து கூட்டு நிறுவனங்களுக்கெதிராக பல சட்டங்களை இயற்றி அவற்றைச் செயல்படுத்தியது.

ஷெர்மன் கூட்டு நிறுவன எதிர்ப்புச் சட்டம் (1890) (Sherman Anti-Trust Act)

வாணிகக் கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி அவற்றின் முறைகேடற்ற செயல் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்க ஐக்கியநாட்டு கூட்டாட்சி அரசு உறுதி பூண்டது. அதற்காக '1890இல் ஓகியோ மாநிலத்தை சார்ந்த ஜான் ஷெர்மன் என்பவர் காங்கிரஸில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆகையால் அச்சட்டம் அவர் பெயராலேயே அழைக்கப்பட்டது. அச்சட்டத்தின்படி வாணிக ஒப்பந்தங்களும், கூட்டு நிறுவனங்களும், அவற்றினிடையேயுள்ள இரகசிய உடன்பாடுகளும் தடைசெய்யப்பட்டன. இச்சட்டம் இயற்றப்பட்டதும், வணிகக் கூட்டு நிறுவனங்கள் எல்லாம் அழிந்தொழியும் எனப் பொதுமக்கள் நினைத்தனர். ஆனால் இச்சட்டம் அனைவரும் எதிர்பார்த்ததைப் போன்றுச் செயலாக்கம் மிக்கதாக விளங்கவில்லை. இச்சட்டம் செயல்படுத்தப்பட்ட வுடன் பல பெரிய கூட்டு நிறுவனங்கள் உடனே மறைந்தன. ஆனால் அவையெல்லாம் மீண்டும் வாணிபப் பங்குகளை வைத்திருப்பதற்கான நிலையங்களாக (Holding Companies) வடிவெடுத்தன. தலைமை நீதிமன்றமும் இச்சட்டத்தைத் தகுந்த முறையில் செயல்படுத்த முன்வரவில்லை. ஆகவே இச்சட்டம் இயற்றப்பட்ட அடுத்த பத்தாண்டு களில் முன்பிருந்ததைப்போல பல மடங்கு பெரிய அளவில் கூட்டு நிறுவனங்கள் ஆங்காங்கே தோன்றலாயின.

பெரும் வணிக வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதற்குக் காரணம், வணிகம் எல்லையற்ற அளவுக்குப் பெருகியதோடல்லாமல், அதனோடே எண்ணிறந்த சிக்கல்களும் அதிகமாக இருந்தமையேயாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் பெரும் வணிகத்தைக் கண்டு அஞ்சினர். அதே நேரத்தில் போற்றவும் செய்தனர். தனியுரிமைபெற்ற நிறுவனங்களின் இடர்ப்பாடுகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள விரும்பிய மக்கள், அதேசமயம் பெருமளவிலான உற்பத்தியின் நன்மைகளை அடையவும், வீண் செலவுண்டாக்கும் இரட்டிப்பு வேலையைத் தவிர்க்கவும் விரும்பினார்கள். வாணிபக் கூட்டு நிறுவனங்களைத் தூய்மையாக்க விரும்பினார்களே ஒழிய, அவற்றை வேரோடு தகர்த்தெறிய மக்கள் விரும்பவில்லை. இக்கருத்தினை குடியரசுத் தலைவர் தியோடர் ரூஸ்வெல்ட்டும் பின்வருமாறு கூறினார் : "வணிகக் கூட்டு நிறுவனங்களை ஒழித்து விடவேண்டும் என்பது நமது கருத்தல்ல; அத்தகைய பெரிய நிறுவனங்கள் தற்காலிகத் தொழில்முறை வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவை; எனவே, நாம் அதை அழிக்க முற்படவில்லை; ஆனால் அவற்றில் இடம் பெற்றுள்ள தீமைகளை ஒழிக்கவே முயற்சிக்கிறோம்" என்று கூறினார்.

பயிற்சி வினா

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பெரும் வணிக வளர்ச்சி தோன்றுவதற்கான காரணங்களையும், அதனால் ஏற்பட்ட உடனடிச் சிக்கல்களையும் எடுத்துரைக்க.

பாடம் – 18 பெரும் வாணிப வளர்ச்சியின் சிக்கல்கள்

தொழிலாளர்களின் இன்னல்கள்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாணிப மற்றும் தொழில் வளர்ச்சிக்கு செல்வாக்கு மிகுந்த தொழிலதிபர்கள் மட்டுமல்லாமல் சாதாரண தொழிலாளப் பெருமக்களும் பெரிதும் உதவினர். தொழிலதிபர்கள் கூட்டு நிறுவனங்களை நிறுவி நாளடைவில் தங்களது செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர். ஆனால் தொழிற்சாலைகளில் தினசரி ஊதியத்திற்காகப் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களின் நிலையோ மோசமானதாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொழிலாளர்களின் நலனைப் பேணிக் காப்பதற்கான தொழிற்சங்கங்கள் எவையும் நல்லமுறையில் அமெரிக்க ஐக்கியநாட்டில் வளர்ச்சிபெறவில்லை. அதே சமயம் அமெரிக்க கூட்டாட்சி அரும் தொழிலாளர் பெருமக்களின் நலன் கருதி சட்ட திட்டங்கள் எதனையும் இயற்றவும் முன்வரவில்லை. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் தொழிலாளரின் நல்வாழ்விற்காக வேண்டிய சில நடவடிக்கைகள் திட்டவட்டமான முறையின் அடிப்படையில் எடுக்கப்பட்டன.

தொழிலாளர்களின் நிலை

1860ஆம் ஆண்டிலிருந்து 1900 ஆண்டுவரையுள்ள சுமார் 30 ஆண்டு காலத்திற்குள் தொழிற்சாலைகளில் வேலைபுரியும் வேலையாட்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் நான்கு மடங்காகப் பெருகிற்று. தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அந்நாளில் அரசின் கட்டுப்பாடற்ற வாணிபக் கோட்பாடு அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதாரத்திற்கு அடிக்கல்லாக அமைந்திருந்தது. ஆகையால் பெருந்தொழிலதிபர்கள் தங்களது நோக்கம் போல் வேலையாட்களை வேலைக்கு அமர்த்தினர்; தங்கள் விருப்பம் போல் அவர்களுக்கு ஊதியம் வழங்கினர்; தங்கள் விருப்பம் போல் வேலையாட்களை வேலையினின்றும் நீக்கினர். வேலையாட்களுக்காக பரிந்து பேச அமெரிக்க கூட்டாட்சி அரசோ, மாநில அரசுகளோ முன்வரவில்லை.

புதியதாக நிறுவப்பட்ட தொழிற்சாலைகளில் சாதாரண வேலையாட்களுக்கு அதிகமான வேலையில்லை. பெரும்பாலான வேலைகள் நவீன இயந்திரங்களாலேயே செய்யப்பட்டன. ஆகவே குறைந்த அளவு ஊதியமே வேலையாட்கள் பெற்றனர். சில ஆலைகளில் வேலையாட்கள் ஒரு வேலையின் குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டுமே செய்து வந்தனர். இதனால் வேலையாளர்களுக்குத் தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழிலில் மனநிறைவு காணமுடியவில்லை. மேலும், புதியதாக நிறுவப்பட்ட தொழிற்சாலைகளில் வேலையாட்கள் அடிக்கடி பற்பல விபத்துக்களால் பாதிக்கப்பட்டனர். விபத்துக்குள்ளானோருக்கோ அவர்களது குடும்பத்தினருக்கோ எவ்வித இழப்பீடும் கொடுக்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வேலையாட்களுக்கு வேலைப் பாதுகாப்பு (Job

Security) அளிக்கப்படாத காரணத்தால் தங்கள் வேலையை எந்நேரமும் இழக்கக் கூடும் என்ற அச்சம் அவர்களது மனதைக் குத்திக் கொண்டேயிருந்தது. உண்மையிலேயே 1873, 1893ஆம் ஆண்டுகளில் உண்டான பொருளாதார மந்தங்களால் அமெரிக்க ஐக்கிய நாட்டலுள்ள தொழிலாளப் பெருமக்கள் சொல்லொணாத் துயரத்திற்குள்ளானார்கள்.

பெரிய தொழிற்சாலை நகரங்களில் தொழிலாளர்கள் பல குப்பங்களிலும், அழுக்கடைந்த சந்துகளிலும் வசிக்கலாயினர். இந்நகரங்களை ஆட்சிபுரியும் பொறுப்பு தொழிலதிபர்களிடமே விடப்பட்டது. இதன்விளைவாக வேலையாட்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாமல் அவர்களின் நிலை இடைக்கால ஐரோப்பாவில் வாழ்ந்து வந்த அடிமைகளின் நிலையையே ஒத்திருந்தது.

தொழிற்சங்கங்களின் தோற்றம்

20ஆம் நூற்றாண்டுக்கு முன்பு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் அச்சுத் தொழிலாளர் களின் சங்கமும், கட்டிட அமைப்பாளர்களின் (builders) சங்கமுமே நல்லவிதமாக செயல் பட்டு வந்தன. ஆனால், இத்தகைய சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுத் தொழில் சங்கத்தை (United Labour Movement) ஏற்படுத்தும் முயற்சி எதையேனும் எடுக்க வில்லை. பல்வேறு சங்கங்களின் தலைவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையும், கருத்து வேறுபாடுமே அதற்கு முக்கியக் காரணம் என்று கூறலாம். 1865இல் வில்லியம் சில்விஸ் (William H. Sylvis) என்பவர் தேசியத் தொழிற்சங்கம் ஒன்றை (National Labour Union) நிறுவினார். ஆனால் அச்சங்கம் 1868இல் தனது அரசியல் தலையீட்டின் காரணமாகச் செல்வாக்கிழந்து மறைந்து போயிற்று. இதைப்போன்ற மற்றொரு சங்கம் "நைட்ஸ் ஆப் லேபர்" (Knights of Labour) என்ற பெயருடன் 1869ஆம் ஆண்டளவில் துவக்கப்பட்டு பல ஆண்டுகள் நல்லவிதமாக செயல்பட்டது. இச்சங்கத்தை நிறுவிய பெருமானின் பெயர் ஊரியா ஸ்டீபன்ஸ் (Uriah Stephens) என்பதாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இச்சங்கமும் சீர்குலைந்து அழிந்து போயிற்று. இறுதியாக 1881இல் மற்றொரு தேசியச் சங்கம் "அமெரிக்கன் பெடரேஷன் ஆப் லேபர்" என்ற பெயருடன் நியூயார்க் நகரத்தைச் சார்ந்த சிகரெட் தொழிற்சாலையின் உற்பத்தியாளரான சாமுவேல் கோம்பர்ஸ் (Samuel gompers) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. மற்றச் சிறு சங்கங்களின் ஆதரவைப் பெற்று இத்தேசியச் சங்கம் தங்கு தடையின்றி வளர்ந் தோங்கியது. 1900ஆம் ஆண்டளவில் இச்சங்கத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5 லட்சத்திற்கும் மேலானதாகக் காணப்பட்டது. இச்சங்கம் நடத்திய பல்வேறான வேலை நிறுத்தப் போராட்டங்களின் காரணமாக பல தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்கு பல வகையானச் சலுகைகளைச் செய்தனர். உதாரணமாக, தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட்டு அவர்களுக்கு அதிக ஊதியமும் வழங்கப்பட்டது. ஆனால் இச்சங்கத்தின் முயற்சியினால் தொழிலாளர்களின் ஒரு சாரரான தொழில் திறமை வாய்ந்த வேலையாட்கள் (skilled craftsmen) பயனடைந்தனர். ஆனால் இச்சங்கத்தால் தொழில் நுட்பத் திறமை பெறாத ஏனைய பெருவாரியான தொழிலாளர்கள் எவ்விதச் சலுகைகளும் பெறவில்லை.

வகுப்பினரிடையே போராட்டம் (class struggle)

வெகுகாலமாக பெரிய கூட்டு நிறுவனங்களின் இயக்குநர்கள் நாட்டில் இயங்கி வந்த பல தொழிற்சங்கங்களின் மேல் விரோத மனப்பான்மை கொண்டிருந்தனர். தொழிற் சங்கப் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் சில தீய சக்திகள் தூண்டி விடுவதாக அவர்கள் ஆழ்ந்த எண்ணங்கொண்டிருந்தனர். வேலை நிறுத்தங்கள் மூலமாகச் சலுகைகளைப் பெறமுடியாத தொழிலாளர்கள் இறுதியாக பல வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர். 1877ஆம் ஆண்டில் இரயில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர் களின் ஊதியம் சற்று குறைக்கப்பட்ட காரணத்தால் அவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் தங்களது வன்முறைக் கிளர்ச்சிகளைத் தொடங்கினர். கிளர்ச்சியின் விளைவாகப் பலர் உயிர் இழக்க நேரிட்டது. பல்லாயிரக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்து நாசமாக்கப்பட்டது. 1886ஆம் ஆண்டில் எட்டு மணி நேர வேலைக்காக மற்றொரு கிளர்ச்சி சிகாகோ (Chicago) நகரில் ஆரம்பமானது. இதன் விளைவாகவும் பலர் உயிரிழக்க நேரிட்டது. இதைப்போன்றே பென்சில்வேனியாவிலுள்ள கார்னகி எஃகுத் தொழிற்சாலையின் வேலையாட்கள் ஒரு பலத்த போராட்டத்தை ஊதிய உயர்வுக்காகத் தொடுத்தனர். அரசின் பலத்த ஆயுதப்படையின் உதவியால் இக்கிளர்ச்சி அடக்கப்பட்டது. 1894ஆம் ஆண்டில் சிகாகோ நகரத்தில் இரயில் நிறுவன தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவே அவர்களது போராட்டம் இறுதியில் கூட்டாட்சி அரசின் படைகளைக் கொண்டு அடக்கப்பட்டது.

விவசாயக் கிளர்ச்சி

முதலாளித்துவத்திற்கு எதிராக முதன்முறையாக விவசாயிகள் தங்களது ஒருங்கிணைந்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். பெரும் கூட்டு நிறுவனங்களுக்கு எதிராக விவசாய மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புக்கு இரு அடிப்படைக் காரணங்கள் உண்டு. தொழிற்புரட்சி நாட்டில் ஏற்படுவதற்கு முன்பு விவசாயிகளின் வாழ்க்கைத் தரமானது நகர்புறத் தொழிலாளியைவிட மேம்பட்டிருந்தது. ஆனால் தொழிற்புரட்சிக்குப் பின் அவர்களது நிலை தாழ்நிலையுறுவது பற்றி அவர்கள் அதிக அக்கறை கொண்டனர். இரண்டாவதாக, விவசாயிகள் விளைபொருட்களை அங்காடிகளுக்கு கொண்டு செல்ல இரயில் பாதை நிறுவனங்களையே நம்பியிருந்தனர். இரயில் நிறுவனங்களோ அதிகமான அளவில் போக்குவரத்துக் கட்டணத்தை விவசாயிகளிடமிருந்து திரட்டின. மேலும் அமெரிக்க வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது அதிக விழுக்காடு வட்டி விதித்தன. மற்றொரு முக்கிய குறை என்னவென்றால் விளைபொருட்களுக்கு குறைந்த விலையும் இயந்திர உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலையும் நிர்ணயிக்கப் பட்டது. ஆதலால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். பல வழிகளில் தாங்கள் சுரண்டப்படுவதாக அவர்கள் ஆனித்தரமாக நம்பினர். மேலும், நவீன இயந்திர சாதனங்களை விவசாயத்துறையில் அறிமுகப்படுத்தியதால் சில குறிப்பிட்ட நன்மைகள் ஏற்பட்ட போதிலும் அதனால் பல புதிய சிக்கல்களும் ஏற்பட்டன. விவசாயிகள் பலர்

பெரிய இயந்திரச் சாதனங்களை அதிகவிலை கொடுத்து வாங்க முடியவில்லை. சாதாரண விவசாயிகள் தங்களது உடைமைகளை விற்க வேண்டிய கட்டத்தை அடைந்தனர். விவசாயிகளுக்கு இதுவரை வாழ்ந்த இனிமையும், எளிமையும் பொருந்திய வாழ்க்கை மறைந்தோடியது.

புதிய கருவிகளும், புதிய விவசாய முறைகளும் சாகுபடியை அதிகரிக்கச் செய்தன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனினும் அதிக உற்பத்தியின் விளைவாக விவசாயப் பொருட்களின் விலைகளும் சரியத் தொடங்கின. விவசாயிகளின் நன்மைகளுக்காக போராடுவதற்காக இறுதியாக ஒரு விவசாயிகள் சங்கம் 1867ஆம் ஆண்டில் ஆலிவர்கெல்லி (Oliver H. Kelly) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பெயர் "கிரேன்ஜ்" (Grange) என அழைக்கப்பட்டது. ஆண்களும், பெண்களும் இச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். விவசாயிகளிடையே கூட்டுறவு முறையை வளர்த்தல், சிறந்த கல்வி வசதிகளை அளித்தல், சுற்றுலா விரிவுரைகள், கூட்டங்கள் போன்ற சமுதாயப் பொழுதுபோக்கு வசதிகளை அளித்தல் போன்றவை அதன் நோக்கங் களில் ஒரு சில. இச்சங்கம் வெகுவிரைவில் ஒரு பெரிய அமைப்பாக மாறி 1874இல் பதினைந்து இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய சங்கமாகத் திகழ்ந்தது. 1891இல் விவசாய நிறுவனங்களின் குறிப்பிட்ட சில தலைவர்கள் பாப்புலிஸ்ட் (Populist) என்றழைக்கப்பட்ட மக்கள் கட்சியை உருவாக்கினர். நெப்ராஸ்காவில் (Nebraska) ஓமாஹா (Omaha) என்னு மிடத்தில் நடைபெற்ற மாநாட்டில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை வெளியிட்டனர். எல்லாப் பொருளாதாரத் துறைகளிலும் அரசு நடவடிக்கைகள் விரிவாக்கப்படவேண்டுமென இக்கட்சி கேட்டுக் கொண்டது. இரயில் பாதைகள், தந்தி ஆகியவற்றை அரசே மேற்கொண்டு நடத்துதல், தபால் சேமிப்பு வங்கிகளை நிறுவுதல், அதிகப் பணத்தை புழக்கத்தில் விடுதல், நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், வரையறுக்கப்பட்ட வருமானவரி (Graduated Income Tax) முறையைப் புகுத்தல் போன்றவைகளே இக்கட்சியின் முக்கியத் திட்டங்களாக இருந்தன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவர் பதவியைக் கைப்பற்ற இக்கட்சி முயற்சித்தது. 1896இல் நடைபெற்ற தேர்தலில் ஜேம்ஸ் வீவர் (James B. Weaver) என்பவரை இக்கட்சி தனது வேட்பாளராக நிறுத்திற்று. ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கிளிவ்லாண்ட் (Cleveland) தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும் பாப்புலிஸ்ட் கட்சி 10 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. 1895ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் பாப்புலிஸ்ட் ஜனநாயக கட்சி வேட்பாளரான பிரியன் (Bryan) என்பவரை ஆதரித்தனர். ஆனால் குடியரசுக் கட்சி வேட்பாளரான மாக்கின்லே (Meknley) வெற்றி வாகை சூடினார். குடியரசுக் கட்சியினரின் இவ்வெற்றி பாப்புலிஸ்டுகளின் நடவடிக்கைகள் விவசாயிகளின் நிலை மையை நாட்டிற்கு நன்கு உணர்த்தின. அவர்கள் போராடிய சீர்திருத்தங்களில் பல, மாநில தேசிய சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்டன. காலப்போக்கில் விவசாயிகளின் நலனைப் பேணுவதையே தேசியகட்சிகள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

பாப்புலிஸ்ட் கட்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. அதனுடைய இடதுசாரித் திட்டங்களும், வெள்ளையர், கறுப்பர் ஒற்றுமைக் கொள்கையும், பொதுமக்களிடம் எவ்விதச் செல்வாக்கும் பெறவில்லை. தனியார் துறையில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அமெரிக்கர், பொருளாதார நடவடிக்கையில் அரசின் தலையீட்டை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நீக்ரோக்கள் வெள்ளையர்களால் மிகவும் வெறுக்கப்பட்டனர். எனவே நீக்ரோக்கள் அரசியலில் வெள்ளையர்களோடு ஒத்துழைக்க விரும்பவில்லை. இரண்டாவதாக, இக்கட்சிக்கு தெற்கு மேற்குப் பகுதிகளில் மட்டுமே சிறிதளவு ஆதரவு இருந்தது. மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட கிழக்கு மாநிலங்களில் இக்கட்சி எவ்வித ஆதரவும் பெறவில்லை. மூன்றாவதாக, தேசிய சட்டமன்றத்தில் உறுதியாக வேரூன்றவோ, குடியரசுத் தலைவர் பதவியைப் பெறவோ இக்கட்சியால் இயலாமல் போனது அதன் பெருமைக்கு களங்கம் உண்டாக்கியது. அதே வேளையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனநாயகக் கட்சி பாப்புலிஸ்ட் கட்சியின் கொள்கைகளைப் பின்பற்றியமையால் மூன்றாவது ஒரு கட்சியைத் தோற்றுவிக்கக்கூடிய தேவை அமெரிக்க மக்களுக்கு ஏற்படவில்லை. இறுதியாக விவசாயிகளே இக்கட்சி மீது கொண்டிருந்த ஆர்வத்தை இழந்தனர். ரஷியாவிலும், அர்ஜெண்டினாவிலும் அறுவடை தவறியதால், தங்களது தானியங்களுக்கு அதிக விலை கிடைக்கும் வாய்ப்பை விவசாயிகள் கண்டு கொண்டனர்.

பயிற்சி வினா

பெரும் வாணிப வளர்ச்சியின் காரணத்தால் தொழிலாளருக்கும், விவசாய மக்களுக்கும் ஏற்பட்ட இடையூறுகளை ஆராய்க.

பாடம் – 19 அமெரிக்கா உலக வல்லரசாதல்

(முதல் பகுதி – கடல் கடந்த விரிவாக்கம்)

அமெரிக்க ஐக்கிய நாடு தனது தனித்திருத்தல் கொள்கையினை உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, சில ஆண்டுகள் பின்பற்றி வந்தது. அவ்வாறு தனித்திருந்த சில ஆண்டுகளில் சில சக்திகளின் விளைவாக நாட்டினுள் மெச்சத்தக்க தொழில் அபிவிருத்தி ஏற்பட்டது. அத்துடன் அமெரிக்காவை ஓர் உலக வல்லரசு நாடாக உருவாக்குவதற்கான சக்திகளும் ஒருங்கே இயங்கின. அமெரிக்க மக்களும் தங்களது உள்நாட்டு நிகழ்ச்சிகளில் அதிக ஆர்வங்கொண்டிருந்தது போல படிப்படியாக அயல்நாட்டு நிகழ்ச்சிகளிலும் மிகுந்த ஆர்வங்கொள்ளலாயினர். இத்தகைய மாற்றத்தால் பல விளைவுகள் ஏற்பட்டன. அவற்றுள் முக்கியமானவை கீழ்வருமாறு : 1. வல்லரசுக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாமா வேண்டாமா என்பது பற்றி அரசியல் கட்சிகளிடையே வாக்குவாதம் எழல், 2. சில நாடுகளுடன் உறவுநிலை முறிந்து போர் மூளல், 3. புதிதாகக் கைப்பற்றப்பட்ட நிலப் பகுதிகளை எப்படி ஆட்சி செய்வது என்பது பற்றி அரசியலமைப்பின் அடிப்படையில் எழுந்த சிக்கல்.

உள்நாட்டுப் போரையடுத்த முப்பதாண்டுகளில் சிறப்பான எந்த வெளிநாட்டுக் கொள்கையையும் அமெரிக்க ஐக்கிய நாடு பின்பற்றவில்லை. அப்படியே அயல்நாடு களுடன் ஏதேனும் உறவு கொண்டிருந்தாலும் அது தற்செயலாக ஏற்பட்ட தொடர்பே யாகும். அடிமை முறைமீதான சிக்கலைத் தீர்ப்பதிலும், புனரமைப்புத் திட்டங்களைச் செயலாக்குவதிலும், தொலை மேற்குப் பகுதியில் குடியேற்றங்களை நிறுவுவதிலும், தொழிற்சாலைகளை அமைப்பதிலும், நகரங்களை நிருமாணிப்பதிலும் மக்களுடைய கவனம் செலுத்தப்பட்டது. சுருக்கமாகக் கூறின் மக்கள் உள்நாட்டு முன்னேற்றத்திற்கான செயல்கள் பலவற்றில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அமெரிக்க மக்கள் ஐரோப்பிய விவகாரங்களில் ஆர்வங் கொள்ளாமல் இருந்தனர். ஆனால் அந்நூற்றாண்டு முற்றுப் பெறுவதற்கு முன்பே, தென் அமெரிக்க நாடுகளோடும், தூரக்கிழக்கு (Far East) நாடுகளோடும் அமெரிக்க ஐக்கிய நாடு உறவு கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. அதுமுதல் அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு வல்லரசு நாடாக உலக அரங்கில் திகழத் துவங்கியது. உலகின் பல பாகங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள் அமெரிக்க மக்களைப் பெரிதும் பாதிக்கலாயின.

தனித்திருத்தல் கொள்கை கைவிடப்படல்

அமெரிக்க ஐக்கிய நாடு பிற நாடுகளின் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதை அமெரிக்க மக்கள் சிலர் எதிர்த்தனர். பிறநாட்டு விவகாரங்களில் தலையிடல், அமெரிக்கா தொன்று தொட்டு கடைப்பிடித்துவரும் தனித்திருத்தல் கொள்கைக்கு முரணாக உள்ளது என்றும் வாதாடினர். தனிப்பட்ட வகையில் குடியரசுத் தலைவர்களும், வெளிநாட்டுறவுச் செயலாளர்களும் அமெரிக்காவை பிற ஐரோப்பிய, மற்றும் ஆசிய நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தினர் என்றும் ஒரு சில அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டினர். ஆனால் உண்மையாகவே, தனித்திருத்தல் கொள்கையினைக் கைவிடுவதற்கான காரணத்தைப்

பொருளாதார மாற்றத்தின் அடிப்படையில் காணலாம். விரைவில் முன்னேற்றமடைந்த மேற்கத்திய நாகரிகம் தனித்திருத்தல் கொள்கையை நடைமுறைக்கு ஒவ்வாத கொள்கை யெனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியது. தொழிற்துறை அறிவியல் வளர்ச்சியால் உலகின் பல பாகங்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்படலாயின. ஒன்றையொன்று சார்ந்து வாழும் நிலையும் உருவாயிற்று. இப்பொதுவான மாறுதலுக்கு அமெரிக்க ஐக்கிய நாடு மட்டும் விதிவிலக்காக இருக்க முடியவில்லை.

ஐரோப்பிய நாடுகள் புதிய உலகில் பேரரசுக் கொள்கையைப் பின்பற்றி முன்பு குடியேற்றங்களை நிறுவியது போலவே, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலக நாடுகள் அனைத்தும் மூலப் பொருட்களுக்காகவும், செய்பொருட்களை விற்பனை செய்ய சந்தைகளுக்காகவும் புதியதொரு பேரரசுக் கொள்கையைப் பின்பற்றலாயின. இங்கிலாந்து நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தனது பரந்த பேரரசினை வலிமைப்படுத்த முனைந்தது. பிரான்சும் ஆப்பிரிக்காக் கண்டத்தில் குடியேற்ற நாடுகளை நிறுவுவதில் மும்முரமாக இருந்து வந்தது. ஜெர்மனியும் தனது பேரரசரான முதலாம் கெய்சர் வில்லியம் தலைமையில் ஐரோப்பாவில் வலிமைமிக்க நாடாகமாறிய பிறகு, பிற குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றத் திட்டமிட்டது. ஜப்பான் வியக்கத்தக்க முறையில் 1895இல் சீனாவைத் தோற்கடித்து, தூரக் கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிற்று. ஆனால் புதிய உலகில் மட்டும் ஐரோப்பியர்களை நுழையவிடாதபடி மன்ரோ கோட்பாடு தடுத்து நிறுத்தியது. இருப்பினும், வட அமெரிக்காவைச் சேர்ந்த செல்வந்தர்களும், ஐரோப்பியப் பெருவணிகர்களும் தென் அமெரிக்காவில் ஏராளமான செல்வத்தைக் கொட்டி முதலீடு செய்து பெரும் ஊதியம் பெற்றுவந்தனர். ஐரோப்பிய - ஆப்பிரிக்க நிகழ்ச்சிகளில் எப்பொழுதுமே தலையிடாத நாடாக இருந்த அமெரிக்க ஐக்கிய நாடு எப்படியோ தூரக்கிழக்கு நாடுகளின் நிகழ்ச்சிகளில் நாட்டங்கொள்ளலாயிற்று.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாடு தொழில் வளமும் விவசாய வளமும் பெருகிய நாடாகக் காணப்பட்டது. மேற்கு நோக்கி தங்களது குடியேற்றத்தைப் பெருக்கி, அப்பகுதியைச் சிறந்த முறையில் சீர்திருத்தியமைத்திருந்தனர். குடியானவர்கள் மென்மேலும் புதிய நிலப்பகுதிகளைப் பெறுவதற்கு முடியாத வகையில் எல்லாப் பகுதிகளிலும் விவசாயம் செய்யப்பட்டு வந்தது. நாட்டில் முதலீடு செய்பவர்களிடத்தும் அதிகப்படியான முதல் தேங்கிக் கிடந்தது. நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்கவும், அமெரிக்கச் செல்வத்தை பல தொழில்களில் முதலீடு செய்யவும் வெளிநாடு களில் நல்ல வாய்ப்பு இருப்பதை அமெரிக்கர் உணர்ந்தனர். கூட்டாட்சி அரசு காப்பு வரிகளை விதித்து அமெரிக்க வர்த்தகத்திற்குச் சிறந்தமுறையில் பாதுகாப்பு வழங்கிய காரணத்தால் அமெரிக்க ஐக்கிய நாடு 1880-1900 ஆகிய ஆண்டுகளுக்கிடையே ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 835 மில்லியன் டாலரிலிருந்து 1400 மில்லியன் டாலராக உயர்ந்தது.

அயல்நாட்டுத் துறையில் தனித்திருத்தல் கொள்கையினைப் பின்பற்றியதன் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடு பாதுகாப்பற்ற நிலையிலிருப்பதாக ஓர் உணர்வு 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிற்று. 19ஆம் நூற்றாண்டு முழுவதும் அட்லாண்டிக் பெருங்கடலைப் பிரிட்டன் கட்டுப்படுத்தியது. ஆனால் எந்த நாடும்

தனது ஆதிக்கத்தை பசிபிக் பெருங்கடலில் ஏற்படுத்தாமையால் அமெரிக்க ஐக்கிய நாடு அப்பக்கம் தனது கவனத்தைச் செலுத்தியது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியும், ஜப்பானும் வலிமை பொருந்திய நாடுகளாக மாறி, பலத்த கப்பற் படையுடன் பெருங் கடல்களில் நகர ஆரம்பித்ததும், ஐரோப்பாவின் சக்தி சமநிலை பாதிக்கப்பட்டது. இதனைக் கண்ட அமெரிக்க ஐக்கிய நாடும் அச்சமடைந்தது.

மெய்ம்மை காட்டு அமைவு நோக்கத்திற்கு ஒரு புதிய விளக்கம் (A new version of Manifest Destiny)

மெய்ம்மை காட்டு அமைவு நோக்கத்திற்கு ஒரு புதிய விளக்கம் கண்ட ஒரு சில செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதிகள் அமெரிக்கப் பேரரசு ஒன்றினை நிறுவ வேண்டு மென வற்புறுத்தலாயினர். சார்லஸ் டார்வின் ஆய்ந்து நிறுவிய உயிரினத் தோற்றக் கொள்கையினாலும், ரூட்யார்டு கிப்ளிங் (Rudyard Kipling) போன்ற பேரரசுக் கொள்கை யில் ஈடுபாடு கொண்ட எழுத்தாளர்களின் நூல்களாலும் ஊக்கம் பெற்ற அமெரிக்கா, தங்கள் நாடு பெரிய வல்லரசு நாடாக உலக அரங்கில் தலைமையிடத்தை அடைய வேண்டுமென பேரவா கொண்டனர். அவர்களுள் தியோடர் ரூஸ்வெல்ட், ஹென்றி கேபட் லாட்ஜ் (Henry Cabot Lodge), ஆல்பர்ட் பீவரிட்ஜ் (Albert Beveridge) ஆகியோர் பேரரசுக் கொள்கை பற்றி அடிப்படையான தனிக்கருத்துப் போக்கு உடையவர்களாகச் சிறந்து விளங்கினர். அவர்கள் பேரரசுக்கொள்கையைச் செயல்படுத்தும் பொருட்டு முதல்படியாக நிலையான கப்பற்படைத்தளங்களை உலகின் பல்வேறு பகுதிகளில் அமைக்க வேண்டுமெனக் கூறிவந்தனர். இவ்வகையில் பொருளாதார துணைக் கூறுகளைக் காட்டிலும் போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்களாகவே அமெரிக்க ஐக்கிய நாடு தனது பேரரசுக் கொள்கையை உருவாக்கியது எனலாம்.

கடற்படைத் தளபதியும், அமெரிக்கக் கடற்படை வரலாற்றாசிரியருமான ஆல்பிரட் மேஹன் (Alfred Mahan) கடற்படையின் இன்றியமையாமை பற்றியும், அதனை விரிவுபடுத்தும் திட்டங்கள் பற்றியும் பல கட்டுரைகள் வாயிலாகவும், நூல்களின் வாயிலாகவும் தெளிவாக எடுத்துக் கூறினார். பிரிட்டன் தனது வலிமை பொருந்திய கப்பற்படையின் துணை கொண்டே ஒரு வலிமைமிக்க பேரரசாக வளர்ச்சியுற்றது என மேஹன் கூறினார். பிரிட்டன் வலிமை பொருந்திய கப்பற்படையைப் பெற்றிருந்தமையால், பிரிட்டிஷ் வணிகர்கள் துணிவுடன் உலகின் பல பாகங்களுக்குச் சென்று வாணிக நிலையங்களை நிறுவியதோடல்லாமல், அப்பகுதிகளைக் கைப்பற்றி பிரிட்டிஷ் பேரரசினை ஏற்படுத்துவதிலும் வெற்றி கண்டனர். பிரிட்டனை ஒரு மாதிரியாகக் கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடும் வலிமைமிக்கக் கப்பற்படையை உருவாக்க வேண்டு மென மேஹன் கூறினார். பிரிட்டனுக்கு போட்டியாக அக்கப்பற்படை அமையா விட்டாலும், ஸ்பெயின், ஜெர்மனி போன்ற நாடுகளின் கப்பற்படைகளைவிடச் சிறப்புள்ள தாக அமெரிக்கக் கப்பற்படை அமைய வேண்டும் என்றும் மேஸன் வலியுறுத்திக் கூறினார். அவருடைய கருத்துக்கள் நாளாவட்டத்தில் பலருடைய கவனத்தையும் கவர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாடு புகழ்மிக்க நாடாகத் திகழ வேண்டுமானால் வெளிநாட்டு வாணிகம் மென்மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும், அதனைப் பேணிப்

பாதுகாக்க வெளிநாடுகளில் மேலும் பல வியாபார ஸ்தாபனங்கள் நிறுவப்படல் வேண்டுமென்றும், அவ்வியாபார நிலையங்களைப் பாதுகாத்திட சிறந்த கப்பற்படை இன்றியமையாததென்றும் அமெரிக்க மக்கள் உணர ஆரம்பித்தனர்.

புதிய கப்பல்களைக் கட்டி, கடற்படையை வலுப்படுத்தும் நோக்கத்தோடு 1881இல் அமெரிக்க காங்கிரஸ் ஒரு பெருந்தொகையை ஒதுக்கலாயிற்று. வெகு விரைவில் அமெரிக்கக் கப்பற்படை விரிவாக்கப்பட்டு நவீனமானதாகவும் மாற்றப்பட்டது. நீராவி சக்தியினால் இயங்கும் போர்க்கப்பல்கள், பல கட்டப்பட்டன. ஆரம்பத்தில் அமெரிக்கக் கப்பற்படை நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக வலுப்படுத்தப் பட்டது; பின்னர் கப்பற்படையின் வலிமையை அதிகப்படுத்தி அவற்றைக் கொண்டு பெருங்கடலில் எதிரிகளைத் தாக்கவும் அமெரிக்க அரசு தயாராகயிருந்தது.

அலாஸ்காவைப் பெறுதல்

உள்நாட்டுப் போருக்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடு கடல் கடந்த நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டது. அச்சமயம் அமெரிக்க வெளிநாட்டுறவு செயலாளராகப் பணியாற்றிய சீவர்டு (Seward) அமெரிக்காவின் ஆதிக்கத்தை பசிபிக் பெருங்கடலுக்கு அப்பாலுள்ள இடங்களில் ஏற்படுத்த விரும்பினார். 1867இல் ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தி, அதன்மூலம் அலாஸ்காவை 7.2 மில்லியன் டாலருக்கு வாங்கினார். அதே ஆண்டில் பசிபிக் பெருங்கடலிலிருந்த மிட்வே தீவுகளையும் (Midway Islands) கைப்பற்றினார். அமெரிக்காவின் ஆதிக்கத்தைப் பெருக்குவதில் சீவர்டு காட்டிய ஆர்வத்தை அப்பொழுது மக்கள் புரிந்து கொள்ளவில்லை; ஆதரவும் தரவில்லை. ஏனெனில், அச்சமயம் மக்கள் புனரமைப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். சீவர்டு முயற்சி செய்து கைப்பற்றிய நிலப்பகுதிகளின் முக்கியத்துவத்தைப் பின்வந்த தலைமுறையினர் நன்குணர்ந்தனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் கப்பற்படையை வலுப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டமையால், அமெரிக்கா பசிபிக் பெருங்கடலில் சில கடற்படைத் தளங்களை நிறுவ முற்பட்டது. 1878ஆம் ஆண்டு அமெரிக்க சமோவா (Samoa) அரசுடன் ஓர் உடன்படிக்கை செய்ததன் விளைவாக சமோவாவிலுள்ள பேகோ பேகோ என்னும் துறைமுகத்தில் கப்பற்படைத்தளம் ஒன்றை அமைக்க உரிமை பெற்றது. இதனையடுத்து உடனே பிரிட்டனும், ஜெர்மனியும் சமோவா தீவுக்கூட்டத்தில் தத்தம் ஆதிக்கத்தை நிறுவ முனைந்தன. இவ்வகையில், மூன்று நாடுகள் சமோவாவைக் கைப்பற்றத் திட்டமிட்டமையால் ஒரு பெரும் போர் மூளுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நற்பயனாக இப்பிரச்சினை மூன்று நாடுகளாலும் சுமூகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது. அந்நாடுகளுக்குள் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக மூன்று நாடுகளும் இணைந்த ஒரு கூட்டாட்சியை சமோவாவில் நிறுவ ஒப்புக் கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் பேகோபேகோவில் அமெரிக்கா பெற்ற உரிமைகளைப் பிற இரு நாடுகளும் உறுதிப்படுத்தின. இவ்வகையில் வெளிநாட்டுக் கொள்கையில் மெய்ம்மை காட்டு அமைவு நோக்கக் கோட்பாட்டிற்குப் புதிய விளக்கம் காணும் முயற்சியில் அமெரிக்க ஐக்கிய நாடு முதல் வெற்றியைப் பெற்றது.

பசிபிக் பெருங்கடலில் பயன்மிகுந்த ஹவாய்த் தீவுகளை அமெரிக்க ஐக்கிய நாடு கைப்பற்ற பல நாட்களாக திட்டமிட்டது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹவாய்த் தீவுகளுக்கு பல அமெரிக்கக் கப்பல்கள் விஜயம் செய்து ஆகாரப்பொருள்கள் மற்றும் குடிநீர் ஆகியவற்றை இத்தீவுகளிலிருந்து எடுத்துச் சென்றன. 1820இல் முதல் அமெரிக்க சமயப் பரப்பாளர்கள் (Missionaries) இத்தீவுகளை வந்தடைந்தனர். அந்நாள் முதல் ஹவாய்த் தீவுகள் ஒரு அமெரிக்கக் குடியேற்றம் போலக் காட்சியளிக்கலாயின. தங்கள் நாட்டுக் கடற்கரையின் ஒரு பாகமாகவே ஹவாயை அமெரிக்கர் கருதலாயினர். இத்தீவுகளை வேறுநாட்டவர்கள் எவரும் கைப்பற்றாவண்ணம் அமெரிக்க ஐக்கிய நாடு காத்துக் கொள்ளும் என்று 1842இல் வெளிநாட்டு உறவு செயலாளர் வெப்ஸ்டர் (Webster) ஹவாய் மக்களுக்கு வாக்குறுதியளித்தார். அத்தீவுகளோடு 1875இல் பேர்ல் துறைமுகத்தில் (Pearl Harbour) ஒரு கப்பல் தளத்தை ஏற்படுத்த அமெரிக்க ஐக்கிய நாடு உரிமை பெற்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டோடு உடன்படிக்கை செய்த பின், ஹவாய்த் தீவுகளில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் பல ஊக்குவிக்கப்பட்டன. அமெரிக்க வணிகர்கள் பலர் இத்தொழிலில் பெருமளவில் முதலீடு செய்தனர். பத்தாண்டுக் காலத்தில் ஹவாயின் சர்க்கரை உற்பத்தி பன்மடங்காகப் பெருகி, 1890ஆம் ஆண்டளவில் சுமார் இருபது மில்லியன் டாலர்கள் பெறுமானமுள்ள பொருட்களை ஹவாய் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது.

1891 ஹவாய்தீவுகளுக்கு லில்லியோகலானி (Queen Lilluokalani) என்ற பெயருடைய இராணியார் ஒருவர் பட்டத்திற்கு வந்தார். அமெரிக்கர் மீது அவர் வெறுப்பு கொண்ட காரணத்தால் அவர்கள் பெற்றிருந்த சலுகைகளைத் தடைப்படுத்த முயன்றார். இச்செயல் அங்கு வாழ்ந்து வந்த அமெரிக்க மக்களை எப்படியாவது அத்தீவுகளை அமெரிக்க ஐக்கிய நாட்டோடு இணைத்துவிட வேண்டுமென்று தூண்டியது. இதைத் தொடர்ந்து ஹவாயில் வாழ்ந்த அமெரிக்கர் 1893ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளர்ந்தெழுந்து, அரசைக் கைப்பற்றிட அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதவியைக் கோரினார். அமெரிக்கக் காங்கிரஸ் ஹவாயைச் சட்ட பூர்வமாகக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் குடியரசுத் தலைவர் ஹாரிசன் (Harrison) பதவிக் காலம் முடிவுற்று கிளீவ்லண்டு (Cleveland) குடியரசுத் தலைவரானார். கிளீவ்லண்டு பேரரசுக் கொள்கையை எதிர்ப்பவராகையால் ஹவாய்க்கு அனுப்பிய உதவிகளையும், அதனைக் கைப்பற்றும் திட்டங்களையும் தடுத்து நிறுத்தினார். ஆனால் ஹவாயில் வாழ்ந்த அமெரிக்கர் தொடர்ந்து அரசினைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதற்குள்ளாக கிவீவ்லண்டு ஓய்வுபெற்று மெக்கின்லி (Mckinley) குடியரசுத் தலைவரானார். மெக்கின்லி பேரரசுக் கொள்கையில் ஈடுபாடுடையவர். எனவே, அமெரிக்க காங்கிரஸ் இத்தீவுகளைக் கைப்பற்றுவதற்கான தீர்மானத்தை 1898ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேற்றிற்று. ஆரம்பத்தில் ஹவாய்த் தீவுகள் கூட்டாட்சி அரசின் நேர்முக ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டன. பின்பு மாநிலமாக மாற்றி அமைப்பதற்கான வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. இத்தீர்மானம் ஸ்பானிய போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இயற்றப்பட்டதால் இதற்குப் பெரும் வரவேற்பு மக்களிடையே காணப்பட்டது.

பயிற்சி வினா

அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு வல்லரசு நாடாக மாறியதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை?

பாடம் – 20 அமெரிக்கா உலக வல்லரசாதல்
(இரண்டாம் பகுதி–ஸ்பானியப் போர் 1898)

அலாஸ்காவைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கியும், சமோவாவைக் கடற்படை அலுவலர்கள் முயற்சியால் பேசி ஒப்பந்தம் செய்து பெற்றும், தனது ஆதிக்கத்தைப் பெருக்கி வந்த அமெரிக்க ஐக்கிய நாடு, அடுத்து ஸ்பெயினோடு போர் தொடுத்தும் தனது பேரரசுக் கொள்கையைச் செயல்படுத்த முனைந்தது. ஸ்பானிய அமெரிக்கப் போருக்கு உடனடியான காரணம் கியூபாவில் 1895ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியே யாகும். அப்புரட்சி அமெரிக்க மக்களின் கவனத்தைக் கவர்ந்ததோடு அவர்களது ஆதிக்க மனப்பான்மையையும் தூண்டிவிட்டது.

ஜெபர்சனது ஆட்சிக் காலத்திலிருந்தே அமெரிக்க ஐக்கிய நாடு கியூபாவின் நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டி வந்தது. அமெரிக்கக் கூட்டாட்சி அரசின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடென்றே கியூபாவை ஒரு சிலர் எண்ணி வந்தனர். அத்தீவை ஸ்பெயின் கட்டுப்படுத்தி ஆட்சிபுரிந்து வந்தமையால், அமெரிக்க மக்கள் அதிக ஆர்வங் காட்டாவிட்டாலும், அமெரிக்க அரசியல்வாதிகள் உள்ளத்தில் என்றாவது ஒருநாள் கியூபாவைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. கியூபாவின் ஸ்பானிய அரசு ஒரு வலிமை மிக்க ஆட்சியை அங்கே ஏற்படுத்த முடியவில்லை. 1868 முதல் 1878 வரை கியூபாவில் ஸ்பானிய ஆட்சியை எதிர்த்துப் பல கிளர்ச்சிகள் நடந்த வண்ணமாக இருந்தன. அச்சமயம் கியூபாவைக் கைப்பற்ற வாய்ப்பு கிடைத்தும் அமெரிக்க ஐக்கிய நாடு வாளாயிருந்தது மட்டுமல்லாமல் பெருந்தன்மையோடு நடந்துகொண்டது. ஆனால் 1878ஆம் ஆண்டுக்குப் பின்பு ஒழுங்கீனங்களும் கொடூரமான நிகழ்ச்சிகளும் கியூபா மக்களைத் துன்பத்திலாழ்த்தின. கியூபன் காரியங்களில் அதிக அக்கறை காட்டிவந்த அமெரிக்க மக்களுக்கு அத்தகைய சூழ்நிலை பெரும் இகழ்ச்சியைத் தந்தது. 1895ஆம் ஆண்டு கியூபாவில் மீண்டும் கலவரங்கள் பல நடக்கலாயின. அப்பொழுது அமெரிக்காவின் பெருமைக்குப் பெரும் இழுக்கு ஏற்பட்டது. முதலில் அமெரிக்க ஐக்கிய நாடு எத்தரப்பினரையும் ஆதரிக்காது, நடு நிலைமை வகித்து வந்தது. ஆனால் சில நாட்கள் கழித்து அமெரிக்க ஐக்கிய நாடு ஸ்பெயினுக்கு எதிராகப் புரட்சியாளர்களை ஆதரிக்க முற்பட்டது. இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கு சில நியாயமான காரணங்களும் இருந்தன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் அச்சம்யம் செய்தித்தாள்கள் பலவாகப் பெருகியிருந்தன. இச்செய்தித்தாட்கள் தேசிய உணர்வை மக்களிடையே நல்லவிதமாக வளர்த்தன. செய்தித்தாட்கள் நிறுவனங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தங்களுக்கென ஒரு கூட்டுச் செய்தித்தாள் நிறுவனத்தை (Associated Press) ஏற்படுத்திக் கொண்டன. இச்செய்தி நிறுவனம், மக்களை மகிழ்விப்பதற்காகக் கற்பனை மிகுந்த கொடூரமான செயல்களை அன்றாடம் வெளியிட்டு வந்தது. கியூபாவைப் பொறுத்த மட்டும் 1895இலிருந்து 1898ஆம் ஆண்டு வரை அந்நாட்டில் ஸ்பானியர்கள் செய்து வந்த கொடுமைகளை விளக்கமாக வெளியிட்டு வந்தன. மனிதப் பண்பின் அடிப்படையிலாவது, அமெரிக்க ஐக்கிய நாடு

கியூபாவின் புரட்சியில் பங்கு பெற்று கியூபாவின் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென அமெரிக்க மக்கள் இரக்கங்காட்டும் ஒரு நிலையைச் செய்தித்தாட்கள் உருவாக்கி விட்டன.

அடுத்தாற்போன்று, அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப் பின் பொருளாதார அடிப்படையில் கியூபாவிற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் நல்லதொரு தொடர்பு ஏற்படலாயிற்று. அமெரிக்க செல்வந்தர்கள் மற்றும் வணிகர்கள் யாவரும் கியூபாவில் 50 மில்லியன் டாலர் மதிப்பிற்கு முதலீடு செய்திருந்தனர். சர்க்கரையை அடிப்படையாகக் கொண்ட கியூபாவின் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு அமெரிக்க மக்கள் தங்கள் பொருளாதார உறவை நிலைநாட்டினர். கியூபாவில் நிகழ்ந்து வந்த புரட்சிகளின் விளைவாக சர்க்கரை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியும் குன்றிற்று. அதனால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார நிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

மூன்றாவதாக அமெரிக்க ஐக்கிய நாடு உலக வல்லரசாகத் திகழ முதலில் கரீபியன் கடற்கரைப் பகுதியில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த திட்டமிட்டது. பசிபிக் பெருங்கடலிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் ஆர்வங் கொண்டிருந்த அமெரிக்கா, பசிபிக்பெருங்கடலையும், அட்லாண்டிக் பெருங்கடலையும் இணைக்கும் கால்வாய் ஒன்றினை மத்திய அமெரிக்காவில் வெட்ட எண்ணங் கொண்டிருந்தது. அவ்வாறு ஒரு கால்வாய் வெட்டினால், அதன் வழியாக அமெரிக்கக் கப்பல்கள் சென்றுவர, பாதுகாப்பு நிறைந்த நீர்வழியினையும் பெற வேண்டியது இன்றியமையாததாயிற்று. அமெரிக்காவுக்குச் சொந்தமான தூரத்திலிருந்த தீவுகளையும், கப்பற்படைத் தளங்களையும் பாதுகாக்க ஒரு பெரிய கப்பற்படையும் தேவைப்பட்டது. கப்பல்கள் ஆங்காங்கே பாதுகாப்பாகத் தங்கவும், நீர், நிலக்கரி போன்றவற்றைப் பெறவும் பல நிலையங்கள் தேவைப்பட்டன. அவ்வகையில் ஒரு நிலையத்தை கியூபாவிலும், கரீபியன் கடற்பகுதியிலிருந்த பிற நாடுகளிலும் நிறுவ அமெரிக்கா மும்முரமாகச் செயல்பட்டது.

ஆனால் அச்சமயம் கிளிவ்லாண்டு (Cleveland) அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவராகப் பணிபுரிந்து வந்தார். அவர் பேரரசுக் கொள்கையை முற்றிலும் ஆதரிக்க வில்லை. அமைதிக் கொள்கையையே பின்பற்றினார். எனவே, கியூபா சிக்கலில் தலை யிட்டு எத்தரப்பினரையும் ஆதரிக்காது நடுநிலைமையை வகிக்கப்போவதாக அறிவித்தார். அமெரிக்க காங்கிரஸ் கியூபாவின் கிளர்ச்சியாளர்களை ஆதரித்து ஒரு தீர்மானத்தை இயற்றியும், கிளிவ்லாண்டு அதனைச் செயல்படுத்த மறுத்து விட்டார். கிளிவ்லாண்டை அடுத்து அமெரிக்கக் குடியரசுத் தலைவராக மெக்கின்லி (Mckinley) தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர். இக்கட்சி ஒரு உறுதிமிக்க வெளிநாட்டுக் கொள்கையை ஆதரித்தது. ஸ்பானிய அரசு கியூபாவில் ஆற்றல் மிக்க ஆட்சியை ஏற்படுத்தவில்லையென்றும் அதனால் அங்கு வாழும் அமெரிக்க குடிமக்களது உயிரும், உடமைகளும் சரிவர காக்கப்படவில்லை என்றும், எனவே, அமெரிக்க ஐக்கிய நாடு தலையிட்டு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அமைதியை நிறுவ வேண்டுமென்றும், இறுதியில் கியூபாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்றும் குடியரசுக் கட்சியினர் மக்களிடத்து மன்றாடி வந்தனர். கியூபாவில் வசித்து வந்த மக்களின் இடையூறுகளை

அகற்றுவதற்காக மட்டுமல்லாது, சில பொருளாதாரக் காரணங்களுக்காகவும் அமெரிக்கா தலையிடுவதை முறையான செயலென்று பிரச்சாரம் செய்தனர். அமெரிக்க மக்களின் கருத்தை அறிந்து ஆராய்ந்த குடியரசுத் தலைவர் மெக்கின்லி, கியூபா சிக்கலைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளலானார். கியூபாவில் அமைதியை நிலை-நாட்டும் பொருட்டு, ஸ்பானிய அரசோடு தொடர்பு கொண்டு தாம் இடையீட்டாளராக உதவி செய்ய மெக்கின்லி விருப்பம் தெரிவித்தார். ஸ்பானிய அரசு மெக்கின்லியின் கருத்தை ஏற்க மறுத்தது. ஆனால் கியூபாவில் நெடுநாளாக வேண்டப்பட்ட சில சீர்திருத் தங்களைச் செய்ய ஸ்பானிய அரசு முன்வந்தது. கியூபா மக்களுக்கு பெருந்தொல்லை கொடுத்து வந்த ஸ்பானிய தளபதியான வெய்லர் (Weyler) பதவியிலிருந்து நீக்கப்பட்டார். கியூபா நாட்டுக் கைதிகளை ஒதுக்கி வைக்கும் பகுதிகள் (Concentration camps) மூடப் பட்டன. ஸ்பானியக் குடிமக்கள் பெற்றிருந்த உரிமைகள் அனைத்தும் கியூபா மக்களுக்கு அளிக்கப்பட்டன. இவ்வாறு தன்னாட்சி ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் யாவும் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் தன்னாட்சித் திட்டங்கள் கியூபா நாட்டு மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. அதற்குள்ளாகத் திடீரென அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள் போரினைத் தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றிவிட்டன. அமெரிக்காவில் பணிபுரிந்து வந்த ஸ்பானிய தூதுவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மக்கின்லியைப் பற்றி தனிமுறையில் ஒரு கடிதம் எழுதும் பொழுது கடுஞ்சொற்களால் குறை கூறியிருந்தார். அக்கடிதம் எப்படியோ நியூயார்க் செய்தித்தாள் ஆசிரியரான வில்லியம் ரண்டாலப் ஹெர்ஸ்ட் (William Randolph Hearst) கையில் சிக்கவே, அதை அவர் அப்படியே அச்சிட்டார். அதனைப் படித்த அமெரிக்க மக்கள் மிகுந்த சீற்றங்கொண்டனர். ஸ்பானிய அரசு உடனே மன்னிப்புக் கேட்டுக்கொண்டதோடு தனது தூதுவரையும் பதவிநீக்கம் செய்தது.

அடுத்தபடியாக, 1898ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் "மெயின்" (Maine) என்ற பெயருடைய அமெரிக்கப் போர்க்கப்பல் கியூபாவிலுள்ள ஹவானா (Havana) துறைமுகத்தில் வெடிவைத்து தகர்த்தெறியப்பட்டது. அதன் காரணமாக 260 அமெரிக்கர் உயிரிழந்தனர். இக்கப்பலை ஸ்பானியர்களே சதி செய்து தகர்த்தெறிந்ததாகச் சொல்லப்பட்டது. இதைக் கேள்வியுற்ற அமெரிக்க மக்கள் மிக்க சினங்கொண்டனர். இச்சம்பவத்தைச் சரியான முறையில் விசாரணை செய்ய ஒரு குழு நிறுவப்பட்டது. நீர் மூழ்கி வெடிகுண்டு ஒன்றால் அக்கப்பல் தகர்த்தெறியப்பட்டதென அக்குழு முடிவு தெரிவித்தது. ஆனால் அதற்குக் காரணமானவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட வில்லை. அப்படியிருந்தும் அந்நிகழ்ச்சிக்கு ஸ்பானியர்களே பொறுப்பு எனக் கருதப்பட்டது.

மெக்கின்லி தனிப்பட்ட முறையில் அமைதியையே விரும்பினாலும், மக்கள் விருப்பத் திற்கு மாறாக அவர் நடக்க விரும்பவில்லை. மேலும் அவர் மீண்டும், 1900ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட விரும்பியதால் மக்களது ஆதரவைப் பெற நாட்டங் கொண்டிருந்தார். கியூபாச் சிக்கலைப் பற்றிய போரில் அமெரிக்க ஐக்கிய நாடு வெற்றி பெற்றால் அதன் கடலாதிக்கம் பெருகிவிடுமென அஞ்சிய இங்கிலாந்து பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் ஒன்று கூடிப் போரினைத் தவிர்க்க முயன்றன. ஸ்பெயினும் இறுதியாக அமெரிக்க அரசுக்கு ஒரு செய்தியின் மூலம் அடக்குமுறை

ஆட்சியைக் கைவிடுவதாகவும், கியூபா மக்களின் உரிமைகளை மதித்து, நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும் தெரிவித்தது. ஆனால் ஸ்பெயினின் விளக்கங்களை அமெரிக்க மக்களோ, கூட்டாட்சி அரசோ கேட்கும் நிலையில் இல்லை. போர் தொடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அமெரிக்கர், போர் துவங்கும் நாளினை ஆவலோடு எதிர்பார்த்தனர். கியூபாவிலுள்ள மக்களின் உரிமையை நிலைநாட்டவும், நிலையான சுதந்திர அரசாட்சியை நிறுவவும், இராணுவத்தைப் பயன்படுத்தக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் காங்கிரசின் இரு சபைகளிலும் தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்கள் ஏப்ரல் திங்கள் 19ஆம் நாளன்று குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டன. மறுநாள் மெக்கின்லி, கியூபாவின் சிக்கலைத் தீர்ப்பதற்காக ஸ்பெயின் மீது போர் தொடுத்தார்.

போரின் போக்கு

கியூபாவை ஸ்பெயினின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமெரிக்க ஐக்கிய நாடு ஸ்பெயின் மீது போர் தொடுத்தது. ஆனால் போரின் முதல் நிகழ்ச்சி தூரக்கிழக்கில் நடைபெற்றது வியக்கத்தக்கதாகும். கப்பற்படைத் துணைச் செயலாளராக பணியாற்றிய தியோடர் ரூஸ்வெல்டின் முயற்சியால் பசிபிக் கப்பற்படைத் தளபதி டுவி (Dewey) யை ஸ்பெயினுக்குச் சொந்தமான பிலிப்பைன்ஸ் தீவுகளை முற்றுகையிட ஆணை பிறப்பிக்கப்பட்டது. மே திங்கள் முதல் நாளன்று தளபதி டுவீ மணிலா வளைகுடாவில் (Manila Bay) இருந்த ஸ்பானியக் கடற்படையைத் தோற்கடித்தார். மணிலாவுக்கு மேலும் படைகள் அனுப்பப்பட்டது. கடற்படைத் தலைவர்கள் ஷீலி (Schley) மற்றும் சாம்சன் (Sampson) ஆகிய இருவரது தலைமையில் சென்ற படை ஸ்பானியப் படையினைச் சாண்டியாகோ (Santiago) என்னும் துறைமுகப் பட்டினத்தருகே தோற்கடித்தது. அமெரிக்கப் போர் வீரர்கள் கியூபாவில் இறங்கி மூன்று வாரச் சண்டைக்குப் பின்பு, ஸ்பானியர்களை சரணடையச் செய்தனர். அடுத்து கியூபாவுக்கு கிழக்கிலிருக்கும் பியூர்ட்டரிக்கோவையும் (Puerto Rico) அமெரிக்கர் தம் வசப்படுத்தினர். பிறநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிக இழப்பில்லாமல் அமெரிக்கா பியூர்ட்டரிக்கோவைக் கைப்பற்றியது. "ஏதோ நிலா வெளிச்சத்தில் வீரர்கள் உல்லாசப் பயணத்திற்குச் செல்வது போலச் சென்று வெற்றி கொண்டாடினர்" என்று சிலர் கூறினர்.

பாரிஸ் அமைதி உடன்படிக்கை

1898ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் பாரிஸில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தாகியது. அதன்படி ஸ்பெயின் கியூபாவின்பால் கொண்டாடிய உரிமையைக் கைவிட்டது. பசிபிக் பெருங்கடலிலுள்ள பிலிப்பைன்ஸ் தீவுகளையும், குவாம் (Guam) தீவையும், அட்லாண்டிக் பெருங்கடலிலுள்ள பியூர்ட்டரிகோவையும் ஸ்பெயின் அமெரிக்காவுக்காக விட்டுக் கொடுத்தது. முதலில் அத்தீவுகளையெல்லாம் அமெரிக்காவோடு சேர்த்துக் கொள்ள மெக்கின்லி சற்றுத் தயங்கினார். ஆனால் பின்பு அக்கருத்தை மாற்றிக் கொண்டார். சீனாவில் ஐரோப்பிய நாடுகளின் நடவடிக்கைகள் அவரை இத்தீவுகளை அமெரிக்க ஐக்கிய நாட்டோடு சேர்த்துக்கொள்ள ஏவியது. அத்தீவுகளில் வாழும் மக்களுக்குக் கல்வியறிவு புகட்டி அவர்களுக்குக் கிறித்துவ சமயத்தின் கொள்கைகளைப் புகட்ட வேண்டுமென்றும் மெக்கின்லி கூறினார்.

கியூபா தற்காலிகமாக அமெரிக்க இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1902ஆம் ஆண்டுவரை கியூபா அமெரிக்க இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. 1902ஆம் ஆண்டு கியூபா ஒரு சில வரையறைகளோடு தன்னாட்சி பெற்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் கியூபாவின் எதிர்கால உறவு முறையை விளக்கி, பிளாட் திருத்தம் (Platt Amendment) என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இத்திருத்தத்தில் கியூபாவைக் கைப்பற்று வதற்கான காரணங்கள் சிறப்புற விளக்கப்பட்டிருந்தன.

ஸ்பானியப் போரின் இறுதியில் அமெரிக்க ஐக்கியநாடு இரண்டு மாபெரும் பொறுப்புகளை ஏற்க நேரிட்டது. அப்பொறுப்புக்களை ஏற்றமையால் வருங்காலத்தில் அமெரிக்காவின் பங்கு தீர்மானிக்கப்பட்டது. 1. அமெரிக்காவின் பொருளாதாரமும், போர் வலிமையும் பிலிப்பைன்ஸ் தீவுகள் வரைக்கும் விரிவடைந்துவிட்டமையால் அமெரிக்கா வல்லரசுகளுடனும், ஜப்பானுடனும் தொடர்பு கொள்ள நேரிட்டது. 2. அமெரிக்க ஐக்கிய நாட்டின் செல்வாக்கு ஸ்பானியப் போருக்குப்பின் கரீபியன் (Caribbean) கடற்பகுதியிலும் நிறுவப்பட்டது. இதன் காரணமாகவும் ஐரோப்பிய வல்லரசுகளுடன், குறிப்பாக ஜெர்மனியுடன் அமெரிக்க ஐக்கிய நாடு தொடர்பு கொள்ள நேரிட்டது. அச்சமயம் ஜெர்மனி, தென்அமெரிக்காவில் தனது செல்வாக்கை நிலைநாட்டும் பணியில் தீவிரமாக முயன்று கொண்டிருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பேரரசுக் கொள்கையை எதிர்த்து நாட்டில் ஒரு கழகம் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் செய்தித்தாள்கள் வழியாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும், பொதுக் கூட்டங்கள் நடத்தியும் அமெரிக்கப் படையினர் ஸ்பானியப் போரில் இழைத்த கொடுமைகளை மக்களுக்கு விளக்கிக் கூறிற்று. அமெரிக்காவின் பேரரசுக் கொள்கையைத் தாக்கி அறிஞர் மார்க் டுவெயின் (Mark Twain) என்பவரும் எடுத்துரைத்தார். அவர் அமெரிக்கக் கொடியில் வெள்ளைப்பட்டைகளுக்குப் பதிலாக கறுப்புப்பட்டைகளும், விண்மீன்களுக்குப் பதிலாக மண்டையோடுகளும், எலும்புகளும் வரையப்படவேண்டுமெனக் கூறினார். பேரரசுக் கொள்கையை எதிர்த்து எழுந்த இக்கழகமானது மக்களது ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடவில்லை. ஆகையால் இக்கழகம் மக்கள் ஆதரவைப் பெறவில்லை. தனித்திருத்தல் கொள்கையை விட்டொழித்த நிலையில் அமெரிக்க மக்கள் தங்களது நாட்டை உலக வல்லரசாகக் காண்பதில் பெருமிதம் கொண்டார்.

பியூர்ட்டரிக்கோவிற்கு 1776ஆம் ஆண்டுக்கு முன்பு எத்தகைய ஆட்சி முறை பதின்மூன்று குடியேற்றங்களில் இருந்ததோ அதுபோன்ற ஆட்சிமுறை அமைக்கப்பட்டது. அமெரிக்கக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஓர் ஆலோசனைக் குழுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட ஒரு சட்ட மன்றமும் கொண்ட ஆட்சிமுறை பியூர்ட்டரிகோவில் நிறுவப்பட்டது. 1917ஆம் ஆண்டு ஜோன்ஸ் சட்டப்படி (Jones Act) பியூர்ட்டரிகோ மக்களுக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது. மற்றும் ஆளுநருடைய ஆலோசனைக் குழுவுக்குப் பதிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட மேல்சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. எனினும் பியூர்ட்டரிகோவின் சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களைத் தள்ளுபடிச் செய்யும் அதிகாரத்தை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பெற்றிருந்தார்.

அமெரிக்காவின் ஆட்சியின் மூலம் பியூர்ட்டரிகோவில் பல நன்மைகள் ஏற்பட்டன. சுகாதாரத் துறையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. இறப்போரின் எண்ணிக்கை குறைந்தது; கல்வி கற்பிக்கப்பட்டது; பொதுநலத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன. இவற்றின் விளைவாக மக்கள் தொகை அதிகரிக்கலாயிற்று. பியூர்ட்டரிகோ மக்கள் பெரும்பாலும் பண்ணைத் தோட்டங்களில் கூலிக்கு வேலை பார்த்தனர். அவர்களுக்கு மிகவும் குறைவான கூலியே தரப்பட்டது. சர்க்கரை வாணிபத்தில் மந்தம் ஏற்பட்ட போதெல்லாம் ஏழைக் கூலிகள் அவதியுற்றனர். 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளா தார மந்தத்தின் போது பியூர்ட்டரிகோவில் 60 சதவீத மக்கள் வேலையில்லாதிருந்தனர்.

பிலிப்பைன்ஸிடம் ஆரம்பத்தில் அமெரிக்கா சற்றுக் கொடுமையாக நடந்து கொண்டமையால் மக்கள் எமிலியோ அகினால்டோ (Emil Aguinaldo) என்பவரின் தலைமையில் கலகம் செய்தனர். உடனே தளகர்த்தர் ஆர்தர் மெக்கார்தர் (Arthur Mcarthur) என்பவரின் தலைமையில் படைகள் அனுப்பப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்குப் பின் கலகங்கள் அடக்கப்பட்டன. 1901இல் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது. முதல் அமெரிக்க ஆளுநராக வில்லியம் ஹோவார்டு டாப்டு (William Howard Taft) என்பவர் நியமிக்கப்பட்டார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டது. மக்களுக்குக் கல்வி புகட்டப்பட்டது. சுகாதார நலம் பேணிக் காக்கப்பட்டது. ஆனால் பொருளாதார அடிப்படையில் பிலிப்பைன்ஸ் தீவுகள் பயனற்றவையாகவே இருந்தன. தூரகிழக்கு நாடுகளோடு தொடர்பு கொள்ள ஒரு சிறந்த தளமாகப் பிலிப்பைன்ஸ் பயன்படும் என்ற நோக்கமும் சரிவர நிறைவேறவில்லை.

பயிற்சி வினா

ஸ்பானிய போரின் காரணங்களையும், விளைவுகளையும் சுட்டிக் காட்டுக.

பாடம் - 21 அமெரிக்கா உலக வல்லரசாதல் (மூன்றாம் பகுதி-அமெரிக்காவும் தூரக்கிழக்கு நாடுகளும்)

1894-1895ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சீன-ஜப்பானியப் போரில் சீனா கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. இப்போரின் காரணமாக சீனாவின் திறமையின்மை ஏனைய உலக நாடுகளுக்குத் தெரிய வந்தது. அதே வேளையில் ஜப்பானின் ஆதிக்கத் தன்மை அதிகரித்துக் கொண்டே வந்தது. ஐரோப்பிய நாடுகள் ஜப்பானின் வளர்ச்சியைக் கண்ணுற்று அஞ்சிய வண்ணம் இருந்தன. சீனாவில் ஜப்பான் அரசியல் பொருளாதார அடிப்படையில் ஆதிக்கத்தை நிறுவிவிடும் என்று அஞ்சிய ஐரோப்பிய நாடுகள் போட்டியிட்டுக் கொண்டு தத்தமக்கு வாணிகச் சலுகைகளைப் பெறவும், சில நிலப்பகுதிகளில் ஆதிக்கத்தை நிலை நாட்டவும் விரைந்தன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடு தூரக்கிழக்கு நாடுகளின் பகுதிகளை பிற நாடுகள் கைப்பற்றுவதை எதிர்த்து வந்தது. தூரக்கிழக்கு நாடுகளில் அனைத்து நாடுகளுக்கும் சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்தியது. ஆனால் அமெரிக்கர்களின் கொள்கைகளை அவமதித்த பிற நாடுகளெல்லாம் சீனாவின் முக்கியமான சுரங்கங்களையும், துறைமுகங் களையும் கைப்பற்றுவதில் மிகவும் அக்கறை காட்டின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ், ரஷ்யா, கிரேட் பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் சீனாவின் எல்லைப் புறப் பகுதிகளில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டி காப்பாட்சியாளர்களாக விளங்கின. பின்னர் சீனாவின் மையப்பகுதிகளை அந்நாடுகள் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கைப்பற்ற முனைந்தன. பெயரளவில்தான் அரசியல் ஆதிக்கத்தினை சீன அலுவலர்கள் வைத்திருந் தனர். சீனாவின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதிலும், பிறநாட்டவர்கள் முதலீடு செய்வதிலும் முழுஉரிமை பெற்று விளங்கினர். பிறநாடுகள் சீனாவின் அதிகமான சலுகைகளைப் பெற்றுக் கொண்டமையால் அமெரிக்கா தனது வாணிபம் பாதிக்குமென அஞ்சியது. நெடுநாட்களாகத் தொலைகிழக்கில் பல சிறப்புரிமைகளை அனுபவித்து வந்த பிரிட்டனும் ஏனைய நாடுகள் சீனாவோடு உரிமை கொண்டாடுவதைக் கண்டு அச்சமுற்றன. 1823ஆம் ஆண்டிலேயே அமெரிக்க ஐக்கிய நாடு விரும்பியதைப்போல பிரிட்டனும் வணிகச் சலுகைகளைப் பெறவிரும்பி அமெரிக்காவோடு இணைந்து கூட்டறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்க முயன்றது. கட்டுப்பாடு மிகுந்த ஒப்பந்தங்களைத் தவிர்க்க வேண்டம் என்ற கொள்கையில் ஈடுபாடு கொண்ட மெக்கின்லி, பிரிட்டனோடு இணைந்து ஒரு கூட்டுக் கொள்கை அறிவிப்பை வெளியிட மறுத்துவிட்டார். பின்னர், பிரிட்டன் நுழைவுச் சலுகைகளைப் பெறும் எண்ணங்களைக் கைவிட்டது. சீனாவின் சந்தைகளைப் பங்கிட்டுக் கொள்வதில் பிரிட்டன் பல நாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. அதோடு 1902ஆம் ஆண்டு பிரிட்டன் ஜப்பானுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது.

சீனாவின் உள்நாட்டு வலியின்மையை சாதகமாக எடுத்துக் கொண்டு வெளிநாட்டு ஆதிக்கங்கள் அந்நாட்டின் பரந்துபட்ட மூலவளங்களைக் கைப்பற்ற முயற்சித்தன. கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு மற்றும் ரஷ்ய நாடுகள் துறைமுகங்களைக் குத்தகைக்கு பெற்றுக் கொண்டதோடு, சுரங்கங்களை இயக்க சலுகைகளும், விருப்பப்படியான சுங்க வரியும், ரயில்பாதைகளை அமைப்பதற்கான உரிமைகளையும பெற்றன. இவ்வாதிக்கங்கள் சீனாவைத் தங்களது செல்வாக்கின் பகுதிகளாகப் பிரித்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ரஷ்யா கப்பற்போக்குவரத்துப் பகுதியைக் கைப்பற்றியது. சீனாவோடு கொண்ட வணிகத் தின் பெரும்பகுதியை கிரேட் பிரிட்டன் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. ஐக்கிய நாடுகள் போன்றே இங்கிலாந்தும் தனது வணிக நலன்களை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் அதிக ஆர்வம் காட்டியது. ஆனால் பிரிவினையைத் தடை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள தன்னால் இயலாதென்பதை இங்கிலாந்து உணர்ந்திருந்தது. மேலும் பிற நாடுகள் இங்கிலாந்தை தனித்தியங்கச் செய்தன. ரஷ்யா பிரிட்டிஷ் இந்தியாவை அச்சுறுத்தியபோது பிரான்ஸ் பிரிட்டிஷ் ஆப்பிரிக்காவை அச்சுறுத்தியது. ஜெர்மனி, பிரிட்டனின் கடலாதிக்கத்திற்கு சவாலாக அமைந்தது. எனவே ஒரு 'திறந்த வாயிற்கொள்கையை ஆரம்பித்து வைக்கவும், அதன் வழியாக சீனா பங்கீடு செய்யப்படுவதைத் தடைசெய்யவும் மக்கள் தொகை மிகுந்த இந்நாட்டில் தனது வணிக நலன்களைப் பாதுகாக்கவும் ஆங்கிலேயர்கள் அமெரிக்காின் துணையை நாடினர். இதற்கிடையில்தான் ஸ்பெயினோடு போரில் ஈடுபட்டிருந்த போது பிற ஆதிக்கங்கள் பெற்றுக் கொண்டது போன்று நிலப் பகுதிகளைப் பெற முடியவில்லை என மனத்தாங்கல் ஐக்கிய நாடுகளிடமிருந்தது.

வெளிநாட்டுறவு செயலாளராக ஜனாதிபதி மாக்கின்லீயின் கீழ் பணியாற்றிய ஜான் ஹே (John Hay) சீனாவின் வாணிபத்தில் சம உரிமை கோரிக் குறிப்பு ஒன்றினை 1899ஆம் ஆண்டு ஐரோப்பாவின் பெரிய நாடுகளுக்கு அனுப்பினார். பெரும் ஆதிக்கங் களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் ஒவ்வொரு நாடும் கீழ் குறிப்பிடுகின்ற உறுதி மொழிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சீனாவோடு வாணிகத் தொடர்பு கொள்ளவும், அங்கு முதலீடு செய்யவும் அமெரிக்கர் எல்லாவிதமான உரிமை களையும் பெறவேண்டுமென்பதே அவரது குறிக்கோளாகும். வெளிநாட்டு வணிகம் அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கைத் துறைமுகங்களை திறந்து வைப்பதாகவும் குறிப்பிட்ட நலன்களை முன்னிட்டு மற்றோர் ஆதிக்கத்தின் செல்வாக்கு எல்லைக்குள் தலையிடாது என்றும் அந்நாடு ஏற்றுக்கொள்ளும். அத்தகைய துறைமுகங்களில், சீனச் சுங்கவரி எல்லா நாடுகளுக்கும் ஒன்று போலவே இருக்கும். துறைமுக வரியும், ரயில் பாதை கட்டண வரியும் எல்லா நாடுகளுக்கும் ஒன்று போலவே இருக்கும். வணிகம் செய்வதற்காக சீனாவில் எல்லா நாடுகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பதே மேற்குறிப் பிட்ட கொள்கைகளின் நோக்கமாக இருந்தன. பிற நாடுகளுக்கும் இந் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே அநேக நாடுகள் இதனை ஏற்றுக் கொள்டன. அனைத்து நாடுகளின் ஒப்புதல்படி திறந்த வாயிற்கொள்கை அமைய வில்லை எனக் கூறி ரஷ்யா இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தது. எனினும் நாடுகளின் ஒப்புதலே இறுதியும் உறுதியுமானதென்று கூறி சீனாவில் திறந்தவாயிற்கொள்கை கடைபிடிக்கப் படுமென்று ஹே அறிவித்தார். ஓர் ஆண்டிற்குள்ளாகவே திறந்த வாயிற் கொள்கையானது சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் அனைத்திற்கும் முதலாவதாக சுற்றறிக்கையொன்று அனுப்பப்பட்டது. அதன் மூலம் அனைத்து நாடுகளும் கூட்டுறவு அடிப்படையில் சில உறுதிமொழிகளை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. அதன்படி சீனாவின் ஈடுபாடு கொண்ட நாடுகளும் அங்கு குத்தகை இடங்கள் பெற்றிருந்த நாடுகளும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாதென்று கேட்டுக் கொள்ளப்பட்டன. சீனாவின் உடன்பாட்டு வரிகள் மற்றும் சீனச் சுங்கவரி ஆகியவற்றில் சீனாவுக்கு முழு உரிமை வழங்க வேண்டுமென்றும் துறைமுகவரி மற்றும் ரயில் கட்டணம் ஆகியவற்றில் எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாதென்றும் கூறப்பட்டது. அதொடு எல்லா நாடுகளும் சுதந்திரமான வாணிபச் சந்தையை அமைக்க வேண்டுமென்றும் வாணிப வரிகளில் எவ்விதமான பாகுபாடும் காட்டாமல் ஒத்த தன்மையுடையனவாய் அமைக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டன. மேலே கூறப்பட்ட கொள்கைகள் ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளப்படவில்லையென்றாலும் பின்னர் 1902க்குப் பின்னர் முழுமையாக ஒப்புக்கொள்ளப்பட்டதெனலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடு சீனாவில் நுழைவுச் சலுகையை மட்டும் பெற்றதோடல் லாமல் சிதைந்து போன சீனப் பேரரசின் ஒருமைப் பாட்டினைக் காக்கும் பொறுப்பையும் பெற்றது. இவ்வகையில் சீனாவின் உள்நாட்டு அரசியலில் அமெரிக்கா தலையிட கூட்டாச்சி அரசு எவ்வித உரிமையினையும் வழங்கவில்லை. கட்டுப்படுத்தும் ஒப்பந்தங் களை எதிர்த்த அமெரிக்க ஐக்கிய நாடு தனது அரசியல் கோட்பாடுகளுக்கு மாறாக சீனாவில் பிற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள நேரிட்டது. தொடக்கத்தில் நுழைவுச் சலுகை பெறுவதற்காக மட்டுமே அமெரிக்கா கிரேட் பிரிட்டனுடன் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்தது. ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் சீனாவின் உள் நாட்டு அரசியலில் அமெரிக்கா பங்கு கொள்ள நேரிட்டது. அமெரிக்காவின் திறந்த வாயிற் கொள்கை சில வழிகளில் பயன்மிக்கதாகவும் இருந்தது. சீனாவை ஒரு சில ஆண்டுகளுக்குச் சிதறுபடாமல் அக்கொள்கை காத்தது. மேலும் உலக அரங்கில் அமெரிக்காவின் புகழ் உயரவும் வழிசெய்தது. எல்லாவற்றிற்கும் மேலாகச் சீனாவைப் பொறுத்தமட்டில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டி னால், இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று ஆதரவாக உலக அரங்கில் உறவு கொண்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு பெரும் ஆதிக்கமாகவும், குடியேற்றப் பேரரசாகவும் எழுச்சியுற்றது. செவ்விந்திய நாடுகளை அழித்த அமெரிக்கா, ரஷ்யாவிற்குச் சொந்தமான அலாஸ்காவை விலைக்கு வாங்கியது. ஸ்பெயின் மீதான அமெரிக்க வெற்றி, அட்லாண்டிக், பசிபிக் பகுதிகளின் வளமான தீவுகளை ஐக்கிய நாடுகளின் உடமைகளாக்கிற்று. ஹாவாய் தீவுகள், சமோவா, குவாம் மற்றும் வேக் தீவுகளை அமெரிக்கர் உடைமைகளாகப் பெற்றனர். கரிபியன் பகுதிகளில் கியுபா ஹெய்ட்டி, சான்டோடோமிங்கோ மற்றும் பனாமா பகுதிகளைத் தனது ஒன்றிணைந்த பகுதிகளோடு சேர்த்துக் கொண்டு அப்பகுதிகளில் தனது செல்வாக்கை நிலை நாட்டியது. அதுபோலவே தொலை கிழக்குப் பகுதியில் பிரிட்டனின் ஆதிக்கத்தையும் கொள்கை யையும் அமெரிக்கா ஒருமனதாக ஆதரித்தது. இந் நல்லுறவால் இரு நாடுகளுக்குமி டையே நெடுநாட்களாக இருந்து வந்த சிக்கல்கள் சில எளிதாகத் தீர்க்கப்பட்டன. சீனா உடனடியாக எவ்விதமான பொருளாதார வளமையைப் பெறவில்லையென்றாலும் அயல் நாட்டவர் சீனச் செல்வத்தைச் சுரண்டுதல் ஓரளவுக்குத் தடை செய்யப்பட்டதென்ப தையும் நாம் மறந்துவிடக்கூடாது.

தூரக்கிழக்கு நாடுகளைப் பொறத்தமட்டிலும் ஜான் ஹே வகுத்திருந்த திறந்த வாயிற் கொள்கையினையே ரூஸ்வெல்ட்டும், டாப்டும் வில்சனும் பின்பற்றினர். ஆனால் இக்கொள்கைகளை சிறப்பான முறையில் செயலாற்ற முடியாது என்று அனைவரும் உணர்ந்தனர். ஜப்பானின் திடீர் முன்னேற்றம் அதற்கு சிறப்பான காரணமாகும்.

ஜப்பானும் ரஷ்யாவும் சீனாவின் ஒரு மாநிலமான மஞ்சூரியாவையும், கொரியா வையும் கைப்பற்றுவதற்தாக போட்டியிட்டு போரில் இறங்கின. இரு நாடுகளுள் ரஷ்யா வினை அஞ்சத் தகுந்த நாடாகக் கருதிய அமெரிக்க ஐக்கிய நாடு ஜப்பானுக்கு தனது ஆதரவினை நல்க முடிவு செய்தது. ஜப்பான் பல வெற்றிகளைத் தொடர்ச்சியாகப் பெற்றபின்பு, தனது வலிமை முழுவதும் குன்றும் நிலையை எய்தவே அமைதியை நிலைநாட்ட விரும்பியது. ரஷ்யாவில் உள்நாட்டுப் போர்கள் பல தோன்றியமையால் ரஷ்யாவும் போரை முடித்துக் கொள்ள ஆசைப்பட்டது. ரஷ்யாவுடன் நட்புக் கொண்டிருந்த பிரான்ஸ் ஆப்பிரிக்காவின் வடபகுதியில் ஜெர்மனியோடு போரில் ஈடுபட்டிருந்தது. ரஷ்யா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் ரூஸ்வெல்ட் என்பவரை இடையீட்டாளராக செயல்பட கேட்டுக் கொண்டனர். ரூஸ்வெல்ட்டும் ஒப்புக் கொண்டார். 1905ஆம் ஆண்டு நியு ஹாம்ப்ஷயரிலுள்ள போர்ட்ஸ் மவுத் (Portsmouth) என்னுமிடத்தில் ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்குமிடையே ஓர் உடன்படிக்கையை ஏற்பாடு செய்தார். அதுவே போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கையாகும். தூரக் கிழக்கு நாடுகளின் வரலாற்றில் மிக முக்கியமான இவ்வுடன்படிக்கைப்படி பல கருத்துக்கள் உருவாயின. இவ்வுடன்படிக்கையின்படி லியோடுங் தீபகற்பத்தில் தனக்கிருந்த உரிமைகளையெல்லாம் ஜப்பானுக்கு ரஷ்யா, விட்டுக் கொடுத்தது. மஞ்சூரியாவின் தென் பகுதியையும் அதில் அமைக்கப் பட்டிருந்த இருப்புப் பாதையையும், சாகாலின் தீவின் தென்பகுதியையும் ரஷ்யா ஜப்பானுக்குக் கொடுத்தது. கொரியாவில் ஜப்பானின் ஆதிக்கமும் உரிமைகளும் ரஷ்யா வால் ஏற்றுக்கொள்ளப் பட்டன. மஞ்சூரியாவிலிருந்து தங்கள் படைகளைத் திருப்பி யழைத்துக் கொள்ள இரு நாடுகளும் சம்மதித்தன. ஆனால் மஞ்சூரிய இருப்புப் பாதையை மட்டும் காவல் புரிவதற்கு ரஷ்யப் பாதுகாப்புப் படைகள் நிறுத்தப்பட்டன. இப்படைகளும் லியோடுங் தீபகற்பத்தில் நுழைய அனுமதிக்கப்படவில்லை. மஞ்சூரிய இருப்புப் பாதையை வணிகப்போக்குவரத்துக்கின்றி அரசியல் காரணங்களுக்காக இருநாடுகளும் பயன்படுத்துவதில்லையென முடிவு செய்யப்பட்டது. சீனா தன் நாட்டின் தொழில், வாணிக வளர்ச்சிக்கான எத்தகைய முயற்சியும் எடுக்க ரஷ்யாவும் ஜப்பானும் தடையாக இருக்காதென உறதியளிக்கப்பட்டது. ரஷ்யப் போர்க் கைதிகளுக்கான செலவுத் தொகையாக 40 இலட்சம் பொற்காசுகளை ஜப்பான் பெற்றது. இவ்வுடன்படிக்கையால் ஜப்பானின் ஆதிக்கம் கொரியாவில் வலுவடைந்தது. கொரியாவைத் தன் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்ற ஜப்பானின் நெடுநாளைய விருப்பம் இதனால் நிறைவேறியது. லியோடுங் தீபகற்பத்தைப் பெற்ற ஜப்பான் தென் மஞ்சூரியா முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயன்றது. இதனால் சீனாவின் ஆதிக்க வளர்ச்சியைத் தடுத்துப் பணிய வைக்கும் அளவுக்கு ஜப்பான் வல்லமை பெற்றது. ஜப்பானின் இந்த ஆதிக்க வளர்ச்சி ஆசிய வரலாற்றில் பல பெறும் மாறுதல்களுக்குக் காரணமாய் அமைந்தது. மாபெரும் ரஷ்யாவை ஜப்பான் வெற்றிகண்டது, தென்கிழக்காசிய நாடு களுக்கிடையே ஜப்பானுக்குச் சிறப்பிடத்தைப் பெற்றுத் தந்தது. ரஷ்யாவுக்கு இப்போரி

னால் ஏராளமான இழப்பீடுகள் ஏற்பட்டன. கீழ்த்திசை நாடுகளில் ரஷ்யாவின் புகழ் மங்கி ஜப்பானின் பெருமை வளரலாயிற்று. ரஷ்யாவில் புரட்சி ஏற்படுமளவுக்கு அரசியல் நிலை, சார் மன்னருக்கு எதிராகத் திரும்பியது.

ரஷ்ய - ஜப்பானியப் போருக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான உறவுநிலை படிப்படியாகக் குன்றத்துவங்கியது. நுழைவுச் சலுகைக் கொள்கையினை மதிக்காது ஜப்பான் தனது தனி ஆதிக்கத்தை மஞ்சூரியாவின் பொருளாதார வளர்ச்சியில் நிறுவியது. போருக்குப் பின்னர் இழப்பீட்டுத் தொகையினை ரஷ்யாவிடமிருந்து வாங்கித் தரவில்லையென ஜப்பான் அமெரிக்கா மீது குற்றம் சாட்டியது. அமெரிக்காவில் இருந்துவந்த இனவேறுபாட்டு உணர்ச்சியால் மேலும் இரு நாடுகளுக்கிடையேயான உறவில் கசப்புணர்வு தோன்றியது. 1908ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே மற்றோர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதற்கு ரூட்-டாக்கஹீரா (Root Takahira) உடன்பாடு என்று பெயர். இவ்வொப்பந்தத்தின் படி இரு நாடுகளும் தத்தம் உடைமைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், பசிபிக் பெருங்கடலில் அன்றுள்ள நிலையினை ஏற்றுக் கொள்ளவும் சீனாவில் நுழைவுச் சலுகையை பெறவும், சீனாவின் உரிமையினையும் ஒருமைப்பாட்டினையும் காப்ப தெனவும் முடிவு செய்தன. இதனால் மஞ்சூரியாவின் தென்பகுதியில் ஜப்பானின் பொருளா தாரக் கட்டுப்பாட்டினை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. அதற்குக் கைமாறாக ஜப்பான் பசிபிக் பெருங்கடலில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு உறுதுணையாகப் பாதுகாப் பளித்தது.

அமெரிக்க ஐக்கிய நாடு பெயரளவில் நுழைவுச் சலுகைக் கொள்கையினை வெளியிட்டதேயொழிய அதனைச் செயல்படுத்த முடியவில்லை. முதலில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு சீனாவின் சந்தைகளைப் பயன்படுத்த அமெரிக்கா திட்டமிட்டது. கடைசியாக ஜப்பானுடன் நெருங்கிய பொருளாதார உறவினை அமெரிக்கா வளர்த்தது. பின்னர் ஜப்பானின் ஆதிக்க மனப்பான்மையினைக் கண்டதும் சீனாவுக்குப் பாதுகாப்பளித்து, தொலை கிழக்குப் பகுதியில் சக்திச் சமநிலையைக் காக்க அமெரிக்கா ஆர்வங்கொண்டது.

பயிற்சி வினா

சீன நாட்டின் மீதான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் திறந்த வெளிக்கொள்கையை விளக்கி அதன் முக்கியத்துவத்தை ஆய்க.

பாடம் - 22

அமெரிக்கா உலக வல்லரசாதல் (நான்காம் பகுதி - கரிபியன் மற்றும் மெக்ஸிகோ பகுதிகளில் ஏற்படுத்திய கொள்கை முறைகள்)

அமெரிக்காவின் அருகாமையில் கரீபியன் கடல் அமைந்துள்ளது. இக் கரீபியன் கடற் பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடு தனது நலனைப் பேணுவதில் துணிந்து படை வலிமையைப் பயன்படுத்திற்று. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பலமுறை அமெரிக்கா முழு உரிமை பெற்ற குடியரசுகளின் உள்நாட்டு அரசியலில் காரண மின்றித் தலையிட்டது. இதனைக் கண்ணுற்ற தென் அமெரிக்க நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது பகைமை உணர்ச்சி கொண்டன.

1900ஆம் ஆண்டு மாக்கின்லி கொலை செய்யப்பட்ட பின்னர் தியோடர் ரூஸ்வெல்ட் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். இவர் வெளிநாட்டுக் கொள்கையில் படை வலிமையைக் காட்டிப் பிற நாடுகளை இணங்கவைக்கும் முறையைப் பின்பற்றினார். ஜனாதிபதி என்ற முறையில் சமுதாய நலத் திட்டங்களைச் செயல்படுத்தி விறுவிறுப்பான வெளிநாட்டுக் கொள்கையை இவர் கையாண்டார். அரசானது மக்கள் கூட்டத்திற்கும் மக்கள் வகுப்பினருக்கும் இடையிலான இடைவெளியை ஒன்றிணைக்க வேண்டுமென்றும், ஒரு சிலருக்கின்றி எல்லோருக்குமே அரசு பணிபுரிய வேண்டுமென்றும் விரும்பினார். இதனைச் சிறப்பாக அவர் பனாமாக் கால்வாய் வெட்டுவதற்கான உரிமையைப் பெற்ற முறையில் காணலாம்.

பனாமாக் கால்வாய்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பேரரசுக் கொள்கையைப் பரப்பியவர்கள் பனாமா பூசந்தியில் கால்வாய் ஒன்று கட்டாயம் தேவை என வலியுறுத்தினர். ஆனால் 1850ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட கிளேட்டன் பல்வர் உடன்படிக்கை (Clayton Bulwer Treaty) அதற்குத் தடையாக இருந்தது. காரணம் பனாமா சந்தியில் கால்வாய் வெட்டப்படுவதாக இருந்தால் பிரிட்டனுடன் இணைந்தே அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அதோடு அக்கால்வாய் நடு நிலைமையாக்கப்பட்டு போர்க் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எதிரிகளும் பயன்படுத்தத் திறந்துவிடப் பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. இவ்விதமான சூழ்நிலையில் பனாமாக் கால்வாய் ஒன்றினை வெட்டுவதற்கான உரிமையைக் கொலம்பியா குடியரசினின்று ஒரு பிரெஞ்சு நிறுவனம் 1881ஆம் ஆண்டு பெற்றது. அந்நிறுவனம் ஒரு சில மைல்களை வெட்டிவிட்டு, போதிய நிதியில்லாது போகவே இத்திட்டத்தினைக் கைவிட்டது. ஸ்பானிய - அமெரிக்கப் போருக்குப் பின்னர் கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடு இடர்க்காப்புறுதி பெற்று விளங்கியது. மேலும், பசிபிக் பெருங்கடலை இணைக்கும் வகையில் ஒரு கால்வாய் கட்டாயம் தேவை என்பதனையும் அமெரிக்கர் உணர்ந்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் தனக்குகந்த சில மாறறங்களைக் கண்ட பிரிட்டனும் தனது பழைய உரிமைகளை விட்டுக் கொடுக்க முன்வந்தது. அதன் விளைவாக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே 1901ஆம் ஆண்டில் ஹே பான்ஸ் ஃபோட் உடன்படிக்கை (Hay Pounce Fote Treaty) கையெழுத்திடப்பட்டது. அவ்வுடன்படிக்கையின்படி அமெரிக்காவுக்கு ஒரு கால்வாய் வெட்ட இசைவு தரப்பட்டது. அமைதிக் காலத்தில் அக்கால்வாய் வழியாக எல்லா நாட்டுக் கப்பல்களும் ஒரே மாதிரியான கட்டுப்பாடுகளோடு செல்ல அக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. கால்வாய் வெட்டப்படவிருந்த பனாமா, கொலம்பியாக் குடியரசின் ஒரு பகுதியாக விளங்கியது. ஆகவே கால்வாய் வெட்டுவதற்கான உரிமையினை பெற கொலம்பிய அரசுடன் அமெரிக்கா ஒரு உடன்பாட்டினை செய்து கொண்டது. அதற்கு ஹே ஹெரன் உடன்பாடு (Hay Herran Treaty) என்று பெயர்.

அவ்வுடன்படிக்கையின்படி அமெரிக்க ஐக்கிய நாடு கொலம்பியாவிற்குப் பத்து மில்லியன் டாலர் பணமாக அளிக்க ஒப்புக் கொண்டது. இவ்வுடன்பாடு கொலம்பியாவின் செனட் சபைக்கு ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்பட்டது. ஆனால் கொலம்பியாவின் செனட் சபை அவ்வுடன்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. ஆனால் ரூஸ்வெல்ட் இம்மாற்று முறைகளைப் பின்பற்ற மறுத்தார். பனாமா புரட்சி செய்து கொலம்பியாவினின்று பிரிந்தால் தங்களது நிறுவனத்திற்குப் பெரும் ஆதாயம் கிட்டும் என நினைத்த பிரெஞ்சு நிறுவனமும் பனாமா மக்களைப் புரட்சிப் பாதையில் செல்லத் தூண்டிற்று. அதன்படியே பனாமா மக்களும் கிளர்ச்சியுற்றெழுந்து தங்களை ஒரு சுதந்திரக் குடியரசாக அமைத்துக் கொண்டனர். பனாமாக் குடியரசை அமெரிக்க ஐக்கிய நாடும் உடனே அங்கீகாரம் செய்தது. கொலம்பியா மீண்டும் பனாமாவைத் தனது ஆட்சிக்குள் கொண்டுவர முடியாமலிருக்க அமெரிக்கப் போர்க் கப்பலொன்று புரட்சி துவங்கும் முன்னரே பனாமாப் பகுதிக்கு அனுப்பப்பட்டது. அதே வேளையில் அமெரிக்க ஐக்கிய நாடு பனாமாக் குடியரசுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அவ்வொப்பந்தப்படி, பனாமாக் கால்வாய் வெட்டுவதற்கான நிலப்பகுதியைக் குத்தகைக்கு 99 ஆண்டுகளுக்குப் பெற்றது. மேலும் அப்பகுதியில் ஒழுங்கினைப் பராமரிக்கவும் அமெரிக்கா உரிமை பெற்றது.

ரூஸ்வெல்ட் துணை முடிவு

பனாமாக் கால்வாய் வெட்டப்பட்ட பிறகு கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொறுப்பு அதிகரித்தமையால், அப்பகுதியினைப் பாதுகாக்க அமெரிக்கா நடவடிக்கைகளை மேற்கொண்டது. கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்காவின் பகைவர்கள் தளங்களை அமைக்காதவாறு பார்த்துக் கொள்ள அமெரிக்கா நாட்டம் கொண்டது. இதன் அடிப்படையில்தான் மன்றோக் கொள்கைக்கு இணைப்பாக ரூஸ்வெல்ட் துணை முடிவு 1904 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ரூஸ்வெல்ட்டின் கொள்கையினைப் பொதுவாக ஐரோப்பிய நாடுகள் குறை கூறின. ரூஸ்வெல்ட் பின்னர் தனது பதவிக்காலத்தில், துணைமுடிவுக் கொள்கையினடிப்படையில் இரண்டாவதாகக் கியூபாவில் தலையிட்டார். 1906 ஆம் ஆண்டு கியூபாவில் புரட்சியாளர்கள் கலகம் விளைவித்தமையால் அமெரிக்கா தனது படைகளை அனுப்பியது. 1909 ஆம் ஆண்டு

வரை அமெரிக்கப் படைகள் அங்கு இருந்தன. இவ்வாறு ரூஸ்வெல்டின் இரண்டாவது பதவிக் காலத்தின் போது தென் அமெரிக்க நாடுகளுடன் கொண்ட உறவு நல்ல முறையில் விளங்கியது.

மெக்ஸிகோப் புரட்சி

மெக்ஸிகோ பற்றிய சிக்கல் கரீபியன் கடற் பகுதி நாடுகளிலும், தென் அமெரிக்க நாடுகளிலும் இருந்துவந்த சிக்கல்களைப் போலல்லாது வேறு விதமாக இருந்தது வந்தது. நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் மெக்சிகோ ஒரு பெரிய நாடாகும். மதிப்புமிக்க இயற்கை வளங்களை மெக்கிகோ பெற்றிருந்தமையால் அது ஒரு கவர்ச்சிமிக்க நாடாக அமெரிக்க நாட்டு மக்களுக்கு காட்சியளித்தது. அந்நாட்டு மக்கள் மிகுந்த தேசப்பற்றுள்ள வர்களாக இருந்தனர்.

இங்குக் குடியரசுத் தலைவர் பதவியைத் தொடர்ந்து 1876ஆம் ஆண்டு முதல் 1911ஆம் ஆண்டு வரை போர்பீரியோ டயஸ் (Porfirio Daiz) என்பவர் வகித்து வந்தார். இவர் மெக்சிகோவில் வெளி நாட்டவர்கள் ஏராளமாக முதலீடு செய்வதைப் பெரிதும் ஊக்குவித்து வந்தார். நடைமுறையில் மெக்சிகோவில் பாதிக்கும் மேலான செல்வத்தை வெளி நாட்டு வாணிகர்கள் கட்டுப்படுத்தி வந்தனர். இங்குள்ள தொழில் நுட்பமான வேலைகளையெல்லாம் வெளிநாட்டவர்களே செய்தனர். ஒரு சில பேருக்கு மட்டும்தான் தொழில் நுட்பக் கல்வி அளிக்கப்பட்டது. பெரும்பாலோர் பயிற்சித் திறமையற்ற தொழிலாளர்களாகவே இருந்தனர். அடிமைகள் போன்றுதான் ஏழைக் குடியானவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆகவே மெக்சிகோவின் சமுதாயத்தில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. தலைவர் டயஸ் கூட பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். இவருக்குப் பின்னர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிரான்ஸிஸ்கோ மாடெரோ ஆவார். இவர் சிறப்பான சீர்திருத்தங்களை செய்யாவிட்டாலும், தொழிலாளர்களின் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல உரிமையளித்தார். வெளிநாட்டவர்கள் மெக்கிகோவில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவில்லை. தங்களது நலன் பாதிக்கப்பட்டமையால் அமெரிக்க வணிகர்கள் ஓர் எதிர்ப்புரட்சியை வரவேற்றனர். 1913ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தளபதி ஹீயூர்ட்டாவின் (Huerta) தலைமையில் திடீரென அரசியல் புரட்சியாளர்கள் கிளர்ந்தெழுந்து மாடேரோவைப் பதவியினின்று நீக்கினர். சில நாள் கழித்து மாடேரோ கொல்லப்பட்டார். இந்த இராணுவப் புரட்சிக்கு உடந்தையாக இருந்த அமெரிக்கத் தூதுவர் ஹீயூர்ட்டாவின் ஆட்சியை ஆதரிக்குமாறு வெளிநாடுகளை வேண்டினார். ஆனால் மாடெரோவின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய போது அது மெக்சிகோவின் உள்நாட்டு வேலை என அமெரிக்கத் தூதுவர் கூறிவிட்டு வாளாயிருந்தார்.

ஹீயூர்ட்டா நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனது ஆதிக்கத்தினை நிலை நாட்டினர். இவருக்கு எதிராகவும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. நிலச்சீர்திருத்தம் கொண்டு வரவும், தொழிலாளர் நலனைப் பாதுகாக்கவும் கிளர்ச்சியாளர்கள் திட்டமிட்டனர். அக்கிளர்ச்சியாளர்களின் தலைவர்களாக விளங்கியவர்கள் வினஸ்டியானோ கரான்ஸா (Venustiano Carranza), பாஞ்சோ வில்லா (Pancho Villa) ஆகியோர் ஆவர். இவ்வகையில் உடரோ விலசன் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற போது மெக்சிகோ பெரும் உள்நாட்டுப் போர் ஒன்றில் மூழ்கிக் கிடந்தது. மெக்சிகோவின் மக்கள் நன்முறையில்

வாழ வழி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கிருந்தது. உள்நாட்டுக் குழப்பங்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. வில்சன் மெக்சிகோவின் உள்நாட்டு நிகழ்ச்சிகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே காத்திருந்தார்.

1914ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெர்மானியக் கப்பலொன்று ஹீயூர்ட்டாவுக் காகப் படைக்கலன்களை ஏற்றிக்கொண்டு மெக்சிகோவின் துறைமுகப்பட்டினமான வீரா குருஸை நோக்கி வருவதாக வில்சனுக்குச் செய்தி கிடைத்தது. உள்நாட்டுச் சிக்கலில் மெக்ஸிகோவின் ஜெர்மானியப் படைக்கலன்கள் வீராகுருஸில் இறக்கப்படுவதற்கு முன்பு, அத்துறைமுகப்பட்டினத்தைக் கைப்பற்றச் சொல்லி அமெரிக்கக் கப்பற்படையினருக்கு வில்சன் உத்தரவிட்டார். அவ்வண்ணமே அமெரிக்கப் படையினரும் வீரா குருஸ் பட்டினத்தைக் கைப்பற்றினர். இச்செயலை ஹீயூர்ட்டா கடுமையாகக் கண்டித்தார். இருந்த போதிலும் வில்சன் தென் அமெரிக்க நாடுகளுடைய நட்பை இழக்காமலிருக்க விரும்பினார். மெக்சிகோச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டிப் பேசினார். அம்மாநாட்டுக்கு முதன்மையான தென் அமெரிக்க நாடுகள் பிரதிநிதிகளை அனுப்பி இருந்தன. 1914ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஹீயூர்ட்டா தலைமறைவாக அஞ்சி ஓடிவிட்டார். ஆனால் அரசியல் வாதிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டு ஒருவரை யொருவர் தாக்கலாயினர். இந்த உள்நாட்டுப்போர் இரண்டாண்டுகளுக்கு மேலாக நீடித்தது. எனவே மெக்சிகோவில் மீண்டும் அமெரிக்க ஐக்கியநாடு தலையிட நேரிட்டது. மெக்சிகோவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையே போர் துவங்கும் நிலை நெருங்கியது. ஆனால் மெக்கிகோவின் நற்பயனால் அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பிய போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்தமையால், போர் தொடுக்கும் எண்ணத்தை அமெரிக்கா கைவிட்டது. இதற்கிடையே மெக்சிகோவில் ஓரளவு அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டது. தீவிரமான விவசாயச் சீர்திருத்தங்களையும் தொழிலாளர் சீர்திருத்தங்களையும் கொண்ட ஓர் அரசியலமைப்பு வரையப்பட்டு மேற்கொள்ளப் பட்டது.

பயிற்சி வினா

கரீபியன் மெக்சிகோ நாடுகள் பற்றிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கையை விளக்குக.

பாடம் - 23 தியோடர் ரூஸ்வெல்ட்டும் நேர்மையான ஒப்பந்தமும்

1901ஆம் ஆண்டு ஜனாதிபதி மேக்கின்லி (Makinley) கொலைசெய்யப்பட்டதும் தியோடர் ரூஸ்வெல்ட் ஜனாதிபதி பதவியேற்றார். அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒரு சிலரே புகழடைந்தவர்களாகவும், ஜனாதிபதி அதிகாரத்தை முழுமையாக, சரியாகப் பயன்படுத்திக் கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தியோடர் ரூஸ்வெல்ட்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி, (1900-1916) "மேம்பாடுற்ற காலம் (Progressive Era) எனக் கூறப்படுகிறது. சமுதாய முன்னேற்றத்திற்காகவும், அரசியல் சீர்திருத்தத்திற் காகவும், வாணிகத்தைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்க நெறியை உயர்த்தவும், மக்கள் ஆர்வங் கொண்டனர். அத்தகைய நிலையில் தான் தியோடர் ரூஸ்வெல்ட், அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்று, தன்னுடைய "நேர்மையான ஒப்பந்தத்தின் மூலம் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றைப் பொதுமக்களும், இரு கட்சியினரும் ஆதரவு கொடுத்து வரவேற்றனர்.

1858-ஆம் ஆண்டு அக்டோபர் 27ஆம் நாள் தியோடர் ரூஸ்வெல்ட் பிறந்தார். ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்ற பின், அரசியலில் மிகுந்த ஆசை கொண்டவராக நுழைந்தார். நியூயார்க் மாநகரின் காவல்துறை ஆணையாளராகப் பணியாற்றிப் பெரும்புகழ் பெற்றார். அடுத்து, கடற்படைத்துறையில் துணைச் செயலாள ராகப் பணியாற்றியபோது ஸ்பானியப் போர் தொடங்கியதும், கியூபாவில் பொறுப் பேற்றார். பின்னர் நியூயார்க் மாநிலத்தின் ஆளுநர் பதவியை வகித்தார். 1900-இல், நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார். அத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்ட மெக்கன்லி பதவியேற்ற சிறிது காலத்திற்குள்ளாகவே சுட்டுக்கொல்லப்பட்ட பின், தியோடர் ரூஸ்வெல்ட் குடியரசு தலைவர் பதவியேற்றார். பின்பு 1904ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் பணியாற்றிய எட்டு ஆண்டுகளும், அவரது தனித்தன்மையால் சிறப்பாக அமைந்தது. அவர், அரசியலில் ஒரு நடைமுறை வாதியாக திகழ்ந்தவர். மக்களின் கடமை உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் பெற்றவராக இருந்தார். ஜெபர்சனுக்கு பிறகு புகழ்பெற்ற ஜனாதிபதி வரிசையில் இவரைச் சேர்க்கும் வண்ணம் பல பெரிய மாற்றங்களை நாட்டில் கொணர்ந்தார். அவருக்கு அடிப்படை மாறுதலில் நம்பிக்கையில்லாவிட்டாலும் பழமை வாதியாக இருந்த பொழுதும், குறைகளை அகற்றி, செம்மைப்படுத்தும் திறன் கொண்டவராக இருந்தார்.

ரூஸ்வெல்ட்டின் திட்டங்கள்

குடியரசுக் கட்சியினரும், மக்களாட்சிக் கட்சியினரும், பாப்புலிஸ்டு கட்சியினரும் (Populists) ஒரு முகமாக சீர்திருத்தங்களை வேண்டினர். பெருஞ்செல்வந்தர்களின் அதிக்கத்திலிருந்து விடுபட, சிறிய பங்குதாரர்கள் விரும்பினர். தொழிலாளர் சங்கங்கள்

செயல்பட முடியாததன் காரணமாக, தொழிலாளர்களின் குறைகள் நீக்கப்படாமலிருந்தன. பெரும் வாணிக நிறுவனங்கள், விலைவாசி உயர்வை ஏற்றிக் கொண்டே போனதால் பொது மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

ஆகவே, முதலாளி, தொழிலாளி, பொதுமக்கள், மூவருக்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் ஒரு நேர்மையான ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தார். இக்கொள்கையினடிப்படையில் தான் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இரயில் பாதைகளைக் கட்டுப்படுத்தவும், வணிகக் கூட்டு நிறுவனங்களை முறைப்படுத்தவும், இயற்கை வளத்தினைப் பாதுகாக்கவும், மற்றும் பல சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கவும், ரூஸ்வெல்ட், ஓர் செயலாற்றும் தலைவராக தன்னை முற்படுத்திக் கொண்டு செயல்பட்டார்.

இரயில் பாதை நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்

ரூஸ்வெல்ட், முதலாவதாக தனியுரிமையினால் விளைந்த கேடுகளை அகற்ற முனைந்தார். அவர் தாக்குதலுக்கு இரையான முதல் நிறுவனம் "நார்தான் செக்கியூரிட்டீஸ் நிறுவனம் (Northern Securities Company) ஆகும். அந்நிறுவனம் சார்பு நிலையங்களின் பங்குகளை வைத்திருக்கும் நிறுவனமாகும் (Holding Company). அதன் கட்டுப்பாட்டில் பின்வரும் மூன்று இரயில் பாதைகள் இருந்தன. நார்தன் பசிபிக் (The Northern Pacific), கிரேட் நார்தர்ன் (The Great Northern), சிக்காகோ-பர்லிங்டன்-குவின்சி (Chicago Burlington-Quincy). ஷெர்மன் கூட்டு நிறுவன எதிர்ப்புச்சட்டத்திற்கு முரணாக இந்நிறுவனம் இயங்கியதற்காக அதன் மேல் அரசு வழக்குத் தொடுத்தது. அதன் விளைவு, அந்நிறுவனம் அதனுடைய தனியுரிமையை இழந்தது.

இரயில் பாதை நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த 1903-ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதற்கு எல்கின்ஸ் சட்டம் என்று பெயர் (Elkins Act), இரயில் பாதை நிறுவனங்கள், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும், கட்டணக் குறைவு தருவதை வாணிபச்சட்டம் தடை செய்திருந்தது. ஆனால் அதை மீறி, சில நிறுவனங்கள் கட்டணக்குறைப்புச் செய்து வந்தன. இதனை எல்கின்ஸ் சட்டம் கடுமையாகக் கண்டித்தது. அச்சட்டத்தில் நிருணயிக்கப்பட்ட கட்டண விகிதமே செல்லுபடியாகும் என்றும் கட்டணத்தைக் குறைத்தால் இரயில் பாதை நிறுவனத்துக்கும் சரக்கு அனுப்புவோருக்கும் தண்டனை வழங்கப்படும் என்றும், அதற்கு உடந்தையாக உள்ளவர்களும், இரயில் பாதை நிறுவன அலுவலர்களும் தண்டிக்கப்படுவர் என்றும் கூறப்பட்டது.

இரயில்பாதைக் கட்டணங்களைத் திரட்டுவதில் நிலவிவந்த வேறுபாட்டினை அகற்றுவதற்காக, 1906-ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது அதற்கு ஹீப்பர்ன் சட்டம் (The Hepburn Act) என்று பெயர். இச்சட்டம் மாநில அரசுகளுக்கிடையேயான வாணிகக் குழுவின் உறுப்பினர் (Inter State Commerce Commission) தொகையை ஐந்திலிருந்து ஏழாக உயர்த்திற்று, தனிநோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களையும், எண்ணெய்க் குழாய்களையும், படகுப் போக்குவரத்தினையும், இரயில்பாதை சென்று

முடியும் இடங்களையும் கட்டுப்படுத்த வாணிகக் குழுவினக்கு உரிமை தரப்பட்டது. இரயில்பாதை நிறுவனங்களின் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு வேண்டிய சாட்சிகளை, அந்நிறுவனங்களே சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அச்சட்டம் கூறியது. இரயில் பாதை நிறுவனங்கள் தாங்கள் விரும்பிய சரக்குகளை மட்டும் ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டது. எல்லா இரயில் பாதை நிறுவனங்களும் ஒரே முறையிலான கணக்கு வைப்பு முறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் கூறப்பட்டது. 1887-ஆம் ஆண்டிலேயே மாநிலங்களுக்கிடையேயான வாணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட போதிலும் ஹீப்பர்ன் சட்டம் இயற்றிய பிறகுதான் வலிமையோடு செயலாற்ற முடிந்தது.

வாணிகக் கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல்

வாணிகக் கூட்டு நிறுவனங்களை அழிப்பதைவிட அவற்றிலுள்ள களைகளைப் பிடுங்கவே ரூஸ்வெல்ட் விரும்பினார். ஷெர்மன் கூட்டு நிறுவன எதிர்ப்புச் சட்டத்தி னின்று தப்பும் வகையில் இயங்கி வந்த நார்தர்ன் செக்கியூரிட்டீஸ் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. அது பங்குகளை வைத்திருக்கும் ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் நாட்டின் வாணிபத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுடையதாக உள்ளதாகையால் கலைக்கப்பட வேண்டுமெனத் தலைமை நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. மாட்டிறைச்சி வாணிகத்தைக் கட்டுப்படுத்திய கூட்டு நிறுவனம் ஒன்றும் 1905-ஆம் ஆண்டு உடைத்தெறியப்பட்டது. மிகப்பெரிய வர்த்தக நிறுவனமாயினும் சட்டத்திற்குப் புறம்பாகப் போவது அனுமதிக்கப்படாது என ரூஸ்வெல்ட் வலியுறுத்தினார். அவரது ஏழரை ஆண்டுப் பதவிக்காலத்தில் இருபத்தைந்து வாணிகக் கூட்டு நிறுவனங்களுக்கு எதிராகத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. கூட்டு நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

கூட்டாட்சி நீதி மன்றங்களில் உள்ள வழக்குகள் பட்டியலில் ஷெர்மன் சட்டத்தின் மேலும், மாநில அரசுகளுக்கிடையேயான வாணிகச் சட்டத்தின் மேலும் எழுந்த வழக்குகளை உடனடியாக விசாரிக்க, முதலிடம் தரச்சொல்லி விரைவுச் சட்டம் என்று (Expedition Act) ஒன்று இயற்றப்பட்டது. தொழில் நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள வாணிகம் தொழில் துறையினுள் கூட்டு நிறுவனப் புள்ளி விவரச் சேகரப்பணிமனை ஒன்று அமைக்கப்பட்டது. வாணிக நிறுவனங்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்கான செலவுக்காக, ஐந்து இலட்சம் டாலர் நிதியொன்று ஏற்படுத்தப்பட்டது.

மேற்கூறிய சட்டங்களின் காரணமாக, ரூஸ்வெல்ட் சமதர்மக்கொள்கையாளர் என சிலரால் கருதப்பட்டார். சட்டங்களை முறையாக மதிக்க வேண்டுமென்பதற்காக தனியுரிமை கொண்டாடிய நிறுவனங்களைத் தடைசெய்தார். அவருக்கு வாணிகக் கூட்டு நிறுவனங்களுக்கெதிராக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆதலால்தான், பொதுவாக தியோடர் ரூஸ்வெல்ட்டை அறிந்தவர்கள், நீதிக்கு மதிப்புக் கொடுத்து, வணிகர்களுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் ஓர் நேர்மையான ஒப்பந்தத்தை மேற்கொண்டவர் எனக் கூறுகின்றனர்.

உணவு, மருந்து, இறைச்சி மேற்பார்வையிடுதல் (Inspection of Food, Drugs and meats)

பொதுமக்களின் வாழ்க்கை நலனைப் பேணுவதிலும் ரூஸ்வெல்ட் அக்கறை எடுத்துக் கொண்டார். பல ஆண்டுகளாக இறைச்சியைப் பக்குவப்படுத்தித் தகரக் குவளைகளில் அடைப்பவர்களும், பிற உணவுப்பொருட்களையும், மருந்துகளையும் தயாரிப்பவர்களும், நாணயமற்ற முறையில் கலப்படம் செய்து பொருளீட்டி வந்தனர். இதனால் மக்களிடையே பல நோய்கள் பரவின. இவற்றைக் கண்டிக்கும் வகையில் 1906-ஆம் ஆண்டு இறைச்சி மேற்பார்வைச் சட்டம் (Meat Inspection Act) ஒன்று இயற்றப்பட்டது. அச்சட்டப்படி விற்பனைக்கு அனுப்பப்பட்ட இறைச்சி, வியாதியற்ற மிருகங்களினின்று வெட்டியெடுக்கப்படுகிறதா என்றும், அவை சுகாதார முறையில் அடைக்கப்படுகின்றனவா என்றும் மேற்பார்வையிட, கூட்டாட்சி அரசு அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. தூய்மையான உணவு மற்றும் மருந்துச்சட்டம் (Pure Food and Drugs Act) ஒன்று இயற்றப்பட்டது. அச்சட்டப்படி உணவுப் பொருட்களிலும், மருந்துகளிலும் கலப்படம் செய்வதும், தர அடையாளத்தை மாற்றிக் குறிப்பிடுவதும் தடை செய்யப்பட்டது. ஒப்பனைப் பொருள்களில் ஊறுவிளைவிக்கக்கூடிய கலவைப் பொருட்களைப் பயன்படுத்துவதும் சட்டத்தால் தடை செய்யப்பட்டது.

இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் (Conservation of Natural Resources)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மேற்கு எல்லை பசுபிக் பெருங் கடற்கரையோரத்தோடு முற்றுப் பெறவே தங்களுடைய நாட்டின் இயற்கை வளங்களுக்கும் ஓர் அளவு இருப்பதை அமெரிக்க மக்கள் உணரலாயினர். கட்டுப்பாடின்றி காடுகளை அழிப்பதையும், சுரங்கங்களை வெட்டுவதையும், எண்ணெய்க் கிணறுகளை அகழ்வதையும் கண்ட மக்கள் கவலை கொண்டனர். வயல்களும், மீண்டும் மீண்டும் விவசாயத்திற்காக பயன்படுத்தப்பட்டு வளமிழந்தன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இளமைக் காலத்திலேயே, இயற்கை வளங்களைப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பலர் உணர்த்தினர். 1872-இல் கூட்டாட்சி அரசால் "எல்லோஸ்டோன் தேசியப் பூங்கா (Yellowstone National Park) ஒன்று அமைக்கப்பட்டது. அரசுக்குரிய நிலப்பகுதியிலுள்ள காடுகளை தேசியக் காடுகள் (National forest) எனத் தனியே ஒதுக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் ஒரு சட்டத்தினைக் காங்கிரஸ் இயற்றிற்று. 1879-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டு மண்ணியல் ஆய்வுத்துறை (U.S. Geological Survey) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. தாதுப்பொருட்களைக் கண்டுபிடிக்கவும் அவைபற்றி ஆராய்ச்சி செய்யவும் அத்துறை இயங்கிற்று. உள்நாட்டுத் துறையில் ஒருபிரிவாக நிலச்சீர்திருத்த அலுவலகம் (Bureau of Reclamation) ஒன்று அமைக்கப்பட்டது. வறண்ட நிலப்பகுதிகளையும், குறைந்த மழையுடைய நிலப்பகுதிகளையும் சிர்திருத்தி அமைக்கும் பொறுப்பு அந்த அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அமெரிக்க ஐக்கிய நாட்டில் காடுகளில் முக்கால் பங்கு அழிக்கப்பட்டிருந்தது. கனிவளத்தில் பெரும்பகுதி பயன் படுத்தப்பட்டிருந்தது. நீர்விசை தனிப்பட்டவர் ஊதியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. மழையிலும்,

தூசிப்புயலாலும் மண்வளம் வீணாகிவந்தது. மேற்குப்பகுதியில் வாழ்ந்தபோது ரூஸ்வெல்ட் இவைகளையெல்லாம் கவனித்து வந்தார். பதவிக்கு வந்ததும், அவர் அளித்த உரையில் "அமெரிக்காவின் உள்நாட்டுச் சிக்கல்களில் மிகமுக்கியமானவை காட்டையும், தண்ணீரையும் பற்றியவை எனலாம்" என்றுரைத்தார். அவருக்கு கிப்பார்டு பிஞ்சாட் (Gifford Pinchot) என்வரும், ஜேம்ஸ் கார்ப்பீல்டு (James G. Garfiled) என்பவரும் உறுதுணையாக இருந்தனர்.

1902-ஆம் ஆண்டு புதிய நிலங்கள் சீர்திருத்தச்சட்டம் (The New Lands Reclamation Act) இயற்றப்பட்டது. இச்சட்டப்படி மேற்கிலும், வடமேற்கிலும், அரசின் பொது நிலங்களை விற்றமையால் பெற்றபணத்தின் பெரும் பகுதியை நீர்ப்பாசனத் திட்டங்களைக் கட்டுவதற்காகப் பயன்படுத்த இசைவு தரப்பட்டது. 1907-ஆம் ஆண்டளவில் பதினான்கு மாநிலங்களில் இருபத்தெட்டு திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. பின்வரும் சந்ததியினருக்குப் பயன்படுத்துவதற்காகக் காடுகளையும் பாதுகாக்க ரூஸ்வெல்ட் திட்டங்கள் வகுத்தார். விவசாயத் துறையில் ஒரு பகுதியாக விளங்கி காட்டிலாகாவின் தலைவராக கிப்பர்டு பிஞ்சாட் பணிபுரிந்தார். அவர் விற்பனைக்காக ஒதுக்கப்பட்டிருந்த பொதுநிலங்களிலிருந்து நூற்றைம்பது மில்லியன் நிலத்தை விற்கக்கூடாது என தடை விதித்தார். மரம் வெட்டும் தொழிலிலும், மேய்ப்புத் தொழிலிலும் ஈடுபாடுடையவர்கள் இதனைக் கண்டித்தனர்.

நாட்டின் ஆறுகளைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தவும், நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தவும், நீரின்விசையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யவும் ரூஸ்வெல்ட் திட்டங்களை வகுத்தார் அதற்காக அவர் உள்நாட்டு நீர்நிலைக்குழு (Internel Waterways Commission) ஒன்றினை அமைத்தார். குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்களையெல்லாம் அழைத்து, இயற்கைவளப் பாதுகாப்புப் பற்றிய அடிப்படைச் சிக்கல்களை ஆராய வேண்டுமென அக்குழு பரிந்துரைத்தது. அதை ஏற்றுக் கொண்ட ரூஸ்வெல்ட் 1908-இல் ஆளுநர்களுடன் கூடிப்பேசினார். அதன் பயனாகத் தேசிய இயற்கைவளப் பாதுகாப்புக் குழு ஒன்று (National Conservation Commission) அமைக்கப்பட்டது. அதன் தலைவராகக் கிப்பார்டு பிஞ்சாட் நியமிக்கப்பட்டார். 1910 ஆம் ஆண்டளவில், 41 மாநிலங்களில் இயற்கைவளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழிலாளர் நலன்

தியோடர் ரூஸ்வெல்ட் தொழிலாளர்களது நலனிலும் அதிக அக்கறை காட்டினார். 1902-ஆம் ஆண்டு நிலக்கரிச்சுரங்கத் தொழிலாளர்கள் (United Mine workers) வேலை நேரத்தைக் குறைக்கச் சொல்லியும், கூடுதல் கூலி கேட்டும் தங்களுடைய சங்கத்திற்கு ஒப்புதல் கேட்டும் கிளர்ச்சி செய்து வந்தனர். சுரங்க உரிமையாளர்கள், தொழிலாளர் களுடன் கூடிப்பேசி ஒப்பந்தம் செய்து கொள்ள மறுத்தனர்; நடுவர் தீர்ப்புக்கும் அச் சிக்கலைவிட மறுத்தனர். தாம் இடையீட்டாளராக இருந்து அச்சிக்கலைத் தீர்த்துவைக்க ரூஸ்வெல்ட் முன்வந்தார். ஆனால் சுரங்க உரிமையாளர்கள் அவரது, முயற்சியை ஏற்க மறுத்தனர். நாட்டில் நிலக்கரி பஞ்சம் ஏற்பட்டது. நாடு பனிக்காலம் முழுவதும் கரியின்றி

தவிக்கும் என்ற நிலை தோன்றிற்று. அச்சமயம் ரூஸ்வெல்ட் தலையிட்டு, சுரங்க உரிமையாளர் வழிக்கு வராவிட்டால் சுரங்கங்களை அரசே ஏற்று படை வீரர்களின் மூலம் வேலை நடத்தும் என்று அச்சுறுத்தினார். உடனே உரிமையாளர்கள் இணங்கினர் நடுவர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் தொழிலாளர்கள் பிரதிநிதி ஒருவரும் இருந்தார். அக்குழுவின் முடிவினை உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டனர். அதன்படி சுரங்கத்தொழிலாளர்களது கூலி 10 சதவீதம் கூடிற்று. வேலை நேரம் நாளொன்றுக்கு ஒன்பது மணிநேரம் என முடிவு செய்யப்பட்டது. ஆனால் தொழிலாளர் சங்கம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு இக்குழு அளித்த முடிவின் அடிப்படையிலேயே எல்லா சிக்கல்களும் தீர்த்து வைக்கப்பட்டன. அமெரிக்க வரலாற்றிலேயே, முதன் முறையாக முதலாளியும் தொழிலாளியும் குடியரசுத்தலைவரின் தலையீட்டால், சிக்கலைத்தீர்த்துக் கொண்ட முக்கியமான நிகழ்ச்சியாக, இந்த தொழிலாளர் இயக்கம் கருதப்படுகிறது.

மதிப்பீடு

தியோடர் ரூஸ்வெல்ட்டின் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவர் பதவிக்கே ஒரு புதுக் கோணம் கொடுத்த பெருமை, அவரைச் சாரும். அவர் வகுத்துவிட்ட சீர்திருத்தப் பாதையில்தான் அடுத்து வந்த டாப்டும், வில்சனும், பிராங்கிளின் ரூஸ் வெல்ட்டும் சென்றனர். தியோடர் ரூஸ்வெல்ட், முதன் முதலாவதாக குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை மக்கள் நலனுக்காக, தயக்கமின்றி பயன் படுத்தினார். வாஷிங்டனோ, லிங்கனோ செயல்படுத்தாத சில விஷயங்கள், தியோடர் ரூஸ்வெல்ட் மக்களிடமே நேரடித்தொடர்பு கொண்டு செயல்படுத்த முடிந்தது. "நான் அதிகாரத்தைப் பறிக்கவில்லை; ஆனால் மக்கள் நலனுக்காக, அவசியம் ஏற்படும்பொழுது அரசியலமைப்பிற்கும், சட்டத்திற்கும் பாதகம் விளைவிக்காத வகையில், தலைவர் அதிகாரத்தை விரிவுபடுத்தி செயலாக்குகிறேன் என தன் கருத்தினை விளக்குகிறார். தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சட்ட சபையிலும் செயற்குழுவின் அதிகாரத்தைச் செலுத்தினார். பின்னால் இருபதாம் நூற்றாண்டில், இம்முறை வெகுவாகப் பின்பற்றப் பட்டது. சில ஆய்வாளர்கள், அவர் சாதனைகள் அப்படி குறிப்பிடும்படியாக இல்லை யென்றும், பல சமயங்களில் அவர் சமரசம் செய்து கொள்ள முயற்சி செய்து பின்வாங்கியவர் என்றும் கூறுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் உன்னத நிலையைச் சீர்தூக்கிப் பார்க்கும் தீர்க்க தரிசனம் கொண்டவர் என்பதையும் செயல்திறம் மிக்க அரசியல்வாதி என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

பயிற்சி வினா

தியோடர் ரூஸ்வெல்ட் காலம் "மேம்பாடுற்ற காலம் (Progressivism) என்பதனை ஒப்புக் கொள்ளலாமா? ஆராய்க.

பாடம் - 24 உட்ரோவில்சனின் உள்நாட்டு ஆட்சி

உட்ரோ வில்சன் வர்ஜீனியா மாநிலத்தில் 1856 டிசம்பர், 28-ஆம் நாள் பிறந்தார். பல ஆண்டுகள் தென்பகுதியிலேயே வாழ்ந்தார். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்ற பின், வர்ஜீனியா பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். அவர் வழக்குரைஞராகச் சிலகாலம் ஜார்ஜியாவில் வாழ்ந்தார். அவ்வேலை அவருக்குப் பிடிக்காததால் திரும்பவும், ஜான் ஹாட்கின்ஸ் பல்கலைக்கழகம் சென்று 'டாக்டர் பட்டம் பெற்று பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், எட்டு ஆண்டுகள் அப்பல்கலைக் கழகத்தின் தலைவரானார். திடீரென அரசியலில் நுழைந்து மக்களாட்சிக் கட்சியின் சார்பில், தேர்தலில் போட்டியிட்டு 1911-ஆம் ஆண்டு நியூஜெர்சியின் ஆளுநரானார். 1912-ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பழமைக்கு அதிகமதிப்பு கொடுப்பவராக இருந்தபொழுதிலும், அவர் உள்நாட்டு அரசியலில் சிறந்த சீர்திருத்தவாதியாக இருந்து, மக்களின் மதிப்பைப் பெற்றார். மக்கள் நல அரசு (Welfare State) காண விரும்பிய வில்சன், புதிய புதிய வழிமுறைகளை வகுப்பதில் ஆர்வம் காட்டினார். அவர் பதவிக்கு வந்ததும் ஆற்றிய உரையில் கூறியது "இது வெற்றியடைந்த நாள் அல்ல; இது தியாகம் செய்து வேவை செய்ய வேண்டிய நாள். கட்சிகளுக்காக ஏற்பட்ட தேர்தல் அல்ல, மக்கள் சமுதாயத்திற்காக ஏற்பட்ட தேர்தல். நம்மை எதிர்பார்க்கும் மக்களை திருப்திபடுத்த முழுமனதுடன் முயற்சிப்பேன்". உயர்ந்த கருத்துக்களில் நம்பிக்கை கொண்ட வில்சன் செயல்திறனிலும் குறைந்தவர் அல்ல. தியோடர் ரூஸ்வெல்ட்டை போல, உள்நாட்டுக் கொள்கையில் நடுநிலைமைத் தன்மையையே வில்சன் பின்பற்றினார். தன்னலமிக்க செல்வந்தர்களையும், தீவிரக்கருத்துக்களைக் கொண்ட புரட்சியாளர்களையும் தவிர்த்து, நடுத்தர மக்களுக் காகவும், சிறிய உற்பத்தியாளர்களுக்காகவும் பல சீர்திருத்தங்கள் கொண்டு வந்தார். அவர் 'புதிய உரிமை (New Freedom) என்ற கண்ணோட்டத்தோடு, வாணிகக் கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதிலும், காப்பு வரிகளை விதிப்பதிலும், பாங்குகளைச் சீர்திருத்தியமைப்பதிலும், விவசாயத்தை ஊக்குவிப்பதிலும், தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதிலும் ஆர்வம் காட்டினார். வெகுநாட்களுக்குப் பிறகு மக்களாட்சிக் கட்சியினர், குடியரசுத் தலைவர் பதவி பெற்றிருப்பதால், வில்சனிடமிருந்து தங்களுக்கு ஆதாயப் பங்கு முறைப்படி, பதவிகள் கிடைக்குமென எதிர்பார்த்தனர். அவர் மக்களின் ஆதரவை மட்டுமே வேண்டினார். மக்கள் அவரைப் போற்றினர்.

வாணிபக் கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தல் (Anti trust legislation)

உட்ரோ வில்சன் பதவியேற்கும் முன், பிரதிநிதிகள் மன்றம் வாணிபக் கூட்டு நிறுவனங்கள் இயங்கும் முறையை கண்டறிவதற்காக ஒரு குழுவை அமைத்திருந்தது. நாட்டின் பொருளாதார நிலையை ஒரு சில நிதியாளர்கள் கட்டுப்படுத்தி வருகின்றனர் என அக் குழு அறிவித்தது. 1914-ஆம் ஆண்டு கிளேட்டன் கூட்டு நிறுவன எதிர்ப்புச் சட்டம் (Clayton Anti-Trust Act) இயற்றப்பட்டது. இச்சட்டம் பெரிய தனியுரிமை பெற்ற வாணிப நிறுவனங்களைத் தடைசெய்து, வாணிப நிறுவனங்களுக்கிடையே போட்டியை

வளர்த்தது. தனியுரிமை பெற்ற வாணிப நிறுவனங்கள் (Corporation) மேன்மேலும் பிற நிறுவனங்களின் பங்குகளைப் பெறக்கூடாதென்று இச்சட்டம் விதி வகுத்தது. ஒரு வாணிபக் கூட்டு நிறுவனத்தின் செயலாட்சிக் குழு உறுப்பினர். மற்றொரு நிறுவனத்தின் செயலாட்சிக்குழு உறுப்பினராக இருக்கக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது. கிளேட்டன் கூட்டுநிறுவன எதிர்ப்புச் சட்டத்தில் தொழிலாளர் சங்கங்களுக்கு ஆதரவு தரும் வகையில் ஓர் உட்பிரிவு சேர்க்கப்பட்டிருந்தது. தொழிலாளர்களது உழைப்பு ஒரு விளை பொருளோ, வாணிபப் பொருளோ அல்ல. எனவே தொழிற் சங்கங்களுக்குக் கூட்டு நிறுவன எதிர்ப்புச் சட்டத்தினின்று விலக்கு அளிக்கப்பட்டது. இச் சட்டத்தினைத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதினர்.

மாநிலங்களுக்கிடையேயான வாணிபத்தில் இருந்து வந்த நேர்மையற்ற பழக்கங்களை ஆய்வதற்காகக் கூட்டாட்சி வாணிகக் குழு (federal trade commission) ஒன்று 1914-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தவறான விளம்பரங்களைச் செய்து வந்த நிறுவனங்களும், உணவுப்பொருளில் கலப்படம் செய்து வந்த நிறுவனங்களும், சட்டப்படி கடுமையாகத் தண்டிக்கப்பட்டன. தவறு செய்து வந்த நிறுவனங்களைச் சோதனையிடவும், அவை மீது வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்தவும் உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் இக்குழு உரிமை பெற்றிருந்தது.

காப்பு வரிச் சீர்திருத்தம் (The Tariff Debate)

1913-ஆம் ஆண்டு, அண்டர்வுட் சைமன்ஸ் காப்புவரி (Underwood Simmon's Act) இயற்றப்பட்டது. இதன்படி காப்புவரி 37 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாகக் குறைக்கப் பட்டது. கம்பளம், இரும்புத்தாது, சர்க்கரை போன்ற இன்றியமையாத பொருட்கள் மீதான காப்புவரி முற்றிலும் நீக்கப்பட்டது. பெரும்பாலான பொருட்கள் மீது இருந்த காப்புவரி குறைக்கப்பட்டது. சில பொருட்கள் மீது கூட்டப்பட்டது. சில பொருட்கள் மீது அப்படியே விடப்பட்டது.

காப்புவரிகளைக் குறைத்தமையால் அரசின் வருவாய் குறைந்தது. எனவே அதைச் சரிக்கட்டும் பொருட்டு வருமானவரி விதிக்கப்பட்டது. காப்பு வரிக் குறைப்பால் மக்கள் பயன் பெறுவதும் வெளிநாட்டு வாணிகம் வளர்வதும் தடைப்பட்டது. ஆனால் இந்த காப்புவரிக் குறையினை ஈடுகட்ட கொண்டு வந்த வருமான வரி பின்னால் போர்க்காலத்தில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது.

பாங்குகளைச் சீர்திருத்தியமைத்தல்

நாட்டு வாணிகத்தின் தேவைகளுக்கேற்பதான் பணப்புழக்கத்தினைப் பாங்குகள் கட்டுப்படுத்த வேண்டுமென வில்சன் வாதிட்டு வந்தார். பாங்கு நிறுவன உரிமை யாளர்கள், தங்கள் விருப்பப்படி வட்டித் தொகையினைக் குறைத்தும் கூட்டியும் வந்தனர். எனவே பாங்குத் தொழிலைச் சீர்திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பணத்தாள் புழக்க முறையில் நெகிழ்வுத் தன்மையில்லாமலிருந்தது. நெருக்கடியான காலங்களில் பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவுக்குப் பணத்தாள் வலிமையற்றதாயிருந்தது. பணத்தாள் புழக்கம் கூட்டாட்சி அரசின் கூட்டத்தால்

கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அச்சட்டப்படி பணத்தாளை அச்சிட்டு வெளியிடும் பாங்குகள் அவை பெற்றுள்ள அரசின் கடன் பத்திரங்களின் மதிப்பில் 90 சதவீத மதிப்பளவுக்குத் தான் பணத்தாளை அச்சிட்டு புழங்கவேண்டுமெனக் கோரப்பட்டது. இதனால் நாட்டின் பணத்தாள் புழக்கத்தில் சுருக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக நாட்டில் வாணிக நடவடிக்கைகள் பெரிதும் தடைப்பட்டன. அதே நேரத்தில் நாட்டை விட்டு உயர் உலோக நாணயங்களும் கணிசமான அளவில் வெளியேறிக் கொண்டிருந்தன. வெளி நாட்டிலிருந்து மூலதனம் பெற்றவர்கள், அதிகமான வட்டித்தொகையை கொடுக்க வேண்டியிருந்தது. மற்றும் அமெரிக்க மக்கள் ஏராளமான சரக்குகளை ஐரோப்பாவினின்றும் இறக்குமதி செய்தனர். வெளிநாட்டுக் கடன்களை ஈடு செய்ய, நாணயத்தை அளிக்க நேரிட்டமையால் உள்நாட்டில் நாணயப் புழக்கம் குறைந்தது. பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்த போதிய அளவுக்குக் கூட்டாட்சி அரசிடம் அதிகாரம் இல்லை. நியூயார்க்கிலிருந்த மாபெரும் பாங்கு நிறுவத்தினர்தான் நாட்டின் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தி வந்தனர். பாங்கு நிறுவனங்களெல்லாம் நியூயார்க்கிலிருந்த வால் தெருவில் (Wall Street) இருந்தமையால், வால்தெரு தான் நாட்டை ஆட்டிப்படைக்கின்றது என கூறப்பட்டது. வால்தெருவில் கலக்கம் ஏற்பட்டதால், உடனே நாடு முழுவதும், பணப்புழக்கத்தில், தடுமாற்றம் கண்டது. இப்படி ஒரு சிலர் நாட்டின் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதை வில்சன் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

கூட்டாட்சி ஒதுக்கீட்டுச் சட்டம் (Federal Reserve Act)

நாட்டின் பாங்கு அமைப்பு முறையில் இருந்த குறைகளைக் களைய, காங்கிரஸ் 1913-ஆம் ஆண்டு கூட்டாட்சி ஒதுக்கீட்டுச் சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் மக்களது தேவைக்கேற்பப் புழக்கத்தில் விடவும், புழக்கத்திலிருந்து அகற்றவும் கூடிய நெகிழும் தன்மை பொருந்திய பணத்தாள் முறையைச் செயலாக்க வழிவகுத்தது. மேலும் நெருக்கடியான காலத்தில் பயன்படுத்தப்படுவதற்காகச் சேமநிதி ஒதுக்கீடு முறையும் அச்சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்டது. பாங்கு உரிமையாளர்கள் கையினின்று பணப்புழக்கக் கட்டுப்பாட்டினை மாற்ற அச்சட்டம் வகை செய்தது. இச்சட்டத்தால் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி ஒதுக்கீட்டு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டை பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டாட்சி ஒதுக்கீட்டுப் பாங்கு நிறுவப்பட்டது. இவை பாங்குகளுக்குப் பாங்குகளாகச் செயலாற்றின. இதில் தனியார் எவரும் சேமிக்கவோ, தொடர்பு கொள்ளவோ முடியாது. நாட்டிலுள்ள தேசிய பாங்குகள் அனைத்தும் கட்டாயமாக அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டாட்சி ஒதுக்கீட்டுப் பாங்கின் உறுப்பினர்களாக வேண்டும். மாநிலங்களிலுள்ள சிறுசிறு பாங்குகளும் விருப்பப்பட்டால் உறுப்பினராகலாம். அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லைக்கு அப்பாலுள்ள, அலாஸ்கா மாநிலத்தில், ஆன்கரேஜ் (Anchorage) என்னுமிடத்தில் பன்னிரண்டாவது கூட்டாட்சி ஒதுக்கீட்டுப் பாங்குகளையும் மேற்பார்வையிட, தலைநகரான வாஷிங்டனில் கூட்டாட்சி ஒதுக்கீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது (Federal Reserve Board). அக்குழுவில் நிதித்துறை செயலாளரும், (The Secretary of the Treasury) பணத்தாள் கணக்குத் தணிக்கையாளரும் (The Controller of currency) ஆறு உறுப்பினர்களும் உட்பட மொத்தம் எட்டுபேர் இருந்தனர்.

வாணிபத் தேவைகளுக்கேற்ப, கூட்டாட்சி ஒதுக்கீட்டு முறை பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தியது. அதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரே சீராக அமைந்தது உரிமைப் போருக்குப் பிறகு கூட்டாட்சி அரசின் நிதி நிலைமை சீர்திருத்தியது போலவும், உள்நாட்டு போருக்குப்பிறகு தேசிய பாங்கு முறைகளை சீர்திருத்தியது போலவும், கூட்டாட்சி ஒதுக்கீட்டு முறை சரியான நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிதிநிலைமையை உறுதிப்படுத்தி முதல் உலகப்போருக்கு ஆயத்தமாக நாட்டை வலுப்படுத்திற்று. தனியார் பாங்கு முறையில் ஈடுபாடு கொண்டவர்கள் இதைக் குறை கூறினாலும் நாளடைவில் இது ஒரு இன்றியமையாத சீர்திருத்தமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வேளாண்மைக்கு உதவியளித்தல்

வேளாண்மை சம்பந்தப்பட்ட சட்டங்கள் பல வில்சனின் பதவிக்காலத்தில் இயற்றப் பட்டன. குறுகிய தவணை முறையிலான கடனளிப்பு முறை பற்றிக் கூட்டாட்சி ஒதுக்கீட்டுக் கூட்டத்திலேயே கூறப்பட்டிருந்தது. பண்ணைச் சொத்துக்களை அடமானமாக ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்குப் பண உதவி அளிக்கவும், விவசாய முதலீட்டுப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டு நிதி உதவி அளிக்கவும் வழி முறைகள் வகுக்கப் பட்டன. ஆனால் இச்சலுகைகள் குடியானவர்களுக்கு மனநிறைவை அளிக்கவில்லை. அவர்கள் நீண்டகாலத் தவணைக் கடன்களையே கேட்டனர். 1914-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஸ்மித் லிவர் சட்டத்தின்படி (Samith Lever Act) விவசாயச் செய்திகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் குடியானவர்களுக்கு அறிவிக்க ஒரு இயக்கம் தொடங்கப் பெற்றது. அவ்வியக்கத்திற்கான நிதி உதவியைக் கூட்டாட்சி அரசு அளித்தது. அவ்வியக்கத்தை விவசாயத்துறையும், மாநிலங்களிலிருந்த கல்லூரிகளும் இணைந்து நடத்தின. 1916-ஆம் ஆண்டு கூட்டாட்சிப் பண்ணைக் கடன் சட்டம் (Federal Farm Loan Act) ஒன்று இயற்றப்பட்டது. அச்சட்டம் பன்னிரண்டு கூட்டாட்சி நிலப்பகுதிகளைத் தோற்றுவித்தது. கூட்டுறவுப் பண்ணைக் கடன் கழகங்களுக்கும் உரிமை தரப்பட்டது. சிறுசிறு குடியானவர்கள் பண்ணைச் சொத்துக்களை அடமானமாக வைத்து நீண்ட காலத் தவணைக் கடன்களைப் பெறுவதற்காகவே கூட்டுறவுப் பண்ணைக் கடன் கழகங்களை அமைத்திருந்தனர்.

தொழிலாளர் நலனைப் பாதுகாத்தல்

முன்பு குறிப்பிட்டபடி, கிளேட்டன் சட்டம் தொழிலாளர் சங்கங்களை ஆதரித்தது. அடுத்து 1915-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட லாபாலெட் கப்பல் தொழிலாளர் சட்டம் (The La Follette Seaman's Act) மாலுமிகளின் தொழில் நிலையினை மாற்றியமைத்தது. மாலுமிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய குறைந்த அளவிலான ஊதியம், உணவு, இருப்பிடம் ஆகியவையெல்லாம் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் கப்பல்களின் காப்பு முறைக்கான விதிகளும் கடுமையாக்கப்பட்டன. 1916-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆடம்சன் சட்டம் (Adamson Act) மாநிலங்களுக் கிடையேயான இரயில் பாதைகளில் வேலை நேரத்தை எட்டு மணியாக நிர்ணயித்தது. தொழிற் சாலைகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் வழக்கத்தையும் தடுக்க இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன.

வில்சன் பதவிக்கு வந்த மூன்று ஆண்டுகளில், லிங்கனுக்குப் பிறகு வேறு எந்த குடியரசுத் தலைவரும் இயற்றாத அளவுக்கு முக்கியமான சட்டங்களை இயற்றியிருந்தார். கட்சிக்கு, குடியரசுத் தலைவர் எவ்வகையில் தலைமையேற்க முடியுமென்பதையும், காங்கிரஸிற்கு ஆட்சித்துறை எவ்வகையில் தலைமையேற்று வழிகாட்ட முடியுமென் பதையும் வில்சன் செயல்படுத்திக் காட்டினார். மேம்பாட்டு இயக்கத்தின் சிகரமாக வில்சனின் 'புது உரிமை இயக்கம்' அமைந்தது. மக்களுக்கு நன்மை புரியவே அரசு உள்ளது என்ற கருத்தினை மெய்ப்பித்து, வில்சனும் மேம்பாட்டு இயக்கத்திலிருந்த அவரது உற்ற நண்பர்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் பயன்மிக்க மரபுரிமைகளை நிலைநாட்டினர். முதல் உலகப் போர் தொடங்கியதால் மேம்பாட்டு இயக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கோட்பாடுகளையும், கொள்கைகளையும் உயர்வாகக் கருதிய வில்சன், தேர்தல் பிரசாரத்தின் பொழுது கூறிய உறுதி மொழிகளனைத்தையும் நிறைவேற்றிய பெருமை கொண்டவராகத் திகழ முடிந்தது.

பயிற்சி வினா

"உட்ரோ வில்சனின் சீர்திருத்தங்கள் மேம்பாட்டு இயக்கத்தின், முற்றுப் புள்ளி" — விவரிக்க.

பாடம் – 25

அமெரிக்க ஐக்கிய நாடும் முதல் உலகப் போரும்

ஐரோப்பிய ஒப்பந்தங்களினின்றும், போராட்டங்களினின்றும், தங்கள் நாடு தனித்தியங்கமுடியுமென அமெரிக்க மக்கள் கருதினர். ஆனால், முதல் உலகப்போர் தொடங்கியதும், அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றில் அடிப்படையிலான உறவுநிலை நாளுக்குநாள் வலுப்பெற ஆரம்பித்தது. தொடர்ந்து தனித்திருத்தல் கொள்கையை, பின்பற்றமுடியாதென உணர்ந்த அமெரிக்கா, போர்தொடங்கி மூன்றாண்டுகள் கழித்து நேரிடையாகப் போரிலிறங்கிற்று. அமெரிக்காவின் வெளிநாட்டுறவுக் கொள்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. மீண்டும் 1920-1930 ஆம் ஆண்டுகளுக்கிடையே தனித்திருந்த அமெரிக்கா, இரண்டாவது உலகப்போரின் பொழுது திரும்பவும் போரிலிறங்க வேண்டியிருந்தது. இந்தப்போருக்குப் பின், உலக அரங்கின் வெளிநாட்டுறவுக் கொள்கைக்கே தலைமை தாங்கும் அளவிற்கு பன்னாட்டு அரசியலில் ஈடுபட முற்பட்டது.

அமெரிக்கா போரிலிறங்குதல்

பேரரசுக் கொள்கையினடிப்படையில், சில நாடுகள் ஒன்றாகக் கூடி ஒப்பந்தம் செய்து கொண்டு, ஐரோப்பாவில் பிளவுண்டிருந்தன. 1914-ஆம் ஆண்டு ஆஸ்திரிய இளவரசரான பிரான்சிஸ் பெர்டினாண்டு (Francis Ferdinand), ஸ்லாவிய இனஞ்சார்ந்த ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டபொழுது அக்கொலைக்கு தூண்டுதலாக இருந்தவர்கள் செர்பியா நாட்டு அலுவலர்களே என ஆஸ்திரியா, செர்பியாமீது குற்றஞ்சாட்டியது. தன் ஆதிக்கத்தை செர்பியாமீது நிலைநாட்டப் பல உரிமைகளைக் கோரியது. செர்பியா அக்கோரிக்கைகளை ஏற்க மறுக்கவே ஆஸ்திரியா, செர்பியாமீது போர் தொடுத்தது. பால்கன் பகுதியில், ஆஸ்திரியா ஆதிக்கத்தைச் செலுத்த முயன்றால், ஐரோப்பாவின் சக்திச்சமநிலை பாதிக்கப்படும் என பிற நாடுகள் அஞ்சின. ஒப்பந்தங்களால் பிளவுண்டிருந்த நாடுகள், தத்தம் நட்பு நாடுகளுக்காகப் போரிலிறங்கின.

போரில், ஜெர்மனியும், ஆஸ்திரியாவும், இணைந்திருந்தது 'மைய நாடுகளாக இருந்தது. செர்பியா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து 'நேச நாடுகளாக எதிர்த்து நின்றது. பல்கேரியாவும், துருக்கியும் மைய நாடுகளுடன் சேர்ந்தன.

ஜப்பான், இத்தாலி, ருமேனியா நேசநாடுகளுடன் இணைந்தன. இரு தரப்பாரும் வெற்றி தோல்வியின்றி பேரிழப்புடன் போரைத் தொடர்ந்து நடத்திவந்தனர். பிரிட்டன் தன் கடற்படையின் வலிமையில் நம்பிக்கை கொண்டு, ஜெர்மனியைத் தாக்கியபொழுது, ஜெர்மனி, நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு நேசநாடுகளின் வாணிகக்கப்பல்களைத் தாக்கியது.

அமெரிக்கா கூடியவரையில் இப்போரில் ஈடுபட வேண்டிய அவசியமில்லையெனக் கருதியிருந்தது. அமெரிக்கமக்களில் சிலர், பிரிட்டன், பிரான்ஸ் பக்கம் ஈடுபாடு கொண்டனர். ஜெர்மனியில் இராணுவ மரபில் ஆட்சி செலுத்தப்பட்டமையால்,

மக்களாட்சி அடிப்படையிலான அமெரிக்க அரசியல் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. ஆகவே, ஜெர்மனியின் வெற்றி, தங்களது நிறுவனங்களுக்கே ஊறு விளைவிக்ககூடும் என நினைத்து போரில் இறங்கினர். குடியரசுத் தலைவர் வில்சன், தாமே நேரடியாக வெளிநாட்டுறவினைப் பார்வையிடலாயினார். வில்சனைப் பொறுத்த வரை இருதரப்பிடையேயும் குறையும், நிறைவும் இருந்தன. ஆனால் பன்னாட்டு சட்ட திட்டங்களுக்கோ, பிற நாடுகளின் உரிமைகளுக்கோ ஜெர்மனி மதிப்புத்தர மறுப்பதைக் கண்டார். அமெரிக்க மக்களில் பெரும்பாலோர் போரில் இறங்க நினைத்தாலும் ஒரு சிறுபான்மையினர் நடுநிலைமை வகிக்க வேண்டுமென நினைத்தனர். அவர்கள் தனித்திருத்தல்கொள்கைக்கும், அமைதிக்கும் ஆதரவு கொடுத்தனர். ஜெர்மனி மரபுவழி மக்கள், ஜெர்மனியை ஆதரிக்க வேண்டுமென நினைத்தனர்.

பிரிட்டன் பன்னாட்டு விதிமுறைகளை மீறி, வெளியுலகோடு ஜெர்மனி கொண்டிருந்த வணிக உறவு அனைத்தையும் துண்டித்தது. இதனால் அமெரிக்கக் கப்பல் கள் நிறுத்தப்பட்டு, சரக்குகள் கைப்பற்றப்பட்டன. இதனை வில்சன் கண்டிக்கவில்லை யென அமெரிக்க மக்கள் குறை கூறினர். அப்பொழுதிருந்த சூழ்நிலையில், பிரிட்டனின் இச்செயல்களைக் கண்டிப்பதன் அவசியமில்லையென வில்சன் நினைத்தார். 1915—இல் ஜெர்மனி, நீர் மூழ்கிக் கப்பல் போரினைத் தொடங்கிய பொழுது, அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்டாலோ, அல்லது அமெரிக்க மக்கள் உயிரிழக்க நேர்ந்தாலோ அதற்கு முழுப்பொறுப்பையும் ஜெர்மனி ஏற்கவேண்டுமென வில்சன் எச்சரிக்கை விடுத்தார். நடு நிலைமை தாங்கும் நாடுகளின் கப்பல்களை தாக்க வேண்டாமென ஜெர்மனியும் ஆணை பிறப்பித்தது. எதிர்பாராத வகையில் அமெரிக்கக் கப்பல்கள் தாக்கப்பட்ட பொழுது கூட, ஜெர்மனி இழப்பீடு தந்தது. ஆனால், லூஸிடானியா என்ற கப்பல் தாக்கப்பட்ட பொழுது 1,198 பேர் உயிரிழந்தனர். அதில் அமெரிக்கர்கள் 128. இதைக் கண்டு அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்தனர். நீர்மூழ்கிக் கப்பல்கள் பற்றிய சிக்கல் ஓராண்டுக்காலம் நீடித்தது. பயணிகள் கப்பல்களைத் தாக்கவேண்டாமென ஜெர்மனி ஆணைப் பிறப்பித்தாலும், ஒரு பிரஞ்சுக் கப்பல் திரும்பவும் மூழ்கடிக்கப்பட்ட பொழுது (1916), நேச நாடுகளுக்கு உதவவேண்டுமென்ற மனப்பான்மை அமெரிக்க மக்களிடையே வலுப்பெற்றது. அமெரிக்க வாணிபம் நேசநாடுகளினால் தான் முன்னேறியதே ஒழிய, மைய நாடுகளின் வாணிபத்தினால், அதிகம் பயன் பெறவில்லை. அமெரிக்கா, நேச நாடுகளின் போர்தளவாடக் கிடங்காக மாறியது. இதை ஜெர்மனி கண்டனக்குரல் எழுப்பி கண்டித்த பொழுது, பன்னாட்டு சட்டவழி முறைப்படி, நேச நாடுகளுக்குப் போர்க் கருவிகளை விற்பது தவறாகாது என அமெரிக்கா கூறிவிட்டது.

வில்சனும் உலகப்போரும்

இச்சமயத்தில், 1916ஆம் ஆண்டு தேர்தலில் வில்சன் மீண்டும் குடியரசுத் தலைவரானார். வில்சன் போரினை நிறுத்தி அமைதியை நிலைநாட்டுவதற்கான வழி முறைகளை ஆராயலானார். வெற்றியின்றி அமைதிகாண வேண்டுமென (Peace without Victory) வில்சன் குறிக்கோள் கொண்டார்.

பிரிட்டனையும், பிரான்ஸையும் சுற்றிக்கட்டுப்பாடற்ற நீர்மூழ்கிக் கப்பற்போர் நடந்ததால், 1917-இல், அமெரிக்கா போர்க்கருவிகள் அனுப்பக் கூடாதென ஜெர்மனி விதி வகுத்தது. அமெரிக்கப் பயணிகள் கப்பலுக்கு வெளியில் வெள்ளை, சிவப்பு வர்ணங்களால் பட்டைக் கோடுகள் வரையப்பட்டிருக்க வேண்டுமெனவும் கூறியது. ஜெர்மனியின் அறிவிப்பைக் கேட்ட வணிகர், தங்களது கப்பல்களை அமெரிக்கத் துறை முகங்களில் கிடத்திவிட்டனர். ஆகவே நேசநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய சரக்குகள் அமெரிக்கக் கிடங்குகளில் தேங்கலாயின. அமெரிக்காவின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. நேச நாடுகளும் அமெரிக்காவின் உதவியின்றி, தவிக்கலாயின. இதே சமத்தில் ஜெர்மனியின் வெளிநாட்டுறவுச் செயலாளரான ஸிம்மர்மேன் (Zimmerman) மெக்ஸிகோ அரசுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதில் மெக்ஸிகோவை அமெரிக்கா மீது படையெடுக்கச் சொல்லியும், அரிசோனா, நியூ மெக்ஸிகோ, டெக்ஸாஸ் ஆகிய மாநிலங்களைக் கைப்பற்றச் சொல்லியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கும் மேலாக ஜெர்மனி, அமெரிக்க வணிகக் கப்பல் ஒன்றினை முன்னறிவிப்பின்றி மூழ்கடித்தது. அதையொட்டி மேலும் மூன்று கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதற்கு மேலும் பொறுத்திருக்க முடியாததால் 1917-ஆம் ஆண்டில் காங்கிரசின் சிறப்புக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, ஜெர்மனிமீது போர்தொடுப்பதற்கான தமது முடிவினை அறிவித்தார். காங்கிரசும் உடனே, தனது ஒப்புதலைத் தெரிவித்தது. வில்சன், ஜெர்மானிய அரசின்மீது தான் போர் தொடுப்பதாகவும் ஜெர்மானிய மக்களுக்குத் தமது அனுதாபத்தையும் நட்பையும் நல்குவதாகவும் அறிவித்தார்.

நேசநாடுகள் மிகவும் தளர்ச்சியடைந்த நிலைமையில் இருந்ததால், அமெரிக்காவிற்கு தொடர்ந்து தூதுக் குழுவினை அனுப்பி உதவி கேட்டனர். நேசநாடுகளின் வெற்றிக்கு அடிப்படைக் காரணம் அமெரிக்கா அளித்த பொருளாதார உதவியேயாகும். பொருளாதாரத்தின் சிறப்புப் பிரிவுகளை மேற்பார்வையிட ஆறுகுழுக்கள் நியமிக்கப் பட்டன. அவற்றுள் முக்கியமானது போர்த்தொழில் சார்ந்த குழுவாகும் (War Industries Board). ஆனால், இக்குழு சிறப்புற இயங்கவில்லை. ஏனெனில், அரசின் அதிகாரம் பலரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. போருக்கான பொருள் உற்பத்தி பின் தங்கிய நிலையிலேயே இருந்தது. 1918-ஆம் ஆண்டு, போர்த்தொழில் சார்ந்த குழுவின் தலைவராகப் பெர்னார்டு பருச் (Bernard Baruch) பொறுப்பேற்றார். சிறந்த ஆட்சித்திறன் பெற்றிருந்த அவர் வணிகர்களோடு நட்புக் கொள்ளாது, குடியரசுத் தலைவருடன் இணைந்து ஒத்துழைத்தார். அவர் ஒரு பொருளாதார சர்வாதிகாரி போல் செயல்பட்டார்.

தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்தக் கூட்டாட்சி அரசு எல்லையற்ற அளவுக்கு அதிகாரங்களைப் பெற்றது. உற்பத்தியைப் பெருக்குவதில் மட்டுமே நாட்டம் கொண்டிருந் தமையால் கூட்டாட்சி அரசு அமைதிக் காலச் சட்டத்திட்டங்களை ஒதுக்கி வைத்து விட்டுச் செயலாற்றியது. போட்டியை வளர்க்கவும், தனியுரிமை நிறுவனங்களைக் கட்டுப் படுத்தவும் முடியாமல், கூட்டாட்சி அரசு பெரு வாணிபத்தை வளர்ப்பதில் கூட்டுச் சேர்ந்தது. பெருவாணிபம் பெருமளவில் வளரலாயிற்று.

பெரும்பான்மையான உற்பத்தித் திட்டங்கள் தனியார் துறையிலிருந்த போதிலும், சில துறைகளில் கூட்டாட்சி அரசு நேரடியான கட்டுப்பாட்டை விதித்தது. இரயில் பாதை நிறுவனங்கள் போர்ச் சரக்குகளை விரைவாக ஏற்றியனுப்பியபோதும், அச்சரக்குகளை ஏற்றி இறக்குவதில் தவிர்க்கமுடியாத காலதாமதம் ஏற்பட்டது. அதனால் சரக்குப் பெட்டிகள் பயனற்று நெடு நாட்களுக்கு நின்று கொண்டிருந்தன. எனவே, வில்சன் படை ஒதுக்குச் சட்டப்படி (Army Appropriation Act) இரயில் பாதைகளையும் நீர்வழிகளையும் கட்டுப்படுத்த முடிவு செய்து, மேக்கடூ (Mcadoo) என்பவரை மேற்பார்வையாளராக நியமித்தார். மெக்கடூ ஒரு தரப்படுத்தும் பணியைச் சிறப்புற ஆற்றினார். அதனால், சரக்கு வண்டிகள் காலதாமதமின்றி தேங்காமல் பொருட்களை ஏற்றிச் சென்றன.

நேசநாடுகள் பல கப்பல்களைப் போரில் இழந்துவிட்டமையால், அமெரிக்காவைக் கப்பல்கள் தந்து உதவுமாறு வேண்டின. அவ்வேண்டுதலை நிறைவேற்றக் கூட்டாட்சி அரசு நெருக்கடி கப்பற்படை நிறுவனம் (Emergency Fleet Corporation) ஒன்றை அமைத்தது. 1914-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கப்பல் சரக்கனுப்பீடு ஒரு மில்லியன் டன்னாக இருந்தது. 1918 இல் எட்டரை மில்லியன் டன்னாக உயர்த்தப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிற நடுநிலைமை நாடுகளினின்றும் கப்பல்களை விலைக்கு வாங்கியதோடு, கைப்பற்றிய ஜெர்மானியக் கப்பல்களையும் நேசநாடுகளுக்கு அனுப்பியது.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1917-ஆம் ஆண்டு லீவர் சட்டம் (Lever Act) இயற்றப்பட்டது. உணவுப் பொருள் உற்பத்தியை மேற்பார்வையிட ஹெர்பர்ட் ஹீவர் (Herbert Hoover) என்பவர் நியமிக்கப்பட்டார். கூட்டாட்சி அரசு ஒரு தானிய நிறுவனத்தை (Government Grain Corporation) அமைத்தது. அந்நிறுவனம் நாட்டில் விளைவிக்கப்பட்ட கோதுமை முழுவதையும் ஒரு குறிப்பிட விலைக்கு வாங்கிச் சேமித்துவைத்தது. இதனால் பெரும் ஊதியம் பெற்ற குடியானவர்கள் கோதுமைப்பயிரை மென்மேலும் அதிக நிலங்களில் பயிரிடலாயினர். கோதுமைப்பயிர் விளையும் நிலப்பரப்பு 1917இல் 45 மில்லியன் ஏக்கராக இருந்தது. 1919-இல் 75 மில்லியன் ஏக்கராக உயர்ந்தது. போரின் போது விவசாய உற்பத்திப் பெருக்கமும், ஏற்றுமதியும் கூடின. குடியானவர்கள் மேன்மேலும் கடன் வாங்கி நிலங்களை வளப்படுத்திப் பயிர்த்தொழில் செய்தனர். போர் முடிவுற்றதும் ஐரோப்பாவில் உணவு உற்பத்தி வழக்கமான நிலைக்கு வரவே, அமெரிக்காவின் திடீர் விவசாயப் பெருக்கம் வீழ்ச்சியுற்றது. குடியானவர்கள் பெருங்கடனாளிகளாயினர்.

போரின்போது விலையைக் கட்டுப்படுத்தாததால், 1918—இல் சரக்குகளின் விலை இரண்டு மடங்காக உயர்ந்திருந்தது. நடுத்தரமக்களும், நிலையான வருமானம் பெறுபவர்களும் பெருந்தொல்லைக்குள்ளாயினர். தொழிலாளர்களுக்குக் கூடுதலான ஊதியம் கிடைத்தது. கூட்டாட்சி அரசே தன்னுடைய நிறுவனங்களில், தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளைத் தந்து ஊக்குவித்தமையால், பிற தொழிலதிபர்களும், தொழிலாளர் நலனைக் காப்பதில் ஆர்வங் கொண்டனர். தொழிலாளர் சங்கத்தலைவர்களும் வேலை நிறுத்தம் செய்யாது, உற்பத்தியைப் பெருக்குவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். ஆகவே, அரசு நாளொன்றுக்கு எட்டு மணி வேலை நேரத்தையும், தொழில் முனைவருடன் தொழிலாளர் கூட்டாகப் பேசி குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் முறையினையும்

ஆதரித்தது. தொழிற் சங்கங்களின் உறுப்பினர் தொகையும் இருபத்தைந்து சதவீதம் உயர்ந்தது. சில தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் ஊதியம் குறைவாக இருந்தாலும், மொத்தத்தில் தொழிலாளர் நிலைமை சிறப்புற்றிருந்தது.

முதல் உலகப் போரினால் அமெரிக்கச் சமுதாயத்தில் ஒரு சில குறைபாடுகளும் தோன்றின. மக்கள் சகிப்புத்தன்மையற்றவர்களாய்த் திகழ்ந்தனர். போர்ப் பீதியை மக்களிடத்து உண்டாக்குவதில் கூட்டாட்சி அரசும் ஓரளவு பங்கேற்றிருந்தது. (George Creel) ஜார்ஜ் கிரீல் என்பவரது தலைமையில் செய்தி வெளியீட்டுக் குழு (Committe on Public Information) ஒன்று அமைக்கப்பட்டது. போரின் முடிவுபற்றி வில்சன் கொண்டிருந்த உயர்ந்த கோட்பாடுகளைக் கிரீல் ஏற்றுக்கொண்டார். கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், நடிகர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் உதவியோடு வில்சனின் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் கிரீல் பெரும் வெற்றி கண்டார். அவருடைய பிரச்சாரம் மிகவும் தீவிரமாக இருந்ததால் மக்களிடையே வெறுப்பும் தோன்றலாயிற்று. அமெரிக்காவில் வாழ்ந்த ஜெர்மானியரை மக்கள் ஒதுக்க ஆரம்பித்தனர். ஜெர்மானிய மொழியில் வெளியான செய்தித்தாள்கள் மீது மேற்பார்வையிருந்த வண்ணமே இருந்ததால், சில சமயம் வழக்குகள் கூடத் தொடரப்பட்டன.

போர் முயற்சிக்கு இடையூறு விளைவிப்பவர்களையெல்லாம் கைது செய்ய வேவு பார்த்தல் சட்டப்படி (Espionage Act) அதிகாரம் தரப்பட்டது. நாட்டுக்கு வரும் கடிதங் களைத் தணிக்கை செய்ய அஞ்சல் துறைத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அழிவுப்பணிச் சட்டத்தின் படி (Sabotage Act) பொதுச் சொத்துக்களையும் தனியாரது உடமைகளையும் தாக்கி நாசம் விளைவிப்போர் கடும் தண்டனைக்குள்ளாயினர். அமெரிக்காவின் அரசியலமைப்பு, கூட்டாட்சி அரசு, தேசியக் கொடி ஆகியவற்றைப் பற்றி இழிவாகப் பேசியவர்கள், ஆட்சி எதிர்ப்புச் சட்டப்படி (Sedition Act) தண்டிக்கப்பட்டனர்.

அமெரிக்கா போரில் கலந்து கொண்ட பிறகும், ஓராண்டு காலத்திற்கு ஜெர்மனி தொடர்ந்து வெற்றிகளைப் பெற்றே வந்தது. அமெரிக்கக் கப்பற்படையும், பிரிட்டிஷ் கப்பற்படையும் ஒன்றாக இணைந்து ஜெர்மனியரைத் தோற்கடிக்க முடிந்தது. ஆனால், ஜெர்மனி, பால்கள் நாடுகளைக் கைப்பற்றியது. 1917-இல் ருஷ்யப்புரட்சிக்குப்பின் வந்த குடியரசு ஜெர்மனியுடன் ப்ரெஸ்ட் லிடாவ்ஸ்க் (Brest Litovsk) என்ற உடன் படிக்கையை செய்து கொண்டது. ருஷ்யா, ஜெர்மனிக்குப் போலந்து, பால்கன் நாடுகள் உக்கிரெய்ன் ஆகியவற்றை விட்டுக் கொடுத்தது. இதற்குப் பிறகு ஜெர்மனி தன் முழு கவனத்தையும் மேற்குப் பக்கம் திருப்பி பிரான்ஸையும், பிரிட்டனையும் தோற்கடிக்க முனைந்தது. அமெரிக்காவும் தனது படைகளை ஜான் ஜோஸப் பெர்ஷிங் (John Joseph Pershing) என்பவர் தலைமையில் பிரான்சுக்கு அனுப்பியது. 1918-ஆம் ஆண்டு தொடக்கத்தில் பெருமளவில் அமெரிக்க வீரர்கள் பிரான்சில் வந்திறங்கினர். நேசநாடுகள் படையில் ஒழுங்கு ஏற்பட்டது. ஜெர்மானியப் படையில் ஒழுங்குணர்வு சீர்குலைந்தது. நேசநாடுகள் படையினர் துருக்கியிலும், பால்கன் பகுதியிலும் இத்தாலியிலும் பல மகத்தான வெற்றிகளைப் பெற்றனர். ஜெர்மனி பல முனைகளிலிருந்து தாக்கப்பட்டு பின்வாங்க

நேர்ந்தது. போர் நீடித்துக் கொண்டே போயிற்றே தவிர, வெற்றி எளிதில் நிறுவப்படுமெனத் தோன்றவில்லை, ஆகவே, வில்சன் மிதமான கொள்கைகள் அடங்கிய அமைதி உடன்படிக்கை ஒன்றை நிறுவினார். திரும்பத் திரும்ப அமெரிக்க அரசு ஜெர்மானிய அரசுக்கெதிரே போரிடுவதாகவும், ஜெர்மானிய மக்கள் மீது அன்பும் நட்பும் கொண்டுள்ளதாகவும் கூறி வந்தார். உலகம் முழுவதும் குடியாட்சியினைக் கொண்டு வருவதே தமது நோக்கம் என்று வில்சன் வலியுறுத்தி வந்தார். உலக அமைதிக்காக வில்சன், தமது குறிக்கோளினை, பதினான்கு கருத்துக்களுடன் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவில் வெளியிட்டார். அவை:

1. நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்கள் வெளிப்படையாகச் செய்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மறைமுக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டமையால் தான் ஐரோப்பாவே இரு தொகுதிகளாகப் பிரிந்து ஒன்றையொன்று அச்சத்துடனும், ஐயத்துடனும் நோக்கின.

2. அமைதிக்காலத்திலும், போர்க்காலத்திலும் கடலில் கப்பல்களைச் செலுத்த எல்லா நாடுகளுக்கும் முழு உரிமை அளிக்கப்படவேண்டும்.

3. அமைதிக்கு இணங்கும் நாடுகளின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் அனைத்தும் இயன்றவரை நீக்கப்படவேண்டும்.

4. உள்நாட்டுப் பாதுகாப்புக்காக மட்டுமே குறைந்த அளவுக்குப் போர்க்கலங்களை உற்பத்தி செய்யவேண்டும். அது குறித்து எல்லா நாடுகளுக்கும் உறுதி ஒன்றினையும் அளிக்க வேண்டும்.

5. ஆதிக்கம் செலுத்தவிரும்பும் நாடுகளுக்குக் குடியேற்ற நாடுகளை, அங்குவாழும் மக்களது விருப்பத்திற்கிணங்கச் சார்பற்ற வகையில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

6. ருஷ்யாவிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை ஜெர்மனி திருப்பித்தர வேண்டும்.

7. ஜெர்மனி போலந்தினின்றும் வெளியேறவேண்டும்.

8. பிரான்சிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளையும் ஜெர்மனி திருப்பித்தர வேண்டும். 1871-இல் ஜெர்மனி பெற்ற அல்ஸெஸ்—லொரேய்ன் (Alsace-Lorraine) பகுதி, பிரான்சுக்கு அளிக்கப்படவேண்டும்.

9. தேசிய உணர்வின் அடிப்படையில் இத்தாலியின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

10. ஆஸ்திரியா—ஹங்கேரி மக்களுக்குத் தன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

11. ருமேனியா, செர்பியா, மாண்டி நீக்ரோ ஆகிய நாடுகளிலிருந்து பிற நாடுகள் வெளி யேறவேண்டும். கடல் பகுதியினுடைய செர்பியாவுக்கு இலவசமான வழி ஒன்று அமைத்துத் தரப்படல் வேண்டும். வரலாற்று அடிப்படையில் உருவான தேசிய உணர்வின் துணைகொண்டு பால்கன் நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

12. துருக்கியைச்சார்ந்த துருக்கிப் பேரரசின் பகுதிகளில் இறைமைத் தன்மை அப்பேரரசுக்கு அளிக்கப்படவேண்டும். பிறபகுதிகளில் மக்கள் தன்னுரிமை பெற வழி செய்யப்படவேண்டும். டார்டனல்ஸ் (Dardenells) நீர்ச்சந்திப்பை உலக நாடுகளின் வாணிகத்துக்குத் திறந்துவிடவேண்டும்.

13. தன்னுரிமை பெற்ற போலந்து நாட்டை உருவாக்கி, கடல் பகுதியினையுடைய போலந்துக்கு இலவசமான வழி ஒன்று நிறுவப்படவேண்டும்.

14. பெரிய நாடு, சிறிய நாடு என்ற பாகுபாடில்லாமல் எல்லா உலக நாடுகளும் பிறநாட்டினரது தன்னுரிமையையும் தேசிய ஒருமைப்பாட்டினையும் மதித்து நடந்திடச் சர்வதேச சங்கம் (League of Nations) ஒன்று நிறுவப்படவேண்டும்.

வில்சனுடைய கருத்துக்கள் நேசநாடுகளுக்கு சாதகமாக இருப்பது கண்டு ஜெர்மானிய மக்கள் வெறுப்புற்றனர். தெளிவற்ற சில கருத்துக்களுக்கு வில்சனே விளக்கம் தந்தார். பிரான்சும், பிரிட்டனும் வில்சனின் கருத்துக்களில் சில மாற்றம் ஏற்பட வேண்டுமென நினைத்தன. கடலில் கப்பல் செலுத்தும் உரிமை எல்லா நாடுகளுக்கும் வழங்கப் படுவதை பிரிட்டனும், பிரான்சும் மறுத்தன. ஜெர்மனி இழப்பீடு கொடுக்க வேண்டுமென்றும், அந்த நாடுகள் நினைத்தன. பிரான்சின் முயற்சியால் எழுதப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டினை 1918-ஆம் ஆண்டு, நவம்பர், 11-ஆம் தேதி ஜெர்மனி ஏற்றது. பேரரசர் முடிதுறந்து ஹாலந்துக்கு ஓடியபின், ஜெர்மானிய குடியாட்சியினர், இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அத்துடன் போர் முடிவுற்றது.

அமெரிக்கா போருக்கான செலவில் ஆறில் ஒரு பங்கினை ஏற்றிருந்தது. அமெரிக்கா வீரர்களைக் குறைவாகவே இழந்திருந்தது. பிறநாடுகளின் பொருளாதார இழப்புகளை ஈடுசெய்யவும் அமெரிக்கா உதவியது. மேலை நாட்டு மக்களின் பத்தொன்பதாவது நூற்றாண்டின் கனவாக இருந்த தனிமனிதனது உரிமை, பகுத்தறிவு, முன்னேற்றம் என்ற கருத்துக்களையெல்லாம் ஓரளவு மறைத்து ஐரோப்பாவில் சர்வாதிகார அரசுகள் நிறுவப்பட்டன. பொது உடைமையாளர்கள் வல்லாட்சியை ருஷ்யாவில் நிறுவினர். குடியாட்சி முக்கியத்துவம் மறையலாயிற்று.

வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையும் சர்வதேசங்கமும்

அமைதி உடன்படிக்கையை எழுதுவதற்கான மாநாடு பாரிசில் 1919-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை நடைபெற்றது. பெரும்பாலான முடிவுகள் அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட்பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகளால் உறுதிப்படுத்தப்பெற்றன. போரில் தோல்வியுற்ற மைய அரசுகளும், ருஷ்யாவும் இம்மாநாட்டில் இடம் பெறவில்லை. அமெரிக்காவின் பிரதிநிதி வில்சனுக்கும், பிரான்சின் பிரதிநிதி கிளெமென்சோவுக்கும் (Clemenceau) இடையே அடிக்கடி விவாதங்கள் மூண்டன. கிளெமென்சோவின் தீவிரக்கருத்துக்களும், வில்சனின் அறநெறி கருத்துக்களும் முரணாக இருந்தன.

சர்வதேச சங்கம் ஒன்றினை நிறுவுவதில் வில்சன் மகத்தான வெற்றி பெற்றார். போர் தொடங்கிய நாளிலிருந்து, நேசநாடுகளின் தலைவர்கள், உலக அமைப்பு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தினர். உலக நாடுகள் அனைத்தும் தங்களுக்குள் எழும் சிக்கல்களை அமைதியான முறையில் தீர்த்துக் கொண்டு, நாடுகள் ஒன்றுக்கொன்று பாதுகாவலாக இருக்க வேண்டும் என நினைத்தன. சர்வதேச சங்க அமைப்புக்கு முரணாக ஒரு நாடு போரிலிறங்கினால், அந்நாட்டின் மீது பொருளாதார தடைகள் விதிக்கவும், தேவைப் பட்டால் படையனுப்பவும் வேண்டுமென வழி வகை செய்யப்பட்டது. அனைத்து நாடுகளின் உறுப்பினர்கள் கொண்ட மன்றமும் (Assembly) குழுவும் (Council) சர்வதேச சங்கத்தின் அதிகாரங்களைப்பகிர்ந்து கொண்டன. ஆனால் இச்சங்கத்திற்குத் தனி படையமைப்பு இல்லை. உறுப்பு நாடுகளிடையே நிலவிய நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் இச்சங்கம் இயங்கிற்று.

1919-இல் தாயகம் திரும்பிய வில்சன், வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் ஒப்புதலுக்கு செனட் சபையைக் கேட்டபொழுது, செனட் தள்ளுபடி செய்துவிட்டது. குடியரசுக் கட்சியினர் அமெரிக்க ஐக்கிய நாடு சர்வதேச சங்கத்தின் உறுப்பினராகக் கூடாதென நாடு முழுவதும் கூறி ஆதரவு பெற்றிருந்தனர். எனவே வில்சன் நேரடியாக மக்களிடம் பேசியபொழுது மக்கள் அதை ஏற்கும் நிலையில் இல்லை. வில்சனைப்போல் புகழேணிக்கு ஏறியவரும், வீழ்ச்சியுற்றவரும் அமெரிக்க வரலாற்றில் இல்லையெனலாம். அவருடைய உயர்ந்த கருத்தும், காண விரும்பிய கனவும் நினைவாக முடியாமல்போனாலும் அந்தத் தோல்வியிலும், சோகநிகழ்ச்சியிலும், ஓர் ஒளி இருந்தது. அவரே குறிப்பிட்டது போல் உடனடியாக அவர் கருத்தினை மக்கள் ஏற்காவிட்டாலும், ஏற்கும் காலம் வெகு அருகிலேயே இருந்தது. 1920-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சி வெற்றியடைந்த பொழுது அது வில்சனின் தோல்விபோல் காணப்பட்டது. 1924இல் அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்திலும் கூட வழக்கம் போல் கிறிஸ்துமஸ் சமயத்தில் மக்கள் அவர் வீட்டின் வாயிலில் குளிரையும் பனியையும் பொருட் படுத்தாமல் கவலையுடன் காத்து நின்றனர். நடுங்கும் குரலில் அவர் காலமடைந்த செய்தியை அவருடைய மருத்துவர் கிரேசன் (Grayson) படித்த பொழுது அவர் வார்த்தைகள் யார் காதிலும் விழவில்லை என்றும், அவர் கண்ணைத்துடைத்துக் கொண்டதிலிருந்து விஷயத்தை அறிய நேரிட்டது என்றும் செய்திகள் கூறுகின்றன. அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களில் புகழ்மிக்கவராக திகழ்ந்த வில்சன் வரலாற்றில் ஒரு நிறைவான இடத்தைப் பெற்றார்.

பயிற்சி வினா

முதல் உலகப்போரில் அமெரிக்காவின் பங்கினை ஆராய்ந்தெழுதுக.

பாடம் – 26

பெருமந்தம் (The Great Depression)

முதல் உலகப்போரின் போது அமெரிக்க ஐக்கிய நாடு பல பொறுப்புகளை மேற்கொண்டிருந்தது. போர் முடிவுற்றதும் அப்பொறுப்புகளினின்று தங்களை விடுவித்துக் கொள்ள அமெரிக்கர் விரும்பினர். அமைதிக்காலத்து நிலவிய இயல்பான நிலைக்குத் திரும்ப ஆர்வங் கொண்டனர். ஆனால் அமெரிக்க சமூகத்திலும், பொருளாதாரத்திலும், பல பெரிய சிக்கல்கள் நிலவி வந்தன. அச்சிக்கல்களை அமெரிக்க ஐக்கிய நாடு முதல் உலகப்போர் முடிவுற்ற போதிலும் தீர்த்துக்கட்ட முடியவில்லை. எடுத்துக்காட்டாக தொழில் துறையின் உற்பத்தியையும், விவசாய உற்பத்தியையும் எப்படி சரிக்கட்டுவது என்பது ஒரு கடினமான சிக்கலாகயிருந்தது. போர்க்காலத்திற்குப் பின் ஏராளமான மக்கள் பிற நாடுகளிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறினர். அம்மக்களைப் பராமரித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தருவது மற்றொரு சிக்கலாக இருந்தது. 1920ஆம் ஆண்டளவில் நாட்டில் காணப்பட்டச் செல்வச் செழிப்பானது உறுதியற்றதாகவே காட்சியளித்தது. இவையெல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாறு காணாத வகையில் வரவிருக்கும் கடுமையான பொருளாதாரச் சீர்குலைவுக்கு அறிகுறிகளாக விளங்கின.

முதல் உலகப்போரின் போது அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏற்றுமதி வாணிபம் பன்மடங்காகப் பெருகியது. போரிலிடுபட்டிருந்த நாடுகளுக்கு உணவு தானியங்களும், உடையும், ஆயுதங்களும் அமெரிக்காவினின்று அதிக அளவில் தேவைப்பட்டது. இதன் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடு தனது உற்பத்தியை மேன்மேலும் பன்மடங்காகப் பெருக்கியது. அமெரிக்க வணிகர்கள் பெரும் பொருளீட்டினர். போர் முடிவுற்ற பின்பும், போரினால் சீர்குலைந்த ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை, சீர்திருத்தியமைக்க, தொடர்ந்து அமெரிக்கப் பொருட்கள் தேவைப்பட்டன.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. அவற்றால் மக்களது வாழ்க்கை நிலையில் மகிழ்ச்சி பொங்கிற்று. மக்களின் சமுதாய வாழ்க்கை நிலையே ஒரு பெரும் மாற்றத்தைப் பெற்றது. நிலக்கரியாலும், நீராவியாலும் இயங்கி வந்த இயந்திரங்கள், இப்போது எண்ணெயாலும், மின்சாரத்தாலும் இயங்க லாயின. புதுவகையான போக்குவரத்து சாதனங்களால் மக்கள் தொழிற்பட்டணங்களில் நெருக்கமாக வாழவேண்டாத நிலை ஏற்பட்டது. பரந்து கிடந்த பண்ணைகளில் வசித்து வந்த குடியானவன் தனிமையில் வருந்தவில்லை. பட்டணங்களுக்கும், சிற்றூர்களுக்குமி டையே இருந்த தடை நீக்கப்பட்டது.

ஹெர்பர்ட் ஹீவர் (Herbert C. Hoover) அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராக 1929ஆம் ஆண்டு பதவியேற்றார். இவர் ஸ்டான்போர்டு (Stanford) பல்கலைக் கழகத்தில் பயின்று பொறியியல் பட்டம் பெற்றார். குடியரசுக் கட்சியைச் சார்ந்த அவர், பதவியேற்றபோது நாடு செழிப்பான நிலையில் காணப்பட்டது. "நாம் எந்த நாட்டிலும் கண்டிராத வகையில் அமெரிக்காவில் வறுமை என்பதனை அடியோடு ஒழிக்கும் முயற்சியின் இறுதிக் கட்டத்தில் உள்ளோம்" என்று பெருமிதத்தோடு ஹீவர் கூறினார். ஆனால் அவர் எண்ணியபடி நடைபெறவில்லை.

அமெரிக்காவில் வியக்கத்தக்க முறையில் 1919ஆம் ஆண்டு முதல், 1929ஆம் ஆண்டு வரை வாணிகம் பன்மடங்காகப் பெருகி வலுப்படுத்தப்பட்டது. நாட்டின் தொழில் வளத்தைக் கண்ட பொருளாதார நிபுணர்கள் அதனூடே மறைந்து கிடந்த வாணிகச் சூதாட்டத்தின் தன்மையை உணரவில்லை. தொழில் வளத்தின் விளைவாக மக்களிடத்து அதிக பணம் இருந்து வளமாக வாழும் போது பங்குகளின் விலை உயர்ந்து கொண்டே போனால் அது நல்ல அறிகுறியாகும். அப்படிப்பட்ட நேரத்தில் உடனடியாகப் பெரும் செல்வத்தை ஈட்ட மக்களது மனதில் ஓர் ஆசை தோன்றுவது இயற்கைதான். அத்தகைய மனப்பான்மையினால் பங்கு மாற்றுக்களத்தில் (Exchange Market) பரபரப்பான விற்பனை ஏற்படும். அதிக விலை கொடுத்து மக்கள் பங்குகளை விலைக்கு வாங்குவதற்குப் போட்டியிடலாயினர். தங்களுக்கு ஆதாயப் பங்கு கிட்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் பங்குகளை வாங்கவில்லை. வாங்கிய பங்குகளை விலைக்கூட்டி மறுபடியும் அவற்றை விற்று ஊதியம் பெறவே அவ்வாறு செய்தனர். இதனால் பங்குகளின் விலையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. ஊக வெறிபிடித்த மக்கள் தங்களுடைய போர்க்காலப் பத்திரங்களை விற்றும், வீடுகளை அடமானம் வைத்தும் பங்குகளை வாங்கி ஊதியத்தோடு விற்றும், பொருளீட்டலாயினர். பங்குகளை விற்கும் சந்தையினை எவ்வகையிலும் கூட்டாட்சி அரசு கட்டுப்படுத்தவில்லை. கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களும் இயற்றப்படவில்லை.

முற்றிலும் திடுக்கிடும் ஒரு செயல் 1929ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 29ஆம் நாள் நடைபெற்றது. 24ஆம் நாள் வெறிபிடித்த நிலையில் 12 மில்லியன் பங்குகள் விற்கப்பட்டு வாங்கப்பட்டன. 29ஆம் நாள் திடீரென்று பிரசித்தி பெற்ற நிறுவனங்களின் பங்குகளின் விலை சரியலாயிற்று. இதனைக் கண்ட மக்கள் பீதியுற்றனர். உடனே அனைவரும் தாங்கள் வாங்கிய பங்குகளை விற்கலாயினர். இரண்டு நாட்களில் பெரும் இழப்போடு 16 மில்லியன் பங்குகள் விற்கப்பட்டன. பங்கு உரிமையாளர்கள் 15 மில்லியன் டாலர் கணக்களவில் இழந்தனர். அவ்வாண்டின் இறுதியில் எல்லா வகையான கடனீட்டுப் பத்திரங்களின் தொகை 40 மில்லியன் டாலராக உயர்ந்தது. பல்லாயிரக் கணக்கான முதலீட்டாளர் தங்களுடைய வாழ்நாள் சேமிப்பு அனைத்தையும் இழந்தனர். வாணிபப் பெருமந்தம் இவ்வளவில் முடிவு பெறவில்லை. வாணிக நிறுவனங்களும் பெரும் தொழிற்சாலைகளும் இழுத்து மூடப்பட்டன. வங்கிகள் முறிந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலை இழந்தனர். வேலையில்லாமல் மக்கள் தெருக்களில் வேலைக்காக அலைந்தனர். அநேக குடும்பங்கள் தங்கள் இல்லங்களை இழந்தன. வசூலிக்கப்படும் வரித்தொகையும் குறையலாயிற்று. அதனால் தல ஆட்சி நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு ஊதியம் அளிக்க முடியாது தவித்தன. எல்லாத்திட்ட வேலைகளும் நிறுத்தப்பட்டன. ஏற்கனவே தாழ்வுற்றிருந்த வெளிநாட்டு வாணிகம் மிக மிகத் தாழ்வான நிலையை அடைந்தது.

பெருமந்தம் ஏற்படுவதற்கானக் காரணங்கள்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உற்பத்தித்திறன் வாங்கும் திறனைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாக இருந்தது, பெருமந்தத்திற்கு முதல் காரணமாகும். நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி ஒரு குறிப்பிட்ட சிலருடைய கைக்குத்தான் சென்றது.

ஆதாயப் பணத்தில் (Dividends) 78 சதவீதம் 3 சதவீத மக்களுக்குச் சென்றது. அச்சிறு பான்மையினர் தாங்கள் பெற்ற ஆதாயத்தைச் சேமித்து வைத்தனர்; அல்லது மீண்டும் புதிய தொழில் உற்பத்தியில் முதலீடு செய்தனர். எனவே நாட்டின் வருமானத்தின் பெரும் பங்கினை சாதாரண தொழிலாளர்களும், குடியானவர்களும், அலுவலகப் பணியாளர்களும் பெறமுடியாத நிலை இருந்து வந்தது. எனவே அவர்களெல்லாம் தாராளமாகப் பணம் செலவழித்துப் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்க முடியாத நிலையில் இருந்தனர். அவர்களது வாங்கும் சக்தியின் அடிப்படையில் தான் நாட்டின் பொருளாதாரமே இயங்கி வந்தது. இவ்வாறு வாங்கும் சக்தியைத் தடை செய்து சேமிப்பு சக்தியை வளர்த்தால், பொருளாதாரத்தில் இடர்பாடு ஏற்படுவது உறுதியாகும். அதிக வருவாயைப் பெறும் மக்கள் பணத்தை சேமித்து வைத்ததுபோல, மாபெரும் வாணிகக்கூட்டு நிறுவனங்களும், தாம் பெற்ற வருமானத்தைப் பங்குதாரர் களுக்கும், தொழிலாளர்களுக்கும் பங்கிட்டுத் தராமல் முடக்கி வைத்தன.

அமெரிக்க கூட்டாட்சி அரசின் போர்க்காலக் கடன் கொள்கையாலும், காப்பு வரிகளாலும், வெளிநாட்டு வியாபாரம் பெரிதும் தடைப்பட்டது. போருக்குப் பின்பு வெளிநாடுகளில் நிலவிய பொருளாதார மந்தத்தினால் அமெரிக்கப் பொருட்களுக்குத் தேவையில்லாது போகவே வெளிநாட்டு வாணிபம் முற்றிலும் வீழ்ச்சியுற்றது. முதல் உலகப் போருக்குப் பின்பு, அமெரிக்க ஐக்கிய நாடு வெளிநாட்டு வாணிக நிலையில் ஒரு கடன்பட்ட நாடாகவே இருந்து வந்தது. அமெரிக்க மக்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்ததைவிட வெளிநாட்டவர் அமெரிக்காவில் அதிக அளவில் முதலீடு செய்திருந்தனர். வெளிநாட்டவர்கள் முதலீடு செய்திருந்த தொகையினையெல்லாம் அந்நாடுகள் பெற்ற கடனுக்காகச் செலுத்தித் தீர்த்து விட்டனர். எனவே போர் முடிவுற்ற போது அமெரிக்க ஐக்கிய நாடு உலகில் கடன் கொடுத்த நாடுகளின் வரிசையில் முதலிடத்தைப் பெற்றிருந்தது. அமெரிக்கா கடன்பட்ட நாடாக இருந்தபோது, கடன் கொடுத்த வெளிநாடுகள் ஏராளமாக அமெரிக்கச் செய்பொருட்களை வாங்கிக் கொண்டன. அதனால் பெற்ற பணத்தைக் கொண்டே அமெரிக்கா வெளிநாட்டுக் கடன்களை அடைத்தும் வந்தது. இவ்வகையில் அமெரிக்கா தேவைக்கு மேற்பட்ட சரக்கு களையும், தேவைக்கு மேற்பட்ட பணத்தையும் தள்ளிக் கழித்து வந்தது. இத்தகைய நிலையை நிலையான அடிப்படையில் அமெரிக்கா பின்பற்ற முடியவில்லை. அமெரிக்கா கடன் கொடுத்த நாடாக மாறியமையால் கடன்பட்ட நாடுகள் அமெரிக்கச் சரக்குகளை வாங்குவதைத் தவிர்த்து, சிக்கனமாக இருந்து கடனுக்கான வட்டியைச் செலுத்துவதில் நாட்டங் கொண்டன. 1929ஆம் ஆண்டளவில் பழைய கடன்கள் மீது வெளிநாட்டவர்கள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையானது புதிதாக வழங்கப்பட்ட கடன்களின் முதல் தொகையைவிடக் கூடுதலாயிருந்தது. இதனால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏற்றுமதி வாணிகம் தடைப்பட்டு பொருளாதார மந்தத்திற்கு ஒரு காரணமாக இருந்தது.

கடன் அளிக்கும் கொள்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக, மக்கள் சக்திக்கு மீறிப் பெருமளவில் கடன் வாங்கலாயினர். இதனால் தவணை முறையிலான விற்பனையும், கட்டுப்பாடற்ற ஊகவாணிகமும் பெருகின. நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு சிறிய தொகையை முதலில் செலுத்திவிட்டு ஊர்திகள், குளிர் சாதன்ப்பெட்டி முதலிய விலையுயர்ந்த பொருட்களை வாங்கிவிட்டு அவற்றுக்கான

தொகையைப் பல ஆண்டுகள் தவணை முறையில் செலுத்த சலுகை பெற்றனர். வேறு வகையிலும் கடன் கொடுக்கும் முறை பெருகியிருந்தது. 1930ஆம் ஆண்டளவில் அனைவரும் ஒருவரிடமாவது கடன் பெற்றிருந்த நிலை உருவாகியிருந்தது. இக்கடன் முறை பொருளாதாரத் துறையில் மந்த நிலையினை எந்த நொடியிலும் ஏற்படுத்த வலிமை பெற்றிருந்தது. ஏனெனில் எங்காவது ஒருவர் வாங்கியக் கடனைத் திருப்பித்தரத் தவறினால் பொருளாதார நிலை அட்டைவீட்டைப் போல் சரிந்து விடும்.

முதலாம் உலகப் போருக்குப் பின்பு அமெரிக்காவில் ஏற்பட்ட செல்வ வளத்தில் குடியான்னவர்களுக்குப் பங்கு இல்லாமலேயே இருந்தது. போரின்போது ஏற்பட்ட விவசாய உற்பத்திப் பெருக்கம், திடீரென 1921ஆம் ஆண்டு வீழ்ச்சியுற்றது. உணவுப் பொருட்களின் விலை 44 சதவீதம் சரிந்தது. குடியானவர்கள் இவ்வீழ்ச்சியினின்றும் எழுச்சி பெறவில்லை. வெளிநாட்டு வாணிகமும் குறைந்தமையால், தேவைக்கு மேற்பட்ட உற்பத்தி நிலையே விவசாயத்தில் நீடித்தது. அதனால் தானியங்களின் விலை மிகழ்தாழ்வான நிலைக்குச் சென்றது. குடியானவர்கள் தாங்கள் முன்பு வாங்கிய கடனை அடைக்க முடியாமல் திண்டாடினர். தங்கள் சொத்து சுகத்தை இழந்தனர். தென்பகுதியில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் பட்டினியால் வாடின.

விடாக் கண்டிப்பான விலை முறையும் ஓரளவு பொருளாதார மந்தத்திற்குக் காரணமாகும். கண்டிப்பான விலைமுறைக் கொள்கையினால் குறுகிய நேரத்தில் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய வகையில் பொருளாதார நிலைமை இயங்க முடியாமல் போயிற்று. சரக்குகளின் விலையைக் குறைத்துக்கொண்டு உற்பத்தியினை அப்படியே வைத்துக் கொள்ளாமல், தொழிலதிபர்கள் விலையினை அப்படியே வைத்துக்கொண்டு உற்பத்தியினைக் குறைத்தனர். ஆகையால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகியது.

1920ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டில் முன்னால் கண்டிராத அளவுக்கு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது; ஊகவாணிகம் பெருகியது; கடன் தொகை அதிகரித்துக் கொண்டே சென்றது. 'உறுதியான நம்பிக்கை' என்ற உணர்வு மறைந்து வீழ்ச்சி ஏற்பட்டதும், வணிகர்கள் பெரும் இழப்பிற்கு ஆளாயினர். இதனால், அமெரிக்க மக்களிடத்துப் புறத்தே காணப்பட்ட உலோகாயுத (Material) இழப்பைவிட, மனதில் ஏற்பட்ட ஆன்ம இயலான (Spiritual) இழப்பே கூடுதலாகக் காணப்பட்டது. திடீரென்று செல்வச் செழிப்பிலிருந்து ஏழ்மை நிலைக்கு வந்துற்றமையால் மக்கள் தன்னம்பிக்கை இழந்தனர்.

பெருமந்தத்தின் விளைவுகள்

தொழில் நிறுவனங்கள் பொருட்களின் விலையைக் குறைப்பதற்குப் பதிலாக உற்பத்தியைக் குறைத்தன. உற்பத்தி குறைக்கப்பட்டமையால் தொழிலாளர்கள் வேலையினின்றும் விலக்கப்பட்டனர். 16 மில்லியன் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். பல தனியுரிமைக் கூட்டு நிறுவனங்கள் மறைந்தன. 4500 வங்கிகள் முறிவுற்றன. விவசாய உற்பத்தி 6 சதவீதமே குறைந்தது. ஆனால் விவசாயப் பொருட்களின் விலையோ 63 சதவீதம் குறைந்தது.

19ஆம் நூற்றாண்டில் ஐந்து முறை பெரும் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்தது. ஆனால் ஒவ்வொரு முறையும் வாணிபம் தானாக மீட்பு பெறும். ஆனால் 1929ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார மந்தம் ஏறத்தாழப் பத்தாண்டுக் காலம் நீடித்தது. இதற்கு முன் ஏற்பட்ட மந்த நிலைக்கெல்லாம் நாட்டின் தேவை காரணமாக இருந்தது. ஆனால் 1929ஆம் ஆண்டு ஏற்பட்ட மந்தம் செல்வச் செழிப்பின் காரணமாக அமைந்திருந்தது.

அமெரிக்க மக்கள் குடியரசுக் கட்சியின் மீது நம்பிக்கை இழந்தனர். பலர் மக்களாட்சிக் கட்சியில் சேர்ந்தனர். பெருமந்தத்தினால் உருவாகியிருந்த பொருளாதார நிலையினை முறையாகத் திட்டமிட்டு செயலாற்றினால்தான் சீர்திருத்த முடியுமெனச் செய்தித்தாள் ஆசிரியர்களும், பேராசிரியர்களும், பொருளாதார நிபுணர்களும் கருத்துத் தெரிவித்தனர். ஒரு சிலர் சமதர்மக் கொள்கையினையும், வேறு சிலர் பொதுவுடைமைக் கொள்கையினையும் பின்பற்ற வேண்டுமெனக் கூறினர். நாட்டில் பொதுவுடைமைக் கொள்கைக்குச் சிறிது ஆதரவு கிட்டியது. இப்பெருமந்தத்தின் விளைவாக ஐரோப்பாவில் பல அரசியல் கோட்பாடுகள் வீழ்ச்சியுற்றன. தாராளக் கோட்பாடும், மக்களாட்சிக் கோட்பாடும், முதலாளித்துவக் கோட்பாடும், ஐரோப்பாவினின்று மறைந்தன. இத்தாலியும், ஜெர்மனியும் எதேச்சாதிகார நாடுகளாக மாறின.

ஹூவரது சீர்திருத்தங்கள்

பெருமந்தத்தின் இடர்ப்பாடு மிகுந்த நேரத்தில் ஹூவர் குடியரசுத் தலைவராகப் பணிபுரிந்தார். 1929ஆம் ஆண்டுப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்ட போது வழக்கமாக முன்பெல்லாம் நிகழ்ந்தது போல தனியார் முயற்சியால் நிலைமை திருந்தும் என ஹூவர் எதிர்பார்த்தார். மக்கள் தமக்குத் தாமே உதவி புரிந்து கொள்ள வேண்டுமென்றும், தாமாகவே இயங்கும் அற நிலையங்கள் இடர்காப்புறுதி வேலையில் ஈடுபட வேண்டுமென்றும், ஹூவர் எண்ணினார். பொருளாதாரச் சீர்குலைவு தற்காலிகமானது என்று மக்களுக்கு ஆறுதல் கூறினார். அமெரிக்க வாணிக முறையில் தவறுகள் ஏதும் இல்லையென்றும், விரைவில் வாணிகம் பழைய நிலைக்குத் திரும்பும் என்றும் ஹூவர் கூறினார். ஆனால் அவர் நினைத்தபடி. பொருளாதார மந்தத்தில் மாற்றம் ஏதும் காணப்படவில்லை.

வெளிநாடுகளுக்கு ஆப்பிள் ஏற்றுமதி செய்யும் கழகம் 1930ஆம் ஆண்டு வேலையற்றோருக்கு வேலையளிக்கும் திட்டத்தை ஏற்படுத்தியது. ஏற்றுமதி செய்தது போக மிகுதியாக இருந்த ஆப்பிளை வேலையற்றோருக்கு அளித்து, அவற்றை விற்பனை செய்து அதனால் வரும் வருவாயைக் கொண்டு அவர்களே தங்களைப் பராமரித்துக் கொள்ள அத்திட்டம் வழி வகுத்தது. நியூயார்க், சிக்காக்கோ போன்ற பெரிய நகரங்களில் ஆயிரக்கணக்கான பேர் ஆப்பிள் விற்கலாயினர். இத்திட்டத்தால் ஒரு சிலரே நன்மை பெற்றனர். இருப்பினும், வேலை வாய்ப்புக்காக அரசையே நாடாமல் அமெரிக்க மக்கள் இயன்றவரைத் தாங்களே பொறுப்புடன் செயலாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலர் தங்கள் வீடுகளை இழக்க நேரிட்டது. அம்மக்கள் நியூயார்க் போன்ற மாபெரும் நகரங்களில், சுரங்க இரயில் பாதை நிலையங்களில் தங்கலாயினர். பிற இடங்களில் மூடப்பட்ட தொழிற்சாலைகளிலும் வேலையற்றிருந்த சரக்கு ரயில் பெட்டிகளிலும் தகரம், அட்டை இவற்றாலான சிறிய குடில்களிலும் ஏழைகள் வாழலாயினர். ஒரு சில மக்கள் உண்ண உணவின்றி உயிர் நீத்தனர். தனியார் அறநிலையங்கள் ஒவ்வொரு ஊரிலும் பசியால் வாடினோர்க்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவியளித்திட முன் வந்தன. பல கிறித்துவ நிலையங்களும், சமூக மைய நிலையங்களும் செஞ்சிலுவைச் சங்கமும் மக்களுக்கு இயன்ற உதவி செய்தருளின. பசிப்பிணியைத் தீர்க்க பாமர மக்களுக்கு கஞ்சித் தொட்டிகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. கஞ்சி ஊற்றுவதோடு, ரொட்டியும் இலவசமாக அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டாட்சி அரசு குடியானவர்களுக்கும், வணிகர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தங்கள் தொல்லைகளிலிருந்து விடுதலை கிடைக்கக்கூடிய வகையில் சில சீர்திருத்தத் திட்டங்களை வகுத்தது. ஆனால் நாளுக்கு நாள் வாணிக நெருக்கடி மோசமாகிக் கொண்டே சென்றது. வெகு சீக்கிரம் பொது மக்கள் ஹீவரது ஆட்சியின் மீது நம்பிக்கை இழந்தனர். ஹீவர் பெருமந்தத்தைச் சமாளிக்க எவ்வித பெரிய திட்டத்தினையும் மேற்கொள்ளவில்லை. 1930ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரதிநிதிகள் சபைக்கு மக்களாட்சிக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களைப் பெற்று விட்டனர். மேல் சபையான செனட் சபையிலும் இரு கட்சிகளுக்குமிடையே பெரும்பாலும் சமநிலை ஏற்பட்டது. மக்களாட்சிக் கட்சியினர் குடியரசுக் கட்சியினரை பல வகையிலும் வன்மையாகத் தாக்க முன் வந்தனர். இருப்பினும் குடியரசுக் கட்சியை சார்ந்த ஹூவர் சில சிறப்பான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தார்.

குடியானவர்களின் நன்மைக்காக 1929இல் வேளாண்மைப் பொருள் விற்பனைச் சட்டம் (Agricultural Marketing Act) இயற்றப்பட்டு வேளாண்மைப் பொருட்களின் விலை மேலும் சரியாமல் பாதுகாக்கப்பட்டது. மிகுதியான விளை பொருட்களை விளைவிக்காமலிருக்க இச்சட்டம் தடை செய்தது. கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக வேளாண்மைப் பொருட்களை வாங்கி விற்க கூட்டாட்சிப் பண்ணைக் குழு (Federal Farm Board) ஒன்று அமைக்கப்பட்டது. மிகுதியாக விளைந்த பொருட்களை வாங்கி விற்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு இக்குழு குறைந்த வட்டியில் கடன் வழங்கியது. இத்திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு 300 மில்லியன் டாலர் ஒதுக்கப்பட்டது. குடியானவர்களின் பெருமந்த நிலை மிகவும் மோசமானதாக இருந்தமையால், கூட்டாட்சி அரசு கடனளித்தும், அவர்கள் நிலை சற்றேனும் மாறவில்லை. வேளாண்மைப் பொருட்களின் விலையும் குறைந்த வண்ணமாகவே இருந்தது.

நாட்டின் தொழிற் உற்பத்தியை மறுபடியும் ஊக்குவிக்கும் பொருட்டு ஹூவர் "புனரமைப்பு நிதி நிறுவனம்" (Reconstruction Finance Corporation) ஒன்றை ஏற்படுத்தினார். பொது மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள் மீதான செலவை இரண்டு மடங்காக ஹூவர் உயர்த்தினார். கடனுதவி அளிப்பதையும் விரிவாக்கினார். வாணிகத்தின் மீது நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்று ஹூவர் வலியுறுத்தினார். புனரமைப்பு நிதி நிறுவனம் கூட்டாட்சி அரசின் நிதித் தொகையை

தனியார் வாணிப முயற்சிகளுக்கு அளிக்கலாயிற்று. வங்கிகளுக்கும், காப்பீட்டுக் கழகங்களுக்கும், வீடு கட்டும் சங்கங்களுக்கும், கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் ரயில் பாதை நிறுவனங்களுக்கும் கடன் தந்துதவ 2 மில்லியன் டாலர் தொகையைக் காங்கிரஸ் தந்துதவியது. இதன் பயனாக பல நிறுவனங்கள் நொடிவது தடுக்கப் பெற்றது. கடன் பெற்ற நிறுவனங்கள் யாவும் இயங்கத் துவங்கியமையால் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகின. அதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாயிற்று.

1932இல் ஹூவர் மீண்டும் குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டார். ஆனால் அவர் தோற்கடிக்கப்பட்டார். அவருக்கு எதிராகப் போட்டியிட்டவர் மக்களாட்சிக் கட்சியைச் சார்ந்த நியூயார்க் ஆளுநரான பிராங்கிளின் டெலனோ ரூஸ்வெல்ட் (Franklin Delano Roosevelt) என்பவராவார். தேர்தல் குழுவின் வாக்குகளில் ரூஸ்வெல்டுக்கு 472 வாக்குகளும், ஹீவருக்கு 59 வாக்குகளும் கிடைத்தன. மக்களது வாக்கில் ரூஸ்வெட்டுக்கு ஹீவரைக் காட்டிலும் 7 மில்லியன் வாக்குகள் கூடுதலாகக் கிடைத்தன. மக்களாட்சிக் கட்சியினர், குடியரசுத் தலைவர் பதவியைக் கைப்பற்றியதோடு காங்கிரஸின் இரு சபைகளையும் கைப்பற்றினர்.

பயிற்சி வினா

பெருமந்தத்திற்கான காரணங்களைக் கூறி அதன் போக்கையும், விளைவுகளையும் எடுத்துக் கூறுக.

பாடம் – 27 புதிய சீரமைப்புத் திட்டம்

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தமது தேர்தல் சொற்பொழிவுகளில் புனரமைப்புத் திட்டங்களின் அடிப்படைகளை ஆங்காங்கே எடுத்துக் கூறினார். சமுதாயத்தில் "மறக்கப்பட்ட மனிதனுக்கு" ஒரு "புது வாழ்வை" அளிக்க வேண்டுமென்றும், அது அரசின் கடமை என்றும் ரூஸ்வெல்ட் கருதினார். ரூஸ்வெல்ட் நியூயார்க்கில் வாழ்ந்து வந்த ஓர் உயர் குடும்பத்தில் 1882ஆம் ஆண்டு பிறந்தார். ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பின்பு கொலம்பியா சட்டப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து சட்டக்கல்வி பயின்றார். வக்கீலாக நியூயார்க்கில் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். தமது 28ஆம் வயதில் நியூயார்க்கின் பிரதிநிதியாக செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உட்ரோ வில்சன் குடியரசுத் தலைவராகப் பணியாற்றும் போது ரூஸ்வெல்ட் கப்பற்படைத் துறையில் துணைச் செயலாளராக பணியாற்றினார். முதலாம் உலகப் போரின் போது இப்பதவியை ரூஸ்வெல்ட் வகித்து வந்தார். 1920ஆம் ஆண்டில் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோற்றார். 1921ஆம் ஆண்டில் அவரை இளம்பிள்ளைவாதப் பிணி பற்றிக் கொண்டது. அதனால் ஊனமுற்ற போதிலும், உள்ள உரம் வாய்ந்த ரூஸ்வெல்ட் அப்பிணியை விரட்டியடிப்பேன் என்று கூறி மீண்டும் அரசியலில் பங்கெடுத்தார். 1928, 1930 ஆண்டுகளில் நியூயார்க்கில் ஆளுநராக தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1932இல் ரூஸ்வெல்ட் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் பல முறைகள் குடியரசுத் தலைவராக பணியாற்றினார். நல்லவிதமாக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது 1945ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ஆம் நாள் உயிர் நீத்தார்.

ரூஸ்வெல்ட் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் ஒரு இக்கட்டான நேரத்தில் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தார். ஆனால் அப்பொறுப்பை ஏற்க அவருக்கு அறிவும் போதிய அனுபவமும் இருந்தன. நாட்டின் பெருஞ் சிக்கலைத் தெளிவுற ஆராய்ந்து பார்க்கும் திறனை ரூஸ்வெல்ட் பெற்றிருந்தார். தமது பதவியேற்பு விழாவின்போது சிறந்த ஒரு சொற்பொழிவை ரூஸ்வெல்ட் நிகழ்த்தினார். மக்களுக்கு தைரியம் ஊட்டும் வண்ணம் நாடு பொருளாதார அடிப்படையில் நல்ல நிலையில் இருக்கிறதென நம்பிக்கையோடு கூறினார். "நாம் அச்சத்தைக் கண்டுதான் அஞ்சவேண்டியுள்ளது" என்றும் கூறினார். பின்பு பெருமந்தத்தை விரட்டியடிக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட தனது புதிய சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை வெளியிட்டார். நாட்டில் விவசாய உற்பத்தியையும் தொழில் உற்பத்தியையும் சமநிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்றும், வங்கிகளின் நடைமுறையினை மேற்பார்வையிட வேண்டுமென்றும், அமெரிக்க ஐக்கிய நாட்டு வெளிநாட்டு பொருளாதார உறவினை சீர்படுத்த வேண்டுமென்றும், அண்மை நாடுகளுடன் நல்லுறவு கொள்ளவேண்டுமென்றும், அமெரிக்க ஐக்கிய நாடு ஓர் உலக வல்லரசு நாட்டுக்குரிய பொறுப்புக்களை எடுத்து நடத்த வேண்டுமென்றும், ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். அத்தகைய சீரமைப்புத் திட்டம் நெடு நாட்களுக்கு முன்பே செயலாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பத்தாண்டு காலம் அரசியல்வாதிகள் வேண்டுமென்றே ஒழுங்கற்ற

முறையில் ஆட்சியை நடத்தியமையால் வணிகர்கள் தங்கள் விருப்பப்படி சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டனர். மக்களாட்சி விதிமுறைப்படி இனி அரசு ஆட்சி புரியுமென ரூஸ்வெல்ட் உறுதியளித்தார்.

புதிய சீரமைப்புத்திட்டம் புரட்சிகரமானதா அல்லது படிமுறையானதா? (Revolutionary or Evolutionary)

ரூஸ்வெல்ட்டின் பதவிக் காலத்தில் வாழ்ந்த மக்கள் பலருக்குப் புதிய சீரமைப்புத் திட்டம் புரட்சிகரமானதாகக் காட்சியளித்தது. ஆனால் நடைமுறையில் அத்திட்டம் பழமையான நன்மையுடையதாகவே அமைந்திருந்தது. அரசியலமைப்பின் அடிப்படையில் எல்லோருடைய நலனையும் பேணுதல், மக்களது உயிரினையும், உடமையினையும் பாதுகாத்தல், மக்களது உரிமைகளை நிலைநாட்டல் போன்ற அமெரிக்கக் குடியாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை இடதுசாரி, வலதுசாரி தாக்குதல்களினின்றும் காப்பதற்காகவே இத்திட்டம் பாடுபட்டது. தத்துவ அடிப்படையில் புதிய சீரமைப்புத் திட்டம், மக்களின் நலனுக்காகத் தீட்டப்பட்டது. ஆனால் அத்திட்டம் செயல் முறைக்குக் கொண்டு வரப்பட்டதும் படி முறையானதாகவே அமைந்திருந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் சுமார் 15 ஆண்டுகளாகச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்படாமலேயே இருந்தது. எனவே, ரூஸ்வெல்ட் பதவியேற்றதும், வேகமாகப் பல சட்டங்கள் இயற்றப்படுவதைக் கண்ட சிலர் நாட்டில் ஏதோ ஒரு புரட்சி நடப்பதைப்போல உணர்ந்தனர். ஆனால் இறுதியில் சற்று ஆராய்ந்து நோக்கிய போது அச்சட்டங்களில் புதிதாக ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதனையும் மக்கள் நன்கு உணர்ந்தனர். நாட்டு வளப்பாதுகாப்புக்கான கொள்கையினை முன்னரே தியோடர் ரூஸ்வெல்ட் வகுத்து விட்டுச் சென்றிருந்தார். ரயில் பாதை நிறுவனங்களையும், வாணிபக் கூட்டு நிறுவனங்களையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. வங்கிகளையும், பணத்தாள் புழக்கத்தினையும் கட்டுப்படுத்துவதில் ஏற்கனவே வில்சன் ஓரளவு வெற்றி கண்டிருந்தார். விவசாயச் சீர்திருத்தத் திட்டங்களை முன்பே பாபுலிஸ்ட் (Populist) கட்சியினர் வகுத்து வழிகாட்டியிருந்தனர். வெளிநாட்டுறவிலும், நாட்டின் பாதுகாப்பினை வலுப்படுத்துதல், கடல்களில் உரிமை நாட்டல், சட்டத்திற்கும் அமைதிக்கும் ஆதரவு அளித்தல், மேலை நாடுகளில் மக்களாட்சியைக் காத்தல் போன்ற பழைய மரபுக் கொள்கைகளின் தொடர்ச்சியாகவே, புதிய சீரமைப்புத் திட்டத்தின் வெளிநாட்டுக் கொள்கையும் அமைந்திருந்தது.

அறிவாற்றல் மிக்கோர் குழு (The `Brain Trust')

மந்த நிலையைச் சீர்படுத்த எத்தகைய திட்டங்களை பின்பற்ற வேண்டுமென்பது பற்றி கருத்துரை வழங்கவும், தமக்கு சொற்பொழிவு நிகழ்த்த உரைகளைத் தயாரித்து அளிக்கவும், ரூஸ்வெல்ட் கல்லூரிப் பேராசிரியர்கள் அடங்கிய ஒரு குழுவினை நிய மித்தார். பல பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும், வழக்கறிஞர்களையும், சமூக நல ஊழியர்களையும் அழைத்துப் பேசி, அவர்களிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றார். எனவே அவரைச் சுற்றி அறிவாற்றல் மிக்கோர் குழு எப்பொழுதும் இயங்கிற்று.

தமது அமைச்சரவையிலும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களையே அதிகமாக சேர்த்துக் கொண்டார். 1933ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 4ஆம் நாள் ரூஸ்வெல்ட் பதவியேற்ற போது நாட்டின் பொருளாதாரத் துறை சீர்குலைந்து வீழ்ச்சியுற்றிருந்தது. மார்ச்சு திங்கள் 9ஆம் நாள் காங்கிரசின் சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அடுத்த நூறு நாட்களில் (ஜூன் 16 வரை) காங்கிரஸ் முக்கியமான சில சட்டதிட்டங்களையெல்லாம் குடியரசுத் தலைவர் விருப்பப்படி உடனுக்குடன் தீட்டித் தந்தது. அச்சிறப்பு மிக்க நூறு நாட்களில் என்றும் கண்டிராத அளவிற்கு காங்கிரசுக்கும் ஆட்சித்துறைக்குமிடையே பரிபூரண ஒத்துழைப்பு காணப்பட்டது.

அவசர கால வங்கிச் சட்டம் (Emergency Banking Act)

மக்கள் வங்கிகளின்பால் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்த காரணத்தால் தொடர்ந்து வங்கிகளிலிருந்து பணத்தைத் திருப்பிப் பெற்றனர். இதனால் பல வங்கிகள் வேலை செய்வதை நிறுத்தின. வங்கி முறை நாட்டினில் வீழ்ச்சியுறக் கூடுமென அஞ்சிய ரூஸ்வெல்ட் மார்ச்சு 5 முதல் 9 வரை வங்கி விடுமுறை அறிவித்தார். தேசிய வங்கிகள் அனைத்தும் அவற்றோடு இணைந்து செயல்பட்ட இதர சிறிய வங்கிகளும் இழுத்து மூடப்பட்டன. காங்கிரஸ் அவசர வங்கிச் சட்டமொன்றை விரைவில் இயற்றியது. அதன்படி நொடித்துப்போன வங்கிகளைச் சீர்திருத்தியமைக்கும் பொறுப்பு குடியரசுத் தலைவரிடம் விடப்பட்டது. இவ்வகையில் கூட்டாட்சி அரசு நாடு முழுவதிலும் இயங்கி வந்த வங்கிகளின் மீது உடனடியாகக் கட்டுப்பாட்டை விதித்தன.

12 கூட்டாட்சி வங்கிகளும், அவ்வங்கிகள் இருந்த நகரங்களிலுள்ள பிற சீர்மிக்க வங்கிகளும் விடுமுறைக்குப் பிறகு திறக்கப்பட்டன. தேவைக்கு வேண்டிய பணத் தாளினைப் பிற வங்கிகள் கூட்டாட்சி ஒதுக்கீடு வங்கிகளினின்று கடனாகப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. அக்கடன் நிலையான சொத்தின் கூறு மீதுதான் வழங்கப் பட்டது, பொதுவாக வங்கிகளின் மீது பல குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. நிதித்துறை செயலாளரது இசைவின்றி வங்கிகள் தங்கம், தங்கக்கட்டிகள், தங்கப் பத்திரங்கள் ஆகியவற்றை விற்கக் கூடாதென தடை விதிக்கப்பட்டது. தங்கத்தை எவரும் மறைத்து வைக்கவோ, ஏற்றுமதி செய்யவோ கூடாதென்றும் தடை விதிக்கப்பட்டது.

கிளாஸ் - ஸ்டீகல் பாங்கு முறைச் சட்டப்படி (The Glass - Steagall Banking Act 1933) தேசிய பாங்குகளுக்கு, கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்த கூடுதலான அதிகாரம் தரப்பட்டது. கூட்டாட்சி வங்கிகளின் உறுப்பினர் வங்கிகள் தாம் விருப்பப்படியெல்லாம் ஊகம் செய்து கடனளிப்பது தடை செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி, கூட்டாட்சி வைப்பு நிதி காப்பீட்டுக் கழகம் (Federal Deposit Insurance Corporation) ஒன்று அமைக்கப்பட்டது. இக்கழகத்தை எல்லா வங்கிகளும் சேர்ந்து முதலீடு செய்து உருவாக்கின. பத்தாயிரம் டாலர் வரை சேமித்து வைத்திருந்தவர்களின் சேமிப்பெல்லாம் காப்பீடு செய்யப்பட்டது.

1934ஆம் ஆண்டு தங்க ஒதுக்கீடு சட்டமொன்று (Gold Reserve Act) இயற்றப்பட்டது. அச்சட்டப்படி கூட்டாட்சி ஒதுக்கீடு வங்கிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தங்கமெல்லாம் கருவூலத்திற்கு மாற்றப்பட்டது; அதற்கு ஈடாக டாலர் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலும் தங்க நாணய ஏற்பளவை (Gold Standard) முறை கைவிடப்பட்டது. புழக்கத்திலிருந்த தங்க நாணயங்கள் திரும்பிப் பெறப்பட்டன. ஒரு டாலரின் தங்க மதிப்பும் குறைக்கப்பட்டு 59.06 சென்ட்டாக நிர்ணயிக்கப்பட்டது. நாட்டில் நிலவிய பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த டாலரின் மதிப்பும் குறைக்கப்பட்டது. இதனால் பொருட்களின் விலை உயர வாய்ப்பு ஏற்பட்டது.

1934இல் கடனீட்டுப் பத்திரம் மற்றும் நாணய மாற்றுச் சட்டம் ஒன்று (The Securities and Exchange Act) இயற்றப்பட்டது. அதன்படி கடனீட்டுப் பத்திரம், மற்றும் நாணயம் மாற்றுக் குழு ஒன்றும் (Securities Exchange Commission) ஏற்படுத்தப்பட்டது. இக்குழு ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்தியது. பங்குகளை 55 சதவீத விலைக்கும் குறைவாக விற்கவோ வாங்கவோ கூடாதென தடை விதிக்கப்பட்டது. கடனீட்டுப் பத்திரங்களின் விற்பனையும், மாற்று முறையும் வரையறைப் படுத்தப்பட்டதால், முதலீட்டார்க்குப் பாதுகாப்பு கிடைத்தது. வீலர்-ரேபர்ன் சட்டப்படி (Wheeler-Rayburn Act 1935) இக்குழு பொது மக்களின் நலனுக்காக இயங்கிய நிறுவனங்களின் பங்குகளை வைத்திருந்த நிலையங்களையும் கட்டுப்படுத்த அதிகாரம் பெற்றது.

வங்கிகளின் நடவடிக்கைகளை வரையறை செய்யும் வகையில் இயற்றப்பட்ட இச்சட்டங்களால் நாட்டின் பணத்தாள் புழக்கம் சீர்பெற்றது; மக்கள் வங்கிகள் மீது நம்பிக்கை கொண்டனர். உள்நாட்டு பொருட்களின் விலை அதிகரிக்கத் தொடங்கியது; ஏற்றுமதியும் ஊக்கம் பெற்றது. டாலரின் மதிப்பு குறைக்கப்பட்டமையால் பிற நாடுகளின் நாணயங்களோடு அமெரிக்க டாலர் போட்டியிட முடிந்தது. பிற நாடுகளும் அமெரிக்க செய் பொருட்களை எளிய விலைக்கு வாங்க முடிந்தது.

குடியானவர்களுக்கு நல்வாழ்வு

விவசாயப் பொருட்களின் விலையை உயர்த்த காங்கிரஸ் ஒரு புதிய திட்டத்தைக் கொணர்ந்தது. அதுவே 1933ல் இயற்றப்பட்ட வேளாண்மைப் பொருள் சீரமைவுச் சட்டமாகும் (Agricultural Adjustment Act). அதன்படி விவசாய உற்பத்தி குறைக்கப்பட்டது. விவசாய பொருட்களின் விலை உயர்த்தப்பட்டது. தங்களது விளைச்சலைக் குறைத்துக் கொள்ளும்படி விவசாயிகள் வேண்டப்பட்டனர். அப்படி குறைவான அளவில் விளைவித்தமைக்கு அவர்களுக்குத் தக்க இழப்பீடு கொடுக்கப்பட்டது. எவ்வளவு ஏக்கர் நிலத்தைப் பயிர் செய்யாது தரிசாக விட்டனரோ அவ்வளவில் இழப்பீடு நிர்ணயிக்கப் பட்டது. இந்நடவடிக்கைகளை மேற்பார்வையிட, பொருள் கடனளிப்பு நிறுவனம் (Commodity Credit Corporation) ஒன்று நிறுவப்பட்டது.

ஹூவரால் தோற்றுவிக்கப்பட்ட புனரமைப்பு நிதி நிறுவனத்திற்குக் கூட்டாட்சி அரசு பில்லியன் பில்லியனாக டாலர் அளித்து உதவி செய்தது. அந்நிறுவனம் சிறு குடியானவர்களுக்கு குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்துதவியது. இதனால் சிறு குடியானவர்கள் தாங்கள் அடமானம் வைத்த நிலங்களையும் வீடுகளையும் இழக்காமலிருந்தனர். நகர்புற மக்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டமையால். அவர்களுக்கு வேளாண்மைப் பொருட்களை வாங்க சக்தி அளிக்கப்பட்டது. 1934ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் இறக்குமதி செய்யப்

படும் சரக்குகள் மீது காப்புவரிகள் குறைக்கப்பட்டன. அதேபோன்று அமெரிக்க சரக்கு களின் மீதான காப்பு வரிகளை பிறநாடுகள் தத்தம் நாட்டில் குறைந்தன. அதன் விளை வாக அமெரிக்க வேளாண்மைப் பொருட்கள் குறைந்த விலைக்கு வெளிநாடுகளில் விற்கலாயின. எனவே அவற்றிற்கான தேவை அதிகரித்தது. இச்சட்டங்களால் மட்டுமல்லாது சில இயற்கைக் காரணங்களாலும் குடியானவர்களின் நிலை சற்று சீர் பெற்றது. 1934ஆம் ஆண்டிலும் 1936ஆம் ஆண்டிலும் மழையின்மைக் காரணத்தால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வேளாண்மைப் பொருட்களின் தேவை அதிகரிக்க அவற்றின் விலையும் உயர்ந்தது.

குடியானவர்களைப் போன்று தொழில் துறை உற்பத்தியாளர்களும் தங்களது சரக்குகளை விற்கமுடியாது துன்பப்பட்டு வந்தனர். விலையினைக் கட்டுப்படுத்தி, போட்டியினைக் குறைத்து வாணிகத்தை மீட்டுயிர்ப்பிக்கவும் அதற்கு கைமாறாகத் தொழிலதிபர்கள், தொழிலாளர்களுக்கு சலுகைகளை அளிக்கச் சொல்லியும், ரூஸ்வெல்ட் திட்டங்களை வகுத்தார். இதற்காக தேசியத் தொழில் துறை மீட்புச்சட்டம் ஒன்று (National Industrial Recovery Act) இயற்றப்பட்டது. இச்சட்டம் தொழில் துறை உற்பத்திப் பொருட்களின் விலையை நிலைப்படுத்தவும், தொழிலாளர் ஊதியத்தை உயர்த்தவும் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை நடத்தவும் வழிவகை செய்தது. பாலங்கள் கட்டுதல், சாலைகளைப் பாதுகாத்தல்; மின்சார உற்பத்தித் தொழிற்சாலைகள் நிறுவுதல், அணைகள் கட்டுதல் போன்ற பொதுப்பணிகளுக்குச் செலவிட இச்சட்டம் ஏராளமான நிதியை ஒதுக்குகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் மாநில அரசுகளும், தல ஆட்சி நிறுவனங்களும், பள்ளிகள், மருத்துவமனைகள், பொதுக்கட்டிடங்கள், நீர்ப்பாசன திட்டங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கானக் கடன்தொகையை பெறும்படி ஊக்குவிக்கப்பட்டன.

புதிய சீரமைப்புத் திட்டத்திலேயே முன்னேற்ற வாதிகளிடையே அதிகமான ஊக்கத்தை விளைவித்தது தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டமாகும். தென்னசி ஆற்று நீர் பயன்படுத்தப்படாமல் வீணாக ஓடுவதைக் கண்ட காங்கிரஸ், 1933இல் தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக்குழு (Tennessee Valley Authority) ஒன்றினை நியமித்தது. தென்னசி ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டவும், மின்சார உற்பத்தித் தொழிற்சாலை களை இயக்கவும், மின்சாரத்தை விற்கவும் அக்குழுவுக்கு உரிமை தரப்பட்டது. இதனால் தனியார் மின்சார உற்பத்தி நிறுவனங்களில் மின்சார விற்பனை விலையையும் கட்டுப்படுத்த முடிந்தது. வேளாண்மைக்கு வேண்டிய உரங்களைத் தயாரிக்கவும், வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தவும், தென்னசிப் பள்ளத்தாக்கில் வாழும் மக்களின் பொருளாதார, சமூக நலனைப் பாதுகாக்கவும், தென்னசிப் பள்ளத் தாக்கு அதிகார குழுவுக்கு எல்லாவகையான உரிமைகளும் அளிக்கப்பட்டன. வறுமை யினால் வாடிய அப்பகுதியைச் சார்ந்த ஏழு மாநிலங்களின் இரண்டு மில்லியன் மக்கள், இத்திட்டத்தால் பயனடைந்தனர். 1940ஆம் ஆண்டளவில், தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக்குழு ஏழு அணைகளைக் கட்டி முடித்திருந்தது. தென்னசிப் பள்ளத்தாக்கின் வாழ்க்கைத்தரம் சிறப்பான முறையில் உயர்ந்திருந்தது. 1934இல் மண்வளப் பாதுகாப்புப் பணித்துறை (Soil Conservation Service) ஒன்று அமைக்கப்பட்டது. சரிவிடையே தட்டையான தளம் அமைத்துப் பயிரிடவும். வேறு பல வள பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளச் சொல்லியும் குடியானவர்கள் வேண்டப்பட்டனர்.

தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படல்

ரூஸ்வெல்ட் பதவியேற்றதும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவ மாடிக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றி தவித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையைச் சீர்படுத்த 1933ஆம் ஆண்டில் காங்கிரஸ் பொதுத்துறை வளப் பாதுகாப்புப்படை (Civilian Conservation Corps) ஒன்றினை உருவாக்கிற்று. 15 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய திருமணமாகாத ஆண்களுக்கு வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்களிலும் வேலை வாய்ப்புகள் தரப்பட்டன. இளம் வயதிலிருந்த பெண்களையும், ஆண்களையும் தொடர்ந்து பள்ளிக்கூடப் படிப்பில் சேர்ப்பதற்காக கூட்டாட்சி அரசு தேசிய இளைஞர் நிருவாகம் (National Youth Administration) ஒன்றினை ஏற்படுத்தியது. பள்ளிகளை நடத்துவதற்கு போதிய நிதி வசதியற்ற மாநில அரசுகளுக்கு இந்நிறுவனம் நிதியுதவியளித்தது. பள்ளிக்கூட நேரம் போக மீதி நேரத்தில் வேலை தந்து தேவைப்பட்ட மாணவர்களுக்குச் சிறு தொகையையும் உதவியாக அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் பொதுத்துறை வளப்பாதுகாப்புப் படையாலும் தேசிய இளைஞர் நிர்வாகத் தாலும், வேலையில்லாது இருந்தோரில் ஒரு சிறிய பங்கினருக்கே வேலையளிக்கப்பட்டது.

புதிய சீரமைப்புத் திட்டத்தில் தொழிலாளர் நலனுக்காக, பல சிறப்பு மிக்க சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை வாக்னர் சட்டமும் (Wagner Act 1935), 1938இல் இயற்றப்பட்ட தொழிலாளர் நலமிக்க வரையளவான சட்டமும் (Fair Labour Standards Act 1938) ஆகும். வாக்னர் சட்டம் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களில் சேருவதற்கும், கூட்டாகப் பேசி, குறைகளை அகற்றுவதற்கும் உரிமை வழங்கியது. தொழிலாளர் நலமிக்க, வரையளவான சட்டம் குறைந்த அளவு ஊதியத்தையும், உச்ச அளவு வேலை நேரத்தையும் நிர்ணயித்தது.

சமூக நலன் பாதுகாப்பு (Social Security)

வேலையில்லாதோருக்கும், வயதானவருக்கும், ஆற்றல் இழந்தவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சில முக்கியமான சட்டங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இயற்றப்பட்டன. இவை பற்றிய நடவடிக்கைகளை அதுவரை மாநில அரசுகளே மேற்கொண்டிருந்தன. வயது முதிர்ந்தோருக்கு ஓய்வுகால ஊதியத்திட்டம், வேலையற் றோருக்குக் காப்புறுதித் திட்டம் போன்ற திட்டங்களைச் சில மாநிலங்கள் இயற்றி யிருந்தன. ஆனால் தேசியத் தன்மை வாய்ந்த இத்திட்டங்களை மாநில அரசுகள் ஏற்று நடத்துவது சற்று இடர்ப்பாடு மிகுந்த பணியாகவே இருந்தது. இந்நிலையை மாற்றக் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டபடி 1935ஆம் ஆண்டு காங்கிரஸ் பல சமூக நலன் பாதுகாப்புச் சட்டங்களை (Social Security Acts) இயற்றியது. அவற்றின் விளைவாக ஓய்வுக்கால ஊதியம் வயது முதிர்ந்தோருக்கு வழங்கப்பட்டது.

கண்பார்வையற்றோரும், ஆதரவற்ற தாய்மார்களும், நொண்டிக் குழந்தைகளும் உதவித் தொகை பெற்றனர். பொது மக்களது உடல்நலன் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. ஆரம்பத்தில் சமூக நல திட்டங்களுக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது.

ஆனால் அவற்றின் பயனை உணர்ந்த பிறகு, அத்திட்டங்களை பொது மக்கள் வரவேற்றனர். சமூக நலன் பாதுகாப்புத் திட்டங்களைச் செயலாக்க, ஒரு சமூக நலன் பாதுகாப்பு நிர்வாகம் உருவாக்கப்பட்டது. அந்நிர்வாகம் இன்றைக்குக் கல்வி உடல் நலம் ஆக்க நலத்துறையின் ஒரு பகுதியாக இயங்கி வருகிறது.

புதிய சீரமைப்புத் திட்டத்தின் சாதனைகள்

ஆரம்பத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பெருமந்த நிலையினை மாற்றியமைக்கப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. வங்கிகளின் அமைப்பு, விவசாயம், துறை ஆகியவற்றில் இடர்காப்பு தவிர்க்கவும், மீட்பு நிலை வழி முறைகளாகவும் புதிய சீரமைப்புத் திட்டத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் போற்றுதற் குரியனவாகும். வேலையற்றோர்க்கு காப்பீடு செய்தல், வயது முதிர்ந்தோர்க்கு ஓய்வுக்கால ஊதியம் அளித்தல் போன்ற சமூக நலன் பாதுகாப்புச் சட்டங்கள் குறிப்பிடத்தக்கவை என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ரூஸ்வெல்ட் நான்கு முறை குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றால் பொது மக்களுக்கு அவர் புதிய சீரமைப்புத் திட்டத்தின் வழியாக ஆற்றியிருந்த பணியே அதற்கு அடிப்படைக் காரணமாகும் என்பதனை எவரும் மறுக்க முடியாது. மக்களின் பொது நன்மையைக் கருதியே, அத்திட்டங்கள் உருவாயின. இல்லாவிடில் நாட்டில் தீவிரவாத உணர்ச்சி பெருக்கெடுத்தோடியிருக்கும்.

மதிப்பீடு

புதிய சீரமைப்புத் திட்டம், செல்வ வளத்தினை பழைய நிலைக்கு மீட்காவிட்டாலும், மக்களுடைய நலனில் ஒரு புதிய உணர்ச்சியை ஊட்டிற்று. பட்டினியால் வாடிய மக்களுக்கு அரசு வேலை தரும் என்று உறுதியாகக் கூறியமையால் மக்கள் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற்றனர். பல பொதுப்பணித் திட்டங்களால் அமெரிக்க நாட்டின் மரபு காக்கப்பட்டதோடு உயர்த்தப்பட்டது. குடியரசுக் கட்சியினரும் புதிய சீரமைப்புத் திட்டம், கூட்டாட்சி அரசினை ஒரு புதிய நிலையில் மக்கள் முன் நிறுத்திக் காட்டிற்று. அடக்கு முறைகளைப் பின்பற்றித் தடைகளை மக்கள் மீது விதிப்பதற்காகவே அரசு உள்ளது என்ற எண்ணம் மாறலாயிற்று. குடியாட்சி முறையில் எழும் பல சிக்கல்களை முழுவதுமாகத் தீர்க்கவும், பொது மக்களது நலனைக் கருதி ஆக்க நல வேலைகளில் ஈடுபடவும் முடியும் என்பதனைப் புதிய சீரமைப்புத் திட்டம் நிரூபித்தது.

பயிற்சி வினா

புதிய சீரமைப்புத் திட்டத்தின் பல அம்சங்களை விவரித்து அதன் முக்கியத் துவத்தைப் புலப்படுத்துக.

பாடம் – 28

பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டும் இரண்டாம் உலகப்போரும்

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் 1932ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் நான்கு முறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நற்பணி யாற்றினார். அவரது பரந்த அனுபவமும், அறிவாற்றலும் அமெரிக்க மக்களுக்கு அரிய பல தொண்டுகளைச் செய்ய ஏதுவாயிருந்தது. சாதாரண மனிதரிடம் அதிகப் பற்றும் நம்பிக்கையும் வைத்திருந்தார். எப்பொழுதும் அவரிடம் கவர்ச்சிகரமான தோற்றம் காணப்பட்டது. பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவரான சர் வின்ஸ்டன் சர்ச்சில், ரூஸ்வெல்ட்டை முதல் முறை சந்தித்துப் பேசிய பொழுது பெருமகிழ்ச்சி அடைந்து "ரூஸ்வெல்டிடம் பேசும் பொழுது எழுகின்ற மனமகிழ்ச்சி திராட்சை பழரசத்தாலான சாராயப்புட்டியை திறக்கும் போது எழுகின்ற மகிழ்ச்சிக்கு ஒப்பாயிருக்கின்றது" என்று கூறினாராம்.

அமெரிக்க ஐக்கிய நாடும் இரண்டாம் உலகப் போரும்

ரூஸ்வெல்டின் இரண்டாம் பதவிக்காலத்தில் வெளிநாட்டுத் துறையில் பல சிக்கலான பிரச்சனைகள் எழலாயின. சர்வாதிகார ஆட்சிகள் ஜெர்மனியிலும், இத்தாலி யிலும் ஏற்படுத்தப்பட்டன. ஹிட்லர், முசோலினி போன்றோர் உலக அமைதிக்குப் பங்கம் விளைவித்தவராக இருந்தனர். உலக சக்தி சமநிலையைக் கட்டிக் காப்பதற்காகவும் மேற்கத்திய நாகரீகக் கொள்கையையும், ஜனநாயகக் குறிக்கோளையும் பேணிக் காப்பதற் காகவும் போரில் அமெரிக்க ஐக்கிய நாடு இறுதியாகத் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பம்

1930ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பா திகைக்க வைக்கும் வேகத்தில் அழிவுப் பாதையை நோக்கிச் சென்றது. 1931இல் ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியது. மஞ்சூரியாவைக் கைப்பற்றிய போது சர்வதேச சங்கம் அதனைத் தடை செய்யத் தவறிற்று. 1935ஆம் ஆண்டு முசோலினி எத்தியோப்பியாவைத் தாக்கினார். ஹிட்லர் ஜெர்மனியில் தனது ஆட்சியை ஏற்படுத்தியபோது, வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஜெர்மானியரது இராணுவத்தின் மீது விதித்திருந்த தடைகளைத் தகர்த்தெறியப் போவதாக அறிவித்தார். 1936இல் ஜெர்மனியும், ஜப்பானும் ஒன்றிணைந்து பெர்லின் டோக்கியோ அச்சினை (Berlin - Tokyo Axis) உருவாக்கின. 1937இல் இத்தாலியும் அந்நாடுகளோடு நட்புரிமை கொண்டது. அதன் விளைவாக ரோம் — பெர்லின் — டோக்கியோ அச்சு உருவாயிற்று. (Rome - Berlin - Tokyo Axis). 1938இல் ஆஸ்திரியாவையும், 1939இல் போலந்தையும் ஹிட்லர் கைப்பற்றினார். போலந்து நாட்டின் உரிமையைக் காக்கும் பொறுப்பு பிரிட்டனையும் பிரான்ஸையும் சார்ந்தமையால், இவ்விரு நாடுகளும் ஹிட்லரை எதிர்த்துப் போராடலாயின.

நடுநிலைமைச் சட்டங்கள் (Neutrality Acts)

ஹிட்லர் 1933இல் ஜெர்மனியில் பதவிக்கு வந்தது முதல் அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பிய விவகாரங்களில் மீண்டும் பங்கு கொள்ளக்கூடாது என்பதற்காகக் காங்கிரஸ் தொடர்ந்து வழிமுறைகளை ஆராய்ந்து வந்தது. 1935-1937 ஆகிய ஆண்டுகளுக்கிடையே காங்கிரஸ் மூன்று நடுநிலைமைச் சட்டங்களை இயற்றியது. உலகின் எப்பகுதியிலும் போர் நிகழ்ந்தாலும் அமெரிக்க ஐக்கிய நாடு ஈடுபடாமல் நடுநிலைமை வகிக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. 1937இல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி, போர்க் கருவிகளின் விற்பனை தடைசெய்யப்பட்டது. மேலும் அமெரிக்க ஐக்கிய நாடு எந்நாட்டுக்கும் கடன் வழங்கக் கூடாது என்றும், போரில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்களில் அமெரிக்க மக்கள் பயணம் மேற்கொள்ளக்கூடாது என்றும், போர்க்கருவிகளல்லாத பிற சரக்குகளைப் பணம் பெற்றுக்கொண்ட பின்னரே விற்பனை செய்ய வேண்டுமென்றும், அச்சரக்குகளை வாங்கும் நாடுகள் தத்தம் கப்பல்களிலேயே அவற்றை ஏற்றிச் செல்ல வேண்டுமென்றும் அச்சட்டத்தில் குறிப்பிட்டிருந்தது. பிரிட்டனோ, பிரான்சோ போரில் ஈடுபட்டால் அமெரிக்காவின் உதவி அந்நாடுகளுக்குக் கிட்டாதுஎன்பதை இச்சட்டம் உணர்த்திற்று. ஆனால் இதன் விளைவாக ஹிட்லர் அதிக விரைவில் இரண்டாம் உலகப் போரைத் தொடங்கினார்.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியதும், அமெரிக்க மக்களது எண்ணம் மாறாலா யிற்று. தொடக்கத்திலிருந்தே அமெரிக்க மக்கள் நேச நாடுகளை ஆதரிக்கலாயினர். ஹிட்லரின் நாஸிஸக் கொள்கைகளை அமெரிக்க மக்கள் முற்றிலும் வெறுத்தனர். 1939ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் காங்கிரஸ் ஒரு புதிய நடுநிலைமைச் சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்குப் பணம் கொடுத்து போர்க் கருவிகளை வாங்கிச் செல்ல இசைவு அளித்தது. ஆனால் அமெரிக்க வாணிபக் கப்பல்கள் போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்லக்கூடாது என தடை விதிக்கப்பட்டது. இவ்வகையில் பிரிட்டனும், பிரான்சும் போதிய அளவு பணமும், கப்பலும் உள்ளவரை அமெரிக்க ஐக்கிய நாட்டிடமிருந்து போர்க் கருவிகளை வாங்கி எடுத்துச் செல்ல முடிந்தது. ஊழிப் பெருவெள்ளம் போன்று திடீரென பல நிகழ்ச்சிகள் ஐரோப்பாவில் 1940ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் நிகழ்ந்தன. அவற்றைக் கண்ட அமெரிக்கர் அதிர்ச்சிக்குள்ளாயினர். அதுபோன்ற நிகழ்ச்சிகளை அவர்கள் அதற்குமுன் வரலாற்றில் கண்டதில்லை. ஹிட்லர் டென்மார்க், நார்வே ஆகிய நாடுகளைக் கைப்பற்றினார். பின்னர் ஹாலண்டு, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் தமது ஆதிக்கத்தை அவர் நிலைநாட்டினார். இறுதியில் ஹிட்லர் பிரெஞ்சு மக்களையும் தோற்கடித்து அடி பணிய வைத்தார். பிரிட்டன் மட்டும் தனித்து நின்றது. இவ்வகையில் ஹிட்லர் மேற்கு ஐரோப்பா முழுவதையும் தமதாக்கிக் கொண்டார். நாஸி வீரர்கள் நேச நாடுகளைக் கைப்பற்றியதோடல்லாமல், அங்கு வாழ்ந்த ஒன்றுமறியா ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் ஆயிரக்கணக்கில் மிருகத்தனமான முறையில் கொன்று குவித்தனர். இச்சம்பவங்களுக்குப் பின்னர், அமெரிக்க மக்களது மனம் முற்றிலும் மாறிற்று. போருக்குமுன் அமெரிக்க மக்கள் விருப்பு வெறுப்பற்று இருந்தனர். போர் ஆரம்பமானதும் அமைதி குலைந்த மனப்பக்குவம் உடையவராக யிருந்தனர். ஹிட்லரின் மிருகத்தனமான செயல்களைக் கண்டபின் ஹிட்லரின் பரம எதிரிகளாயினர்.

1940ஆம் ஆண்டளவில் அமெரிக்க மக்கள் பிரிட்டன் மீது இரக்கம் கொண்டனர். அதே சமயம் அமெரிக்க காங்கிரஸ் அதிக நிதியை இராணுவத்தைப் பலப்படுத்தும் பல திட்டங்களுக்கென்று ஒதுக்கியது. அமைதிக்கால இராணுவச் சேவை கட்டாயப்படுத்தப் பட்டது. இதனையொட்டி நடுநிலைமைச் சட்டங்கள் சிறிது சிறிதாகத் தளர்த்தப்பட்டன. போர்க்கருவிகள் பிற நாடுகளுக்கு விற்கப்பட்டன. பிரான்சின் வீழ்ச்சிக்குப் பின்பு அமெரிக்க ஐக்கிய நாடு தன்னகத்தேயுள்ள கூடுதலாக இருந்த துப்பாக்கிகளையும், விமானங்களையும் பிரிட்டனுக்கு விற்க முடிவு செய்தது. மற்றொரு ஏற்பாட்டின்படி அமெரிக்க ஐக்கிய நாடு பிரிட்டனுக்கு ஐம்பது நாசகாரிக் கப்பல்களைத் தந்துதவியது. இதற்கு மாற்றாக பிரிட்டன் அட்லாண்டிக் பெருங்கடலிலுள்ள தனது குடியேற்றங்களில் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு இசைவு தந்தது. மேலும் பொதுவாக அமெரிக்கக் கண்டங்களைப் பாதுகாப்பதற்காக அண்மையிலுள்ள பிற தென் அமெரிக்க நாடுகளோடு ரூஸ்வெல்ட் நட்புறவு கொள்ளலானார்.

மக்களாட்சிக் கட்சியினர் அரசியல் மரபுக்கு முரணாக, மூன்றாவது முறை ரூஸ்வெல்டை, 1940ஆம் ஆண்டுத் தேர்தலில், குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாள ராக நியமித்தனர். ரூஸ்வெல்ட் தமது வெற்றியை, பிரிட்டனுக்கு எல்லா வகையான உதவிகளும் அளிக்க வேண்டும் என்ற கருத்தினுக்கு மக்கள் அளித்த கட்டளை உரிமையாகக் கொண்டார். பிரிட்டனின் பணமுடையத் தீர்ப்பதற்காக ரூஸ்வெல்ட் ஈட்டுக் கடன் முறை திட்டத்தை (Land Lease) உருவாக்கினார். அதன்படி பிரிட்டனுக்குப் பணமாகத் தந்துதவுவதை விடப் பொருளாக தந்துதவலாம் என்றும், போருக்குப் பிறகு பிரிட்டன் பொருளாகவே திருப்பித் தரலாம் என்றும் ரூஸ்வெல்ட் கூறினார். காங்கிரஸ், உடனே ஈட்டுக் கடன் சட்டம் (Lend Lease Act) ஒன்றை இயற்றியது. அதன்படி அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிடும் நாடுகள் அனைத்திற்கும் இலவசமாக போர்க்கருவிகள் வழங்கப்பட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட நடுநிலைமைச் சட்டங்களுக்கு முற்றிலும் மாறாக ஈட்டுக் கடன் சட்டம் அமைந்திருந்தது.

அட்லாண்டிக் சாசனம்

போரின் குறிக்கோள்களை, அமெரிக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் சேர்ந்து, கூட்டறிக்கையில் தெளிவுபட வரையறுத்தன. 1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும், பிரிட்டிஷ் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சிலும், பசிபிக் பெருங்கடலில் ஓர் அமெரிக்கப் போர்க் கப்பலில் கூடிப் பேசினர். அப்பேச்சின் இறுதியில் ஒரு சிறப்பு மிக்க சாசனத்தைத் தீட்டினர். அச்சாசனம் அட்லாண்டிக் சாசனம் என்று பெயர் பெற்றது. தங்களுக்கு பிற நாடுகளைக் கைப்பற்ற எண்ணங் கிடையாது என்றும், பிறமக்களின் மீது பிற நாடுகளின் ஆட்சி வலுக்கட்டாய மாக நிறுவப்படக்கூடாது என்றும், மக்கள் அவர்கள் விருப்பப்படி தங்களுக்கேற்ற அரசுகளை அமைத்துக் கொள்ளலாமென்றும் அச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் வாணிகத்திற்காகவும் கச்சாப் பொருளுக்காகவும் எல்லா நாடுகளும் திறந்து விடப்படுமென்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக்வும் சமூக நலப் பாதுகாப்பிற் காகவும் உலக நாடுகளின் ஒத்துழைப்பு கிட்டுமென்றும் அட்லாண்டிக் சாசனத்தில்

உறுதியாகக் கூறப்பட்டது. உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், மக்கள் பாதுகாப் போடு வாழவும், அச்சம், வறுமை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், எதிரி நாடுகளின் படைக் கருவிகளைக் குறைக்கவும் இச்சாசனம் வேண்டிற்று.

பேர்ல் ஹார்பர் தாக்கப்படுதல்

ஜப்பான் 1940ஆம் ஆண்டு இறுதியில் அச்சு நாடுகளான ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகியவற்றுடன் பத்தாண்டு கால ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. இதன் விளைவாக ஜப்பானின் செல்வாக்கு கிழக்கு ஆசியப் பகுதியில் ஓங்கிற்று. அமெரிக்காவுக்குச் சொந்தமான் பிலிப்பைன்ஸ் உட்பட்ட கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்ற முனைந்து, எளிதில் தென் கிழக்கு ஆசியா முழுவதிலும் ஜப்பான் தனது வெற்றிக்கொடியை நாட்டியது. 1941 டிசம்பர் திங்கள் 7ஆம் நாளன்று ஜப்பானிய விமானப் படைகள் முன்னறிவிப்பின்றி திடீரென பேர்ல் ஹார்பரைத் தாக்கின. அதனால் அமெரிக்காவின் பசிபிக் பெருங்கடல் கப்பற்படையைச் சார்ந்த எட்டு போர்க் கப்பல்கள் நாசமாயின. சுமார் இரண்டு ஆயிரம் மக்கள் உயிர் நீத்தனர். பலர் படுகாய முற்றனர். இந்நிகழ்ச்சி, அமெரிக்க மக்களை ஒன்றாக்கியது. ரூஸ்வெல்டின் வெளிநாட்டுக் கொள்கையினை எதிர்த்தவர்களெல்லாம் தங்களது கருத்தினை மாற்றிக்கொண்டனர். காங்கிரஸ் உடனே ஜப்பானின் மீது போர் தொடுத்தது. சில நாட்கள் கழித்து இத்தாலியும், ஜெர்மனியும் அமெரிக்காவின் மீது போர் தொடுத்தன. அமெரிக்கா டிசம்பர் 12ஆம் நாள் அந்நாடுகளுடன் போர் தொடுத்தது. ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளிலும் நடைபெற்று வந்த போரானது இப்பொழுது உலகப் போராக மாறிற்று.

ஐரோப்பாவில் போர் முடிவடைதல்

ஹிட்லரின் கொடுமையினின்று ஐரோப்பாவை விடுவிப்பதே அமெரிக்க ஐக்கிய நாட்டின் குறிக்கோளாக இருந்தது. ஜெர்மனியின் தொழிற்சாலைகளும், பிற உற்பத்தித் தலங்களும், போக்குவரத்து நிலையங்களும் நேசநாடுகளின் விமானங்களால் தாக்கப்பட்டதால் அந்நாட்டின் படைவலிமை நலிவுறலாயிற்று. அமெரிக்கத் தளபதி ஐஸன்ஹோவர் ஜூன் திங்கள் 6ஆம் நாள் (1944) பிரிட்டிஷ் — அமெரிக்கப் படைகளை நார்மண்டி கடற்கரையில் இறக்கினார். விமானப் படைகளின் ஆதரவால் ஐஸன்ஹோவர் படிப்படியாக முன்னேறினார். முதலில் பிரான்ஸையும், பெல்ஜியத்தையும் ஜெர்மானியர் கையிலிருந்து விடுவித்தார். நேசநாடுகளின் படைகள் ஒன்றாக இணைந்து 1945ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் ரைன் நதியைக் கடந்து பெர்லினை நோக்கி முன்னேறலாயின. அதேசமயம் ரஷ்யத் துருப்புகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி முன்னேறி நாஸிகளைத் தாக்கி வந்தனர். ரஷ்யப் படைகளும், அமெரிக்கப்படைகளும் ஏப்ரல் திங்கள் 26ஆம் நாள் ஒன்றாகச் சந்தித்தன. விமானத் தாக்குதல்களால் நாசமாக்கப்பட்ட பெர்லின் மே திங்கள் 2ஆம் நாள் சரணடைந்தது. ஐரோப்பிய வெற்றி விழா (V.E. Day - Victory in Europe) மே 8ஆம் நாள் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டது.

ஜப்பான் சரணடைதல்

ஐரோப்பாவில் போரை முடித்த பிறகு அமெரிக்கா, கிழக்கு ஆசியப் பகுதியில் தனது முழு கவனத்தையும் செலுத்தலாயிற்று. வன்முறைகளைக் கடைபிடித்து ஜப்பான்

கைப்பற்றிய நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதில் அமெரிக்கா முனைந்தது. அமெரிக்கத் தளபதி மெக்கார்தர் (Mac Arthur) பிலிப்பைன்ஸ் தீவுகளை 1945ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் விடுவித்தார். ஜப்பானிடமிருந்து ஐவோஜிம்மா (Iwo Jima) ஓக்கினாவா (Okinawa) ஆகிய பசிபிக் பெருங்கடல் தீவுகள் கைப்பற்றப்பட்டன. போர்ட்ஸ்டாம் (Portsdam) என்னுமிடத்திலிருந்து அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ட்ரூமன், ரஷ்யத் தலைவர் ஸ்டாலின், பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் கிளமெண்ட் அட்லி ஆகிய மூவரும் ஜப்பானைச் சரணடையச் சொல்லி ஓர் அறிக்கை விடுத்தனர். ஆனால் ஜப்பானிய அதிகாரிகள் சரணடைய மறுத்தனர். அதன் பேரில் அமெரிக்கா ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா Hiroshima) நகரத்தின் மீது, வரலாற்றியேயே முதன் முறையாக 1945 ஆகஸ்டு திங்கள் 6 ஆம் நாள் அணுகுண்டு ஒன்றை வீசிற்று. மூன்று நாட்கள் கழித்து இரண்டாவது அணுகுண்டு நாகசாகி (Nagasaki) நகரத்தின் மீது வீசப்பட்டது. இவ்விரு குண்டுகளால் இரு நகரங்களும் அழிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். நாட்டின் அழிவு நிலையைக் கண்ட ஜப்பான் சரணடைந்தது. செப்டம்பர் திங்கள் 2ஆம் நாள் சரணாகதிப் பத்திரங்கள் கையெழுத்திடப்பட்டன. அன்று நேசநாடுகள் ஜப்பானின் மீதான வெற்றியைக் கொண்டாடின. (V.J. Day - Victory in Japan).

உலக வரலாற்றிலேயே முன்பின் கண்டிராத அளவுக்கு நிகழ்ந்த இப்பெரும் போரில் போருக்குக் காரணமாயிருந்த ஜெர்மனியும், இத்தாலியும் அழிவுற்றன. இப்போருக்காகச் செலவிடப்பட்ட ஒரு நூறாயிரங்கோடி (Trillion) டாலரில் அமெரிக்க ஐக்கிய நாடு மட்டும் மூன்றில் ஒரு பங்கு செலவை ஏற்றிருந்தது. இப்போரின் விளைவாக, அமெரிக்க அரசின் மீதும் அமெரிக்க மக்கள் மீதும் எண்ணற்ற பொறுப்புக்கள் சுமத்தப்பட்டன. போரில் சிதைவுற்ற உலகத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுவதிலும், மேலை நாடுகளின் நாகரிகத்தை மறுபடியும் நன்முறையில் நிலைநாட்டுவதிலும் மக்களாட்சி முறையை வலுப்படுத்துவதிலும், உலகில் உறுதியாக அமைதியை நிலைநாட்ட அனைத்து நாடுகளின் அமைப்பு ஒன்றினை நிறுவுவதிலும் அமெரிக்க மக்கள் பெரும் பொறுப்புகளை ஏற்க நேரிட்டது. அமெரிக்க ஐக்கிய நாடு மேலை நாடுகளின் புனரமைப்புக்குத் தாராளமாக நிதியுதவியும், பொருளுதவியும் அளித்தது. குடியாட்சி முறையை மேற்கொண்ட உலக நாடுகளுக்குத் தனது ஆதரவை நல்கியது; ஐக்கிய நாடுகள் சபையை தோற்றுவித்து, வலுப்படுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டது.

பயிற்சி வினா

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்கினை விவரி.

பாடம் – 29 அமெரிக்கா – ஒரு குடியேற்ற நாடு

அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு குடியேற்ற நாடாகக் கருதப்படுகிறது. உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் அந்நாட்டிற்குச் சென்று குடியேறினர். ஆனால் 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் முதல் தடவையாக இங்கிலாந்திலிருந்து ஒரு கூட்டத்தார் வட அமெரிக்காவிற்குச் சென்று அங்கு குடியேறி மற்றவருக்கும் வழிகாட்டினர். இதன் பின்னர் ஏராளமான மக்கள் வட அமெரிக்காவின் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதிகளில் தங்களது குடியேற்றங்களை அமைக்கலாயினர். அமெரிக்க ஐக்கிய நாட்டை பல நாடுகள் அடக்கிய நாடு (Nation of Nation) என்றும் சிலர் குறிப்பிடுவர்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் பிற நாடுகளிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் குடியேறியவர்களின் தொகை சற்று அதிகமாகவே காணப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசு, எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் குடியேறியவரின் தொகை கட்டுப்படுத்தப்பட்டது. தகுதியுடைய மக்கள் மட்டுமே நாளடைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டினுள் அனுமதிக்கப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் முதல் பதினைந்து வருட காலக் கட்டத்தில் சுமார் 13,000,000 நபர்கள்தான் நாட்டின் பல குடிபுகுதல் அலுவலகங் களால் குடியேற அனுமதிக்கப்பட்டனர். முதல் உலகப்போர் சமயம் அத்தொகை 1,000,000 ஆகக் குறைந்தது. உலகப் போருக்குப் பின்பு குடிபுகுதலை அமெரிக்க அரசு முற்றிலும் கட்டுப்படுத்தலாயிற்று. சில சட்டதிட்டங்கள் வரையப்பெற்று தகுதியுடைய மக்களே குடிபுகுதலுக்கு அனுமதிக்கப்பட்டனர். குற்றவாளிகள், அரசியல் தீவிரவாதிகள், பிழைக்க வழி இல்லாதவர்கள், மற்றும் மனநோய், உடல்நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குடி புகுதலுக்கு தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். மேலும் தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து குடியேறிய மக்கள் கீழ்த்தரமான மக்களென்றும் அமெரிக்க அரசு எண்ணிற்று எழுதப்படிக்கத் தெரிந்தவர்களே நாளடைவில் நாட்டினுள் குடிபுகலாயினர். இதனடிப்படையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே பெரும்பாலான மக்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் முதல் உலகப் போருக்குப்பின் குடியேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அதே சமயம் குடியேற்ற மக்களின் தொகை அதிகமாகக் காணப்பட்டதால் அமெரிக்க அரசு குடிபுகுதலை மேலும் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயிற்று. பல திட்டங்களை அமெரிக்க அரசு சிந்திக்கலாயிற்று. அவற்றுள் பங்கு முறை (Quota system) ஒன்றாகும். இம்முறையை அமெரிக்கச் சட்டமன்றங்கள் பெரிதும் ஆதரித்தன.

முதலாம் குடிபுகுதல் பங்கு முறை (Immigration quota Bill) உட்ரோ வில்சன் காலத்தில் அமெரிக்க காங்கிரஸால் இயற்றப்பட்டது. ஆனால் இச்சட்டம் வில்ஸனால் தள்ளுபடி செய்யப்பட்டதால் அடுத்த அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவராகிய ஹார்டிங் (Harding) காலத்தில் மீண்டும் கொணரப்பட்டது. அதாவது 1921ஆம் ஆண்டு அவசர பங்குமுறைச் சட்டம் ஒன்று (Emergency quota Act) கொணரப்பட்டது. இச் சட்டம் ஒரு வருடமே அமுலிலிருக்கும். இச்சட்டத்தின்படி, அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் குடிபுகும் ஒரு குறிப்பிட்ட தேசத்தினரின் எண்ணிக்கை ஏற்கனவே 1910ஆம் ஆண்டிற்குள்

அப்பிரதேசத்தினரின் எண்ணிக்கைக்கு 3 சதவிகிதத்தினராய் இருத்தல் வேண்டும். மேலும் இச்சட்டப்படி குடிபுகும் மக்களின் தாயகமே அவர்கள் குடிபுகுதலை நிர்ணயிக்கும் அடிப்படையாகும். ஆனால் உலகத்தின் மேற்குக் கோளத்தில் வாழும் மக்கள் இச்சட்டத்திற்கு உள்ளானவர்கள் அல்லர். இச்சட்டம் மறுபடியும் 1922இல் ஒரு சில மாற்றங்களோடு இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கால வரம்பு ஈராண்டேயாகும்.

1924இல் இயற்றப்பட்ட புதிய குடிபுகுதல் சட்டத்தின்படி இன அடிப்படையில் (Racial Stock) குடிபுகுதல் நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி 1924ஆம் வருடம் முதல் 1927ஆம் வருடம் வரை குடிபுக அனுமதிக்கப்பட்டவர்கள் யாரெனில் அமெரிக்க ஐக்கிய நாட்டினரின் 1890ஆம் ஆண்டு ஜனசங்கியைப்படி எந்தெந்த தேசத்தினர் குடிபுகுந்தனரோ அந்தந்த தேசத்தினரின் ஜனத்தொகைகள் இரண்டு சதவீதமாகும். கனடா, மெக்ஸிகோ மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளைத் தவிர ஏனைய எல்லா நாடுகளுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும். இக்கணக்கின் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் குடிபுக அனுமதிக்கப்படும் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டினருக்கும் குறைந்த பட்சம் 100 நபராகும். அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் இவ்வாறு குடிபுக அனுமதி அளிக்கப்படும் நபர்கள் 50 சதவிகிதம் திருமணமாகாத இளைஞர்களும் மற்றும் வேளாண்மை நிபுணர்களுமேயாகும். அந்தந்த நாடுகளிலுள்ள அமெரிக்க தூதரக அலுவலர்களால் அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் குடிபுகும் மக்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. மேலும் இம்மக்களின் உடல் மற்றும் மனநிலை, புறப்படுமுன் அமெரிக்க மருத்துவர்களால் சோதனை செய்யப்பட்டு அதன் பின்னரே அவர்கள் குடியேற அனுமதிக்கப்பட்டனர். 1929ஆம் ஆண்டு குடிபுகுதல் சட்டம் சற்று மாற்றி அமைக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி வருடத்திற்கு 150,000 நபர்களே நாட்டினுள் அனுமதிக்கப்பட்டனர். 1930ஆம் ஆண்டிற்குப் பின்னர் குடிபுகுதல் மிகுதியாகக் கட்டுப்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு ஐரோப்பியரின் குடியேறுதல் முற்றிலும் நின்று விட்டது.

பயிற்சி வினா

அமெரிக்கா எவ்வாறு குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது.

பாடம் – 30

20ஆம் நூற்றாண்டில் அமெரிக்க நீக்ரோ குடிமகனின் நிலை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழும் பலவித இனக் கூட்டத்தார்களுள் அமெரிக்க நீக்ரோ மக்கள் ஓர் முக்கிய கூட்டத்தாராவர். ஆனால் அமெரிக்க நாட்டில் அவர்களின் வரலாறு அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறிய மற்ற மக்களின் வரலாற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது. ஆரம்பத்தில் பலதரப்பட்ட ஆப்பிரிக்க இனத்தவர் களின் தொகுப்பாக அமெரிக்க நீக்ரோ மக்கள் காட்சியளித்தனர். ஆனால் இன்று அவர்கள் அமெரிக்க வெள்ளையர்களுடனும், அமெரிக்க செவ்விந்தியருடனும் கலப்புற்ற இனத்தாராகக் காட்சியளிக்கின்றனர். ஆப்பிரிக்க பழங்குடி கலாச்சார பரம்பரையிலிருந்து வந்த போதிலும், அமெரிக்க நீக்ரோ மக்கள் முற்றும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கக் கலாச்சாரத்தைத் தழுவியே வாழுகின்றனர்.

1955ஆம் ஆண்டு ஜனசங்கியையின் படி நீக்ரோ குடிமக்களின் எண்ணிக்கை 15,000,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது அவர்களது எண்ணிக்கை மற்ற இனத்தவர்களின் எண்ணிக்கைவிட அதிகமாகக் காணப்படுகின்றது. நீக்ரோக்கள் முதன் முதலாக வட அமெரிக்காவுக்கு வந்து குடியேறிய வரலாறு ஓர் விசித்திர வரலாறாகக் தோன்றுகிறது. 15ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசிய கடல் பயணிகள் கீழை நாடுகளுக்கு புதிய கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்பயணிகள்தான் முதன் முதலாக ஆப்பிரிக்க நீக்ரோக்களை அடிமைகளாக்கி அவர்களை ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்றனர். போர்த்துக்கீசியரை அடுத்து, ஸ்பானிய மாலுமிகளும் இத்தொழிலில் ஈடுபட்டனர். ஆனால், முதல் முறையாக 16ஆம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் தான் நீக்ரோ அடிமைகள் புதிய உலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அடிமை வியாபாரம் (Slave Trade) ஓர் முக்கிய வர்த்தகமாக நடக்கலாயிற்று. இதில் முதன் முதலாக ஈடுபட்ட நாட்டினர் போர்த்துகீசியராவார். இவர்களைத் தொடர்ந்து டச்சு மற்றும் பிரெஞ்சுக்காரரும் இத்தொழிலில் ஈடுபடலாயினர். மேற்கு ஆப்பிரிக்கக் கடற்பகுதிகளிலிருந்துதான் அதிகப்படியான நீக்ரோக்கள் கைப்பற்றப்பட்டு பிற தேசங்களுக்கு அனுப்பப்பட்டனர். 19ஆம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் மி கத் தீவிரமாக நடைபெற்றது. ஆனால் அதன் பின் அவ்வியாபாரம் வீழ்ச்சியுறலாயிற்று. மனிதாபிமான அடிப்படையில் எல்லா நாட்டவரும் அடிமை வியாபாரத்தை முற்றிலும் நிறுத்தும் பணியில் ஈடுபடலாயினர். 1808ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு சட்டத்தை இயற்றி அடிமை வியாபாரத்தைத் தடை செய்தது. இருப்பினும், நீக்ரோ அடிமைகள் 19ஆம் நூற்றாண்டு மத்திய பாகம் வரை அமெரிக்காவினுள் கள்ளத்தன மாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

20–ஆம் நூற்றாண்டில் நீக்ரோக்களின் நிலை

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நீக்ரோக்களிடையே ஒருவித இயக்கம் காணப்பட்டது. அவர்களில் ஏராளமானவர் நாட்டின் வட பாகங்களுக்குச் சென்று பல நவீன நகர்ப்புற தொழில்களில் ஈடுபடலாயினர். அவர்களிடையே ஓர் ஒற்றுமை

உணர்ச்சி காணப்பட்டது. அமெரிக்க அரசும் நீக்ரோக்களின் நலனைக் கருதி பல ஆக்கப் பணிகளில் தனது கவனத்தைச் செலுத்தலாயிற்று. ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழ்ந்து வந்த வெள்ளையர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நீக்ரோ மக்களுக்குக் கிட்டிய சலுகைகள் மிகக் குறைவாகவே இருந்தன. 1960ஆம் ஆண்டுக்குப் பின் பல நீக்ரோ மக்களின் கிளர்ச்சிகள் நாடெங்கும் நடந்தன. அவர்களது வீட்டு வசதி பிரச்சனைகளே இக்கிளர்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. இனவெறி பிடித்த வெள்ளையர்கள் நீக்ரோ மக்களை வெறுத்தனர். அவர்களுடன் ஒத்து வாழ அவர்களால் முடியவில்லை. 19ஆம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் பெரும்பாலான நீக்ரோ மக்கள் தென் பகுதியிலுள்ள பல பருத்தி மற்றும் புகையிலைத் தோட்டங்களிலும், பருத்தி ஆலைகளிலும் பணிபுரிந்தனர். முதல் உலகப் போருக்குப் பின் பருத்தித் தொழிலில் மந்தம் ஏற்பட்ட காரணத்தால் அநேக நீக்ரோக்கள், வட பகுதிகளுக்குச் சென்றனர். இரண்டாம் உலகப் போரின் போது மேலும் அதிகமான நீக்ரோக்கள் தென்பகுதிகளை விட்டு அமெரிக்காவின் வட பாகங்களிலும், வடகிழக்கு, வடமேற்குப் பாகங்களிலும் சென்று குடி புகுந்தனர். 1960ஆம் ஆண்டுக்குப் பின்பு மொத்த நீக்ரோக்களில் 60 சதவிகிதமே தென் நிலங்களில் வசித்து வரலாயினர்.

வீட்டு வசதி

சிகாகோ (Chicago), நியூயார்க், பிலடெல்பியா, கிளீவ்லாண்டு டெட்ராய்ட், பாஸ்டன், லாஸ் ஆன்ஜெல்ஸ் (Los Angeles) போன்ற நகரங்களில் சென்று தங்களது புதிய குடித்தனத்தை ஆரம்பித்த நீக்ரோ மக்களுக்கு பல பிரச்சனைகள் எழலாயின. அதில் வீட்டு வசதி ஒரு முக்கிய பிரச்சனையாகக் காணப்பட்டது. வெள்ளையர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் ஒற்றுமையாகக் குடித்தனம் நடத்தவும் நீக்ரோ குடிமக்களுக்குச் சற்று கடினமாகக் காணப்பட்டது. தங்களது இல்லங்களை அமைப்பதற்கு தக்க இடங்கள் கிடைக்காத காரணத்தால் பொதுவாக பாழடைந்த நகர்ப் புறங்களில்தான் தங்கள் குடித்தனத்தை நிறுவ வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. நீக்ரோக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் (Ghettos) ஆங்காங்கே தோன்றின. இதைப்போன்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நீக்ரோ மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

இப்பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க, அமெரிக்க மைய அரசு பல சட்டதிட்டங்களைக் கொண்டு வரலாயிற்று. 1968இல் இயற்றப்பட்ட சிவில் உரிமைச் சட்டத்தின்படி நீக்ரோக்களுக்காக வீட்டு வசதி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளையர்களைப் போன்று அவர்களுக்கும் புதிய வீடுகள் கட்டப்பட்டு பல சலுகைகள் வழங்கப்பட்டன.

நீக்ரோக்களுக்கு வேலை வாய்ப்பு

ஆரம்பத்தில் வெள்ளையர்களைவிட நீக்ரோ மக்களுக்கு வேலை வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் இந்நிலை 1930ஆம் ஆண்டிற்குப் பின் மாறலாயிற்று. நீக்ரோ மக்களின் வேலை வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கோடு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். இரண்டாம் உலகப் போர் நீக்ரோக்களுக்கு பல நன்மைகளை ஈந்தது. முக்கியமாக நீக்ரோ மக்கள்

பல தொழிற்சாலைகளில் புகுந்து வேலை செய்யும் ஒரு அரிய வாய்ப்புப் பெற்றனர். அதிக ஊதியம் கிட்டும் வேலைகளிலும் நீக்ரோ மக்கள் அமரலாயினர். அமெரிக்க மைய அரசைப் போன்று மாநில அரசுகளும், நகர சபைகளும் நீக்ரோ மக்களுக்கு ஆவன செய்ய முன்வந்தன. கல்விக் கூடங்களில் ஆரம்பத்தில் நீக்ரோ மாணவர்களுக்கு சம உரிமைகள் அளிக்கப்படவில்லை. ஆனால் படிப்படியாக சம உரிமைகள் அளிக்கப் பட்டன. நாளடைவில் நீக்ரோக்களுக்கும் வெள்ளையருக்கும் பொதுவான கல்விக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. நீக்ரோ ஆசிரியருக்கும் தகுந்த ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது.

சிவில் உரிமைகளும் மார்டின் லூத்தர் கிங்கும் (Martin Luther King)

நீக்ரோ மக்களுக்கு மார்டின் லூத்தர் கிங் பல நன்மைகளைச் செய்தார். ஜார்ஜியாவிலுள்ள அட்லாண்டா (Atlanta) என்னுமிடத்தில் கிங் 1929ஆம் ஆண்டு பிறந்தார். நீக்ரோ மக்களுக்கும் வெள்ளையருக்குமிடையே எவ்வித வித்தியாசங்களும் காணப்படக் கூடாது என்பது கிங்கின் முக்கியக் குறிக்கோளாகக் காணப்பட்டது. சம உரிமைகள் நீக்ரோ மக்களுக்கும் காட்டப்படவேண்டும் என்பதை அடிக்கடி கிங் தனது மேடைப் பேச்சுகளில் எடுத்துரைத்தார். மகாத்மா காந்தி அடிகளைப் போன்று அஹிம்சை முறைகளேயே பின்பற்றி பல அரிய காரியங்களைச் சாதித்தார். 1964இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அஹிம்சை முறைகளைக் கையாண்டு சம உரிமைகளுக்காக போரிட்ட லூதருக்கு எதிராக பல சக்திகள் தோன்றலாயின. தீவிர செயல்களில் ஈடுபட்டு பொருளாதார மற்றும் சமூகத் துறைகளில் சம உரிமைகளைப் பெற வேண்டும் என்ற கொள்கையை உடைய பல நீக்ரோ நிறுவனங்கள் லூத்தரது அஹிம்சை முறையை முற்றிலும் ஆதரிக்கவில்லை. அந்நிறுவனங்கள் வெள்ளையருக்கு எதிராகவும், அமெரிக்க அரசுக்கு எதிராகவும் வன்முறைகளைப் பயன்படுத்தி பல கிளர்ச்சிகள் செய்யலாயின. மார்ட்டின் லூத்தர் கிங் 1968ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் டென்னஸ்ஸியிலுள்ள மெம்பிஸ் (Memphis) என்னுமிடத்தில் அங்குள்ள நீக்ரோ வேலையாட்களின் ஊதிய உயர்வுக்கான பிரச்சாரம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றார். மாலைப் பொழுது கூட்டம் ஒன்றில் தனது பேச்சை நிகழ்த்தும் பொருட்டு தனது விடுதியிலிருந்து வெளியேறும் தருணம் இனவெறி பிடித்த வெள்ளையன் ஒருவனால் சுட்டு வீழ்த்தப்பட்டார். அவரது மரணத்தையொட்டி அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குழப்பங்களும் கலகங்களும் எழலாயின. தங்களது சிவில் உரிமைகளை ஏற்படுத்தி அவற்றை நிலைநாட்ட பல நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. தேசிய கருப்பர் முன்னேற்றச் சங்கம் (National Association for the Advancement of Coloured People) ஒன்று அந்நிறுவனங்களில் முக்கியமானதாகும். ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திர விழிப் புணர்ச்சியும், அமெரிக்க அரசு நீக்ரோ மக்களின்பால் கொண்டுள்ள தாராளக் கொள்கையும் அமெரிக்க நீக்ரோ மக்களின் நல்வாழ்விற்கும், அவர்களது தேசிய உணர்விற்கும் பெரிதும் உதவின. அவர்களும், பல கூட்டங்களைக் கூட்டியும் போராட்டங்களை நிகழ்த்தியும், பொருளாதார புறக்கணிப்பாலும் தங்களது உரிமைகளை நிலைநாட்டினர். இதன் பயனாக நாளடைவில் நீக்ரோ குடிமக்கள் அரசியலில் உயர்ந்த பதவிகளைப் பெற்று நீதிபதிகளாகவும், சட்டமன்ற அங்கத்தினராகவும் செயல்பட்டனர். நீக்ரோ மக்களுக்கு பலவித சலுகைகள் வழங்கப்பட்ட போதிலும், பொருளாதார ரீதியில் அவர்

கள் அடித்தள நிலையிலேயே காணப்பட்டனர். தங்களது பொருளாதார நலனை உயர்த்து வதற்காக ஒரு சில நீக்ரோ இளைஞர்கள் 1964ஆம் ஆண்டில் பல தீவிர நடவடிக்கை களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டனர். இதன் விளைவாக 1967ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜான்சன் இல்லிநாய் (Illinois) மாநிலத்தைச் சேர்ந்த கெர்னி (Kearney) என்பவரின் தலைமையின் கீழ் இப்போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் பரிசீலிக்க ஒரு குழுவை ஏற்படுத்தினர். இக்குழு தனது அறிக்கையில், வெள்ளையரின் இனவெறியே இக்கிளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்றும் அதற்கு பரிகாரமாக நிக்ரோக்களுக்கு மீண்டும் முக்கிய அரசியல் பதவிகளை பெருவாரியாகக் கொடுத்து இரு இனத்தாரையும் ஒருமைப்படுத்துவதே நல்ல தீர்வாகும் என்று கூறியது.

இராணுவ சேவை

இரண்டாம் உலகப்போரின் முன்பு நீக்ரோ மக்களுக்கு இராணுவத் துறையிலும் முக்கியமான பதவிகள் கொடுக்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருந்தனர். நாளடைவில் சிறிது சிறிதாக முக்கிய பதவிகளிலும் அமர்த்தப்பட்டு இறுதியாகக் குடியரசுத் தலைவர் ட்ரூமன் காலத்தில் நீக்ரோக்களுக்கு இராணுவத்தில் எல்லா முக்கிய பதவிகளும் வழங்கப்பட்டன. நீக்ரோ மக்கள் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று அமெரிக்க கலாச்சாரம் — குறிப்பாக இலக்கியம், இசை, நடனம், கலை போன்றவைகளில் அரிய பல தொண்டுகளை ஆற்றியுள்ளனர்.

பயிற்சி வினா

இன்றைய அமெரிக்காவில் நீக்ரோக்களின் நிலையை விளக்குக.

Model Question Paper

M.A. DEGREE EXAMINATION

Second Year

HISTORY OF U.S.A. (1776 - 1945 A.D.)

Time : Three hours Maximum : 100 marks

Answer any **FIVE** questions

All Questions carry equal marks.

1. அமெரிக்க அரசியலமைப்பை வரைந்ததில் ஜெபர்சன் மற்றும் ஹாமில்டன் ஆகியோரின் பங்கினை விவரி.
   Describe the part played by Jefferson and Hamilton in drafting the constitution of the U.S.A.

2. மன்றோ கொள்கையை பிரகடனப்படுத்துவதற்கான சூழ்நிலைகளை விளக்குக. அதன் முக்கியத்துவம் யாது?
   Explain the circumstances that led to the proclamation of the Munroe Doctrine. What was its significance?

3. மேற்கு நோக்கி விரிவடைதலின் முக்கிய நிலைகளை விவாதிக்க. அது அமெரிக்க சமுதாயத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் யாது?
   Discuss the main stages of the Westward Movement. What was its impact on American Society?

4. அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஆப்ரகாம் லிங்கன் ஆற்றிய சேவையை மதிப்பிடுக.
   Estimate the services of Abraham Lincoln to the U.S.A.

5. தியோடர் ரூஸ்வெல்ட்டின் வெளியுறவுக் கொள்கையை ஆராய்க.
   Examine the foreign policy of Theodore Roosevelt.

6. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பெரும் வணிக வளர்ச்சியை வரைக.
   Sketch the growth of Big business in the U.S.A.

7. முதல் உலகப்போர் மற்றும் அமைதி உடன்படிக்கைகளில் உட்ரோ வில்சனின் பங்கினை திறனாய்வு செய்க.
   Critically evaluate Woodrow Wilson's role in the First World War and the peace settlements.

8. இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கையை விவரிக்க.
   Describe the foreign policy of the U.S.A. between the two World Wars.

9. பிராங்கிளின் டி. ரூஸ்வெல்ட்டின் புதிய ஒப்பந்தக் கொள்கையை ஆய்க.
   Examine the New Deal Policy of Franklin D. Roosevelt.

10. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்டதற்கான நிகழ்ச்சிகளை வரைக.
    Trace the events that led to the entry of the U.S.A. into the Second World War.